ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரமும் மாநஸோல்லாஸமும்.

த. சுந்தரராஜ சர்மா.

F
6302

வேதாந்த போதினி

(நான்காம் புஸ்தகம்)

ஸ்ரீ

தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

மாநஸோல்லாஸத்தோடு

த. சுந்தரராஜசர்மா

பரிசோதித்து மொழிபெயர்த்தது.

வேதாந்தபோதினி ஆபிஸ்,

சென்னை.

(காபி ரைட் ரிஸெர்வ்ட்)

1910

சென்னை, வேதாந்தபோதினி ப்ரெஸ்,

சென்னை, கலாரத்நாகரம் ப்ரெஸ்.

உள்ளடக்கம்.

		பக்கம்
உரைப்பாயிரம்—		
பக்தர்களின் பகுப்பு	...	க
ஸகுணப்ரஹ்மபக்தர்கள்	...	க
நிர்க்குணப்ரஹ்மபக்தர்கள்	...	உ
நூலும் வார்த்திகமும்	...	ங
முதல் உல்லாஸம்—		
கடவுள் வாழ்த்து	...	ச
ஸ்தோத்திரத்தின் பிரயோஜனம்	...	ச
மூலகாரணத்தைப்பற்றிய வினாக்கள்	...	ரு
பிரபஞ்சம் ஆத்மாவினிடத்து உள்ளது	...	சூ
ஆத்மஒளியினால் பிரபஞ்சம் விளங்குகின்றது	...	கo
அத்வைதக்காட்சி	...	கக
ஆத்மாஎன்பதே ஜீவனும், ஈச்வரனுமாம்		கச
ஈச்வரனே எல்லாவற்றினுடைய ஆத்மாவாம்	...	கசூ
அறிவு	...	கஎ
செயல்	...	கஎ
வேற்றுமைக்கு மாயையே காரணம்	...	உo
இரண்டாம் உல்லாஸம்—		
இதனுள் கூறப்படும் விஷயம்	...	ஙசூ
வைசேஷிகர் கொள்கை	...	சo
வைசேஷிகருடைய மூவகைக் காரணங்கள்	...	சக
ஸமவாயிகாரணம்	...	சக

பக்கம்

அஸமவாயிகாரணம் ... ௪௧

நிமித்தகாரணம் ... ௪௨

ஸாங்க்யர் கொள்கை ... ௪௩

தேச கால நிமித்தங்களால் வேற்றுமை தோன்றுகின்றது ... ௪௫

"முதலில்," "(இருந்தது)," "பின்பு" என வழங்கியதற்கு நியாயம் கூறுதல் ... ௪௫

ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமாத்திர மன்று, உபாதாநகாரணமுமாம் ... ௪௬

பரமாணுவாதத்தை மறுத்தல் ... ௪௭

விவர்த்தக்கொள்கை ... ௪௯

அறிவும், செயலும் சேதநப்பொருளைச் சார்ந்துள்ளன ... ௪௯

பிரமாணங்களினது லக்ஷணம் ... ௫௪

வைசேஷிகர்கொண்ட பொருள்கள் ... ௫௪

ஸாங்க்யர்கொண்ட பொருள்கள் ... ௫௭

ஸேச்வர ஸாங்க்யருடைய இருபத்து நான்கு தத்துவங்கள் ... ௬0

அநீச்வரஸாங்க்யருடைய இருபத்து நான்கு தத்துவங்கள் ... ௬0

பௌராணிகருடைய முப்பது தத்துவங்கள் ... ௬௧

சைவாகமத்தினுடைய முப்பத்தாறு தத்துவங்கள் ... ௬௧

சுருதியின் கொள்கை ... ௬௨

ஈச்வரன் ஜகத்திற்கு நிமித்தகாரணமாத்திரமல்லன் ... ௬௫

உள்ளடக்கம்.

பக்கம்

மூன்றாம் உல்லாஸம்—

எல்லாம் ஆத்மஸ்வரூபந்தான் ... கூச

அவித்யை மயக்கத்திற்குக் காரணம் ... கூஎ

உடம்பு, ஜீவனை ஈச்வரனினும் வேறாகப் பிரிக்கின்றது ... கூஅ

தத்துவமஸி என்னும் சுருதி, ஜீவனும் ஈச்வரனும் ஒரேபொருள் என உபதேசிக்கின்றது ... கூகூ

சுருதி - ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் வாஸ்தவத்திலே எத்தகைய பேதத்தையும் காட்டுவதில்லை ... கoச

அஜ்ஞானிகள் உடம்புமுதலியவற்றையே ஆத்மாவாக மயங்குதல் ... கoகூ

ஐந்து கோசங்களுள்ளும் ஆத்மா விளங்குதல் ... கoகூ

ஆத்மா சரீரந்தோறும் விளங்குதல் ... ககo

ஜீவனும் ஈச்வரனும் உண்மையிலே ஒரே பொருள் ... கக்க

ஆத்மஅறிவு முக்தியைத் தரும் ... ககஉ

நான்காம் உல்லாஸம்—

சுருதிகூறுகின்ற ஆத்மஉண்மையையும் ஆத்மப்பிரகாசத்தையும் ஆக்ஷேபித்தலும் ஸமாதாநமும் ... கஙங

ஈச்வரன் உபாதிகளின்வழியாகச் செய்பவனும் அறிபவனுமாகிறான் ... கஙஅ

அறிதற்கருவியான அகக்கரணம் ... கஙகூ

நாடிகள் ... கசo

நனவுநிலை ... கசச

கனவுநிலை ... கசரு

மாநஸோல்லாஸம்.

		பக்கம்
உறக்கநிலை	...	கசரு
ஆத்மா என்றும் ஸச்சிதாநந்தமாம்	...	கசரு
ஈச்வரனே ஸ்வயம்பிரகாசஉண்மை	...	கசஎ
"நான்" என்பது	...	கசஅ
ஐந்தாம் உல்லாஸம்—		
உடம்பே ஆத்மா என்னும் கொள்கை		கசூகூ
இந்திரியமே ஆத்மா என்னும் கொள்கை		களஉ
பிராணனே ஆத்மா என்னும் கொள்கை		களங
புத்தியே ஆத்மா என்னும் கொள்கை ...		களச
உடம்புமுதலியன ஆத்மாவாகமாட்டா		களச
உடம்பே ஆத்மா என்னும் கொள்கை யை மறுத்தல்	...	களசூ
இந்திரியமே ஆத்மா என்னும் கொள்கை யை மறுத்தல்	...	களஅ
பிராணனே ஆத்மா என்னும் கொள்கை யை மறுத்தல்	...	களகூ
புத்தியே ஆத்மா என்னும் கொள்கையை மறுத்தல்	...	கஅக
உடம்புமுதலியவற்றின் ஸமுதாயமும் ஆத்மாவாகாது	...	கஅங
ஆத்மா எங்கும் நிறைந்தபொருள்	...	கஅச
மாயை என்னும் மயக்கம்	...	கஅஎ
ஆறாம் உல்லாஸம்—		
சூந்யவாதம்	...	உ0சூ
க்ஷணிக விஜ்ஞாநவாதம்	...	உ0எ
ஸமுதாயவாதம்	...	உ0எ
ஜகத்திற்குக் கர்த்தா இல்லை	...	உக0
விஷயஞானம்போல, விஷயிஞானமும் க்ஷணிகமாம்	...	உகஉ

உள்ளடக்கம்.

		பக்கம்
உண்மையும் விளக்கமும் இல்லை	...	உகங
பௌத்தமத மறுதலை	...	உகங
சூந்யவாத மறுதலை	...	உகரு
ஸமுதாயவாத மறுதலை	...	உகள
க்ஷணிக விஜ்ஞாநவாத மறுதலை	...	உகஅ
ப்ரத்யபிஜ்ஞை மயக்க மாகாது	...	உகஅ
ஆத்மா நிலையான உண்மை	...	உஉ0
ஆத்மஇயல்பு	...	உஉங
ஏழாம் உல்லாஸம்—		
வினா	...	உசச
விடை	...	உசரு
ப்ரத்யபிஜ்ஞை இன்னதென்பது	...	உசள
ஆத்மா நித்யப்பொருள்	...	உசஅ
நினைவுகூர்தல் என்னும் ஸ்மிருதி ப்ரமாணமாகாது	...	உரு0
நினைவு என்னும் ஸ்மிருதி	...	உருக
ஆத்மா நிலையானது	...	உருஉ
அவித்யையும், வித்யையும்	...	உருங
ஆத்மாவின் ப்ரத்யபிஜ்ஞை	...	உருச
அத்யாஸம் அல்லது மயக்கம்	...	உருசு
எட்டாம் உல்லாஸம்—		
உண்மை ஒன்றே என்றவழி உலகவ்யவஹாரமும் வேதவ்யவஹாரமும் முரணுதல்	...	உஅஉ
இங்குக் கூறினதுகூறல் குற்ற மன்று	...	உஅங
வேற்றுமையுணர்ச்சி பொய்ம்மையாம்	...	உஅசு
மித்யை அல்லது பொய்ம்மை	...	உஅஅ
பொய்ம்மையினால் மெய்ம்மையுணர்ச்சியுண்டாதல்	...	உஅஅ

மாநஸோல்லாஸம்.

		பக்கம்
ஞானத்தினால் மாயை இல்லாமற்போ தல்	...	உஅகூ
மாயையின் லக்ஷணம்	...	உஅகூ
இந்த மாயாவேச்யையைத் தொலைத் திடுதலே மோக்ஷமென்பது	...	உகூக
ஒன்பதாம் உல்லாஸம்—		
உல்லாஸ இயைபு	...	௩கக
அஷ்டமூர்த்திவடிவினனான ஈச்வரனைத் தொழுதல்	...	௩கக
அண்டத்திலுள்ள நிலம் பிண்டத்திலும் அமைந்திருத்தல்	...	௩கச
அண்டத்திலுள்ள நீர் பிண்டத்திலும் அமைந்திருத்தல்	...	௩கரு
அண்டத்திலுள்ள நெருப்பாயினும் ஒளியாயினும் பிண்டத்திலும் அமைந்திருத்தல்	...	௩கரு
அண்டத்திலுள்ள வாயு பிண்டத்திலும் அமைந்திருத்தல்	...	௩கசு
அண்டத்திலுள்ள ஆகாசம் பிண்டத்தி லும் அமைந்திருத்தல்	...	௩கஅ
அண்டத்திலுள்ள சூரியனும் சந்திரனும் பிண்டத்திலும் அமைந்திருத்தல்	...	௩கஅ
அண்டத்திலுள்ள புருஷன் பிண்டத்தி லும் அமைந்திருத்தல்	...	௩கஅ
யோகத்தினுடைய எட்டு உறுப்புக்கள்	...	௩கஅ
ஸமநஸ்கயோகம் அமநஸ்கயோகத்தை யடையச் செய்கின்றது	...	௩கக
யமம்	...	௩கக
நியமங்கள்	...	௩உ0

உள்ளடக்கம்.

		பக்கம்
ஆஸநங்கள்	...	௩௨௧
ப்ராணாயாமம்	...	௩௨௨
ப்ரத்யாஹாரம்	...	௩௨௨
தாரணை	...	௩௨௨
த்யாநம்	...	௩௨௩
ஸமாதி	...	௩௨௩
மனமும் ப்ராணனும் அசையாமைக்கு யோகம் ஆவச்யகம்	...	௩௨௪
லம்பிகாயோகம்	...	௩௨௪
பூதஜயயோகத்தின் லக்ஷணங்கள்	...	௩௨௪
யோகத்திலே ஈச்வரன் வெளிப்படுதல்	...	௩௨௭
யோகத்திலே ப்ரணவம் வெளிப்படுதல்	...	௩௨௭
ஈச்வரனுடைய அருளும், ஆசார்யனுடைய அருளும் ஆவச்யகம்	...	௩௨௯
பத்தாம் உல்லாஸம்—		
இந்த ஸ்தோத்திரத்தின் பயன்	...	௩௫௩
யாவற்றினும் மேலான பயன்	...	௩௫௫
எட்டு ஸித்திகள்	...	௩௫௭
ஸர்வாத்மபாவநையின் மஹிமை	...	௩௯௦
ஞானத்திற்கு ஈச்வரபக்தியும் குருபக்தியும் இன்றியமையாதவை	...	௩௯௨
மங்களம்	...	௩௯௨
குறிப்புக்கள்—		
தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திர ச்லோகங்களின் முற்பாதி பிற்பாதி முதற்குறிப்பகராதி	...	௩௭௯
மானஸோல்லாஸச்லோகங்களின் முற்பாதி பிற்பாதி முதற்குறிப்பகராதி		௩அ௦
மேற்கோள்முதற்குறிப்பகராதி	...	௪௦௫
விஷய அகராதி	...	௪௦அ

குறிப்பெழுத்துக்களின் விளக்கம்.

ஆப = ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம்.

ஐ - உப = ஐதரேய உபநிஷத்.

கட = கட உபநிஷத்.

காலாக்நி = காலாக்நிருத்ர உபநிஷத்.

கை = கைவல்ய உபநிஷத்.

சா = சாந்தோக்ய உபநிஷத்.

ச்வே = ச்வேதாச்வதர உபநிஷத்.

தை - ஆ = தைத்திரீய ஆரண்யகம்.

தை - உப = தைத்திரீய உபநிஷத்.

நிரு - உத் - தா = நிருஸிம்ஹ உத்தரதாபநீய உபநிஷத்.

பிரு = பிருகதாரண்யக உபநிஷத்.

ப்ரு = ,, ,,

மகா - நா - உப = மகாநாராயண உபநிஷத்.

மநு = மநுஸ்மிருதி.

மு = முண்டக உபநிஷத்.

வே - ஐ - உப = ஐதரேய உபநிஷத் (வேதாந்தபோதினிப் பதிப்பு).

வே - கீ = பகவத்கீதையும் ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்யமும் (வேதாந்தபோதினிப் பதிப்பு).

ஸம் - ஸம்க்ஷேப சாரீரகம்.

ஸ்ரீ

தக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரம்

மாநஸோல்லாஸம்.

ஸ்ரீ

தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரமும்

மாநஸோல்லாஸமும்.

உரைப்பாயிரம்.

பக்தர்களின் பதிப்பு.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய. ஸ்ரீமத்பகவத்கீதா சாஸ்திரத்தினுள்

"உதாரவிதுரா ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ ஸாக்ஷாதிவமே
மே ஜ்ஞாநி ஆத்மைவ மதம் ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா
மாமேவாநுத்தமாம் கதிம் ॥"

"பரதரிற் சிறந்த அர்ஜுந! துயருற்றவனும், (உண்மையினை) அறிய விரும்புவோனும், பொருளை வேண்டுவோனும், ஞானியுமாகிய நால்வகையான நல்ல ஜனங்கள் என்னைத் தொழுகிறார்கள்" (வே - கீ - எ- கசு)

எனத் தமது அன்பர்களைப் பகவான் நால்வகையாகப் பகுத்தருளினர்.

ஸநகாதிப்ரஹ்மபக்தர்கள்.

இவரில், இரண்டாமவன் - உறவு பகைகளாலும், விருப்பு வெறுப்புக்களாலும், மற்றுமித்தன்மையவற்றாலும் அழுக்குற்று நிற்கும் அகக்கரணம் திருந்தாத மந்தபுத்தியனாயின், —குறியொன்றும் இல்லாத நிர்க்குண வடிவான பகவத் ஸ்வரூபத்தைத் தியானிக்க மாட்டுவானல்லன். ஆகவே, பகவான் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத பரம்பொருளாயினும், தம்மை இப்படிப்பட்டவர் அறியும்படி கருணைசெய்து, கண்ணபிரான் சிவபெருமான் ரகுநாதன் முதலான தமது ஸகு

ணவடிவத்தை அவர்களுக்கு அளித்து, அவரை அந்தந்த வடிவமாகிய குறியிலே நிறுத்துபவராய்ப் பின்பு, தமது உண்மைவடிவத்தை உள்ளவாறு உணரும் வண்ணம் அவர்கட்கு ஞானத்தைத் தந்தருளுகிறார். இப்படியே உள்ளது பகவான் திருவாக்கு :—

"..... ஜ்ஞாநாம் வீரதிவாவுகழி
ஷாரி வாஸியொமம் தம் யெந சாஶாவயாஹி தெ॥
தெஷாஶெவாநாகம்வாயுழி கூஹஜ்ஞாநஜம் தமஃ।
நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபெந பாஸ்வதா ॥"

"அன்போடு (என்னைத்) தொழுகிறவர்க்கு,—எதனால் அவர்கள் என்னை அடைவார்களோ, அந்த ஞானயோகத்தைக் கொடுக்கிறேன். அவர்கட்கு அறியாமையினால் ஆண்டான இருட்டை, யான் (அவர்களது) சித்தவிருத்தியிலே இருந்து, ஒளிர்கின்ற ஞானவிளக்கைக்கொண்டு கருணையினாலேயே தொலைக்கின்றேன்" (வே-கீ - ௧0 - ௧0, ௧௧).

இதற்கு இணங்க,

"நிவிருஶெஷம் வரம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்கதுமீஶ்வராஃ। யெ ஶாஸ்த்ரகம்வுதெ ஸவிஶெஷநிரமுவெணெஃ॥ வஶீக்ருதெ மநஸ்யெஷாம் ஸமாணப்ரஹ்மணீயநாஸு। தஶெவாவிலுவெசு ஸாக்ஷாசு கவெதாவாயிகுவுநழி॥"

"எவர்கள் நிர்க்குணமான பரப்ரஹ்மத்தை நேரே காணமுடியாத மந்தர்களோ, அவர்கள் ஸகுணவடிவங்களால் அருள்புரியப்படுகிறார்கள் [பரமேச்வரன் அந்த அன்பாளர்களுக்குத் தமது ஸகுணவடிவத்தைக் கருணையினால் அருளுகிறார்]. இவரது மனம் ஸகுணப்ரஹ்மத்தினுடைய தியானப்பயிற்சியினாலே வசப்பட்டு (அலையாது) நிற்கும்பொழுது, அதுவே உபாதியின் கற்பனை நீங்கியதாய் நேரே காட்சிப்படும்"

என வேதாந்தகல்பதருவினுள் அந்தரதிகரணத்தில் பெரியோர் அமலாநந்த பாதர் உரைத்ததைக் காண்க.

நிர்க்குணப்ரஹ்மபக்தர்கள்.

அல்லது, அந்த இரண்டாமவன் - அநக்கரணம் செவ்வனே திருந்தியவனாய் தான்கு ஸாதநமும் பொருந்திய நுட்பபுத்தியனாயின், —பகவானுடைய உண்மை வடிவான நிர்க்குணஸ்வரூபத்தைக் கேட்டுச், சிந்தித்துத், தெளிந்து தொழுதற்கு

உரியவன். அவன் இவ்வாறு பரம்பொருளைத் தொழ வல்லுக ஞானவளவிலே, பெயர் உருவம் முதலிய பேதபுத்தி அற்றவனாய் "ஞானி" எனப்படுகிறான். மேலும், நால்வகையான பக்தர்களுள்ளும் அவனே மிகமேலான பக்தன். அவ்வண்ணமே, பகவான்

"தெஷாஂஜ்ஞாநீ நித்ய-யுக்த ஏகபக்திர்விஶிஷ்யதே।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரியः ॥"

".....ஜ்ஞாநீ த்வாத்மைவேதி மே மதிः।
ஆஸ்தितः ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் ॥"

"ஒன்றிலேயே பேரன்பையுடையவனாய் எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட ஞானியானவன் அவர்களுள் மேம்படுகிறான். ஏனெனில், யான் ஞானிக்கு மிகவும் பிரியமானவன். அவனும் எனக்குப் பிரியமானவன். ஞானியோ ஆத்மாதான் என்பது - எனது கொள்கை. ஏனெனில், மனம் ஒருநிலைப்பட்ட அவன் என்னையே மிக்க மேலான அடைக்கலமாக நாடியுள்ளவன்" (வே - கீ- எ- கஎ,கஅ)

எனச் சிறந்தெடுத்து கூறியுள்ளார். இனி, இவனுக்கே முக்தி கைகூடுமென்பது வேதரஹஸ்ய மாம்.

நூலும், வார்த்திகமும்.

ஆதலால், கீழ்க்கூறிய நுட்பமதியுள்ள பக்தர்கள் பகவானுடைய நிர்க்குணஸ்வரூபத்தை ஆராயப்புகுகிறார்கள். அங்ஙனம் ஆராயப்புகுந்தவர் அதனைச் சுருக்கமாயும் விளக்கமாயும் எளிதே அறியும்பொருட்டு பகவத்பூஜ்யபாதர் ஸகலவேதங்களுடைய ஸாரத்தைத் திரட்டியெடுத்து ஸ்ரீதகஷிணாமூர்த்திஸ்தோத்திரம் என்னும் நூலைப் பத்து சுலோகங்களால் அருளிச்செய்தனர். அதற்கு - அவரது மாணாக்கர் ஸுரேச்வரர் என்பவர் மாநஸோல்லாஸம் என்னும் உரையை வார்த்திகமாக அநுஷ்டுப் சுலோகங்களால் இயற்றியருளினர். ஸுரேச்வரரெனினும் வார்த்திககாரரெனினும் ஒக்கும். வார்த்திககாரர் - வார்த்திகத்தைச் செய்தவர். வார்த்திகமாவது - கூறிய பொருளையும், கூறாதொழிந்த பொருளையும், குறைவாகக்கூறிய பொருளையும் தெளிவுபெறச்செய்வது [உக்தாநுக்தது:ரூக்தாநாம் வ்யக்தகாரி து வார்திகம்].

கய

வூயசொऽஷாஸஃ ॥

க.

உஜூயம் ஶுஶுத்ரு செ விநாயகஃ
உஜூயம் ஶுஶுத்ரு செ ஸரஸ்வதீ ।
உஜூயம் ஶுஶுத்ரு செ மஹெஶ்வரீ
உஜூயம் ஶுஶுத்ரு செ ஸதாஶிவஃ ॥

உ.

க்ருதஷாஹாதரொ மாஹஃ நாஸ்தீதி ஶுஶுநயொ விதுஃ ।
தஷாஹாயஷும் கவிஃ ஸ்துஷதி ஸ்வாத்மாநம் வரேஶ்வரம் ॥

முதல் உல்லாஸம்.

கடவுள் வாழ்த்து.

க.

விநாயகன் எனக்கு மங்களத்தைத் தந்தருளுக : ஸரஸ்வதீ எனக்கு மங்களத்தைத் தந்தருளுக : மஹேச்வரீ எனக்கு மங்களத்தைத் தந்தருளுக : ஸதாசிவன் எனக்கு மங்களத்தைத் தந்தருளுக.

ஸ்தோத்திரத்தின் பிரயோஜனம்.

உ.

முனிவர்கள் "ஆத்மலாபத்தைக்காட்டிலும் வேறு லாபம் இல்லை" என அறிகிறார்கள். (ஆகவே) அறிவுடையோன் அதனைப் பெறுதற்காக தன்ஆத்மாவான பரமேச்வரனைத் துதிக்கின்றான்.

லாபம் - பேறு, பெறுவது, அடைவது. ஆத்மாஅல்லாத அநாத்மப் பொருள்களெல்லாம் மாயாமயமாகி, வெறும் பதர்போலத் துச்சமாகித் தொல்லையொடு துன்பத்திற்கு வித்தாகும் பொய்ம்மையாதலால், அறிஞர் தாம் அவற்றை அடைய வேண்டுமென்று கொள்வதில்லை. அவ்வாறே, ஸ்மிருதிகளும்

ங.

ஸைஹ்யா ஸ்ரஷ்டாவிஶ்வ விஶ்வம் யோ ஜநவி ஸ்஥்தி: ।
ஸ்தோத்ரேண ஸ்துயதேऽநேந ஸ வநவ வரமேஶ்வர: ॥

ச, சஉ.

கஸ்தி வ்ரகாஶத உதி வ்யவஹாரா: வ்ரவதபுதெ ।
தஸ்தாஸ்திகம் வ்ரகாஶகஸ்ய கஸ்தி நியமு வ்ரதிஷ்஠ிதது ॥

"சூதஸ்யாஹாஸ நவாரம் விஜ்ஞதெ"

"ஆத்மலாபத்தைக்காட்டிலும் வேறு இல்லை" (ஆப - க - ஊ - உ),

"யம் லப்ஸ்வா சாபரம் லாஹம் மந்யதெ நாதிகம் தத:॥"

"எதனை [ஆத்மலாபத்தை] அடைந்து, பின்பு, வேறு லாபத்தை அதனினும் அதிகமாக நினைப்பதில்லையோ" (வே - கீ - சு - ஊ)

என்று எடுத்துக்காட்டுகின்றன. ஆதலால், ஸகலத்திற்கும் ஸாக்ஷியாய் உள்ளேயுள்ள அறிவுப்பொருளாய் ஒப்பு உயர்வுஅற்ற நித்யமான பேராநந்த ப்ரஹ்மமான ஆத்மஸ்வரூபத்தை அடைவதாகிய லாபந்தான் லாபம்: மற்றைய லாபமெல்லாம் லாபமாகா என்றபடி. (உ)

ங.

அன்றியும்,

எவன் தனது இச்சையினால் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தைப் புகுந்து, (எல்லாருடைய) மனத்தினுள்ளும்(வெளிப்பட்டு) நிற்கின்றானோ அந்தப் பரமேச்வரனே இந்த ஸ்தோத்திரத்தினால் துதிக்கப்படுகிறான்.

இச்சையினால் - மாயை என்னும் சக்தியினால். (ங)

மூல காரணத்தைப் பற்றிய வினாக்கள்.

ச, சஉ.

சென்ற பல பிறவிகளிலே செய்த நல்வினைப்பயன்களெல்லாம் பழுத்துநிற்குமளவிலே, பாவம் தேய்ந்து புத்தி திருந்துகின்றது. புத்தி திருந்தியவன் வேதாந்த நூல்களை ஒருவாறு பரும்படியாகப் படித்து மேல்நோக்காக ஆலோசித்து, தனது உலகவாழ்க்கையின் அநுபவத்தால் நித்யஅநித்யங்களது வேறுபாடுகளை உணர்கிறான். உணரவே, அழியுந்தன்மையுள்ள இம்மைமறுமை இன்பங்களில் அவனுக்கு உவர்ப்பு உண்டாகின்றது. அஃதுண்டாகவே, அவன் அடக்கம் பொறுமைமுதலிய நற்குணங்களையுடையவனாய் குருவை வழிபட்டு, தனது மனத்திலுதிக்கும் ஸம்சயங்களை நீக்கிக்கொள்ளவேண்டி பின்வருமாறு வினவலானான்:

(முதல் வினா):—"(இது) உள்ளது, விளங்குகின்றது" என்னும் வழக்குச் செல்லுகின்றது. அந்த உண்மையென்பதும், விளக்கம் என்

கிம் தெஷு தெஷு வாऽயெஷு கிம் வா ஸவபூதநீஶ்வரே ।

ரு.

ஈஶ்வரஸ்ய ச ஜீவஸ்ய ஸவபூதஸ்ய ச கீதுஶ்ஶ ॥

பதும் எப்பொருளில் நிலைத்தவை ? பொருள்கள்தோறும் நிலைத்தவையா ? அல்லது, எல்லாவற்றிற்கும் ஆத்மாவான ஈச்வரனிடத்து (நிலைத்தவையா) ?

தோற்றமுடைய ஒவ்வொருபொருளையும்பற்றி "குடம் உள்ளது, விளங்குகின்றது" எனப் பேசுகின்றோம். இங்கே, குடம் உடைந்தவழி நிலையில்லதாம். ஆனால், "உள்ளது" என்பதும் "விளங்குகின்றது" என்பதும், அதாவது, உண்மை [உள்ளதன்மை] என்பதும் பிரகாசம் [விளக்கம்] என்பதும் அப்படிப்பட்டவையல்ல. எங்ஙனமெனில், — குடம் உடைந்தவழி "ஆடை உள்ளது, விளங்குகின்றது" என உண்மையும் விளக்கமும் ஆடையினிடத்துக் காணப்படுகின்றன. (வே - கீ - ௩0, ௩௧, ௩௨, ௩௩ - ஆம் பக்கங்களைப் பார்க்க.) ஆதலால், தோற்றமுடையனவெல்லாம் நிலைவேறுபட்டுக் கெடுவனவாயினும், உண்மையும் விளக்கமும் நிலைவேறுபடாது, ஒருதன்மையனவாய்க் காணப்படுகின்றன. என ஆராய்ந்துபார்க்கும்மாணுக்கனுக்கு - "இந்த உண்மையும் விளக்கமும் குடம் முதலிய ஒவ்வொரு பொருளிலும் காணப்படுகின்றமையால், அந்த ஒவ்வொருபொருளிலும் அதற்குரியஅளவு வடிவம் முதலியனபோல, தனித்தனியாகத் தங்கியவையா ? அல்லது, இவை - குடம் முதலிய ஒவ்வொரு பொருளிலும் வேற்றுமையில்லாது பொதுவாகக் காணப்படுகின்றமையால், அந்த ஒவ்வொரு பொருளினுடைய ஆத்மாவாக எங்குமுள்ள ஈச்வரனிடத்துத் தங்கியவையா ? ஆத் தன்மையாகிய அதனுடைமையானது ஒவ்வொரு ஆவினிடத்தும் தங்குவதுபோல" என்பது ஸம்சயம். அதன் - ஆவின் கழுத்தில் தொங்கும் சதை. (ச, ச௮)

ரு.

(இரண்டாம் வினா) :— ஈச்வரனென்பவன் எப்படிப்பட்டவன் ?

(மூன்றாம் வினா) :— ஜீவனென்பவன் எப்படிப்பட்டவன் ?

(நான்காம் வினா) :— எல்லாவற்றினுடைய ஆத்மாஎன்பவன் எப்படிப்பட்டவன் ?

ஜகத்திற்குக் கர்த்தாவான ஈச்வரன், குடத்திற்குக் குயவன்போல, அதற்குப் புறம்பானவனா ? அல்லது, பாம்பிற்குக் கயிறுபோல ஜகத்திற்கு ஆதாரமானவனா?

ஜீவத்தன்மையானது உள்ளேயுள்ள ஆத்மாவிற்கு இயற்கையாயுள்ளதா? அல்லது, அவ்வாத்மாவிற்கு உபாதிச்செயற்கையினால் ஆனதா ?

ஈச்வரன்தான் வாஸ்தவத்திலே எல்லாவற்றினுடைய ஆத்மாவா ? அல்லது, உபசாரவழக்கினால் அவன் அவ்வாறு கூறப்படுகின்றானா ? (க)

சு, சுஉ.

ஜாநீயாத்தத்யம் ஜீவஃ கிம் தஜ்ஜாநஸ்ய ஸாயநம் ।
ஜ்ஞாநாத்தஸ்ய ஸயம் கிம் ஸ்யாச்ச வாகுவம் ச கயம் ஹவெச ॥
ஸவபுஜ்ஞஃ ஸவபுகதபூ ச கயசோத்தா ஸவிஷ்யதி ।

எ.

ஶிஷ்யம் ஶ்ரீத்தம் வ்ரஹஜ்ஜ வக்தாரோரஹிதெ மரணஃ ॥

க.　　விஶ்வம் உவர்ணஶ்ரயுசாநநமரீ-
தாரும் நிஜாகுமர்தி
வஸ்ரநாதநி சாயயா வஹிரிவோ-
ஹிதம் யயா நிஶ்ரயா ।
யஷ்ராக்ஷாத்தாரதெ ஶ்ரவொயவஜயெ

சு, சுஉ.

(ஐந்தாம் வினா) :—ஜீவன் அதனை எப்படி அறியக்கூடும் ?

(ஆறும் வினா) :—அதனை அறிவதற்குக் கருவி யாது ?

(ஏழாம் வினா):—அதனை அறிவதனால் பயன் யாது ?

(எட்டாம் வினா):—மேலும், (ஜீவனும் ஈச்வரனும்) ஒன்று என்பது எவ்வாறு ஆகும் ?

(ஒன்பதாம் வினா) :—முற்றுமுணர்ந்தவனாய் எல்லாவற்றையும் செய்கின்ற (ஈச்வரன்) ஜீவனாக எப்படி ஆவான் ?

அதனை - கீழ்க்கூறிய ஈச்வரன் முதலானோர்களது உண்மையை என்றபடி. கருவி - வழி. ஜீவனான ஆத்மா சிற்றுணர்வினன், சிறிதுசெய்பவன். ஈச்வரனோ முற்றுமுணர்ந்தவன், எல்லாம் செய்பவன். இவ்வாறு இவர் தம்முள் விரோத இயல்பினர். ஆதலால், இவ்விருவரும் ஒன்று என்பது உபசாரவழக்கா ? அல்லது, இவரது விரோத இயல்பு போலியாயின், இவ்விருவரும் வாஸ்தவத்திலே ஒன்றுதானா? (சு, சுஉ).

எ.

இவ்வாறு வினவுகின்ற மாணாக்கனை நோக்கி ஆசார்யர் (விடை) கூறத் தொடங்குகிறார் :

க. கண்ணாடியில் காணப்படும் பட்டணம் போன்றதாய், தன்னுள் [ஆத்மாவினுள்]ளேயுள்ள பிரபஞ்சத்தை, தூக்கத்தினால்போல ஆத்மாவினிடத்து மயக்கத்தினால் வெளியில் தோன்றியதுபோல் காண்கின்ற எந்த

ஷ்வாதா நஜைவோ அயடி
கஷ்ஷை ஸ்ரீமஹாஸாஹஸ்ரீதாயை நஜ ஹஹ
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே ||

(ஆத்மப்பொருளானது) விழிப்புஸமயத்திலே இரண்டல்லாத தன்ஆத்மாவையே நேரே காண்கின்றதோ, அந்த ஸ்ரீமதாசார்ய ஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

மாடமாளிகை முதலியவற்றோடு கூடிய பட்டணமானது கண்ணாடியினுள்வாஸ்தவமாகவே இல்லதாயினும், அது அதனுள் இருப்பதுபோலவே தோற்றுகின்றது. அதுபோல, மலை கடல்முதலியவற்றோடுகூடிய இப்பிரபஞ்சமானது ஆத்மாவினுள் வாஸ்தவமாக இல்லதாயினும், அஃது அதனுள் இருப்பதுபோலத் தோற்றுகின்றது. இனி, இவ்வாறாக இப்பிரபஞ்சம் வெளியில் இல்லதாயினும், ஆத்மாவிற்குப் புறம்பாக வெளியே காணப்படுகின்றதே? எனில், — தூங்குகின்றவன் தன்னுள் வாஸநாமயமாயுள்ள கனவுப்பிரபஞ்சத்தை தூக்கத்தால் வெளியி லிருப்பது போலக் கண்டு அநுபவிக்கிறான். ஆனால், தூக்கமொழிந்து விழித்துக்கொண்டவளவிலே கனவுப்பிரபஞ்சமற்ற தன்னைமாத்திரமே நேரே கண்டுநிற்கிறான். அதுபோல, ஒருவன் தன்னுள் நிலம் நீர் முதலிய பூதவடிவாயுள்ள இப்பிரபஞ்சத்தை மயக்கத்தினால் வெளியிலிருப்பதுபோலக் கண்டு அநுபவிக்கிறான். ஆனால், அவன் ஆசார்யனது அருளினால் உபதேசிக்கப்பெற்ற மஹாவாக்யப்பொருளைத் தெளிந்து உணர்ந்தவளவிலே இப்பிரபஞ்சமற்ற தன்ஆத்மாவைமாத்திரமே, தன்நிலையையே, தன்வடிவத்தையே, தன்னையே "நான் ஒளிஅறிவான ஆநந்தமாய் இதோ இருக்கின்றேன்" என நேரே கண்டுநிற்கிறான்.

"குருவே ஈச்வரன்" என்று காட்டுவார் "ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு" என்றார். "ஆத்மாவே அந்த குருவும் ஈச்வரனுமாம்" என உணர்த்துவார் "எந்த (ஆத்மப்பொருளானது) ..... காண்கின்றதோ, அந்த ஸ்ரீமதாசார்ய ஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு" என்றார். எனவே, மெய்யறிவை அருளுகின்ற குருவும், ப்ரஹ்மமான ஈச்வரனும், தன்ஸ்வரூபமான ஆத்மாவும் உண்மையிலே ஒரேபொருள் என்பதாயிற்று. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி - தென்திசையை நோக்கி நிற்கும் வடிவினையுடைய பெருமான். ஆலமரத்தின்கீழ் குருவாக வீற்றிருந்து, ஸநகர் முதலிய உயர்ந்த ஞானிகட்கு ஞானோபதேசம் செய்த சிவபெருமானுடைய அந்தத் திருஅவதாரத்திற்கு "தக்ஷிணாமூர்த்தி" என்றுபெயர். அல்லது, இதற்கு - "இன்னதென்று சொல்லவாராத மாயாசக்தியினால் உலகங்களைப் படைத்து, நிலைப்படுத்தி, அழித்து அமைப்பதிலே வல்லவனாயினும், வாஸ்தவத்திலே உருஇல்லாத பரம்பொருள்" எனப் பொருள் கொள்ளலாம். ஸ்ரீ - மாயாசக்தி; தக்ஷிண - தேர்ந்த; அமூர்த்தி - உருவமில்லாதவன்.

(க)

சுஷ்யாயபுः—

அ, கூ.

சுஷுராஷ்ரிதிஷ் லொகாः சுஷுவிபுஷ்வீஷம் ஜநஷு ।
வஹிவபுநாயயாऽऽஹாதி ஷவபுணெ வ்ரதிவிம்விதழ் ॥
ஷ்வெ ஷ்வாஷுமபுதம் விஷ்ழ் யயா வ்யமிவெக்ஷ்யதெ ।
தயெவ ஜாஸ்ரதாஷுऽவி வ்ரவஞ்சோऽயம் விவிஷ்ய.தாழ் ॥

க0.

ஷ்வெ ஷ்வஸ்தெவாயபுாநாழ் ஸதா நாஸ்ரதி நிஷ்ஷிதா ।

இதன் பொருள் (வருமாறு).:—

பிரபஞ்சம் ஆத்மாவினிடத்து உள்ளது.

அ, கூ.

இவ் வுலகங்கள் இதனுள் இருக்கின்றன. இப் பிரபஞ்சமெல்லாம் உள்ளே உள்ளன. கண்ணாடியினுள் பிரதிபலிக்கப் பெற்றது (போல் உள்ளேயுள்ள இப் பிரபஞ்சமானது) மாயையினால் வெளியிலிருப்பது போலத் தோற்றுகின்றது.

கனவிலே பிரபஞ்சமானது தன்னுள் [ஆத்மாவினுள்] உள்ள (தாயினும்), எப்படி (தூங்குகிறவனுக்குப்) புறம்பாகஉள்ளதுபோலக் காணப்படுகின்றதோ, அப்படியே விழிப்புஸமயத்திலும் இப் பிரபஞ்சத்தை ஆராய்க.

நாம் காண்கின்ற இப் பொருள்களெல்லாம் பரம்பொருளினிடத்து உள்ளன. அதற்குப் புறம்பாக, சுதந்திரமாக ஒருபொருளும் இல்லை. என்று தைத்திரீய ப்ராஹ்மணம் (உ - அ - அ) கூறுகின்றது. இப் பிரபஞ்சமானது, கண்ணாடியில் போல, பரம்பொருளான ஆத்மாவினுள் உள்ளதாயினும், மாயையினால் வெளியிலிருப்பதுபோலத் தோற்றுகின்றது. —எப்படிப்போல எனில், —கனவிலே காணப்படும் பிரபஞ்சமானது ஆத்மாவினுள் இருப்பதாயினும், அவ்வாத்மாவிற்குப் புறம்பாக வெளியிலிருப்பதாகத் தோற்றுகின்றது. அதுபோலவே, நனவில் [விழிப்புநிலையில்] காணப்படும் பிரபஞ்சமும் ஆத்மாவினுள் இருப்பதாயினும், அவ் வாத்மாவிற்குப் புறம்பாக வெளியி லிருப்பதாகத் தோற்றுகின்றது என்பதாம். (அ, க)

க0.

இனி, இந்தத் திருஷ்டாந்தத்தினாலேயே, ஆத்மாஒன்றே உண்மைப்பொருள் என்னலாம்.—எப்படி ?—கூறுவோம் :

கொ ஜாக்ரதி விஶெஷொऽஸ்தி ஜலாநாமாஶுநாஶிநாமி ॥

கக.

ஸ்வப்ந ஸ்வகாஶொ லாவாநாமி ஸ்வப்ந காஶாந்ந ஹீதரஃ ।
ஜாக்ரத்ஸ்வி தயெவெதி நிஶ்சிநுஷி விவஶ்சிதஃ ॥

கனவில் (காணப்படும்) பொருள்களின் உண்மையானது ஆத்ம உண்மையேதான், வேறன்று ; என நிச்சயிக்கப்பட்டுளது. சடமாய், விரைய அழியுந்தன்மையனவாய் நனவில் (காணப்படும் பொருள்கட்கு) வேற்றுமை என்ன ? [ஒன்று மில்லை.]

கற்பனையாகிய பாம்பு விளங்குவதாயினும், அதன் உண்மையானது கயிற்றின் உண்மையேயன்றி வேறன்று : அதாவது, பாம்பு - தனக்கென்று ஓர் சொந்தமான உண்மையில்லாததாய், கயிற்றின் உண்மையினாலேயே தனக்கு உண்மையுடைத்தாகின்றது. அவ்வாறே, கனவில் விளங்கும் பொருள்கட்கெல்லாம் ஆத்மஉண்மையினாலேயே உண்மையாம் என்க. இனி, நனவில் விளங்கும் பொருள்களும் - கனவில் விளங்கும் பொருள்கள் போல, சடமாய், தோற்றம்மாத்திரமான இருப்புள்ளனவாய், தற்காலபோகத்தைத் தருவனவாய், பொள்ளெனப் போய்விடும் இயல்பினவாய், முடிவிலே ஸாரமற்ற விரஸமாய் இருக்கின்றன. அன்றியும், கனவு நனவினால் தள்ளுண்டு போமாறுபோல, நனவும் ஆத்மஅறிவினால் தள்ளுண்டு போகின்றது. ஆகவே, இவ்வாறாகக் கனவொடு ஒப்பநிற்கின்ற நனவினுடைய உண்மையும் ஆத்மஉண்மையேயன்றி வேறன்று. எனவே, உண்மையென்பது வாஸ்தவத்திலே ஆத்மா என முடிந்தது. (கo)

ஆத்மஒளியினால் பிரபஞ்சம் விளங்குகின்றது.

கக.

கனவில் (காணப்படும்) பொருள்களின் விளக்கமானதுதன் [ஆத்ம] ஒளியினாலாகின்றது ; வேறன்று. நனவிலும் அப்படியேதான் என்று அறிவுடையோர் துணிகிறார்கள்.

கனவுப்பொருள்கள் தமக்குச் சொந்தமான விளக்கமில்லாதவையாய், ஆத்ம உண்மையினாலேயே உண்மையைப் பெறுமாறுபோல, ஆத்மவிளக்கத்தினாலேயே விளங்குதலையும் பெறுகின்றன : சுதந்திரமாகத் தம்மால் தாமே விளங்குவன வல்ல. அவ்வண்ணமே, நனவுப்பொருள்களும் ஆத்மவிளக்கத்தினாலேயே விளங்குகின்றன ; கனவுப்பொருள்களை ஒத்துள்ளமையின்.

சங்கை :—ஆயின், நனவுப்பொருள்கள் ஸூர்யன் முதலியவற்றால் விளங்குகின்றனவே ? எனின்,—

கஉ.

நிஹ்யா ஹ்ஸி ஹ்ஸி ஹ்ஸ்ய ஹ்ஸ்ய ந வஸ்ய தி யஸ்ய தி ஹ்ஸ்ய ஹ்ஸ்ய ஹ்ஸ்ய

கங.

"சுநாதிசாயயா ஸுவெதா யதா ஜீவஃ ப்ரவுயுதெ।
சுஜந்நிஜ்ஞாஸ்வப்ந சுவெதம் வுயுதெ ததா ॥"

மெய்யுணர்வு - எல்லாவற்றிற்கும் அடிஆதாரமாய் உள்ளேயுள்ள ஆத்மாவான ப்ரஹ்மத்தை உள்ளபடி காணும் அறிவு. (கஉ)

கங.

அவ்வண்ணமே,

"அநாதி மயக்கத்தால் உறங்கிக்கொண்டிருக்கும் ஜீவன் எப்பொழுது விழித்துக்கொள்கின்றானோ; அப்பொழுது—பிறவாததை, உறக்கமில்லாததை, கனவில்லாத அத்வைதத்தை அறிகிறான்."

இந்த சுலோகம் கௌடபாதரது திருவாக்கு (கௌ - க - கசு).

அநாதி மயக்கமாவது - தொடக்கமின்றித் தொடர்ந்துவரும் அறியாமையும் விபரீதஉணர்வுமாம். அறியாமையென்பது - உண்மையினை உணராமை: விபரீத உணர்வென்பது - கயிற்றைப் பாம்பென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனை வேறொன்றாகத் துணிதல்: மறுபிறப்பும், நல்வினைதீவினைப் பயனும், கடவுளும் இல்லையென இவைபோன்றவற்றைக் கூறும் மயக்கநூல்வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கெனக் கொள்ளுதலும் அது. "இவள் எனது மனைவி, இவர் எனது மக்கள், இது எனது நிலம், இது எனது வீடு, இது எனது குதிரை; நான் இவற்றிற்குச் சொந்தக்காரன்; நான் இன்பமுடையவன், துன்பமுடையவன்; நான் இதனால் வறுமை யடைந்தேன், இதனால் செல்வமடைந்தேன்" என இத்தகைய விபரீதஉணர்வுகளைக் கனவிலும் நனவிலும் உடையவனாய் அறியாமையாகிய உறக்கத்தில் அயர்ந்துகிடக்கும் ஜீவன் - வேதாந்த மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த பரம காருணிகனான குருவினால் "நீ இவ்வாறு நிலம் குதிரை முதலியவற்றினுடைய சொந்தக்காரனாக, இன்புற்றவனாக, துயருற்றவனாக, இன்னுமித்தன்மையனாக இல்லை; மற்று, நீ அதுவாக இருக்கிறாய்" என அறிவுறுத்தப்பெற்றவழி, கனவு நனவு உறக்கம் என்னும் மூன்றனையும் காணாதவனாய் அவற்றிற்கு அப்பால் உள்ள ப்ரஹ்மமான ஆத்மஸ்வரூபத்தை நேரேகாண்கிறான் என்பது கருத்து. பிறவாததை - பொருள்கட்குஉரிய பிறத்தல், இருத்தல், வளர்தல்முதலிய வேறுபாடுகளில்லாததை. உறக்கமில்லாததை - பிறப்பு முதலியவற்றிற்குக் காரணமான அஜ்ஞானமில்லாததை. ஆதலால், கனவில்லாத - அந்த அஜ்ஞாநத்தா லாகும் விபரீதஉணர்வில்லாத. (கங)

கச, கரு.

ஸ்ரு-த்யாऽऽயாயுவ்ரஸாஹெந யொஸாஹ்யாஸவஸொந ச |
ஶஸ்வரூபந-ஸ்ரஹெணாவி ஸ்வாத்மவொயொ யஹா ஹவெசு ||
ஹ-க்தூம் யயாऽந்நம் கு-க்ஷிஸ்ஹ ஸ்வாத்மவெவெநெவ வஸ்ரு தி |
வ-ருணபூரஹதாகுவலிதஹ விஶ்வம் யொஜீஶ்வரஸ்ஸ்யா ||

கச, கரு.

அறியாமையும், பலதலையான உணர்வும், விபரீதஉணர்வும் நீங்கி, அத்வைத அறிவைப் பெறுதற்கு வழிகளைக் கூறுபவராய், அதனையே விரித்துரைக்கிறார் :

சுருதியினாலும், ஆசார்யனது அருளினாலும், யோகப்பயிற்சியின் வலிமையினாலும், ஈச்வரனது அநுக்கிரகத்தினாலும் தன் ஆத்ம அறிவு எப்பொழுது உண்டாகுமோ, (அப்பொழுது)—

(ஒருவன்) உண்டு வயிற்றினுள் தங்கிய உணவைத் தானாகவே காண்குமாறுபோல, தேர்ந்த ஞானியானவன் பரிபூர்ணமான நான் என்னும் எண்ணத்தால் விழுங்கப்பெற்ற பிரபஞ்சத்தைத் தானாகவே காண்கிறான்.

யோகப்பயிற்சி என்பது - தெளிதல் என்னும் நிதித்யாஸநம். சுருதியும் ஆசார்யனும் உபதேசிக்கின்ற மெய்ப்பொருளைக் கேட்டுச், சிந்தித்துத், தெளிவதனால் பரமாத்மாவான ஈச்வரனைத் தொழ, ஈச்வரன் தன்னை அவ்வாறு தொழுவோனது உள்ளத்திலே தனது ப்ரஹ்மாத்மஸ்வரூபத்தை வெளிப்படுத்துவது - இங்கே, ஈச்வரானுக்கிரகமென்பது ; அவ்வாறே பகவான் இதனை எடுத்துக் காட்டுகிறார் :

"தெஷாமெவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தமஃ |
நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபெந பாஸ்வதா ||"

"அவர்கட்கு அறியாமையினாலுண்டான இருட்டை, யான் (அவர்களது) சித்தவிருத்தியிலே இருந்து, ஒளிர்கின்ற ஞான விளக்கைக்கொண்டு கருணையினாலேயே தொலைக்கின்றேன்" (வே - கீ - கo - கக).

நிதித்யாஸநமுதிர்ச்சியினால் "இதோ நான் இருக்கிறேன்" என்று தன் ஆத்மாவைப் ப்ரஹ்மமாகக் கண்டவன் பிரபஞ்சத்தைத் தன்னினும் வேறாகக் காண்பதில்லை ; அதாவது, அவன் பிரபஞ்சத்தை - கேவல ஆத்மப்பொருளாய் எங்குமுள்ள ப்ரஹ்மமான நான் என்ற தானாகவே பார்க்கிறான் : ஒருவன் தான் உட்கொண்ட உணவைத் தன்னினும் வேறாகக் காணாது தானாகவே காண்பதுபோல.

கசு, கஎ, கஅ, கக, உ0.

யயா ஸ்வப்ந ஸ்வபோ ஜாக்ரதா ஜாக்ரா ஜோமாந்யபேக்ஷதாந் ।
வத்ரராஜவபோவேதிஃ ஶத்ரும் ஜிக்வா ரணாஜ்ஜணே ॥
வஶாத்வாராஜிதோ ஜாக்ரதா வநம் ப்ராவ்ய தவஶ்ராந் ।
உஹ்யதுரோத்ரோதாநீ உந்ரதெ கூவ ஜீவிநீ ॥
தயைவ ஜாக்ரதாவேऽவி உநோராஜ்யம் கரோத்ரஸ ।
காலநஶ்யாவவேமேந க்ஷீணாயுநு வஶ்ரதி ॥
வேஹ்ரோऽஶுராரீவ ராயயா மோஹிதோऽயிகீ ।
கிஞ்சித்தத்ரா வ கிஞ்சிஜ்ஜ ஜக்ஷ்ரதெ வாரவேஶ்வராஃ ॥
யத்ரத்தரோதி ஜாநாதி சஸ்ரிம்ஸ்ரஸ்ரிந் வரரேஶ்வராஃ ।
ராஜா விஜாந் ஸ்வஸாரயுராக ஶரம்ஶ்வரோऽயிதீயதெ ॥

எழாம் பக்கத்தில் வினவிய ஐந்தாம் வினாவிற்கு, இந்த கடு - ஆம் சுலோகத்தினால், "ஜீவன் அனைத்தையும் ஒரே ஆத்மஸ்வரூபமாக அறியக்கூடும்" என விடை கூறப்பட்டது. (கச, கடு)

ஆத்மா என்பதே ஜீவனும், ஈச்வரனு மாம்.

கசு, கஎ, கஅ, கக, உ0.

(ஒருவன்) கனவில் அரசானாகி, (தான்) பெற விரும்பியபடியுள்ள போகங்களை அநுபவித்து, சதுரங்கசேனையோடு கூடியவனாய்ப் போர்க்களத்தில் பகைவனை வென்று,

பின்பு தோல்வியுற்றவனாகிக் காட்டை யடைந்து தவம்புரிபவனாய் ஒருசிறிதுபொழுதுமாத்திரத்தினுள் தன்னைக் கல்பகாலம் ஜீவித்தவனாக எண்ணிக்கொள்கிறான்.

அவ்வண்ணமே, இவன் நனவிலும் மனோராஜ்யத்தைச் செய்கிறான்; காலமென்னும் ஆற்றினுடைய ஓட்டத்தின் வேகத்தால் கழிந்துபோகும் ஆயுளை அறிவதில்லை.

பரமேச்வரன், மேகத்தால் மறைக்கப்பெற்ற ஸூர்யன்போல, மாயையினால் மிக்குமயக்கப்பெற்றவனாய்ச் சிறிதுசெய்பவனாகவும், சிறிது அறிபவனாகவும் காணப்படுகிறான்.

பரமேச்வரன் தனது வல்லமையினால் எதெதைச் செய்கின்றானோ, அறிகின்றானோ, அததிலே அரசனாகவும் வித்வானாகவும் (இருக்கின்றான்.

ஆதலால்,) இவன் "ஈச்வரன்" எனப்படுகிறான். (பரமேச்வரன் - பரம் பொருள். அரசன் - எல்லாவற்றையும் செய்பவன். வித்வான் - எல்லா வற்றையும் அறிபவன்.)

ஈச்வரன் என்பவன் - ஜீவர்களை நியமித்து ஆள்பவனாய், உலகிற்கு அதிபதி யாய், முற்றுமுணர்ந்தவனாய் சுதந்திர நிலையைப் பெற்ற ஆத்மாவாம்; கனவிலே ஒருவன் அரசனாகிக் குடிகளை நியமித்து ஆள்பவனாய், நாட்டிற்கு அதிபதியாய் சுதந்திரமாய் இருப்பதுபோல. ஜீவன் என்பவன் - பிறனுக்கு வசப்பட்ட சிற்றறி வினனாய், தான் விரும்பியதைப் பெறுதற்குக் கருவியான காரியத்தைச் செய்கின்ற ஆத்மாவாம்; ஓரரசன் கனவிலே தான் பகைவரால் வெல்லப்பட் டவனாகிக் காட்டிற் சென்று தவம்புரிவதுபோல.

வினா :—அப்படியானால், உண்மையிலே பரம்பொருளான ஆத்மா ஒன்று யிருக்க, அது தன்னை எப்படி ஜீவனாக, ஸம்ஸாரியாகப் பலபல வேதனைகட்கு ஆளாக்கிக்கொள்ளக்கூடும்? அல்லது, அது யாரை உத்தேசித்து அநர்த்தமான ஸம்ஸாரமாயையை அமைக்கின்றது? உத்தேசிக்கப்படுகின்ற ஜீவர்கள் படைப் புத்தொடக்கத்தி லில்லையாதலின்.

விடை :—அப்படியன்று: ஸம்ஸாரம் அநாதியானமையால், இத்தகைய வினாக்கட்கு இடமில்லை. ஆதியென்பது - தொடக்கம், உற்பத்தி. மாயை, ஜீவன், ஈச்வரன் என்னும் வேறுபாட்டிற்குத் தொடக்கமில்லை. தொடக்கமிருந்தாலன்றோ இவ்வினாக்கள் நிகழக்கூடும் என ஒழிக.

இனி, ஒருவன் கனவு காணுமளவிலே, "நான் போரில் பகைஞரை வென்று சுதந்திர அரசனாகிக் குடிகளை ஆண்டுவருகிறேன். எனது மனைவியோ கட்டழகு வாய்ந்த பொன்மேனியாள், குயிலன்ன மொழியுடையாள்; எனது நலத்தைக் கருதி குறிப்பறிந்து நடக்கும் உயர்ந்த புத்திமதீ இவள். எனது மக்களும் கல்வி ஒழுக்கமுடையோர். எனக்கு ஒரு குறையுமில்லை. வெகுகாலமாக இஷ்டப்படி போகங்களை அநுபவித்துவருகிறேன்" என்று மனோராஜ்யம் செய்துகொண் டிருக்க, அக்கனவிலேயே பகையரசன் வந்து பதினைந்து வருடங்கள் அவனோடு போர்புரிந்து நாட்டைக் கவர்ந்துகொள்ள, பின்பு அவன் காட்டையடைந்து பல வருடங்கள் வாழ்ந்தவனாகத் தன்னை நினைத்துக் கொள்கிறான். இவன் கனவு கண்ட காலம் நிமிஷக்கணக்கிற்கு உட்பட்ட ஒரு சிறிது பொழுது. இச் சிறிய காலத்தை நெடிய காலமாகக் கொள்ளுதல் ஜீவனது அறியாமையாம்.

மேலும், இவன் கனவிற்போல நனவிலும் மனோராஜ்யத்தைச் செய்கிறான்: உலகைக் கற்பித்துக்கொள்கிறான். காலம் விரைந்தோடிச் செல்வதனால் ஆயுள் குறைதலையும் உணர்வதில்லை.

இவன் உண்மையிலே பரம்பொருளாயினும், மாயைக்கு வசப்பட்டு அற்ப சக்தியுள்ளவனாய் சிறுதொழிலைச் செய்பவன், சிற்றுணர்வினன், ஆளப்படுபவன்,

உக.

ஜ்ஞாநக்ரியெ ஶிவெநைக்யாஶ ஸங்க்ராஹெ ஸவபுஜஶ்ஷ ।
ஈஶ்வரகுவம் ச ஜீவாநாடி ஸிஶ்ரம் தவுகிஸஜ்ஜோஶ ॥

நியமிக்கப்படுபவன் ; மேகத்தினால் மறைப்புண்டு ஒளிமழுங்கிப் பிரகாசிக்கும் ஸூர்யன்போல என்க.

மற்று, ஈச்வரன் என்பவன் ஜீவனைப்போல உண்மையிலே பரம்பொருளாய், மாயையைத் தனக்கு வசப்படுத்திக் கொண்டவனாய், அளவிலாச் சக்தியுடையவனாய், படைப்பு முதலிய பெரிய தொழில்களைச் செய்பவன், முற்றுணர்வினன், ஆள்பவன், நியமிப்பவன்.

சங்கை :—ஆயின், ஜீவனும் ஈச்வரனும் உண்மையிலே பரம்பொருளாதலால், முந்தினவன் பிந்தினவனுக்கு உட்பட்டவன், அவனால் நியமித்து ஆளப்படுபவன் என்பது எப்படி ? அதாவது, அந்தச் சிறுமையும் பெருமையும் எதனாலானவை ?

ஸமாதாநம் :—உபாதியினாலானவை. ரஜஸ்தமோ குணங்களால் கலக்கப் பெறாத சுத்த ஸத்துவமான மாயை ஈச்வரனது உபாதியாம். ரஜஸ்தமோகுணங்களால் கலக்கப்பெற்ற அசுத்த ஸத்துவமான மாயை ஜீவனது உபாதியாம். ஈச்வரன் தனது உபாதியினால் உலகங்களைப் படைத்தல் முதலிய அளவிலாச் சக்தியை யுடையவனாகின்றான் ; ஜீவன் தனது உபாதியினால் மாடமாளிகைகளைப் படைத்தல் முதலிய அற்பசக்தியை யுடையவனாகின்றான். ஆகவே, அதிகவலிமையுள்ள அரசன் அற்பவலிமையுள்ள குடிகளைப்போல, உயர்ந்த உபாதியுள்ள ஈச்வரன் இழிந்த உபாதியுள்ள ஜீவர்களை நியமித்து ஆளவல்லவனாம். இவ்வாறாக ஈச்வரனுக்கு உயர்வான பெருமையும், ஜீவர்கட்குத் தாழ்வான சிறுமையும் உள்ளன. (கசு, கஎ, கஅ, கக, உ0)

ஈச்வரனே எல்லாவற்றினுடைய ஆத்மாவாம்.

உக.

இவ்வாறாக ஜீவர்களது இயல்பையும், ஈச்வரனது இயல்பையும் கூறி "எல்லாவற்றினுடைய ஆத்மா ஈச்வரனேதான்" என உணர்த்துகிறார் :

(ஜீவர்கள்) ஈச்வரனோடு ஒன்றாயிருத்தலின், அறிவும் செயலும் எல்லாப் பிராணிகளிடத்தும் பொருந்தியுள்ளன; அவனது சக்திக் கலப்பினால் ஜீவர்கட்கு ஈச்வரனது தன்மை அமைந்துளது.

தீயொடு ஒன்றாயுள்ளமையால் இரும்புக்கட்டி வைக்கோலை எரிக்கின்றது. அதுபோல, எல்லாவற்றையும் சுதந்திரமாய் அறிபவனும் செய்பவனுமான ஈச்வரனோடு ஒன்றாயுள்ளமையால் ஜீவர்கள் ஒன்றை அறிபவராக, செய்பவராக இருக்கிறார்கள். ஆகவே, அறிவென்னும் ஞானமும் செய்கையென்னும் கிரியை

உஉ, உஉஉ.

கயம வடொऽயம் வட ஊத்ரவம் நாநாவ்ரதீதிஷ ।
ககுவ்ரஹைவ ஆதாநம் தக ஸ்வயஹைவ வ்ரகாஶதெ ॥
ஆதாநம் ந வெக ஸ்வயம் ஸிஶம் ஜமஹலும் தஹோ ஹவெக ।

உங, உச, உரு.

ந வெஹஸ்ய க்ரியா காஶிக வ்யவஹாரஃ கயம் ஹவெக ॥

யுமாகிய இந்த ஈச்வர சக்திகள் ஜீவர்களிடத்து உள்ளமையால், அவர்கள் ஈச்வரனும் என்க; எனவே, ஈச்வரனேதான் எல்லாவற்றினுடைய ஆத்மாவாய் இருக்கிறான் என முடிந்தது.

ஆறும் பக்கத்தில் வினவிய நான்காம் வினாவிற்கு, இதனால் விடை கூறப்பட்டது. (உக)

அறிவு.

உஉ, உஉஉ.

"இது குடம்" "இது ஆடை" என இத்தகைய வேறுவேறான உணர்ச்சிகளுள் அந்த அறிவு ஸூர்யன் ஒளிபோல, தானே விளங்குகின்றது.

அறிவு தானே அமையாத தாயின், உலகம் குருடான இருட்டாகும்.

"இது குடம்" எனக் குடத்தை அறியும் அறிவு எதுவோ, "இது ஆடை" என ஆடையை அறியும் அறிவு எதுவோ, "இது புஸ்தகம்" எனப் புஸ்தகத்தை அறியும் அறிவு எதுவோ, அஃதெல்லாம் அறிவா தலால், அறிவென்பது ஒன்றென்க. இனி, அவ்வறிவு தானே விளங்குவ தன்றாயின், உலகத்தில் ஒருவர்க்கும் ஒன்றும் தெரியமாட்டாது. ஆனால், அப்படி இல்லை. நள்ளிருளில் இருக்கின்ற குருடனுக்கும் நாற்றம் புலப்படுகின்றது; "இது மல்லிகையின் மணம்" என்னும் அறிவு தானே விளங்குகின்றது. ஆதலால், அறிவு ஸ்வயம் பிரகாசமாம். (உஉ, உஉஉ)

செயல்.

உங, உச, உரு.

இவனது செயலொன்று இல்லையாயின், வியவஹாரம் எவ்வாறு நிகழும்?

க்ரியா நாஶ வரிஷ்ஷுவரிணாஶஷ்ஷுரு ஷுவிணீ ।
ஷுஷுரோநெ ஷஹிஜ்ஜுரூநெ தஷுஷுரூரவஷுரூஷுவெஶ ॥
உதூஷுவூரூவுஷஂஷ்ஷுரூயுவிகாயெரூவாஶ்ரூயா க்ரியா ।
கரொதி ஶுஷுதுரூநாஷிரு ஶிநத்தீதி வ்ரதீயதெ ॥

செயலென்பது - அசைவுவடிவாக, திரிபுவடிவாக இருக்கின்றது; அறிவு வெளியே செல்லுமிடத்து அதனது முளைபோல உண்டாகின்றது.

இனி, அந்தத் திரிபாகிய செயல் எவ்வாறு காணப்படுகின்றது?

செயலானது - "இயற்றுகிறான்," "அடைகிறான்," "சுத்தப்படுத்துகிறான்," "குறைக்கிறான்" என ஆக்கப்படுவதும், அடையப்படுவதும், ஸம்ஸ்கரிக்கப்படுவதும் வேறுபடுத்தப்படுவதுமாகிய இவற்றைச் சார்ந்ததாகப் புலப்படுகின்றது.

அசைவு - அசைதல். திரிபு - திரிதல், வேறுநிலையைப் பெறுதல். அசைதலென்னும் செயல் - எறிந்த அம்பிலும், திரிதலென்னும் செயல் - நகையாயுள்ள பொன்னிலும் காணப்படுகின்றது. இனி, இவற்றிற்கு இச் செயலானது - அறிவென்னும் சேதநப்பொருளா லாவது; ஆதலால், "அசேதநமான ஜடப்பொருள் சேதநத்தால் செய லுறுகின்றது" எனக் காட்டுவார் "அதனது [அறிவினது] முளைபோல" என்றார். எங்ஙனமெனில்,—கண்ணின்வழியாக வெளியே செல்லுகின்ற அகக்கரணத்தோடு அறிவும் செல்ல, குடம் என்னும் அறிவு உண்டாக, பார்த்தல் என்னும் செயல் நிகழ்கின்றது. ஜடப்பொருளாகிய கண்ணிற்குப் பார்த்தல் என்னும் செயலானது உள்ளேயுள்ள ஆத்மாவான அறிவுப்பொருளினால் ஆகின்றது: வண்டிக்கு ஓடுதல்போல.

இவ்வாறாக, ஜடப்பொருள்கள் தாமாகத் தொழிற்பட ஏலாவாதலால், பார்த்தல் கேட்டல் முதலிய உலகவியவஹாரங்களெல்லாம் நடைபெறுதிருத்தல் வேண்டும். ஆனால், அப்படியில்லை. ஆகவே, பிராணன் முதலியவற்றினுடைய செயலும் - அந்தர்யாமியாய் உள்ளேநின்று அனைத்தையும் நியமித்து வருகின்ற ஈச்வரனது ஸந்நிதிமாத்திரத்தா லாகின்றது; எனவே, எல்லாச் செயலும் அவனது செயலாம் என்றபடி. நான்காம் உல்லாஸத்தினுள் எ, அ - ஆம் சுலோகங்களைப் பார்க்க.

திரிதலாகிய செயலானது - இயற்றப்படுவதும், அடையப்படுவதும், ஸம்ஸ்கரிக்கப்படுவதும், வேறுபடுத்தப்படுவதும் என நால்வகைத்தான செயப்படு பொருளைச்சார்ந்துளது. க. "வீட்டைக் கட்டுகிறான்"; உ. "பாலைக் கறக்கிறான்";

உசு.

ஶிவொ ஸ்ரஹ்மாதிஷ்வெஷு ஸவபுஷு உதி ஹாஸதெ |
ஷெவதியபுஷு ஷெஷு கிஞ்சிஜ்ஜ்ஞாநதரூதஃ ||

உஎ.

ஜாயாஜோऽண்டஜஸ்வெவ ஸ்வெஷுஜஃ வநாஹிஃ |
வஸதெ வதவிபுயா ஷெஹாஃ க்ரமஶொ நுஷ்ரதயஃ ||

ங. "தரையை ப்ரோக்ஷிக்கிறான்"; ச. "நெல்லைக் குத்துகிறான்" என்பன முறையே உதாரணம். இங்கே, இயற்றுதலாவது - முன் இல்லாத வீட்டை உண்டாக்குதல்; அடைதலாவது - கறக்கும் வரையிலும் பாலைப் பெறுதல்; ஸம்ஸ்கரித்தலாவது - ஜலத்தைத் தெளித்தலால், தரையைச் சுத்தஞ்செய்தல்; வேறுபடுத்தலாவது - முன் உள்ள உமியைப் பிரித்தல். (உங, உச, உரு)

உசு.

இப்பொழுது, முற்றுணர்வுடைமையும் சிற்றுணர்வுடைமையும் உபாதிபேதத்தா லாகின்றன எனக் காட்டுகிறார்:

ஈச்வரன் (உபாதியினுடைய) ஏற்றத்தாழ்ச்சிக்கு ஏற்ப ப்ரஹ்மா முதலானவருடைய உடம்புகளில் முற்றுணர்வினராக விளங்குகிறான்; தேவர் விலங்கு மனிதர்களில் சிற்றுணர்வினராக விளங்குகிறான்.

கச, கரு, கசு - ஆம் பக்கங்களைப் பார்க்க. (உசு)

உஎ.

அந்த ஏற்றத்தாழ்ச்சி, உடம்பு என்னும் உபாதியினால் ஆகின்றது எனக் கூறுகிறார்:

பையிற் பிறப்பதும், முட்டையிற் பிறப்பதும், வியர்வையிற் பிறப்பதும், நிலத்திற் பிறப்பதுபாகிய இந்நால்வகை உடல்களும் முறையே தாழ்ந்த தன்மையன.

பையிற் பிறப்பவை - மனிதர் மாடு முதலியன. முட்டையிற் பிறப்பவை- பறவை, பாம்பு முதலியன. வியர்வையிற் பிறப்பவை - பேன், கொசு முதலியன. நிலத்திற் பிறப்பவை - மரம், செடி முதலியன. இவற்றினுள், முந்தினதைக் காட்டிலும் பிந்தினது தாழ்ந்தது. அவ்வாறே, மனிதனது உடம்பிற்கும், மாட்டினது உடம்பிற்கும் வேற்றுமை உள்ளமையால், பையிற் பிறப்பனவற்றினுள்ளும் அறிவு முதலியவற்றினுடைய ஏற்றத்தாழ்ச்சிகளை நோக்குக. (உஎ)

உஅ.

ப்ரஹ்மாதிஸ்தம்பபர்யந்தா ஸ்வப்நகல்பைவ கல்பநா ।
ஸாக்ஷாத்க்ருதேऽநவஹிதே ப்ரகாஶே வாஸ்தவீ ॥

உகூ.

கணோரணீயாந்ஹ்ருதி ஹ்ருதி ஸ்தாநிதி வேதவாக் ।
ஈஶ்வரோபநிஷத்ப்ரோக்தா ஸ்ஸர்வாத்மகம் ஶிவம் ॥

வேற்றுமைக்கு மாயையே காரணம்.

உஅ.

ஜீவன் ஈச்வரன் முதலிய வேறுபாடுகளெல்லாம் மாயாமயம் என்று கீழே உணர்த்தியதை இப்பொழுது முடிக்கிறார் :

அளவிலா ஒளியான பரமாத்மாவை நேராகக் கண்டவிடத்து, ப்ரஹ்மமுதல் புல்ஈறாகவுள்ள கற்பனை(யெல்லாம்) கனவை நிகர்த்ததே என்க.

எங்குமுள்ள ஆத்மாவைக் கண்டு எல்லாம் தானானவிடத்து, யார் யாரைக் காண்பார்? அதாவது - கனவு, நனவிலே எதிர்ப்படாது சடக்கென்று பொய்ம்மையாகக் கரைந்துபோவதுபோல, த்வைதப்பிரபஞ்சம் நிர்விகல்ப ஸமாதியிலே இல்லாமற் போகின்றது. (உஅ)

உகூ.

வினா :—ஆயின், எல்லாம் ஆத்மஸ்வரூபந்தான் என்பதற்குப் பிரமாணம் யாது ?

விடை :— வருமாறு :

(ப்ரஹ்மம்) "சிறிதினும் சிறிது, பெரிதினும் பெரிது" என்பது - வேதத்தின் திருவாக்கு. இவ்வாறு ருத்ரோபநிஷத்தும் ஈச்வரனை ஸர்வாத்மாவாக [எல்லாவற்றினுடைய ஆத்மஸ்வரூபமாக]ப் புகழ்கின்றது.

"கணோரணீயாந் ஹ்ருதி ஹ்ருதி ஸ்தாऽஸ்ய
ஜந்தோர்நிஹிதம் ஗ுஹாயாம் ।"

"ஆத்மா சிறிதினும் சிறிது : பெரிதினும் பெரிது : இந்தப் பிராணியினுடைய ஹிருதயத்திலே இருப்பது" (கட - உ - உ0 ; ச்வே - ங - உ0 ; ம - நா - அ - ங).

"யஸ்மாந்நாணீயோऽஸ்தி ந ஜ்யாயோऽஸ்தி கஶ்சித்"

"எதனைக்காட்டிலும் நுண்மையானது இல்லையோ, பருமையானதொன்று இல்லையோ"—(ச்வே - ங - கூ ; ம - நா - க0 - ச).

௩௦.

ஂஸ்வரூபா மஂஸ்ஸாதெதி உ-ஏதிபுஹெஉவிஹாமிநெ ।
வெ்ராஉவஉ்ராவுதெஹாய உக்ஷிணாஉ-ஏதபுயெ நமஃ ॥

௩௧.

ஊதி ஸ்ரீஉக்ஷிணாஉ-ஏதிபுஸ்தோத்ராயபுவ்ருதிவாஉகெ ।
வ்ருவெஸு ஊநஸொல்லாஸெ வ்ருயஸொல்லாஸஸம்ஹ்ருஹஃ ॥

"கணோரணீயாநஹமேவ தத்வநுஹாநு"

"நானே சிறிதினும் சிறியவன் ; அதுபோல, (எல்லாவற்றிற்கும்) பெரியவன்"—(கை - உ0).

இவ்வாறு கடோபநிஷத்தும், ச்வேதாச்வதரோபநிஷத்தும், மஹாநாராயணோபநிஷத்தும், கைவல்யோபநிஷத்தும் ஆத்மவடிவத்தை வெகு சமத்காரமாகக் கூறுகின்றன. ஒருவன் எதனைச் சிறியதாகக் கொள்கின்றானோ, ஆத்மா அதனினும் சிறிதாம் : அவ்வண்ணமே, எதனைப் பெரியதாகக் கொள்கின்றானோ, ஆத்மா அதனினும் பெரிதாம். அதாவது - ஆத்மஸ்வரூபத்தின் நுண்மையும் விரிவும் இடத்தால் அளவுபடா என்பதாம். ஆகவே, கனிகள் கூடையிலிருப்பதுபோல, ஆத்மாவாகிய ப்ரஹ்மம் இடமென்பதில் இல்லை : இடமென்பதைக் கடந்து, அதற்குஅப்பால் தானே தன்மஹிமையில் தங்கியுளது. ஆதலால், ஆத்மா எங்குமுள்ள பொருளென்க. (உக)

௩௯.

இவ்வாறு எங்குமுள்ள ஒன்றான தனிப்பொருளாயினும்,

ஈச்வரன், ஆசார்யன், ஆத்மா என்னும் வடிவத்தின் வேற்றுமையால் வேறுபட்டு, ஆகாசம்போல் (எங்கும் தனது) ஸ்வரூபம் நிறைந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

ஈச்வரஸ்வரூபமாகவும், குருஸ்வரூபமாகவும், ஆத்மஸ்வரூபமாகவும்உள்ளது ப்ரஹ்மமான ஒரேபொருளென்பார், "(எங்கும் தனது) ஸ்வரூபம் நிறைந்த" எனச் சிறப்பித்துக் கூறினர். (௩0)

௩௧.

இதனோடு, எ - ஆம் பக்கத்திலுள்ள முதல் சுலோகத்தின் உரையை முடிக்கிறார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய ஸ்தோத்திரத்தின் பொருளை விரித்து உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் முதல் உல்லாஸப் பொழிப்புரை முற்றும். (௩௧)

குறிப்பு:—க. ஐந்தாம் பக்கத்தில் வினவிய முதல் வினாவிற்கு - ௧0, கக - ஆம் சுலோகங்களால் விடை கூறப்பட்டது.

உ, ங. ஆறும் பக்கத்தில் வினவிய இரண்டாம் வினாவிற்கும், மூன்றும் வினாவிற்கும் - ககூ, கஎ, கஅ, கக, உ0 - ஆம் சுலோகங்களால் விடை கூறப்பட்டது.

ச. ஆறும் பக்கத்தில் வினவிய நான்காம் வினாவிற்கு - உக ஆம் சுலோகத்தினால் விடை கூறப்பட்டது.

ரு. ஏழாம் பக்கத்தில் வினவிய ஐந்தாம் வினாவிற்கு - கரு ஆம் சுலோகத்தினால் விடை கூறப்பட்டது.

சு. ஏழாம் பக்கத்தில் வினவிய ஆறும் வினாவிற்கு - கச ஆம் சுலோகத்தினால் விடை கூறப்பட்டது.

எ. ஏழாம் பக்கத்தில் வினவிய ஏழாம் வினாவிற்கு - "ஸம்ஸாரம் முற்றும் ஒழிதலே ஆத்மஅறிவின் பயன்" என இனி மூன்றும் உல்லாஸத்தினுள் விடை கூறப்படும்.

அ, க. ஏழாம் பக்கத்தில் வினவிய எட்டாம் வினாவிற்கும், ஒன்பதாம் வினாவிற்கும் - கக, உ0, உகூ, உஎ - முதலிய சுலோகங்களால் விடை கூறப்பட்டது.

முதல் அத்தியாயம்.

பதவுரை.

க.

விநாயகஃ	விநாயகன்
மெ	எனக்கு
உஜுலு	மங்களத்தை
திஶது	தந்தருளுக ;
ஸரஸ்வதீ	ஸரஸ்வதீ
மெ	எனக்கு
உஜுலு	மங்களத்தை
திஶது	தந்தருளுக ;
உமெஶ்வரீ	மஹேச்வரீ
மெ	எனக்கு
உஜுலு	மங்களத்தை
திஶது	தந்தருளுக ;
ஸதாஶிவஃ	ஸதாசிவன்
மெ	எனக்கு
உஜுலு	மங்களத்தை
திஶது	தந்தருளுக.

உ.

உநயஃ	ரிஷிகள்
சூதுலாஹாசு	" ஆத்மலாபத்தைக் காட்டிலும்
வரஃ	வேறு
லாஹஃ	லாபம்

ந கஸ்தி	இல்லை"
இதி	என்று
விதுஃ	அறிகிறார்கள்.
கவிஃ	அறிவுள்ளவன்
தமாஹாயபி	அதனைப் பெறுதற்காக
ஸ்வாத்மநி	தன் ஆத்மஸ்வரூபமான
பரமேஶ்வரம்	பரமேச்வரனை
ஸ்துதி	துதிக்கிறான்.

ங.

யஃ	எவன்
ஸ்வேச்சயா	தனது இச்சைப்படி
ஸ்ருஷ்டம்	படைக்கப்பட்ட
விஶ்வம்	ஜகத்தை
ப்ரவிஶ்ய	புகுந்து
மநஸி	மனத்தில்
ஸ்தி தஃ	நிற்கின்றானோ,
ஸஃ	அந்த
பரமேஶ்வரஃ ஏவ	பரமேச்வரனே
அநேந	இந்த
ஸ்தோத்ரேண	ஸ்தோத்திரத்தினால்
ஸ்தூயதே	துதிக்கப்படுகிறான்.

ச, சஉ.

கஸ்தி	"இருக்கின்றது,"
ப்ரகாஶதே	"விளங்குகின்றது"
இதி	என்று
வ்யவஹாரஃ	வியவகாரம்
ப்ரவர்தமாநே	செல்லுகின்றது.

தசு	அந்த
கஸ்திகுழி	இருக்கின்றதுஎன்பதும்
வ்ரகாஶகுழி ச	விளங்குகின்றதுஎன்பதும்
கஸ்மிந்	எந்த
கயெ	பொருளில்
வ்ரதிஷ்டிதழி	நிலைபெற்றது ?
தெஷு தெஷு	அந்தந்த
கயெஷு வா	பொருள்களிலாயினும்
கிம் (வ்ரதிஷ்டிதழி)	(நிலைபெற்றதா) ?
ஸவபூதநி	எல்லாவற்றிற்கும் ஆத்மாவான
ஈஶ்வரெ வா	ஈச்வரனிடத்திலாயினும்
கிம் (வ்ரதிஷ்டிதழி)	(நிலைபெற்றதா) ?

௩.

ச	மேலும்,
ஈஶ்வரகுழி	ஈச்வரத்தன்மை
கீதுஶழி	எப்படிப்பட்டது ?
ஜீவகுழி	ஜீவத்தன்மை
(கீதுஶழி)	(எப்படிப்பட்டது) ?
ச	அன்றியும்,
ஸவபூதகுழி	எல்லாவற்றினுடைய ஆத்மாவின் தன்மை
(கீதுஶழி)	(எப்படிப்பட்டது) ?

சு, சு௨.

ஜீவஃ	ஜீவன்
தசு	அதனை
கயழி	எப்படி

ஜாநீயாத்	அறிவான் ?
தஜ்ஜாநஸ்ய	அதனை அறிதற்கு
ஸாயநம்	கருவி
கிம்	யாது ?
தஸ்ய	அதனுடைய
ஜ்ஞாநாத்	அறிவினால்
கிம்	யாது
஫லம்	பயன்
ஸ்யாத்	ஆகும் ?
ச	மற்றும்,
ஏகத்வம்	ஒன்று என்பது
கதம்	எப்படி
஭வேத்	இருக்கும் ?

ச	இன்னும்,
ஸர்வஜ்ஞஃ	எல்லாவற்றையும் அறிபவனாய்,
ஸர்வகர்தா	எல்லாவற்றையும் செய்பவன்
ஜீவ	ஜீவனாக
கதம்	எப்படி
஭விஷ்யதி	ஆவான் ?

எ.

஗ுரு஫ஃ	குருவானவர்
இத்தம்	இவ்வாறு
வ்ரு஫ந்தம்	வினவுகின்ற
ஶிஷ்யம்	சிஷ்யனை
ப்ரதி	நோக்கி
வக்து஫்	சொல்ல
ப்ரா஫ர்த	தொடங்கினார்.

க.

உவர்ணஉபுரஸுஉந-	கண்ணாடியில் காணப்படுகின்ற
நமரீதரூபி	பட்டணம்போன்றதாய்
நிஜாகுமர்தி	தன்னுள்ளேயுள்ள
விஸ்வி	ஜகத்தை,
நிஉயா யயா	தூக்கத்தினால்போல
சூதுநி	ஆத்மாவினிடத்து
உாயயா	மயக்கத்தினால்
வஹிஃ	வெளியில்
உஉஸ்ரதி உவ	தோன்றியதுபோல்
வஸுநு	பார்க்கின்ற
யஃ	எவன்
வுவொயஸஉயெ	விழிப்புசமயத்திலே
சுஉயி	இரண்டல்லாத
ஷாதாநி வவ	தன்ஆத்மாவைமாத்திரமே
ஸாக்ஷாசுகுரூதெ	நேரே காண்கின்றானோ,
தஷெ	அந்த
ஸ்ரீமரூஉதர்யெ	ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான
ஸ்ரீஉக்ஷிணாஉதர்யெ	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திர்க்கு
ஊஉி	இந்த
நஉஃ	நமஸ்காரம்.

சுஸ்ய	இதனுடைய
சுயஃ	அர்த்தம்
(உச்யதெ)	(உரைக்கப்படுகின்றது.)

அ, சு.

ஊஉெ	இந்த
லொகாஃ	உலகங்கள்
சுஷிநு	இதனிடத்து

ஸகம்	உள்ளே
(வதுதெ)	(இருக்கின்றன) :
ஈதி	இந்த
விஶ்வ	எல்லா
ஜகத்	பிரபஞ்சமும்
ஸகம்	உள்ளே
(வதுதெ)	(இருக்கின்றது) ;
உவுணெ	கண்ணாடியினுள்
ப்ரதிபிம்பிதம்	பிரதிபலிக்கப்பட்டது (போல் உள்ளே இருக்கின்ற ஜகத் தானது)
மாயயா	மயக்கத்தினால்
பஹிவுத	வெளியிலிருப்பதுபோல
ஸூஹாதி	தோன்றுகின்றது.
யதா	எப்படி
ஸ்வெ	கனவில்
ஸ்வாதமுதி	தன்னுள்ளேயுள்ள
விஶ்வ	பிரபஞ்சமானது
வ்யக்த உவ	வேறாகத் தனித்திருப்பதுபோல
ஸம்க்ஷ்யதெ	காணப்படுகின்றதோ,
ததா வத	அப்படியே
ஜாக்ரதாமெ ஸுவி	நனவுகாலத்திலும்
ஈயம்	இந்த
ப்ரபஞ்சம்	பிரபஞ்சமானது
விவிச்யதாம்	பகுத்தறியப்படட்டும்.

கo.

ஸ்வெ	கனவிலே
அர்தாநாம்	பொருள்களுக்கு

ஸத்தா	உண்மையானது
ஸ்வஸத்தா வவ	ஆத்மஉண்மையேதான்,
கநா	வேறு
ந	அன்று
உதி	என
நிஶ்சிதா	நிச்சயிக்கப்பட்டுளது.
ஜலாநாழி	சடமாய்
ஶுஶ்ரூநாஶிநாழி	விரைய அழியுந்தன்மையுள்ள (பொருள்கட்கு)
ஜாக்ரதி	நனவிலே
கஃ	யாது
விஶேஷஃ	வித்தியாசம்
கஸ்தி	இருக்கின்றது ?

கக.

ஸ்வப்ந	கனவில்
ஹாவாநாழி	பொருள்கட்கு
வ்யக்தாஃ	விளக்கமானது
ஸ்வவ்யக்தாயாக	ஆத்மவிளக்கத்தினும்
உதரஃ	வேறாக
ந ஹி	இல்லை ;
ஜாக்ரதி கவி	நனவிலும்
தயா வவ	அப்படியே
உதி	என்று
விபஶ்சிதஃ	அறிவுடையோர்
நிஶ்சிந்வி	நிர்ணயிக்கினார்கள்.

கஉ.

யயா	எப்படி
உகுஷிதஃ	எழுந்திருந்தவன்

நிஶ்ரயா	உறக்கத்தால்
உஶிதாநு	காட்டப்பெற்ற
கயாநு	பொருள்களை
ந வஶ்யதி	காண்கிறானில்லையோ,
தயா	அப்படி
ஸத்ஜ்ஞாநொதயாத் ஊர்த்வம்	மெய்யறிவு பிறந்ததற்குமேல்
விஶ்வம்	பிரபஞ்சத்தை
ந பஶ்யதி	காண்கிறானில்லை.

கங.

அநாதிபோதயா	ஆதியில்லா மயக்கத்தால்
ஸுப்தஃ	உறங்கிக்கொண்டிருக்கும்
ஜீவஃ	ஜீவன்
யதா	எப்பொழுது
ப்ரபுத்யதே	விழித்துக்கொள்கின்றானோ,
ததா	அப்போழுது
அஜந்நநித்ரம்	பிறப்பும் தூக்கமும் இல்லாததை
அஸ்வப்நம்	கனவில்லாததை
அத்வைதம்	அத்வைதத்தை
பஶ்யதி	அறிகிறான்.

கச, கரு.

ஸ்வாத்மைவாயம்	தன்ஆத்மஅறிவானது
ஶ்ருதயா	சுருதியினாலும்
ஆசார்யப்ரஸாதேந	குருவினுடைய அனுக்கிரகத்தினாலும்
யோகாப்யாஸவஶேந ச	நிதித்யாஸநப்பயிற்சியின் வலிமையினாலும்
ஈஶ்வரானுக்ரஹேண கவி	ஈச்வரனது அருளினாலும்

யஷா	எப்பொழுது
ஹவெசு	உண்டாகுமோ,
(கஷா)	(அப்பொழுது)—
(கஶ்சிசு)	(ஒருவன்)
ஹ்ருதி	புஜிக்கப்பட்டதாய்
கர்க்ஷிஸ்தி	வயிற்றினுள் இருக்கின்ற
கந்தி	சோற்றை
ஸ்வாதுக்வேந வாவ	தானுகவே
யதா	எப்படி
பஶ்யதி	பார்க்கின்ருனே [கொள்கின்ருனே]
ததா	அப்படி
யொ தீஶ்வரஃ	தேர்ந்த ஞானியானவன்
பூர்ணாஹங்காகவலிதி	பூர்ணமாண நான் என்னும் எண்ணத்தால் விழுங்கப் பெற்ற
விஶ்வி	பிரபஞ்சத்தை
(ஸ்வாதுக்வேந வாவ)	(தானுகவே)
(பஶ்யதி)	(பார்க்கிருன்.)

கசு, கஎ, கஅ, கசு, உ0.

யதா	எப்படி
(கஶ்சிசு)	(ஒருவன்)
ஸ்வப்ந	கனவில்
நரபஃ	அரசனுக
ஹ்ருக்வா	ஆகி,
யதேஷ்டாநு	அடைய விரும்பியவாறுள்ள
ஹொமாநு	போகங்களை

ஸுக்ஷா	அநுபவித்து,
ரணாஜணெ	போர்க்களத்தில்
சதுரங்கஸேனையோடு கூடியவனாய்	
ஶத்ரு	பகைவனை
ஜிகா	வென்று,
வஶாஸ	பின்பு
வராஜிதः	தோல்வியுற்றவனாக
ஸுக்ஷா	ஆகி
வநே	காட்டை
ப்ராப்ய	அடைந்து
தபः	தபஸை
சரந்	செய்பவனாய்
ஶுஹுதபோத்ரே	சிறிதுபொழுது மாத்திரத்தினுள்
ஸுதாநே	தன்னை
கல்பஜீவிநே	கல்பகாலம் ஜீவித்தவனாக
மந்யதெ	எண்ணிக்கொள்கிறான்.
தயா வஸவ	அப்படியே
ஸுஸள	இவன் [ஜீவன்]
ஜாஹ்நவீதீரெ ஸுவி	நனவு காலத்திலும்
மநோராஜ்யே	மனோராஜ்யத்தை
கரோதி	செய்கிறான்;
காலநஜ்வாவவெகெந	காலம் என்னும் ஆற்றினுடைய ஓட்டத்தின் வேகத்தால்
க்ஷீணம்	குறைந்துபோகின்ற
ஆயுः	ஆயுளை
ந வஶ்யதி	அறிகிறானில்லை.

வரமேஶ்வரः	பரமேச்வரன்
மேகஸமாவृதः	மேகத்தால் மூடப்பட்ட
கிரணமாலீ இவ	கிரணமாலைகளையுடைய (ஸூர்யன்) போல
மாயயா	மாயையினால்
மஹதா	மிகவும்
மோஹிதः	மயக்கப்பட்டவனாய்
கிஞ்சித்கரீ	சிறிது செய்பவனாகவும்
கிஞ்சிஜ்ஜः ச	சிறிது அறிபவனாகவும்
த்ருஶ்யதே	காணப்படுகிறான் ;
பரமேஶ்வரः	பரமேச்வரன்
ஸ்வஸாமர்த்யாத்	தனது சாமர்த்தியத்தினால்
யத் யத்	எதெதை
கரோதி	செய்கின்றானோ
ஜாநாதி	அறிகின்றானோ,
தஸ்மிந் தஸ்மிந்	அததிலே
ராஜா	அரசனாகவும்
விதாந	வித்வானாகவும் (இருக்கிறான்.)
(கதः)	(ஆகவே,)
அயம்	இவன்
ஈஶ்வரः	"ஈச்வரன்"
இதி	என்று
ஈரயதே	சொல்லப்படுகிறான்.

உக.

ஜ்ஞாநக்ரியே	அறிவும், செயலும்
ஶிவேந	ஈச்வரனோடு
ஏகத்வாத்	ஒன்றாயுள்ளமையால்

ஸவபூதேஷு	எல்லாப் பிராணிகளிடத்தும்
ஸம்க்ராந்தை	சென்றுள்ளன.
ஈஶ்வரத்வம் ச	ஈச்வரத்தன்மையும்
ஜீவாநாம்	ஜீவர்கட்கு
தத்ஸக்திஸம்பேதாத்	அவனுடைய சக்திக்கலப்பினால்
ஸ்திதம்	அமைந்துளது.

உஉ, உஉஉ.

தத்	அந்த
ஜ்ஞாநம்	அறிவானது,
ஈதி	"இது
கடஃ	குடம்,"
ஈதி	"இது
படஃ	ஆடை"
இதி	என்று
ஏவம்	இவ்வாறான
நாநாவிதாகாரேஷு	வேறுவேறு உணர்ச்சிகளுள்
ஏகரூபஸ்ய இவ	ஸூர்யன் ஒளிபோல
ஸ்வயம் ஏவ	தானே
ப்ரகாஶதே	விளங்குகின்றது.

ஜ்ஞாநம்	அறிவானது
ஸ்வயம்	தானே
ஸ்திதம் ந சேத்	அமையாத தாயின்,
ஜகத்	பிரபஞ்சமானது
ஜடம்	குருடான
தமஃ	இருளாக
ஏவ ஸ்யாத்	ஆகும்.

உங, உச, உரு.

கஸ்ய	இவனுடைய
க்ரியா	செய்கை
காசிக	ஒன்று
நவெக	இல்லையாயின்,
வ்யவஹாரஃ	வியவகாரமானது
கயம்	எப்படி
ஹவெக	நிகழும் ?
க்ரியா நாம	செய்கையென்பது
வரிஷ்ஷவரிணாஷ்ஷரூபவிணீ	அசைதல்வடிவினது, திரிதல்வடிவினது ;
ஜ்ஞாநெ	அறிவு
பஹிஃ	வெளியில்
ஷ்ஷரெ	செல்லும்பொழுது
தத்ஸ்ரவக	அதனது முளைபோல
உத்பவெக	உண்டாகும்.
க்ரியா	செய்கையானது
உத்பாத்ய-	ஆக்கப்படுவதும்,
ப்ராப்ய-	அடையப்படுவதும்,
ஸம்ஸ்கார்ய-	ஸம்ஸ்கரிக்கப்படுவதும்,
விகாரெபாவாஸ்ரயா	வேறுபடுத்தப்படுவதும் (ஆகிய இவற்றைச்) சார்பாகக் கொண்டது ;
கரோதி	"செய்கிறான்,"
ப்ராபநோதி	"அடைகிறான்,"
உத்பாவயதி	"சுத்தப்படுத்துகிறான்,"
ஹிநத்தி	"குறைக்கிறான்,"
இதி	என
ப்ரதீயதெ	புலப்படுகின்றது.

உசு.

ஶிவः	ஈச்வரன்
ப்ரஹ்மாதிஷு ஹேஷு	ப்ரஹ்மா முதலானவர்களுடைய உடம்புகளிலே
ஸவ-ஜ்ஞः	எல்லாம் அறிபவன்
இதி	என்று
ஹாஸதெ	விளங்குகிறான் ;
தெவதியஜநஷெஷு	தேவர், விலங்கு, மனிதர்களிடத்து
தாரதம்யதः	தாரதம்யத்தால்
கிம்வித்ஜ्ஞः	சிறிது அறிபவன்
(இதி)	(என்று)
(ஹாஸதெ)	(விளங்குகிறான்.)

உஎ.

ஜராயுஜः	பையில் பிறப்பதும்,
அண்டஜः ச ஸவ	முட்டையில் பிறப்பதும்,
ஸ்வேதஜः	வியர்வையில் பிறப்பதும்,
வா-நः	இன்னும்
உத்஭ிதः	(நிலத்தைப்)பிளந்து பிறப்பதுமாகிய
ஸதெ	இந்த
சத்வாரியாः	நான்குவகையான
தெஹாः	உடல்கள்
க்ரமெண	முறையே
ந்யூநவ்ருத்தயः	குறைந்த தன்மையுள்ளன.

உஅ.

அநவதிஹ	வரையறுக்கப்படாத
ப்ரகாஶெ	ஜ்யோதிஸான

வரசாதநி	பரமாத்மா
ஸாக்ஷாசுகுதெ	நேரே பார்க்கப்பெற்றவிடத்து,
ப்ரஹ்மாதிஸ்வவயம்தா	ப்ரஹ்மாமுதலாக புல்ஈருகவுள்ள
கலுநா	கற்பனையானது
ஸவுகலுா வனவ	கனவை ஒத்ததேதான்.

உகூ.

கணோ:	"அணுவைக்காட்டிலும்
கணீயாங	அணுவானது,
மஹதோ	மஹத்தைக்காட்டிலும்
மஹீயாங	மஹத்தானது"
இதி	என்பது
வெதவாக்	சுருதியின் வசன(மாம்.)
ருத்ரோவநிஷசு கவி	ருத்திரோபநிஷத்தும்
ஶிவ	சிவனை
வனவ	இவ்வாறு
ஸவபூதகு	எல்லாவற்றினுடைய ஆத்மஸ்வ ரூபமாக
ஸ்ளதி	ஸ்தோத்திரம் செய்கின்றது.

௩0.

ஈரஶ்வர:	ஈச்வரன்,
குரு:	குரு,
ஆதா	ஆத்மா
இதி	என்னும்
உதிபுஹெவிஹாதிநெ	வடிவத்தின் பேதத்தால் பேதமுடைய (பொருளாய்)
வெயாவிசு	ஆகாசம்போல
வ்யாவ்தெஹாய	(எங்கும்) ஸ்வரூபம் வியாபிக்கப் பெற்ற

உக்ஷிணாமூர்த்தயே	தக்ஷிணாமூர்த்திக்கு
நமஃ	நமஸ்காரம்.

நக.

ஸ்ரீஉக்ஷிணாமூர்த்தி-	ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய
ஹ்ருதயாயு-	ஸ்தோத்திரத்தின் பொருளை
ர்வேதிவாஹகெ	உணர்த்துகின்ற
மநஸோல்லாஸெ	மாநஸோல்லாஸம் (என்ற)
ர்வஸ்வெ	நூலினுள்
ர்யஸோல்லாஸஸஜ்ஜஃ	முதல் உல்லாஸப்பொழிப்புரை
இதி	முற்றிற்று.

சுயு

ஸ்வீதீயோல்லாஸः ॥

இரண்டாம் உல்லாஸம்.

இதனுள் கூறப்படும் விஷயம்.

சென்ற உல்லாஸத்தினுள், உலகம் - ப்ரஹ்மமான ஆத்மாவினிடத்து உள்ளது எனவும், அது கனவுபோலப் பொய்ம்மையாம் எனவும் கூறப்பட்டன. ஆனால், இவற்றிற்கு மாறாக, வைசேஷிகர் ஸாங்க்யர் நையாயிகர் முதலானோர்கள் தம்தம் கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாணுக்கன் அவற்றால் மயங்காவண்ணம் அவற்றை மறுப்பவராய்,

"ஸஹைவ ஸௌம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்வி-தீயம்"

"ஸௌம்ய! இது முதலில் உள்ளதாகவே, இரண்டாவதில்லாத ஒன்றாகவே இருந்தது. (ஸௌம்யன் - அமைதிபொருந்திய இனிய ஐயன்)"—(சா - ௬ - உ - ௧)

"ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீன் நான்யத் கிஞ்சன"

"இது முதலில் ஆத்மாவாகவே, ஒன்றாகவே இருந்தது; பிறிதொன்றும் இல்லை"—(ஐ - உப - க - க - க)

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே"

"இந்தப் பொருள்கள் எதனினின்று உண்டாகின்றனவோ"—(தை - உப - ௩ - க - க)

"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶः ஸம்பூத:"

"அந்த இவ்வாத்மாவினின்றே ஆகாசம் உண்டாயிற்று"—(தை - உப - உ - க - க)

என ஆத்மப்பொருளை உலகிற்கு முதற்காரணமாகக் கூறுகின்ற சுருதியின் கொள்கையை உணர்த்துகின்றார்:

க.

உவாஹாநம் வ்ரவகுஸ்ய ஸம்ய-கூர்ஃ வரரோணவஃ ।
ரூஹ்நிதொ வடுஸ்ஸாஸ ஹாஸதெ நெஸ்ரரா ஹ்நிதஃ ॥

உ.

வரரோண-ஹதா வவ ஹ-ணா ரு-வரஹாஹயஃ ।
காயெ ஸரோநஜாதீயழ் ஸ்ரரஹெ ஹ-ணாஹரழ் ॥

வைசேஷிகர் கொள்கை.

க.

(தம்முள்) ஒருங்குசேர்ந்த பரமாணுக்கள் ஜகத்திற்கு முதற்காரணம். ஆதலால், குடம் மண்ணோடு ஒற்றித்ததாக விளங்குகின்றது; ஈச்வரனோடு ஒற்றித்ததாக அன்று.

பரமாணு என்பது - எவ்வளவிற்குமேல் உறுப்புஉறுப்பாகப் பிரித்துவகுத்தல் இயலாது ஒழிந்திடுமோ, அவ்வளவுமுடிவுவரையிலும் சென்று நிற்கின்ற மிகநுண்மையான பொருள். எது தான் உள்ளவழி எதனோடு ஒற்றித்ததாகத் தவறாது விளங்குகின்றதோ, அதற்கு அது முதற்காரணமாகக் காணப்படுகின்றது.— எங்ஙனமெனில்—மண்ணோடு ஒற்றித்ததாய், மண்ணைவிட்டு நீங்காததாய் விளங்குகின்ற குடத்திற்கு மண் முதற்காரணமாம். அவ்வாறே, மலை கடல் முதலிய இவ்வுலகமெல்லாம் ஜடப்பொருளோடு ஒற்றித்து விளங்குகின்றமையால், சேதநப் பொருளல்லாத பரமாணுக்களே அதற்கு முதற்காரணமாம். ஆகவே, உலகம் அறிவுப்பொருளான ஆத்மா என்னும் ஈச்வரனோடு ஒற்றித்து விளங்குவதாகக் காணப்படாமையினால், பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் ஈச்வரனாயினும், அவனது மாயையாயினும் அன்று என்பது பொருள். முதற்காரண மெனினும், உபாதாநகாரணமெனினும் பொருந்தும். (க)

உ.

காரணத்தினுடைய அந்தந்தத் தன்மைக்குஏற்ப அந்தந்தக்காரியமும் அதனது தன்மையும் தாமே அமையுமாதலால், இவ்விஷயத்திலும் ஈச்வரன் கார்யப் பொருள்கட்காயினும், அவற்றது குணங்கட்காயினும் முதற்காரண மல்லன்; எப்படியெனின்,—

உருவம், சுவை முதலிய குணங்கள் பரமாணுக்களிலேயே உள்ளன; ஒருஇனமான பல குணங்களை [தம்தம் குணங்களைத் தாமே தனித்தனியாக]க் கார்யத்திலே செய்கின்றன.

தீயின் பரமாணுக்கள் தம்முள் சேர்ந்து உருவப்பொருளாய்க் காரியப்படுகின்றன; நீரின்பரமாணுக்கள் தம்முள் சேர்ந்து சுவைப்பொருளாய்க் காரியப்படுகின்றன. அவ்வாறே, பிறவற்றையும் கண்டுகொள்க. (உ)

ங.

காயம் யத் ஸமவைதி காரணம் ஸமவாயி தத் ।
அகார்யம் ஸாயநம் யத்து வடஸ்யாऽஸமவாயி தத் ॥

ச.

ஸமவாயிநி திஷ்டத் ஸமவாயாஸ்ரயே தயா ।
காயேऽவயவதஸாயவ்ருதி கவ்ருதேऽஸமவாயி தத் ॥

வைசேஷிகநடைய மூவகைக் காரணங்கள்.

இவ்வாறிருந்தாலும், குடத்திற்குக் குயவன்போல, ஈச்வரன் உலகிற்குக் கர்த்தாவாகிய செய்பவன் என்னும் நிமித்தகாரணமேயன்றி வேறுகாரண மல்லன் என்பதைக் கூறும்பொருட்டு, முதலில், மூவகைக்காரணங்களும் இன்னவை என்று பெயரெடுத்துக்கூறி விரிக்கிறார் :

(க) ஸமவாயிகாரணம்.

ங.

கார்யம் எதனிடத்து ஒற்றித்துநிற்கின்றதோ, அது ஸமவாயிகாரண மாம். மற்று, குடத்திற்குச் சக்கிரம் முதலிய கருவி எதுவோ, அது ஸமவாயிகாரணம் அன்றாம்.

ஸமவாயத்தை யுடையது - ஸமவாயி ; ஸமவாயம் - ஒற்றித்தல், நீக்கமின்றி நிற்றல். ஸமவாயிகாரண மெனினும், உபாதாந காரண மெனினும், முதற்காரண மெனினும் ஒக்கும். குடம் மண்ணால் செய்யப்படுகின்றது ஆதலால், முந்தினது பிந்தினதின் காரியமாம்; அதாவது, முந்தினதற்குப் பிந்தினது காரணமாம். குடமாகிய காரியம் மண்ணாகிய காரணத்தினிடத்து ஒற்றித்து நிற்கின்றது ; நிற்கவே, குடத்திற்கு மண் ஸமவாயிகாரணம் என்பது. ஆனால், சக்கிரம் முதலிய கருவிகள் குடத்திற்கு ஸமவாயிகாரணம் ஆகமாட்டா.—மற்றென்ன ?—துணைக் காரணமாகிய நிமித்தகாரண மாம் என்க. (ங)

(உ) அஸமவாயிகாரணம்.

ச.

எது கார்யத்திலே வலிமையுடைத்தாய் ஸமவாயியினிடத்து நிற்குமோ, அவ்வாறே (எது கார்யத்திலே வலிமையுடைத்தாய்)ஸமவாயியின் சார்பினிடத்து (நிற்குமோ), அது அஸமவாயிகாரணமாகக் கொள்ளப்படுகின்றது.

க. நூல்கள் ஆடைக்கு ஸமவாயிகாரண மாயினும், நூல்களது இயைபு உள்ள வழிதான் ஆடையாகிய காரியம் ஆகும். ஆகவே, ஆடையாகிய காரியத்திற்கு

சஅ.

நிமித்தம் காரணம் தெஷாழ் ஂரம்ஸ்வாஸ்ய கூலாலவத் ।

ரு, சு.

யதாயம் ஜாயதெ யஸ்மாத் தஸ்மிந் தத்தி திஷ்தி ॥

நூலியைபும் காரண மாம். அது [நூலியைபு] - ஆடையின் ஸமவாயிகாரண மான நூல்களிடத்து நிற்றலால், ஆடைக்கு அஸமவாயிகாரணம் என்பது.

உ. ஆடை, தனது நிறத்திற்கு ஸமவாயிகாரண மாயினும், அந்நிறம் நூல் களினிடத்து உள்ளவழிதான் ஆடைக்கு ஆகும். ஆகவே, ஆடைநிறத்திற்கு நூல் நிறமும் காரணமாம். அது [நூல்நிறம்] - ஆடை நிறத்தின் ஸமவாயிகாரணமான ஆடையினது சார்பிலே, அதாவது நூலினிடத்து நிற்றலால், ஆடைநிறத்திற்கு அஸமவாயிகாரணம் என்பது.

இவ்வாறாக அஸமவாயிகாரணம் இருவகைத்தாம்.

"கார்யத்திலே வலிமையுடைத்தாய்" என்றது - நூலியைபு முதலியன ஆடைமுதலியவற்றிற்கு இன்றியமையாதவை எனக் காட்டும்பொருட்டு. (ச)

(ங) நிமித்தகாரணம்.

சஅ.

ஈச்வரனும் அவற்றிற்கு நிமித்தகாரணமா யிருக்கிறான்; (குடத் திற்குக்) குயவன்போல.

நிமித்தகாரணமாவது - ஸமவாயிகாரணம் அஸமவாயிகாரணமாகிய இரண் டின் வேறாகிய காரணம்; உதாரணமாக, குயவனும் சக்கிரம் தடி முதலியனவும் குடத்திற்கு நிமித்தகாரணமாம். "ஈச்வரனும்" என்ற உம்மையானது - அந்தந்தக் காரியத்திற்குரிய பல நிமித்தகாரணங்க ளிருந்தாலும், அவற்றுள் ஈச்வரன் ஒவ் வொரு காரியத்திற்கும் இன்றியமையாத ஒருநிமித்தகாரணமாம் என்பதை உணர் த்துகின்றது. ஜடப்பொருள்கள் சேதநப்பொருளாலன்றித் தாமாகக் காரியப் படா வாதலால், ஸகல காரியங்களும் உண்டாதற்கு வேறு காரணங்கள் இருந்தா லும் ஈச்வரனும் நிமித்தகாரணமாம்; குடம் உண்டாதற்கு மண் சக்கிரம் முதலிய வேறுகாரணங்கள் இருந்தாலும், குயவன் நிமித்தகாரணம் ஆமாறுபோல. (சஅ)

ரு, சு.

இவ்வாறாக ஈச்வரன் உலகிற்கு நிமித்தகாரணமேயன்றி உபாதாந காரண மல் லன்; எப்படி யெனில்,—

எந்தக் காரியம் எதனினின்று பிறக்கின்றதோ, அது அதனிடத் துத் தங்குகின்றது; மண்ணிலே குடமும், நூலிலே ஆடையும், பொன்

ப்ரதிகாயாம் வபுஸ்தௌ வபுஃ ஸ்வணு ஜுஹுயீயகுஃ ।
இதி வைஶேஷிகாஃ ப்ராஹுஃ தயா நையாயிகா ஜுவி ॥

எ, அ.

ரஜஸ்ஸத்வம் தமஶ்சேதி ப்ரயாநஸ்ய ஹேதவஃ ।
ரஜோ ரக்தம் யமம் சைஷ ஸத்வம் ஶுக்லம் ப்ரகாஶகுஃ ॥
தமஃ க்ருஷ்ணம் யாऽऽவரகுஃ ப்ரஷிஷ்டிதுதைஹ தவஃ ।
இதி ஸாஂ஖்யாஶ் ஸாஷதே தேஷாம் உதுஷணஃ ஶ்ருதே ॥

னிலே மோதிரமும் (அமைகின்றன). என்று வைசேஷிகரும், அவ்வாறே நையாயிகரும் கூறுகிறார்கள்.

உலகத்திலே எல்லாக் காரியங்களும் அசேதநப்பொருளிலே அமைந்துகிடக்கின்றன; உதாரணமாக, குடம் முதலிய காரியங்களை - ஜடப்பொருளான மண் முதலியவற்றிலே காண்க. அங்ஙன மாகவே, சேதநப்பொருளான ஈச்வரனை ஜகத்திற்கு உபாதாநகாரணமாகக் கொள்ளுதல் பொருந்தாது. ஆதலால், அவன் பிரபஞ்சத்திற்குக் கர்த்தாவான நிமித்தகாரணமேயன்றி வேறுகாரண மல்லன் என்றவாறு. (கு,சு)

ஸாங்க்யர் கொள்கை.

எ, அ.

பிரதாநத்திற்கு - ரஜஸ், ஸத்துவம், தமஸ் என்று மூன்று குணங்கள் உள்ளன. அவற்றுள், ரஜஸ் - செம்மையானது, அசைவது; ஸத்துவம் - வெண்மையானது, விளக்கமானது; தமஸ் - கருமையானது, மறைப்பது. (அவை முறையே) படைப்பிற்கும், நிலைப்பிற்கும், அழிவிற்கும் காரணங்கள். என்று ஸாங்க்யர்களும் சொல்லுகிறார்கள். அவர்கட்குக் குற்றம் கூறப்படுகின்றது :

பிரதாநமாவது - பிரகிருதி; உ - ௩௧ ஆம் சுலோகத்தைப் பார்க்க. "செம்மையானது" - சிவப்புநிறமுடையது; மையலாக்குவது, விகாரப்படுத்துவது என்றபடி. எது அசையும் இயல்பினதாய் விகாரத்தைக் கிளப்புகின்றதோ, அது ரஜஸ் என்னும் குணமாம். "வெண்மையானது" - சுத்தமானது என்றபடி. எது சுத்தமாய் விளக்கமாய் இருக்கின்றதோ, அது ஸத்துவம் என்னும் குணமாம். "கருமையானது" - கறுப்பு நிறமுடையது; அசுத்தமானது என்றபடி. எது அசுத்தமாய் விவேகத்தை மூடுவதாய் இருக்கின்றதோ, அது தமஸ் என்னும் குணமாம். உலகத்தின் படைப்பிற்கு ரஜோகுணம் காரணம் எனவும், அது நிலைபெறுதற்கு ஸத்துவகுணம் காரணம் எனவும், அது அழிதற்கு தமோகுணம் காரணம் எனவும்

உ. விஜ்ஞாநஸாரிவாம்கூரொ ஜகதிஃ
ஸ்ராஜிவிகஸ்யம் வாநஃ
சாயாகஸ்தெஸுகாஸுகுநா-
வெவிதாஸ்விதீகாரதி ।
சாயாவீவ விஜ்ரம்லயதாவி ஜஹா-
யொமீவ யஃ ஷ்வெஷ்வயா
தஷ்வெ ஸ்ரீரமாரமுதகுயெ நஃ ஜஃ
ஸ்ரீதக்ஷிணாமுதகுயெ ॥

ஸாங்க்யர் கூறுகிறார்கள். மற்று, அவர்கள் சேதநப்பொருளை நிமித்தகாரணமாக வாயினும் கொள்வதில்லை.

"ஸாங்க்யர்களும்" என்ற உம்மையால் - ஸ்வபாவவாதிகள், சூந்யவாதிகள், சைவர், பௌராணிகர் என இவர்களையும் கொள்க. அந்த எல்லாருடைய கொள்கைகளையும் பின்வருமாறு மறுக்கிறார் : (எ, அ)

உ. இந்தப் பிரபஞ்சம் முதலில், விதையினுள் முளைபோல, வேற்றுமையற்றதாய்(உண்மைமாத்திரமாய் இருந்தது) ; பின்பு, மாயையினால் கற்பிக்கப்பெற்ற இடம் காலம் என இவற்றினது சம்பந்தத்தால் வேற்றுமை வர, அதனால் பலபடிப்பட்டது. எந்த(ஆத்மப்பொருளானது அத்தகைய இப்பிரபஞ்சத்தை) மாயாவிபோலும், மகாயோகிபோலும் தனது இச்சையினால் தோற்றுவிக்கின்றதோ, அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

முளை என்பது - தளிர், கிளை முதலியவற்றிற்கும், இடம் காலம் என்பன - நிமித்தத்திற்கும் உபலக்ஷணம்.

விருக்ஷம் முதலில் தான் வெளிப்படாத நிலையிலே, வேர்என முளைஎன தளிர் என இலைஎன கிளைஎன பூஎன பிஞ்சுஎன காய்என பழம்என இவ்வாறான வேற்றுமையனைத்தும் அற்றதாய் வித்தினுள் அமைந்து அந்த வித்தாகவே இருக்குமாறு போல,—இவ்வுலகம் முதலில் தான் தோன்றாத நிலையிலே, மலைஎன கடல்என காடுஎன மனிதன்என மிருகம்என இவைபோன்ற விசித்திரமெல்லாம் அற்றதாய் ஆத்மாவினுள் அமைந்து அந்த ஆத்மஸ்வரூபமாகவே இருந்தது. பின்னர், இடமென்பதும் காலமென்பதும் நிமித்தமென்பதும் - மாயாசக்தியினால் தோன்ற, பிரபஞ்சம் அவற்றால் மண்ணாக, மலையாக, கடலாக, யக்ஷனாக, ராக்ஷஸனாக, தேவனாக, மநுஷ்யனாக, மரமாக, மிருகமாக, காடாக, நாடாக இன்னும் இவைபோன்ற பற்பல விசித்திர மாயிற்று.

மாந்ளோல்லாஸமும்.

சங்கை:—மாயையென்பது யாது? அஃதொன்றனை அதிகமாகக் கொண்ட விடத்து த்வைதமன்றோ ஆகும்?

ஸமாதாநம்:— அப்படியன்று; ஏனெனில், மாயையென்பது - இன்ன தென்று சொல்லவாராத பொய்ம்மையாம். சூடு என்னும் சக்தியானது தீயினும் வேறு என்றாயினும் தீயொடு ஒன்று என்றாயினும் சொல்லமுடியாதவாறுபோல, மாயை என்னும் சக்தியானது ப்ரஹ்மத்தினும் வேறு என்றாயினும் ப்ரஹ்மத்தோடு ஒன்று என்றாயினும் இன்னதெனச் சொல்லவொண்ணாதது. ஆகவே, அது பொய்ம்மையாதலால் த்வைதமாகா தென்பது.

தேச கால நிமித்தங்களால் வேற்றுமை தோன்றுகின்றது.

இனி, செப்படிவித்தைக்காரனுடைய மாயாசக்தியானது மாமரம் முதலியவற்றைப் படைப்பதுபோல, ப்ரஹ்மத்தினுடைய சக்தியானது தேச கால நிமித்தங்களைப் படைக்கின்றது. படைக்கவே, வேற்றுமைகளெல்லாம் தலைப்படுகின்றன. எப்படியெனில்,—இந்த ஜகத்தில் ஒவ்வொரு வியவகாரமும் ஒருஇடத்திலே ஒருகாலத்திலே ஒருநிமித்தத்தைச் சார்ந்து நிகழ்கின்றது. உதாரணமாக, புதல்வர்கள் ஒரேஇடத்து ஒரேநிமித்தத்தால் தோன்றியவராயினும், "மூத்தோன்" "இளையோன்" என காலத்தினது முன்மை பின்மைகளால் வேறுபட்டார்கள். இவ்வாறே, பிறவற்றையும் நோக்கிக்கொள்க. ஆகவே, இடத்திலேஉள்ள முன்மை பின்மையும், காலத்திலேஉள்ள முன்மை பின்மையும், நிமித்தத்திலேஉள்ள சார்பும் வேற்றுமையைச் செய்கின்றன; எனவே, உலகில் ஒவ்வொன்றும் தேசம் காலம் நிமித்தம் என்றிவற்றினுடைய வரம்பிற்கும் ஒழுங்கிற்கும் உள்பட்டுச் செல்லுகின்றது. ஆதலால், இவற்றைக் கடந்து ஒரு வியவகாரமும் நிகழமாட்டா தென்பதாம்.

"முதலில்," "(இருந்தது)," "பின்பு" என வழங்கியதற்கு நியாயம் கூறுதல்.

சங்கை:—இவ்வாறு, தேச கால நிமித்தங்கள் இல்லாவழி வியவகாரமே இல்லாதிருக்க, "இந்த ஜகத்து முதலில் வேற்றுமையற்றதாய் (உண்மைமாத்திரமாய் இருந்தது); பின்பு, ... பலபடிப்பட்டது" என்றவிடத்து-"முதலில்" என்பதும், "(இருந்தது)" என்பதும், "பின்பு" என்பதும் காலத்தைக்குறிக்கின்றமையால், அங்ஙனம் காலமென்பது ஏது?— இல்லையாகவே, அவை எவ்வாறு வழங்கப்பட்டன?

ஸமாதாநம்:—மனம் காலவாஸனையேறி அழுந்திக்கிடக்கின்றமையின், "இவ்வுலகம் முதலில் எப்படி இருந்தது? பின்பு எப்படி யாயிற்று?" என மாணுக்கன் காலத்தைப்பிடித்தே வினவுகின்றான். ஆதலால், அவ்வினாவிற்குத்தக அவனது சொற்களைக்கொண்டு "இவ்வுலகம் முதலில் வேற்றுமையற்றதாய் உண்மைமாத்திரமாய் இருந்தது; பின்பு, ... பலபடிப்பட்டது" என "முதலில்" "இருந்தது" "பின்பு" என்பவற்றை வழங்கி அவனுக்குத் தெளியத் தெரியும்

சுவஸ்தாயஸ்ஹிவ்ராயஃ—

பொருட்டு விடை கூறப்படுகின்றது. ஆகலான், அது குற்ற மன்றும். வே - ஐ - உப - க - க - க பாஷ்யத்தைப் பார்க்க.

ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமாத்திரமன்று, உபாதாநகாரணமுமாம்.

செப்படிவித்தைக்காரன் மாயையைமாத்திரம் கருவியாகக்கொண்டு யானை குதிரை பட்டணம் முதலியவற்றைப் படைப்பதுபோல, ப்ரஹ்மஸ்வரூபமான ஈச்வரன் மாயையைமாத்திரம் கருவியாகக்கொண்டு பிரபஞ்சத்தைப் படைக்கிறான். அல்லது, விச்வாமித்திரர் முதலிய பெரிய யோகிகள் தமது இச்சையைமாத்திரம் கருவியாகக்கொண்டு ஸ்வர்க்கம் முதலியவற்றைப் படைப்பதுபோல, அவன் தனது இச்சையையே கருவியாகக்கொண்டு பிரபஞ்சத்தைப் படைக்கிறான் எனினுமாம்.

இது இவ்வாறிருக்க, மாயையினாலான தேசம் காலம் நிமித்தம் என்றிவற்றினுடைய ஒட்டினால் பலவகைப்பட்ட பிரபஞ்சம் பரம்பொருளான ஆத்மாவினிடத்து ஏற்றப்பட்டிருக்கின்றது ; வளைவான தளமும், கருமைநிறமும் வானத்திலே ஏற்றப்படுமாறுபோல. குடம் உண்டாதலும், நிலைபெறுதலும், அழிதலும் மண்ணினிடத்துக் காணப்படுகின்றமையின், மண் குடத்திற்கு உபாதாநகாரணமாம். அவ்வாறே, பாம்பு தோன்றுதலும், நிலைபெறுதலும், கெடுதலும் கயிற்றினிடத்துக் காணப்படுகின்றமையின், கயிறு பாம்பிற்கு உபாதாநகாரணமாம். அதுபோல, இவ்வுலகம் உண்டாதலும், நிலைபெறுதலும், அழிதலும்

"யதோ வா இமாநி ஭ூதாநி ஜாயந்தே । யேந
ஜாதாநி ஜீவந்தி । யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । "

"இந்தப் பொருள்கள் எதனினின்றும் பிறக்கின்றனவோ, பிறந்தவைகள் எதனால் உயிர்வாழ்கின்றனவோ, எதனை அடைகின்றனவோ, மீளப் புகுகின்றனவோ [எதனொடு ஒன்றுகின்றனவோ]"—
(தை - உப - ௩ - க - க)

எனச் சுருதியினால் ப்ரஹ்மத்தினிடத்துக் கூறப்படுகின்றமையின், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாநகாரண மாம். எனவே, ஆத்மப்பொருள் தேச கால நிமித்தங்கட்கு அப்பாற்பட்டதாய், கயிறு பாம்போடுபோல, உலகத்தொடு ஒட்டற்றதாய், அஸங்கமாய் உளது என்பது கருத்து. (உ)

இது இதன் கருத்து :—

கூ.

கூஜ-ஈராஹிஷயாஜெஷ- காயெஷ்வஷ்ஹிகுவிஷ்யுதெ ।
கூ-த ஸூமத்ரு ஸம்வஸ்ரா வடவீஜெஷ- தெ கணாஃ ॥

பரமாணுவாதத்தை மறுத்தல்.

கூ.

ஜகத்திற்குப் பரமாணுக்கள் உபாதாநகாரணமாம் என்னும் கொள்கையை மறுக்கிறார்:

முளைமுதலாகப் பழம்ஈறாகவுள்ள காரியப்பொருள்களில் உண்மையானது கொள்ளப்படுகின்றது. அந்தப் பரமாணுக்கள் ஆலமரத்துவிதைகளுள் எங்கிருந்து வந்து சேர்ந்தன?

முளை, தளிர், கிளை, பூ, பிஞ்சு, காய்,பழம் என்றவற்றில் "முளை உள்ளது" "தளிர் உள்ளது" "கிளை உள்ளது" "பூ உள்ளது" "பிஞ்சு உள்ளது" "காய் உள்ளது" "பழம் உள்ளது" என உண்மையானது முளை தளிர் கிளை முதலிய எல்லாக்காரியங்களோடும் ஒற்றித்ததாய்க் காணப்படுகின்றதேயன்றி, பரமாணுக்களல்ல. எல்லாக் காரியங்களோடும் எது ஒற்றித்துநிற்பதாகக் காணப்படுகின்றதோ, அது அவற்றிற்கு உபாதாநகாரணமாதலால், முளை தளிர் முதலிய எல்லாப்பிரபஞ்சத்திற்கும் - உண்மையெனப்படுகின்ற ப்ரஹ்மமே உபாதாநகாரணமாம்.

பிரதிவாதி:— யாம் [வைசேஷிகர்] கூறுவது யாதெனின்,— ஈச்வரனது இச்சைவசத்தால் பரமாணுக்களில் கிரியை தோன்றி இரண்டு பரமாணுக்கள் தம்மில் சேர்ந்து இரட்டையணுவாய், அவை மும்மூன்று தம்முள் சேர்ந்து மும்மையணுவாய், அவை நந்நான்கு தம்முள் சேர்ந்து நான்மையணுவாய், இவ்வாறே ஒன்றற்கொன்று அவயவமும் அவயவியுமாய்த் தோன்றிக் காரியப்படும் முறையினால் உலகம் உண்டாதற்குத் தடையொன்றும் இன்மையால், பரமாணுக்கள் தம்முள் சேர்ந்து பிரபஞ்சத்தைப் படைக்கின்றன என்பது.

வாதி:— அப்படியன்று; ஈச்வரனது இச்சை நித்யமாதலால், பிரளய காலத்திலும் பரமாணுக்களில் கிரியைதோன்றுதல் வேண்டும். ஆகவே,காரணமின்மையால் அவற்றில் கிரியைதோன்றுத லில்லை. அஃதில்லையாகவே, பரமாணுக்கள் தம்முள் சேர்த லில்லை. சேர்தலின்மையால், அவற்றாலாகும் இரட்டையணு முதலான ஒருகாரியமும் அமையா.

கo.

காரணாகமுதம் காயழி உதி ஸவெழுஷ ஸம்உதழி ।
தஸ்ஸாக ஸதா ஸ்ரதா வ ஸவுதாவுநவதுதெ ॥

கக.

வவெ ஸயகுஸாவநெ கீரெ வ உயிதாம் மதெ ।
விஜாதீயாஃ வுவதுதெ மணா ரவுவாஸாஉயஃ ॥

ஆதலால், பரமாணுக்கள் பிரபஞ்சத்திற்கு உபாதாநகாரணமாகா என்றபடி.

கo.

"கார்யம் காரணத்தினுள் அடங்கியது" என்பது - யாவராலும் சம்மதிக்கப்பட்டது. ஆதலால், உண்மையும் விளக்கமும் எங்கும் தொடர்ந்திருக்கின்றது.

காரியமெல்லாம் உபாதாநகாரணத்தினுள் அமைவன என எல்லாரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையும், விளக்கமும் - "இது உள்ளது, விளங்குகின்றது" என எல்லாக் காரியப்பொருள்களிலும் தவறாது காணப்படுகின்றன. ஆதலால், உண்மையும் விளக்கமுமா யிருப்பது எதுவோ, அது [ப்ரஹ்மம்] உபாதாநகாரணமாம். (கo)

கக.

இனி, முந்தின முந்தின காரியம் பிந்தின பிந்தின காரியத்திற்கு உபாதாநகாரணம் என்பதும் ஒவ்வாது. எங்ஙனமெனின்,—காட்டுவோம் :

பூ பழமாதலைப் பெற்றவிடத்தும், பால் தயிராதலை அடைந்தவிடத்தும், உருவம் சுவை முதலான குணங்கள் வேறுஇனமாகவே தலைப்படுகின்றன.

உ - உ ஆம் சுலோகத்தினுள், உபாதாநகாரணகுணங்கள் காரியத்திலே தமது இனமான பல குணங்களைச் செய்கின்றன எனக் கூறியபடி, பூவாகிய உபாதாநகாரணம் பழமாகிய காரியத்திலும், பாலாகிய உபாதாநகாரணம் தயிராகிய காரியத்திலும் முறையே ஒரேதன்மையான குணங்களைப் பிறப்பிக்கவேண்டும்;ஆனால், அப்படி இல்லை : அதாவது, பூவினது உருவமும் சுவையும் முதலாயின - பழத்தினது உருவம் சுவை முதலியவற்றினும் வேறாகவும், பாலினது உருவமும் சுவையும் முதலாயின - தயிரினது உருவம் சுவை முதலியவற்றினும் வேறாகவும் காணப்படுகின்றன. ஆகவே, முந்தின காரியம் பிந்தின காரியத்திற்கு உபாதாநகாரணமாகா தென்க. (கக)

கஉ.

காரணம் காயவயவீஜாதிவ்யக்தீ குணீ குணாः ।
க்ரியா க்ரியாவாநித்யாஶ்ச வ்ரகாஶஸ்யைவ கூஶ்ரநாः ॥

கங.

வைதந்யம் வரணாகுநாம் வ்ரயாநஸ்யாவி நெஷ்யதெ ।
ஜ்ஞாநக்ரியெ ஜமதளவ்ள உ்ரஶ்யெதெ வெதநாஶ்ரயெ ॥

விவர்த்தக்கொள்கை.

கஉ.

வினா:—ஆயின், ஆகாசம்போல உருவமில்லதாய் விளக்கமாகிய உண்மைமாத்திரமான பொருள், பலபல உருவமுடைய இவ்வுலகிற்கு உபாதாநகாரண மென்பது எப்படி ஆகும்?

விடை:—"ஆகாசம்போல" என நன்று கூறினாய். ஆகாசம் எனப்படுகின்ற வானத்திற்கு உருவமில்லை யென்பது உண்மை. மற்று, அவ்வானம் வளைவான தளத்திற்கும் கருமைநிறத்திற்கும்போல, ப்ரஹ்மமானது [விளக்கமான உண்மையானது] உலகிற்கு விவர்த்தி என்னும் உபாதாநகாரண மாம். விவர்த்தி - விவர்த்த முடையது. விவர்த்தமாவது - கயிறு கெடாது பாம்பாக விளங்குதல் போல, முந்தின நிலை கெடாது வேறோர் நிலை விளங்குதல்: அதாவது - பொய்ம்மைத்தோற்றமாம்.

அவ்வண்ணமே அருளிச்செய்கிறார்:

காரணம் கார்யம், அவயவம் அவயவீ, ஜாதி வடிவு, குணீ குணம் வினை வினைமுதல் என்பன முதலான கற்பனைகள் விளக்கத்திற்கே [ப்ரஹ்மத்திற்கே] உள்ளன.

காரணம் - விதை முதலியன; கார்யம் - முளை முதலியன. அவயவம் - நூல் முதலியன; அவயவீ - ஆடை முதலியன. ஜாதி - ஆத்தன்மை முதலியன; வடிவு - அதளையுடைய ஆ முதலியன. குணீ - ஆடை முதலியன; குணம் - நிறம் முதலியன. வினை - தொழில்; வினைமுதல் - அம்பு சக்கிரம் முதலியன. இவை முதலிய அனைத்தும், தானேவிளங்குகின்ற உண்மைப்பொருளின் விவர்த்தமாம் என்பது கருத்து. (கஉ)

அறிவும், செயலும் சேதநப்பொருளைச் சார்ந்துள்ளன.

கங.

பரமாணுக்களுக்கும், பிரதாநத்திற்கும் பிரபஞ்சத்தைப் படைக்கும்விஷயத்திலே சேதநத்தன்மையானது (முறையே வைசேஷிகர்களாலும், ஸாங்க்யர்களாலும்) கொள்ளப்படவில்லை. அறிவும், செயலும் சேதநத்தைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன.

கரு உ.

காரணவகுயாஶக்த்யா க்ஷீராத்பரிணதெஃயி।

வைசேஷிகர், தாம் பிரபஞ்சத்திற்கு உபாதாநகாரணமாகக்கொண்ட பரமாணுக்களுக்குச் சேதநத்தன்மையை ஏற்றுக்கொள்ளவில்லை; அவ்வாறே, ஸாங்க்யர்களும், தாம் பிரபஞ்சத்திற்கு உபாதாநகாரணமாகக் கொண்ட பிரதாநத்திற்குச் சேதநததன்மையை அங்கீகரிக்கவில்லை. மேலும், சேதநப்பொருளினுடைய சம்பந்தமில்லாத ஜடப்பொருளில் அறிவும் செயலும் காணப்படவில்லை. அன்றியும், சாந்தோக்ய சுருதியானது (சு - உ - ரு) - "ப்ரஹ்மத்தினது இச்சையினால் பிரபஞ்சம் உண்டாயிற்று; ப்ரஹ்மமே பலபடிப்பட்ட பிரபஞ்ச மாயிற்று" என சேதநப்பொருளான ஆத்மாவையே பிரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமாகவும் உபாதாநகாரணமாகவும் கூறுகின்றது. மற்றும், பிருகதாரண்யக சுருதியானது (உ - க - உ0) - ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்தகாரணமாயும் உபாதாந காரணமாயும் இருப்பதை, "நூலாகிய காரியத்திற்கு சிலம்பி உபாதாநகாரணமாகவும் நிமித்தகாரணமாகவும் இருப்பதுபோல" என்னும் உபமையினால் விளக்கிக் காட்டுகின்றது. ஆகவே, ஜடப்பொருளான பரமாணுக்களினின்றாயினும், ஜடப்பொருளான பிரதாநத்தினின்றாயினும் பிரபஞ்சம் உண்டாதல் ஏலாது; அல்லது, மண் குயவனுக்குப் புறம்பாக, வேறாகத், தனியே நின்று அவனால் காரியப்படுமாறுபோல, அவை ப்ரஹ்மத்திற்குப் புறம்பாக, வேறாகத், தனியே நின்று காரியப்படும் என்றல் கீழ் எடுத்துக்காட்டிய சுருதிகட்கு விரோதமாம். ஆதலால், படைக்கின்ற ஈச்வரனுக்கும் படைக்கப்பட்ட பிரபஞ்சத்திற்கும் வாஸ்தவத்திலே பேதமில்லை என்றபடி.

வினா:—ஆயின், படைக்கவேண்டிய விஷயங்களை "இன்ன இன்ன விதமாய் படைத்தல் வேண்டும்" என முன்னர் ஆலோசித்தலாகிய அறிவும், பின்னர் அவற்றைப் படைத்தலாகிய செயலும் நிர்விகாரியான சேதநப்பொருளுக்கு எதனாலாகின்றன?

விடை:—மாயாசக்தி ஸம்பந்தத்தினாலாகின்றன; விறகை எரித்தல் ஈச்வரனுக்கு தீக்கல்ஸம்பந்தத்தினாலாவதுபோல என்க. (கரு)

கரு உ.

ஆக்ஷேபம்:— காரியமானது சேதநப்பொருளை வேண்டாமலும் உண்டாவதாகக் காணப்படுகின்றது. எங்ஙன மெனின்,—பால் சேதநப்பொருளினுடைய அபேக்ஷையில்லாமலே தயிராகத் தானாகவே மாறுகின்றது.

ஸமாதாநம்:—கூறுவோம்:

தயிரானது, காலவடிவான கிரியாசக்தியினால் பாலினின்று மாறுகின்றது.

"யஃ ஸவெஷு ஸுதெஷு திஷ்஠ . . . . . .

யஃ ஸவாணி ஸுதாந்யந்தரோ யமயதி"

கச.

ஜூாதாஜூாநஜூயாஏவம் ஜூாநஸகூயா ஹவெஜூஸ ॥

கரு.

ஜூாநம் இயா வஹ்ஹோதூஜ்யாதகம் நிவிகூவ்வகு ।
ஸவிகூவ்வம் தம் ஸம்ஜூாஹிஜ்யாதகூவாஹநெகூயா ॥

"எவன் எல்லாப் பொருள்களிலும் இருக்கின்றவனோ, ... எவன் உள்ளேயுள்ளவனாய் எல்லாப் பொருள்களையும் நியமிக்கின்றானோ"—(பிரு - ஙு - எ - கரு)

எனச் சுருதிகூறும்வண்ணம் உள்ளேநின்று ஸகலத்தையும் நடத்துகின்ற எங்குமுள்ள பொருளான ஈச்வரனது கிரியாசக்தி, காலம்என்னும் உருவத்தைக் கொண்டுநிற்க, பாலானது அந்தக் காலமாகிய கிரியாசக்தியினால் காரியப்படுத்தப் பட்டுத் தயிராக ஆகின்றது. பால் தனதுஇயல்பாகவே தயிராக ஆவதன்று; அங்ஙனமாயின், அது எப்பொழுதும் தயிராதல் வேண்டும்.

இதனால், காலமென்பதும் ஈச்வரனுடைய ஒருவிதமான சக்தியேதான் எனக் குறிப்பிக்கப்பட்டது; ஏனெனில், அவனது சக்திக்கு அளவில்லை. அவ்வாறே, சுருதி கூறுகின்றது:

"வாராऽஸ்ய ஶக்திவிபுவிவிதைவ"

"இவனது சக்தி (யாவற்றினும்) மேம்பட்டதாய், பலவகைப்பட்டதே என்க"—(ச்வே - சு - அ). (கஙஉ)

கச.

இனி, ஈச்வரனுடைய ஞானசக்தியைப் பகுத்துக்காட்டுபவராய், அது ஜகத்திற்குக் காரணமாதலைக் கூறுகிறார்:

பிரபஞ்சமானது - உணரும்பொருள், உணர்வு, உணரப்படும் பொருள் என்றிவற்றின் வடிவமாக ஞானசக்தியினால் ஆகின்றது.

உணர்வாவது - "உலகிற்குக் கர்த்தாவானவன் படைக்கவேண்டியவற்றை ஆலோசித்தான்" என்னும் வியவகாரத்தைச் செய்கின்ற மாயாவ்ருத்தி. அது, தனக்கு ஆதாரமான ப்ரஹ்மத்தை - உணரும்பொருளான ஈச்வரனைச் செய்கின்றது. அன்றியும், அது தன்னை - படைக்கப்படும் பிரபஞ்சமாக, உணரப்படும் பொருளாகக் காட்டுகின்றது. இவ்வாறாக, ஈச்வரனது ஞானசக்தியினால் உலகம் உண்டாகின்றது என்பதாம். (கச)

கரு.

இந்த ஞானசக்தியைப் பொதுவாகவும், சிறப்பாகவும் பகுக்கிறார்:

ஞானம் (நிர்விகல்பகம், ஸவிகல்பகம் என) இருவகைத்து. நிர்விகல்பகம் பொருளைமாத்திரம் குறித்துநிற்பது; ஸவிகல்பகமோ பெயர்முதலியவற்றைக் குறித்துநிற்கின்றமையால் பலவகைத்தாம்.

கசூ.

ஸம்கூஷ்ஸம்ஶயஸ்ஸாஜிஷ்ஸ்ரீதிஸாஷ்ஸ்ரீநிஶ்சயாஃ ।
ஊஹொऽநய்வஸாயஶ்ச தயாऽநெய்ऽநு஭வா சுவி ॥

கஎ, கஅ, கசூ.

வ்ரதிக்ஷேகம் ஶாவபூகாஃ கணாஷஸுமுதள வுநஃ ।
சுமுசோநஶு தஶ்வி ஸாஷ்வாஃ ஶஷ்வெஶு தெ சுவி ॥

விகல்பம் - வேற்றுமை. நிர்விகல்பகம் - வேற்றுமையற்றது. ஸவிகல்பகம் - வேற்றுமையுடையது. ஞானசக்தியானது நிர்விகல்பகம் எனவும், ஸவிகல்பகம் எனவும் இருதிறப்படும். படைக்கவேண்டிய பொருள்களையெல்லாம் "யான் பலவாக ஆவேனாக" (சா - சு - உ - ந ; தை - உப - உ - சு - க) என முதலில் பொதுவாகக் குறித்துநிற்கும் ஞானம் நிர்விகல்பகஞானம் என்பது. மற்று, அதே ஞானமானது ஆகாசம்முதலான படைக்கவேண்டிய பலவிதமான பொருள்களைத் தனித்தனி இன்னதின்னதெனச் சிறப்பாகக் குறிக்குமிடத்து, ஸவிகல்பகஞானமாம் என்க. (கரு)

கசூ.

ஞானத்திற்குத் தன்இயல்பிலே வேற்றுமை இல்லையாயினும், உணரப்படும் பொருள்கள் வேறுவேறாயுள்ளமையால், ஞானம் வேற்றுமையுடையதாகத் தோற்றுகின்றது ; உதாரணமாக,

எண்ணம், ஸந்தேகம், கலக்கம், நினைவு, ஒப்புமை, நிச்சயம், ஊகம், துணிபின்மை (இவை காணப்படுகின்றன) ; அவ்வாறே, மற்றைய அநுபவங்களு மாம்.

எண்ணமாவது - இனி இதனைச் செய்வேன் என்னும் மனோவ்ருத்தி. ஸந்தேகம் - பலதலையான உணர்வு. ஒப்புமை - இது இதனை ஒத்தது என்னும் வ்ருத்தி. ஊகமாவது - பார்த்ததைக் கொண்டு வேறொன்றை ஊகித்தல். துணிபின்மை யாவது - பொருள் புலப்பட்டாலும், இது என்னவோ என நிச்சயம்பிறவாதுநிற்கும் வ்ருத்தி. அநுபவங்கள் - ப்ரமா எனப்படுகின்ற யதார்த்த அறிவுகள்.

கஎ, கஅ, கசூ.

வினா :—அந்த அநுபவங்கள் என்பன யாவை? அவற்றுள், எதனை யார் கொண்டிருக்கிறார்கள்?

விடை :—வருமாறு:

சார்வாகர்கள் பிரத்தியக்ஷமொன்றையே(கொள்ளுகிறார்கள்.)மற்று, கணாதனும் ஸுகதனும் அதனையும், அநுமாநத்தையும் (கொள்ளுகிறார்

நாயெகதெஶிநொऽவெவுழ உவமாநகு கெவந ।
கூயூாவத்வா ஸஹெதாநி வக்வாயூாஹ வுஹாகூரஃ ॥
கூஹாவஷ்ஷாநெவுதாநி ஹாபூா வெஹாநிநஷ்டயா ।
ஸம்ஹவெதிஹ்ய-தாநி தாநி வளராணிகா ஜஹ-ஃ ॥

கள்). ஸாங்க்யர்கள் அவையிரண்டனையும், சாப்தத்தையும் (கொள்ளுகிறார்கள்).

மேலும், நியாயைகதேசிகள் இவ்வாறே (கொள்ளுகிறார்கள்). சிலர் [மற்றைய நையாயிகர்] உபமாநத்தையும் கூட்டுகிறார்கள். ப்ரபாகரன் அர்த்தாபத்திபொடு இந்த நான்கையும் கூறுகிறான்.

பட்டனைப் பின்பற்றியவரும், வேதாந்திகளும் - அபாவத்தை ஆறு வதாகவுடைய இவற்றை(க் கொண்டார்கள்). பௌராணிகர்கள் அவற்றை ஸம்பவம், ஐதிஹ்யம் என்றவற்றோடுகூடக் கொண்டார்கள்.

சார்வாக ரெனினும், லோகாயத ரெனினும் ஒக்கும். இவர் - "இந்திரியங்கட்குப் புலப்படுவது எதுவோ, அதுமாத்திரம் மெய்; மற்றையது மெய்யன்று" என்பர். ஆதலால், பிரத்தியக்ஷப் பிரமாணத்தைமாத்திரம் கொள்வர்.

கணாதன் - வைசேஷிக தர்சநத்தை நாட்டியவன். ஸுகதன் - புத்தன், கணந்தோறும் தோன்றி அழியும் ஞானமே ஆத்மா என்பவன். கணாதனும், புத்தனும் பிரத்தியக்ஷம் அநுமாநம் என்ற இரண்டுப் பிரமாணமும் கொள்வர்.

ஸாங்க்யர் - கபிலனது தர்சநத்தையும், பதஞ்சலியினது தர்சநத்தையும் பின்பற்றியவர். நியாயைகதேசிகள் - நையாயிகரில் ஒருசாரார். இவர் - பிரத்தியக்ஷமும், அநுமாநமும், சாப்தமும் ஆக மூன்றுப் பிரமாணமும் கொள்வர்.

(நையாயிகர் - கௌதமனது தர்சநத்தைப் பின்பற்றியவர்.) இவர் - அம்மூன்றுடன் உபமாநப்பிரமாணமும் கொள்வர்.

ப்ரபாகரன் - ஜைமிநியினது தர்சநத்தைப் பின்பற்றியவன். இவன் - அந்நாலுடன் அர்த்தாபத்திப் பிரமாணமும் கொள்வன்.

பட்டன் - ப்ரபாகரன்போல, ஜைமிநியினது தர்சநத்தைப் பின்பற்றியவன். ஆயினும்,இவ்விருவர்க்கும் கொள்கைகளில் வேறுபாடு உண்டு.பட்டனும்,வேதாந்திகளும் - அவ்வைந்துடன் அபாவம் என்னும் அநுபலப்திப் பிரமாணமும் கொள்வர்.

பௌராணிகர் - புராணங்கள் கூறுவதைக் கொண்டவர். இவர் - அந்த ஆறுப் பிரமாணங்களுடன் ஸம்பவப்பிரமாணத்தையும், ஐதிஹ்யப்பிரமாணத்தையும் கொள்வர்.

உ0.

ஆவ்ரம் ஸுணஸ்யா கூடு ஸாரூரம் ஸவிஶேஷகஂ ।
ஸவாயஶ் ஶ்ரீணாஹாஂ வஹாயுஂ ஷட் வுவக்ஷதெ ॥

பிரமாணங்களினது லக்ஷணம்.

க. பிரத்தியக்ஷமாவது - இந்திரிய விஷய ஸம்பந்தத்தால் தோன்றும் ஞானம். இந்திரியம் - கண் மூக்கு முதலியன; விஷயம் - குடம் நாற்றம் முதலியன. இது, காண்டல் எனவும் பெயர்பெறும்.

உ. அநுமாநமாவது - ஆராய்ச்சியால் தோன்றும் ஞானம். மலையிலே புகையைக் காணுங்கால், அங்ஙனம் "இம்மலை தீயுடைத்து" என்று தோன்றும் உணர்வு அநுமாநமாம். இது, கருதல் எனவும் பெயர்பெறும்.

ங. சாப்தமாவது - ஆப்தனது வாக்கியத்தால் தோன்றும் ஞானம். ஆப்தன்-உண்மைப்பொருளைக் கூறுவோன். அவ்வாக்கியம் - வேதம் முதலியன. இது, உரை எனவும் பெயர்பெறும்.

ச. உபமாநமாவது - பெயர்க்கும் பெயர்ப்பொருட்குமுள்ள ஸம்பந்தத்தை அறியும் ஞானம். ஆமா என்னும் சொல்லுக்கு அர்த்தமுணராதவ னொருவன் - "ஆவினை ஒக்கும் ஆமா" என ஒருவேடனிடத்தினின்றும் கேட்டுக்காட்டில் சென்று, ஆவோடு ஒப்புமையுடைய மிருகத்தைக் கண்டபின்னர், "இது ஆமா" என்னும் உணர்வு அவனுக்குத் தோன்று மென்க. இது, ஒப்பு எனவும் பெயர்பெறும்.

ரு. அர்த்தாபத்தியாவது - பொருந்தாத பொருளினால், பொருந்தியதைக் கொள்ளுதல். "பகலுண்ணான் சாத்தன் பருத்திருப்பான்" என்றவழி, உண்ணாதவனுக்குப் பொருந்தாத பருமையாகிய பொருளால், இரவுண்டல் கொள்ளப்படவேண்டும் என்பதாம். இது, பொருள் எனவும் பெயர்பெறும்.

சு. அபாவம் என்னும் அநுபலப்தியாவது - இதனைக் காணாமையால், இது இங்கே இல்லை என்னும் உணர்வு. வெளிச்சமுள்ள ஒரு அறையிலே குடத்தைக் காணாதவழி, இங்கே குடமில்லை யெனச் சடக்கென்று உணர்கின்றோம்.

எ. ஸம்பவமாவது - உண்மை. நூற்றில் ஐம்பது உண்டு என்னும் உணர்வு ஸம்பவமாம்.

அ. ஐதிஹ்யமாவது - மூலம்தெரியாது பரம்பரையாக வந்த உணர்வு. இந்த ஆலமரத்தில் பேய் உண்டு என்பது. (கஎ, கஅ, கக)

வைசேஷிகர் கொண்ட பொருள்கள்.

உ0.

இவ்வாறு, அவரவர்கொண்ட பிரமாணங்களைக் கூறி, இனி அவரவர்கொண்ட பொருள்களைக் கூறுபவராய் முதலில் வைசேஷிகமதத்தைத் தொடங்குகிறார்:

காணாதர்கள் ஆறு பொருள்களைக் கூறுகிறார்கள். (அவை) 1. திரவியம். 2. குணம். 3. தொழில். 4. சாமாந்யம். 5. விசேஷம். 6. சமவாயம் என்பன.

உ0உ.

நவ ஊவ்யாணி ஸுதாநி திக்காலாதயோ நாம்ஸி ச ।

உக, உஉ, உங.

யதாவிஶுத்திரேவ ஸ்யாத் மாணாம் ஶுஶ்வாதிவங்ககே ॥
வரிசாணம் ச ஸஜ்வ்யா ச ஶள ஸம்யொமவிஹாமகள ।
ஸ்ஹாவதம் வ்ரயக்ஷம் ச மாரக்ஷம் ஊவதா வாநம் ॥
வாரக்ஷங்காவாரக்ஷங் ஸ்நேஹம் ஸம்க்ஷாரா உதாவி ।
யீசெபுஷஸாவசாம்வெஹ்ரா யசாயசாவ்ரயதகாம் ॥

உச, உரு.

ஸம்க்ஷாரஹ்ரிவியொ வெமம் உஷ்வாசெமுதிகாரணழ் ।
ஊஷ்ஶாதாநாஸுதாயுஸ்ரதிஹெதாஶ் ஹாவநா ॥
ஸ்ரிதஸ்வாவகதா நாம் வாஸுவதிதிகாரணழ் ।
ஸுகாஷ்ஶாவாஸுஜுாஉள ஸ்ஷ்டசெவொவமுக்ஷ்ரதெ ॥

உ0உ.

(அவற்றுள்) 1. திரவியங்கள் - பூதங்கள் [க. நிலம். உ. நீர். ங. தீ. ச. வாயு. ரு. ஆகாசம்] சு. திசை. எ. காலம். அ. ஆத்மா. கூ. மனம்(என) ஒன்பது.

உக, உஉ, உங.

2. குணங்கள் இருபத்துநான்கு :—ஓசை முதலிய ஐந்து [க. ஓசை உ. உருவம். ங. சுவை. ச. நாற்றம். ரு. ஸ்பர்சம்] சு. பரிமாணம். எ. எண். அ. சேர்க்கை. கூ. பிரிவு. க0. இயல்பிலே வேற்றுமை. கக. திண்மை. கஉ. நெகிழ்ச்சி. கங. முன்மை. கச. பின்மை. ககூ. ஸ்நேஹம். ககூ வாஸநை. கள. புத்தி. கஅ. வெறுப்பு. ககூ. இன்பம். உ0. துன்பம். உக. விருப்பு. உஉ. அறம். உங. பாவம். உச. முயற்சி.

உச, உரு.

(அவற்றுள்) வாஸநையானது - (வேகம், பாவநை, நிலைபெறுத்துகை என) மூவகைத்து :—க. வேகமாவது - அம்பு முதலியன செல்லுதற்குக் காரணமாயுள்ளது. உ. பாவநையாவது - அநுபவிக்கப்பட்ட பொருளைக் கண்டவிடத்தும், கேட்டவிடத்தும் அதனது நினைவிற்குக் காரணமாயுள்ளது. ங. நிலைபெறுத்துகையென்பது - முன்போன்ற

உசு.

உதேதவணவேக்ஷவொ ஶநம் வ வ்ரஹாரணழ் ।
ஶுகுஞ்ஜநிதி வ்ராஹுஃ கூடு வஞ்ஜுவியம் வுயாஃ ॥

உஎ, உஎஉ.

ஸாரூரூயம் ஶிவியம் வெ்ரூக்தூம் வரம் வாவரூவேவ ச ।
வரம் ஸவ்தேவ ஸவ்தூ கூடுநுஸ்ரூ.தவ்தூநழ் ॥
ஊவ்ரூக்வம் ஶுணதெத்ரூஷி ஸாரூரூயவேரம் தயா ।

உஅ.

விஶெஷாஃ ஸ்ரூரநதாஷ்தெ வ்ரூவ்ரூத்திஜ்ரூநஹெதவஃ ॥

உஅஉ.

ரூஶுவஸ்வெவ வடெ நித்ரூஃ ஸம்வந்ரூஃ ஸவாயகஃ ।

நிலையையே ஆக்குவது; வளைக்கப்பட்ட கொப்பிலும், பூர்ஜமரத்திலும், பிறவற்றிலும் தெளிவாகவே காணப்படுகின்றது.

ஒருபுளியமரத்தின் மிலாறைப் பிடித்து இழுத்து வளைக்க, அது வேறுதன்மையாகச் செய்யப்பட்டது; அங்ஙனம் அம்மிலாறை விட்டிட, அது மீட்டும் தனது முந்தின நிலையையே பெறுகின்றது. அது அவ்வாறுதற்கு நிலைபெறுத்துகை என்னும் குணம் காரணமாம். (உச, உகு)

உசு.

அறிவுடையோர் 3. தொழிலை - க. எழும்பல். உ. வீழ்தல். ங. நடத்தல். ச. நிமிர்தல். ரு. வளைதல் என ஐந்துவிதமாகக் கூறுகிறார்கள்.

உஎ, உஎஉ.

4. சாமாந்யம் - மேல், கீழ் என இருவகைத்தாகக் கூறப்பட்டுளது :—க. உண்மைத்தன்மையே மேற்சாமாந்யம்; அது எங்கும் தொடர்ந்திருப்பது. உ. திரவியத்தன்மை, குணத்தன்மை முதலியன கீழ்ச் சாமாந்யம்.

உஅ.

5. விசேஷங்கள் அளவிறந்தவை; அவை வேற்றுமையுணர்விற்குக் காரணங்கள்.

உஅஉ.

6. சமவாயமாவது - நித்யமான சம்பந்தம்; குடத்திலே உருவத்தினது (சம்பந்தம்) போல என்க.

உ௯, உ௯௨.

காலாகாஶதிமாதாநஃ நித்யாஶ்ச விபவஶ்ச தெ ॥
ஶதஃவியாஃ பரிஹிநாஃ நித்யாஶ்ச பரமாணவஃ ।

௩௦.

இதி வைஶேஷிகமதெ ஷடே ப்ரகீர்திதாஃ ॥

௩௧.

ஈஶா ப்ரயாநவ்யக்தி கவிஜ்ஞாநஜ்ஞாநக்ஷரே ।
கவ்யாக்ருதம் ச ப்ரக்ருதிஃ தமஃ இத்யஹியதெ ॥

அவயவமும் அவயவியும், குணமும் குணியும், வினையும் வினைமுதலும், ஜாதியும், வடிவும், விசேஷமும் நித்யப்பொருளும் ஸமவாயத்தால் [நீக்கமின்றி] இருப்பனவாம். (உஅஉ)

உ௯, உ௯௨.

கீழ்க்கூறிய ஒன்பது திரவியங்களின் நித்யஅநித்ய வேறுபாட்டைக் கூறுகிறார்:

காலமும், ஆகாசமும், திசையும், ஆத்மாவும் நித்யமாயுள்ளன; அவை வியாபகமாயு முள்ளன. பரமாணுக்கள் நால்வகையாகப் பகுக்கப்பட்டவை, நித்யமாயுமுள்ளவை.

எனவே, பரமாணுக்களின் கார்யவடிவான நிலமும் நீரும் தீயும் வாயுவும் அநித்யப்பொருள்கள் என்றபடி. மனமோ, அணுஅளவிற்றாய், நித்யமா யிருப்பது.

௩௦.

இவ்வாறு வைசேஷிக மதத்தில் ஆறு பொருள்கள் கூறப்பட்டன.

ஸாங்க்யர் கொண்ட பொருள்கள்.

௩௧.

இனி, ஸேச்வர ஸாங்க்யரது தத்துவங்களை வகுத்துக் கூறுகிறார்:

மாயை - பிரதாநம் எனவும், அவ்யக்தம் எனவும், அவித்யை எனவும், அஜ்ஞாநம் எனவும், அக்ஷரம் எனவும், அவ்யாகிருதம் எனவும், பிரகிருதி எனவும், தமஸ் எனவும் கூறப்படுகின்றது.

மாயை - மயக்கம்; பிரதாநம் - முதன்மை; அவ்யக்தம் - வெளிப்படாதது; அவித்யை - அறியாமை; அஜ்ஞாநம் - பேதைமை; அக்ஷரம் - அழியாதது; அவ்யாகிருதம் - விகாரப்படாதது; பிரகிருதி - இயல்பு; தமஸ் - இருள். இவை, சொல்லர்த்தம். சுருதிஸ்மிருதி புராணங்களுள், மூலப்பிரகிருதி - மாயை முதலிய சொற்களால் கூறப்படுகின்றது என்பதாம். (௩௧)

௩உ.

மாயாயாம் ப்ரஹ்மைதந்யப்ரதிபிம்பாந்தரேஷு ஜாதம் ।
மஹதாதிவாஸாம்ஸி ஸ்யுஃ மஹத்தத்வாஹங்கார்தீஃ ॥

௩௩, ௩ச.

தாமஸாத்ஹ்யுஃ ஸாஹங்காராதாஸு வாநிலாக்நிஜலம்வாஹ்ரூபாணி ।
ஶப்தஃ ஸ்பர்ஶஶ்ச ரூபம் ச ரஸோ கந்தோऽவ்யபாக்ரமாஸ் ॥
இந்த்ரியாணாம் விஷயாஃ ஸ்ரோத்ராதீநாவிதே ஶப்தாஃ ।
தேவாஸ்தாஶிவஶ்சேஶஃ ருத்ரோ விஷ்ணுஶ்சதுர்முகஃ ॥

௩சஉ.

ஸாத்விகாத்ஹ்யுஃ மஹங்காராதாஸு கர்மேந்த்ரியாணி ।

௩உ.

மாயையிலே ப்ரஹ்மசைதந்யத்தினுடைய பிரதிபிம்பஸம்பந்தத்தினால் மஹத்து, காலம், புருஷன் என்பன உண்டாகும். மஹத்தத்துவத்தினின்று அஹங்காரம் (பிறக்கின்றது).

மூலப்பிரகிருதி தன்னை வசப்படுத்திக்கொள்கின்ற ஈச்வரசைதந்யத்தோடு ஸம்பந்தப்பட, மஹத்தத்துவம் காலம் புருஷன் என்னும் மூன்று பொருள்கள் உண்டாகின்றன. புருஷன் - ஸம்ஸாரியான ஜீவன். (௩உ)

௩௩, ௩ச.

அஹங்காரம் - தாமஸம், ஸாத்துவிகம், ராஜஸம் என மூவகைப்பட, அவற்றுள்

தாமஸ அஹங்காரத்தின்று ஆகாசம், வாயு, தீ, நீர், நிலம் என்பன உண்டாகும்; முறையே, ஓசையும் ஸ்பர்சமும் உருவமும் சுவையும் நாற்றமு மாம். அவை இந்திரியங்கட்கு விஷயங்களாகவும், பூதங்களது குணங்களாகவும் உள்ளன. (அவற்றிற்கு) தேவதைகள் - ஸதாசிவனும், ஈசனும், ருத்திரனும், விஷ்ணுவும், நான்முகனுமாம்.

தேவதைகள் - ஆகாசம் முதலிய இப்பூதங்களை அதிஷ்டித்து நடத்துகின்ற கடவுளர். (௩௩, ௩ச)

௩சஉ.

ஸாத்துவிக அஹங்காரத்தினின்று க. அகக்கரணமும், உ. ஞானேந்திரியமும் உண்டாகும்.

௩௫, ௩௬.

உநொவ॒ஜிரஹம்காரஃ வித்தம் கரணாநிகரழ ॥
ஸம்ஶயொ நிஶ்சயொ மவுஃ ஸ்மரணம் விஷயா சுஜீ ।
சம்ஶுஃ ப்ரஜாவதீ ரு॒ஶுஃ க்ஷேத்ரஜ்ஞ உதி தெவதாஃ ॥

௩௭.

ஶ்ரொத்ரம் சக்ஷுக்ஷ॒ஷீ ஜிஹ்வாவ்ராணம் ஜ்ஞாநெந்த்ரியம் விஷ॒ஃ ।
ஜிஹ்வாதஸ॒ஶுயுவரு॒ணநாஸத்யா உதி தெவதாஃ ॥

௩௭உ.

ராஜஸாத்ய॒ரஹம்காராசு கர்மெந்த்ரியஸரணாஃ ।

௩அ, ௩௯.

கர்மெந்த்ரியாணி வாக்பாணிஃ பாதஃ பாய॒ரு॒பஸ்தகழ ॥
வவநாதாநமுநவிஸமுபாநஹ்ஸம்ஜ்ஞகாஃ ।

௩௫, ௩௬.

(அவற்றுள்) க. அகக்கரணம் - மனம், புத்தி, அஹங்காரம்,சித்தம் (என நால்வகைப்படும்). ஸந்தேகம், நிச்சயம், செருக்கு, நினைவு இவை (முறையே அவற்றினது) விஷயங்களாம். சந்திரன், பிரஜாபதி, ருத்திரன், க்ஷேத்ரஜ்ஞன் என்பவர் (அவற்றிற்கு) தேவதைகளாம்.

௩௭.

செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்றவற்றை - உ. ஞானேந்திரியமாக (ஸாங்க்யர்) அறிகிறார்கள். திக்கு, வாதம், சூர்யன், வருணன், அச்வின் என்பவர் (அவற்றின்) தேவதைகள்.

௩௭உ.

ராஜஸ அஹங்காரத்தினின்று க. கர்மேந்திரியங்களும், உ. வாயுக்களும் உண்டாகும்.

௩அ, ௩௯.

க. கர்மேந்திரியங்கள் - வாய், கை, கால், பாயு, (ஆண்பெண்) குறி என்பன.

விஷயங்கள் [அவற்றின் செய்கைகள்] - பேசுதல், எடுத்தல், செல்

விஷயா ஹெவ சாஹ்ஹெஷாடு வஹ்ஹீம்ஹொவெம்ஹ்ரூ ஹ்ரு ஹாகாஃ ॥

ங.கூஉ.

வ்ராணொ ஃவா நஹ்ஸா நஶொஹா நவ்ரா நள உ வாயவஃ ।

ச0, ச0உ.

ஹ ஹெதெஹ்ஹ வங்ஹிஃ வ்ராணெஃ உத ஹ்ஹுஶ்ஹிரிஃஹ்ரியெஃ ॥

உத விஃஶ்ஶ தித்ஹ்தாநி ஸாஹ்வ்ரு ஶாஹ்ரு விஹொ விஹ ஃ ।

லல், விடுத்தல், இன்புறுதல் எனப்படுகின்றன. அவற்றிற்கு தேவதைகள் - வன்னி, இந்திரன், உபேந்திரன், மிருத்தியு, (பிரஜாபதி) என்பவர்.

ங.கூஉ.

உ. வாயுக்கள் - பிராணன், அபாநன், ஸமாநன், உதாநன், வியாநன் என்பவையாம்.

ஸேச்வரஸாங்க்யருடைய இருபத்துநான்கு தத்துவங்கள்.

ச0, ச0உ.

ஸாங்க்யநூலை யுணர்ந்தவர் - ஐந்து பூதங்களாலும், ஐந்து பிராணன்களாலும், பதினாலு இந்திரியங்களாலும் இருபத்துநாலு தத்துவங்களை அறிகிறார்கள்.

மாயை ப்ரஹ்மம் முதலாக தந்மாத்திரங்கள் ஈறாகவுள்ள தத்துவங்கள் இந்த இருபத்துநான்கு தத்துவங்களுக்கும் காரணமாயுள்ளமையால், அவற்றை வேறாகக் கணக்கிடவில்லை.

இதனால் - அநீச்வரஸாங்க்யமதமும் சொல்லாமையே கூறப்பட்ட தாயிற்று. எப்படியெனில், அது வருமாறு :

அநீச்வரஸாங்க்யருடைய இருபத்துநான்கு தத்துவங்கள்.

மூலப்பிரகிருதி க. மஹத்து க. அஹங்காரம் க. தாமஸ அஹங்காரத்தினின்று பிறந்த தந்மாத்திரங்கள் ரு. தந்மாத்திரங்களினின்று பிறந்த மகாபூதங்கள் ரு. ஸாத்துவிக அஹங்காரத்தினின்று பிறந்த அகக்கரணம் க. மறித்தும், அந்த ஸாத்துவிக அஹங்காரத்தினின்று பிறந்த ஞானேந்திரியங்கள் ரு. ராஜஸ அஹங்காரத்தினின்று பிறந்த கர்மேந்திரியங்கள் ரு. ஆக தத்துவங்கள் ஊச. புருஷன் இருபத்தைந்தாம் தத்துவம். காலம்என்பதற்கு - "இது இருந்தது, இருக்கின்றது, இருப்பது" என வியவகரிக்கப்படும் பொருள்கட்குப் புறம்பாக இருப்பு இல்லாமையால், அஃதோர் சுதந்திரமான பொருள் இல்லை யென்க. (ச0, ச0உ)

சக, சகஉ.

உஹா ந்தாஃ வ்யாபம் வ உயாऽவிஷ்ணெ வ வ-ஹ்ரு-ஷிஃ ॥
ஊதி வளராணிகாஃ வ்ராஹ-ஃ தி்ரஂஶ தத்வாநி தெஸ்ஹ ।

சஉ, சஉஉ.

விஷ்-நாஉள ஶக்திஶிவள ஶாஹாதீதள தத்ஃ வரு ॥
ஷட் தி்ரஂஶ தத்வித்ய-ஹ்ரு ஶைவாமஉவிஶாரதெஃ ।

பௌராணிகருடைய முப்பது தத்துவங்கள்.

சக, சகஉ.

இனி, பௌராணிகமதத்தைக் கூறுகிறார் :

பௌராணிகர் - மஹத்து, காலம், பிரதாநம், மாயை, அவித்யை, புருஷன் என அவற்றோடுகூட முப்பது தத்துவங்களைச் சொல்லுகிறார்கள்.

கீழ்க்கூறிய உச தத்துவங்களோடு இந்த மஹத்து காலம் முதலிய ஆறையும் கூட்ட, தத்துவங்கள் ௩0 ஆம். பிரதாநம் - மூலப்பிரகிருதி. தனக்கு இருப்பிடமாயுள்ளதை மயக்காதது மாயை யென்றும்,அதற்கு மாறானது, அதாவது மயக்குவது அவித்யை யென்றும் வேறுபாடு காண்க. காலமாவது - ஈச்வரனது செய்கையாம். புருஷன் பரமாத்மாவினது அம்சமாம். (சக, சகஉ)

சைவாகமத்தினுடைய முப்பத்தாறு தத்துவங்கள்.

சஉ, சஉஉ.

இனி, சைவமதத்தைக் கூறுகிறார் :

சைவநூலில் தேர்ந்தவரால் - அவற்றிற்குமேல் பிந்துவையும் நாதத்தையும், சக்தியையும் சிவனையும், சாந்தத்தையும் அதீதத்தையும் (சேர்த்து) தத்துவங்கள் முப்பத்தாறு என்று கூறப்பட்டது.

கீழ்க்கூறிய ௩0 தத்துவங்களோடு இந்த பிந்து நாதம் முதலிய ஆறையும் கூட்ட, தத்துவங்கள் ௩௬ ஆம். பிந்துஎன்பது-ஸகலத்தையும் அதிஷ்டித்து ஆளுகின்ற ஸதாசிவன் என்னும் பெயருடைய நிர்க்குணமான தத்துவம். நாதமாவது - பிரணவஸ்வரூபமாக யாவற்றையும் விளக்கிவெளிப்பட்ட அதனது[பிந்துவினது] வேறோர் வடிவம். சக்தி - மாயை அவித்யைகட்கு வேறாய், ஸகலத்தையும் அதிஷ்டிது நடத்துகின்ற ஈச்வரவல்லமை. சிவன் - இந்த சக்தியையுடையவன், பக்தர்கட்காகத் தன்இச்சையினால் உடம்பை எடுப்பவன். சாந்தம் - அமைதியுற்றது. அதீதம் - கடந்தது. இவையிரண்டும் சிவனுடைய வெவ்வேறான நிலையாம் என்க. ()

சங, சச, சசஉ.

ஸவெது விகுஷ்வாः ஷ்ராமாஸு ஸிஜாःகுரு இவாதுநி ॥
ஊஹாஜூநகிரயாரு-ஏவரோயயா தெ விஜ்ஞாஸிதாः ।
ஊஹாஜூநகிரயாவ-ஏவுாः யஷாதுவுாः ஷ்ரவ்ரதுயः ॥
ஸவெுऽவி ஜகுவஷுஷாசு ஏரஂஷ்வரா இதி நிஶ்சிதாः ।

சுருதியின் கொள்கை.

சங, சச, சசஉ.

கீழ்க்கணக்கிடப்பட்ட தத்துவங்களனைத்தும் பரப்ரஹ்மம் என்னும் ஒரேபொருளினுடைய மாயாப்பகட்டேயன்றி உண்மைப்பொருள்களல்ல என்னும் வேதாந்தக்கொள்கையானது - "வித்தினுள் முளைபோல" என்னும் உவமையினால் கீழே உணர்த்தப்பட்டது; படவே, இங்ஙனம் அவ்வேதாந்தக்கொள்கையைப் பின்பற்றுகிறார்:

வேற்றுமைகளெல்லாம், வித்தினுள் முளைபோல, முதலில் ஆத்மாவினுள் இருந்தன. அவை - இச்சை, அறிவு, முயற்சி என்னும் வடிவான மாயையினால் காட்டப்பட்டன.

எல்லாக் காரியங்களும் இச்சை அறிவு முயற்சி என்றிவற்றாலாகின்றமையின், எல்லாப் பிராணிகளும் ஈச்வரர்கள் என நிர்ணயிக்கப்பெற்றார்கள்.

ஜகத்தின் தத்துவமானது அந்தந்தமதத்தார் கூறுகிறபடி உண்மையாயிருந்தால், அங்ஙனம் அவர்கட்கு விவாதம் இல்லை. ஆனால், அது காணப்படுகின்றது. ஆகவே, பிரபஞ்சம் மாயாகற்பனையேயன்றி உண்மையின்று என்பதாம். மரம், தான் உண்டாதற்குமுன் விதையொடு ஒன்றாக, அதாவது விதையாக இருக்குமாறு போல, பிரபஞ்சம் - தான்உண்டாதற்குமுன் ஈச்வரனோடுஒன்றாக, ஈச்வரனாக இருந்தது என்க.

இனி, இச்சை அறிவு முயற்சி என்பன அசேதநப்பொருள்கட்கு அமையா. ஆனால், அவை மாயையொடுகூடிய சேதநப்பொருளான ஈச்வரனுக்கு அமைகின்றன. சேதநப்பொருளுக்கோ உபாதிபேதமில்லாது தன்னிடத்துப் பேதமில்லை. ஆதலால், சேதநப்பொருளான ஜீவர்களெல்லாம் ஈச்வரர்களாம். இவ்வாறாக, பிரபஞ்சம் நிலைபெறுங்காலும் ஈச்வரனொடு ஒன்றாக, ஈச்வரனாக இருக்கின்றது என்பதாம்.

எனவே, ஈச்வரனது இச்சைமுதலியன மாயாமய மாதலால், அவற்றாலான பிரபஞ்சமும் மாயாமயம் என அமையு மென்க. (சங, சச, சசஉ)

சரு, சசு, சஎ, சஅ.

ஸீஜாத்ருக்ஷஸ்ஸரோஸீஜு வாரம்வயெணு ஜாயதெ ॥
உதி ஶங்காநிவ்ருத்யுழு யொமிஷ்ருஷ்டாகூகீதுநழு ।
விஶ்வாதிரூஷயஃ வ-ஏவெ வரிவக்ஷஸாயயஃ ॥
உவாஷாநொவகாரணவ்ரயொஜநவிவஜிதாஃ ।
ஸ்வெஹயா ஸஸ்ருஜ-ஃஷுமுழு ஸவுஹொமொவவ்ரம்ஹிதழு ॥
ஶரம்ஶ்வரோऽநகஶக்திக்வாக ஷ்ஷதம்ரோऽந்யாநவெக்ஷயா ।
ஸ்வெஹாரோதெண ஸகலுழு ஸ்ருஜதுவதி ஹஜி ச ॥

சகூ.

ந காரகாணாம் வ்யாவாரோக கதா ஸ்யாந்நித்ய ஶரம்ஶ்வரஃ ।

சரு, சசு, சஎ, சஅ.

இனி, ஈச்வரன் உலகைப் படைத்து, காத்து, அழிக்கிறான் என்பதைத் திருஷ்டாந்தத்தால் விளக்குகிறார்:

"வித்திலின்று விருக்ஷம் உண்டாகின்றது; விருக்ஷத்தினின்று வித்து உண்டாகின்றது; தொடர்ச்சியாக (இவ்வாறு வித்தும் விருக்ஷமும் உண்டாகின்றன)" என்னும் சங்கையை நீக்கும்பொருட்டு யோகி திருஷ்டாந்தத்தைக் கூறுதல் (ஆயிற்று). ஸமாதிமுதிர்ந்த விச்வாமித்திரர் முதலிய முன்னோர்கள் உபாதாநகருவியில்லாமலே, பயனை நோக்காமலே, தன்இச்சையினால், ஸகலபோகங்களும் நிரம்பிய ஸ்வர்க்கத்தைப் படைத்தார்கள்.

ஈச்வரன் அளவிலாச் சக்தியுடையோனாதலால் சுதந்திரனாய் வேறொன்றையும் வேண்டாது, தன்இச்சைமாத்திரத்தால் ஸகலத்தையும் படைக்கிறான், காக்கிறான், அன்றியும் அழிக்கிறான் என்க.

விருக்ஷபீஜ திருஷ்டாந்தத்தினால் - "ஈச்வரனின்று ஜகத்தும், ஜகத்தினின்று ஈச்வரனும், மறித்து ஈச்வரனின்று ஜகத்தும் இவ்வாறு தொடர்ச்சியாகத் தலைப்பட்டுச்செல்லும்" என்னலாம். ஆனால், அது நேரன்று; ஈச்வரன் இறவாத பிறவாத அவிகாரிப் பொருளாதலின். ஆகவே, அத்தகைய சங்கையை மறுப்பவராய் யோகிதிருஷ்டாந்தத்தைக் கூறுகிறாரென்றபடி. தான்படைத்த உலகினின்றும் யோகி பிறவாமையை இங்கே நோக்கிக்கொள்க. (சரு, சசு, சஎ, சஅ)

சகூ.

வினா:—ஆயின், தொழிற்படாத நிர்விகாரியான ஈச்வரன் படைத்தல், காத்தல் அழித்தல் என்றவற்றை எவ்வாறு செய்யக்கூடும்?

விடை:—கூறுவோம்:

நித்யமான ஈச்வரன் காரகங்களுடைய செய்கையினால், (தான்)

நாவி வ்ரோணவ்யாவாரோக ஜ்ஞாதாऽஸௌ ஸ்வ்ரகாஶகः ॥

ரு0, ருக.

ஜ்ஞாத்ரக்ஷேவி கதுக்ரக்ஷு ஸ்வாதந்த்ர்யம் தஸ்ய கெவலு ।
யா செஷ்டாஶக்திவெவிதீ ஸாऽஸ்ய ஸ்வஷ்டகாரிதா ॥
யயா கதுமயாகதுமு கந்யா கதுமஹுதி ।
ஸ்வதந்த்ராஸ்வரூபாம் கெ வாரிஷ்யெத்தீஹெஶதெ ॥

ரு உ.

ஶ்ருதிஶ்ச ஸோऽகாமயெதேஷ்யா ஸ்ரஷ்டீஶிதः ।
தஸ்மாதாத்ம ஆகாஶः ஸம்ப்ரூத இதி வாவ்ரவீச ॥

செய்பவ னாகமாட்டான். அன்றியும், தானேவிளங்குகின்ற இவன் பிரமாணங்களுடைய செய்கையினால் அறிபவ னாகமாட்டான்.

பிரமாணங்கள் - அறிதற்கருவியான கண் செவி முதலியன. வே - கீ-ரு௭க, ரு௭உ,ரு௭௩ ஆம் பக்கங்களைப் பார்க்க. அதனால், இச்சுலோகத்தின்கருத்து இனிது விளங்கும். (சக)

ரு0, ருக.

அவனது அறிவும் செயலும் கேவல ஸ்வாதந்திரியமாம். அன்றியும், இவனது இச்சாசக்தியின் விசித்திரம் எதுவோ, அது தன்இஷ்டப்படிசெய்யும்தன்மையாம்.

எதனால் (அவன் ஒன்றனைச்) செய்யவும்,செய்யாதிருக்கவும், வேறு வகையாகச் செய்யவும் கூடியவனாய் இருக்கின்றானோ, (அந்த) ஸ்வதந்திரமான ஈச்வரேச்சையை யார் வரையறுக்க வல்லார் ?

கேவலமாவது - ஈச்வரனது இயல்பிலே யாதொரு விகாரமும் ஆகாமை. ஸ்வாதந்திரியம் - வேறொன்றை வேண்டிநில்லாமை. இச்சாசக்தியென்பது - ஈச்வரன் தன்இஷ்டப்படி செய்யும் திறமையாம். அது எதனாலும் தடைப்படாதது, சுதந்திரமானது, அளவிடவொண்ணாதது. (ரு0, ருக)

ரு உ.

இனி, ஈச்வரனுடைய இத்தகைய இச்சாசக்தியினாலேயே உலகைப் படைத்தல் முதலான காரியம் ஆகின்றது என்பதற்குப் பிரமாணம் யாதெனின்,— வருமாறு :

ஈச்வர(ன் த)னது இச்சையினால் படைத்தலை - " அவன் விரும்பினான்" எனவும், "அந்தஆத்மாவினின்று ஆகாசம் உண்டாயிற்று " எனவும் சுருதி கூறுகின்றது.

௫௩.

நிமித்தம் வெஹவெஹஸ்ய ஜகதः வரமேஶ்வரः ।
விகாரிகம் விநாஶிகம் ஹவெஹஸ்ய கூடவாயவக ॥

இங்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சுருதிகள் பிருகதாரண்யக உபநிஷத்தும், தைத்திரீய உபநிஷத்துமாம். (௫௨)

ஈச்வரன் ஜகத்திற்கு நிமித்தகாரணமாத்திர மல்லன்.

௫௩.

இவ்வாறு, ஈச்வரன் பிரபஞ்சத்திற்கு உபாதாநகாரணமும் நிமித்தகாரணமுமாம் என - பிரத்தியக்ஷம் முதலிய மற்றைய எல்லாப்பிரமாணங்களைக்காட்டிலும் மிகவலியுடைத்தான சுருதிப்பிரமாணத்தினால் உணர்த்தப்பட்டது. இனி, குடத்திற்குக் குயவன் நிமித்தகாரணமாத்திரமா யிருப்பதுபோல, ஜகத்திற்கு ஈச்வரன் நிமித்தகாரணமாத்திரமாம் என்னின், — அதிலே குற்றம் வருகின்றது :

பரமேச்வரன் இந்த ஜகத்திற்கு நிமித்தகாரண(மாத்திர)மாயின், இவன் குயவன்போல விகாரப்படுதலும் அழியுந்தன்மையனாதலும் ஆகும்.

இப்பிரபஞ்சத்திற்கு பரமாணு உபாதாநகாரணம் எனவும், ஈச்வரன் நிமித்தகாரணம் எனவும் கொண்டால், — அங்ஙனம் அவன் குயவன்போல விகாரப்படுதல், அதாவது கிரியையுள்ளவனாதல் வேண்டும் ; ஏனெனில், ஒருவன் தான் கிரியையில்லாதவனாய் வேறொன்றை விகாரப்படுத்தல், அதாவது காரியப்படுத்தல் இயலாது. கிரியையுள்ளவழியோ சரீரமிருத்தல் வேண்டும் ; வேண்டவே, அழியுந்தன்மை அவச்யம் ஆகுமென்க. ஆதலால், ஈச்வரனை மெய்யாகவே கர்த்தாவாகக் கொள்ளுமிடத்து, அவன் விகாரியாதல் முதலிய குற்றங்கள் வருதலை விலக்குதல் முடியாது ; அவன் நிர்விகாரியான நித்தியப்பொருளாதலின் என்பது கருத்து. (௫௩)

பிரதிவாதி :— புத்திமுதல் முயற்சிஈறாகவுள்ள ஒன்பது குணங்களும் (உ - உ௩) ஈச்வரனது இயல்பிலே நித்யமாய் அமைந்துள்ளமையால், அவனுக்குச் சரீரமில்லை ; எனவே, கீழ்க்கூறிய குற்றங்கட்கு இடமில்லை என்பதாம்.

வாதி :— அப்படியன்று ; சரீரமில்லை யெனக் கொண்டாலும், அங்ஙனம் வேறோர் குற்றம் வருகின்றமையின். — எப்படியெனில், — கூறுவோம் :

௫௪.

வாஸ்யாஶயோ நவ மஹாணாம் நித்யா யதவைஶ்வரஸ்ய சேத் ।
நிதேஹாவாந் ஜகதஸ்ரஷ்டா ஸ்ரவதி ஜகதே தவ ஸவபுஷா ॥

௫௫.

ஸ்வதந்த்ரவாரசாலாவாக் ஸம்ஸாரோ நைவ நஶ்யதி ।
சோக்ஷாவதேஶோ வ்யர்த்தஸ்யாத் ஸ்ரமசோऽவி நிரர்த்தகः ॥

௫௬.

தஸ்மாந்நாயாவிநாஶோऽயம் ஜகத்தத்ஸ்ரக்ஷீஶிதுः ।
வந்தசோக்ஷாவதேஶாதிவ்யவஹாரோவி சாயயா ॥

௫௪.

புத்திமுதலான ஒன்பது குணங்களும் ஈச்வரனுக்கு நித்யமாகவே இருந்தால், (அவன்) நித்யமான இச்சையை யுடையவனாய் பிரபஞ்சப் படைப்பிலே எப்பொழுதும் தலைப்படவே வேண்டும்.

இச்சையென்பது - புத்திமுதலிய ஒன்பது குணங்களுள் ஒன்று. அது ஈச்வரனுக்கு நித்யமாதலால், எப்பொழுது மிருத்தலால், அவன் உலகத்தைப் படைத்தலை எப்பொழுதும் செய்துகொண்டேயிருக்கவேண்டும்; தனது இச்சையினால் அதனைப் படைக்கின்றமையின். (௫௪)

௫௫.

இவ்வாறு, ஈச்வரனது

செய்கைக்கு ஓய்வில்லாவளவிலே, ஸம்ஸாரம் தொலைதலே இல்லை. (தொலையவேண்டாம் எனில்,—அங்ஙனம்) மோக்ஷத்தை உபதேசித்ஸ்வீணாகும்; சாதல்திரமும் பயனில்லதாகும்.

௫௬.

இவ்வாறாகப் பிறர்மதத்தில் குற்றங் கூறி, அதனால் இழுக்குறாத தன்மதத்தை முடிக்கிறார்:

ஆதலால், ஈச்வரன் பிரபஞ்சத்தைப் படைத்தலென்பது, இந்த மாயாப்பகட்டே யாம். பந்தமும், மோக்ஷமும், (அதனை) உபதேசித்தலும் (ஆகிய இவைபோன்ற) பிறவற்றின் வியவகாரமும் மாயையினால் (ஆவதாம் என்க).

௩௭.

இதி ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரவ்யாக்யாயாம் மாநஸோல்லாஸே த்வாதஶகே ।
வ்ரவெல ஶாநஸோல்லாஸே த்விதீயோல்லாஸஸம்க்ரஹः ॥

௩௭.

சச - ஆம் பக்கத்தில் கூறிய இரண்டாம் சுலோகத்தின் உரையை, இதனோடு முடிக்கிறார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய ஸ்தோத்திரத்தின் பொருளை நன்கு உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் இரண்டாம் உல்லாஸப்பொழிப்புரை முற்றும்.

இரண்டாம் உல்லாஸம்.

பதவுரை.

க.

ஸம்ய-க்ஸ்தாः	ஒருங்குகூடிய
பரமாணவः	பரமாணுக்கள்
ஜகதுபாதாநகாரணமாகி	ஜகத்திற்கு
உபாதாநநிமித்தமாகி	உபாதாநகாரணமாக (இருக்கின்றது).
தஸ்மாத்	ஆதலால்,
கடः	குடம்
ப்ருதிவ்யாதிமாந்	மண்ணோடு கூடியதாக
ஜாயதே	விளங்குகின்றது ;
ஈஶ்வராதிமாந்	ஈச்வரனோடு கூடியதாக
ந (ஜாயதே)	(விளங்குவது) அன்று.

உ.

ரூபரஸாதயः	வடிவம், சுவை முதலான
குணாः	குணங்கள்
பரமாணுகதாः ஏவ	பரமாணுக்களில் உள்ளவையே ;
கார்யே	காரியத்தில்
ஸமாநஜாதீயே	ஒரேஇனமான
குணாந்தரே	பல குணங்களை
ஆரபந்தே	செய்கின்றன.

ங.

யத்	எதிலே
கார்யே	காரியமானது

ஸமவெதி	ஒற்றித்துநிற்கின்றதோ,
தசு	அது
ஸமவாயி	சமவாயி (என்னும்)
காரணமு	காரணமாக (இருக்கின்றது).
து	ஆனால்,
யசு	எது
வகுராதி	சக்கிரம் முதலிய
ஸாயநமு	கருவியாக (இருக்கின்றதோ),
தசு	அது
வடஸ்ய	குடத்திற்கு
அஸமவாயி	ஸமவாயிகாரண மன்று.

ச.

யசு	எது
காயெ	காரியத்திலே
அவயுதஸாமர்தியமு	வலிமையுடையதாய்
ஸமவாயிநி	ஸமவாயிகாரணத்தில்
திஷ்டசு	நிற்குமோ,
தயா	அப்படியே
ஸமவாயாஸ்ரயெ	ஸமவாயிசார்பில் (நிற்குமோ),
தசு	அது
அஸமவாயி	அஸமவாயி(என்னும் காரணமாக)
அவுதெ	கொள்ளப்படுகின்றது.

சஉ.

ஈஶ்வரஶ்ச	ஈச்வரனும்
குலாலவத்	குயவன்போல,
தேஷாமு	அவற்றிற்கு
நிமித்தமு	நிமித்தம் (என்னும்)
காரணமு	காரணமாக (இருக்கிறான்).

ரு, சு.

யகு	எந்த
காயபு	காரியமானது
யஸ்மாகு	எதனினின்று
ஜாயதெ	உண்டாகின்றதோ,
தகு	அது
தஸ்மிங	அதிலே
ப்ரதிதிஷ்டதி	நிலைபெறுகின்றது ;
ப்ருதிகாயாபு	மண்ணிலே
வடாஃ	குடமும்,
தகுள	நூலிலே
வடாஃ	ஆடையும்,
ஸுணெபு	பொன்னிலே
சுஜ்ஜ்வலியகபு	மோதிரமும் (போல என்க).
இதி	இவ்வாறாக
வைசெஷிகாஃ	வைசேஷிகரும்,
தயா	அப்படியே
நெயாயிகாஃ கவி	நையாயிகரும்
ப்ராஹுஃ	கூறுகிறார்கள்.

எ, அ.

ரஜஃ	ரஜஸ் (என்றும்),
ஸத்வபு	ஸத்துவம் (என்றும்,
தமஃ இதி ச	தமஸ் என்றும்
த்ரயஃ	மூன்று
கு ணாஃ	குணங்கள்
ப்ரயாநஸ்ய	மூலப்பிரகிருதிக்கு (உள்ளன).
தெஷு	அவற்றுள்
ரஜஃ	ரஜஸ்

ஶிவழி	சிவந்தது,
ஶுபழி	அசைவது ;
ஸத்வழி	ஸத்துவம்
ஶுக்லழி	வெண்மையானது,
ப்ரகாஶகழி	விளக்கமானது ;
தமஃ	தமஸ்
கிருஷ்ணழி	கருமையானது,
ஆவரணகம் ச	மறைப்பது ;
(தாநி)	(அவை)
ஸ்ருஷ்டிஸ்திதிஹேதவஃ	படைப்பிற்கும், நிலைப்பிற்கும், அழிவிற்கும் காரணமாக(உள்ளன).
இதி	இவ்வாறு
ஸாங்க்யாஃ ச	ஸாங்க்யர்களும்
பாஷந்தே	சொல்லுகிறார்கள்.
தேஷாழி	அவர்கட்கு
உபாலம்பணழி	குற்றம்
உச்யதே	கூறப்படுகின்றது.

க.

இதழி	இந்த
ப்ரபஞ்சஃ	பிரபஞ்சம்
பீஜஸ்ய	விதையினுடைய
அந்தஃ	உள்ளே
அங்குரஃ இவ	முளை போல,
ஆதௌ	முதலில்
நிர்விகல்பழி	வேற்றுமையற்றதாய் (இருந்தது) ;
பஶ்சாத்	பின்னர்
மாயாகல்பித-	மாயையினால் கற்பிக்கப்பட்ட
தேஶகாலகுணா-	இடம் காலம் என்றவற்றின்
	ஸம்பந்தத்தாலான

வைவிதா-	விசித்திரத்தினால்
விதீர்க்யதே	பலபடிப்பட்டதாக (ஆயிற்று).
யஃ	எவன்
மாயாவீ இவ	மாயாவிபோலவும்,
மஹாயோகீ இவ சுவி	பெரியயோகிபோலவும்
ஷ்வேச்ச்யா	தன் இச்சையினால்
விஜ்ரும்பயதி	(இப்பிரபஞ்சத்தை) வெளிக்காட்டு கின்றானோ,
தஸ்மை	அந்த
ஸ்ரீமந்மஹாதாசார்யஸ்வரூபமான	ஸ்ரீமேதாசார்யஸ்வரூபமான
ஸ்ரீதக்ஷிணாமூர்தயே	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
இதி	இந்த
நமஃ	நமஸ்காரம்.

அஸ்ய	இதற்கு
அயம்	இது
அபிப்ராயஃ	கருத்து :

க.

அஸ்திக்யம்	உள்ளது என்பது
சுங்கமாதிஹேதுஷு	முளைமுதல் பழம்ஈறாகவுள்ள
காரணேஷு	காரியங்களில்
இஷ்யதே	கொள்ளப்படுகின்றது.
தே	அந்த
கணாஃ	பரமாணுக்கள்
கதஃ	எங்கிருந்து
ஆகத்ய	வந்து
வடபீஜேஷு	ஆலமரவிதைகளுள்
ஸம்பவந்தி	சேர்ந்தன?

கo.

காயபூ	"காரியம்
காரணாந்தர்பூதி	காரணத்தினுள் அடங்கியது"
இதி	என்று
ஸர்வைஃ ச	எல்லாராலும்
ஸம்மதி	சம்மதிக்கப்பட்டது.
தஸ்மாத்	ஆதலால்,
ஸத்தா	உண்மையும்
ஸ்ஃபுரத்தா ச	விளக்கமும்
ஸர்வத்ர ஸர்வி	எங்கும்
ஸந்வதுதெ	தொடர்ந்திருக்கின்றது.

கக.

வ்ருக்ஷை	பூ
ஃலகூபி	பழமாதலை
ஸுவஸ்தை	அடைந்தபொழுதும்,
க்ஷீரை	பால்
உயிதாபி	தயிராதலை
ஸதெ ச	அடைந்தபொழுதும்,
ரூபுவரஸாதயஃ	வடிவம், சுவை முதலிய
கு:ணாஃ	குணங்கள்
விஜாதீயாஃ	வேறு இனமாக
வ்ரவதுதெ	தலைப்படுகின்றன.

கஉ.

காரணபூ	காரணமும்
காயபூ	காரியமும்
அம்ஶஃ	அவயவமும்
அம்ஶீ	அவயவியும்
ஜாதிவ்யக்தீ	ஜாதியும், வடிவும்

மணீ	குணியும்
மணாः	குணமும்
க்ரியா	வினையும்
க்ரியாவாந	வினைமுதலும்
இத்யாத்யாः	என்பனமுதலான
கல்பநாः	கற்பனைகள்
ப்ரகாஶஸ்ய ஏவ	விளக்கத்திற்கே (உள்ளன).

கங.

வைதந்ய	சேதநத்தன்மை
பரமாணுஸமூஹாய	பரமாணுக்களுக்கும்
ப்ரயாநஸ்ய ஸுவி	மூலப்பிரகிருதிக்கும்
ந இஷ்யதே	கொள்ளப்படவில்லை.
ஜ்ஞாநக்ரியே	அறிவும், செயலும்
ஜகத்ஸர்வஸ	ஜகத்தைப் படைப்பதிலே
வைதநாஶ்ரயே	சேதநப்பொருளைச் சார்பாகவுடை யவையாக
உபலப்யதே	காணப்படுகின்றன.

கஙஉ.

உயி	தயிர்
காலஸமவக்ரியாஶக்த்யா	காலம் என்னும் கிரியாசக்தியினால்
க்ஷீராத்	பாலினின்று
பரிணமேத	மாறும்.

கச.

ஜகத்	பிரபஞ்சம்
ஜ்ஞாநஶக்த்யா	ஞானசக்தியினால்

ஜ்ஞாத்ருஜ்ஞாநஜ்ஞேயாநு-வழி	அறியும்பொருள், அறியும் கருவி, அறியப்படும் பொருள் என்றவற்றின் வடிவாக
ஹவெகு	ஆகும்.

க்ரு.

ஜ்ஞாநழி	அறிவு
ஶியா	இருவகைத்து.
நிவிகல்பகழி	நிர்விகல்பகம் (என்னும் ஞானம்)
வஸ்துமாத்ரஶ்ரீதகழி	பொருளைமட்டும் குறிப்பது ;
ஸவிகல்பம் து	ஸவிகல்பக(ம் என்னும் ஞான)மோ
ஸம்ஜ்ஞாதிஶ்ரீதகக்வாகு	பெயர் முதலியவற்றைக் குறிக்கின்றமையால்
கு நெகயா	பலவகைத்து.

கசு.

ஸம்கல்ப ஸம்ஶய ஹ்ரா-ஹ்ரதிஹாஶ்ரு-நிஶ்சயாः	எண்ணமும், ஸந்தேகமும், மயக்கமும், நினைவும், ஒப்புமையும், நிர்ணயமும்
உத்ஹः	ஊகமும்
கநயவஸாயः ச	நிச்சயமின்மையும்
தயா	அப்படியே
கு நெ	மற்றைய
கநுபவாः கவி	அநுபவங்களும்
(ஹவதி)	(உள்ளன).

கஎ, கஅ, கக.

சாவபாகாः	சார்வாகர்கள் [ள்.)
ப்ரத்ருக்ஷழி வநகழி	பிரத்தியக்ஷமொன்றை(க் கூறுகிறார்க
வாநः	ஆனால்,

கணாஉஸுமதிள	கணுதனும், ஸுகதனும்
தசஃ ச கவி	அதனையும்
கநுமாநம் ச	அநுமாநத்தையும் (கூறுகிறார்கள்).
ஸாங்க்யாஃ	ஸாங்க்யர்கள்
தெ கவி	அவற்றையும்
ஶப்தம் ச	சப்தத்தையும் (கூறுகிறார்கள்).
நியாயைகதேசிநஃ கவி	நியாயைகதேசிகளும்
வவ்வு	இவ்வாறு (கூறுகிறார்கள்).
கெ சந	சிலர்
உபமாநம் ச	உபமாநத்தையும் (கூறுகிறார்கள்).
ப்ரபாகரஃ	ப்ரபாகரன்
அர்த்தாபத்த்யா ஸஹ	அர்த்தாபத்தியோடுகூட
வ தாநி	இந்த
சதுர்ணி	நான்கையும்
ஆஹ	கூறுகிறான்.
பாட்டாஃ	பாட்டர்கள்
அபாவத்தை ஆறுவதாகவுடைய	
வ தாநி	இவற்றை(க் கூறுகிறார்கள்).
வேதாந்திநஃ	வேதாந்திகள்
தயா	அப்படியே (கூறுகிறார்கள்).
பௌராணிகாஃ	பௌராணிகர்கள்
ஸம்பவைதிஹ்ய-ஸஹிதாநி	ஸம்பவம் ஐதிஹ்யம் என்றவற்றோடு கூடிய
தாநி	அவற்றை
ஜகுஃ	கூறினார்கள்.

உ0.

காணாதாஃ	காணாதர்கள்,—
த்ரவ்யு	திரவியமும்

மணாः தயா	குணமும்
கஉு	கர்மமும்
ஸவிஶேஷகு	விசேஷத்தோடு
ஸாமாந்ய	ஸாமாந்யமும்
ஸமவாயः ச	ஸமவாயமும் (ஆகிய)
ஷட்	ஆறு
பதார்தாயூங	பதார்த்தங்களை
வதந்தெ	கூறுகிறார்கள்.

உ0ஒ.

நவ	ஒன்பது
த்ரவ்யாணி	திரவியங்களாவன.
பூதாநி	பூதங்களும்
திக்	திசையும்
காலாத்மநாம்ஸி ச	காலம் ஆத்மா மனம்(என்பவையாம்).

உக, உஉ, உங.

மணாः	குணங்கள்
சதுர்விம்ஶதिः வை	இருபத்துநான்கே
ஸ்யுः	ஆகும் :
ஶப்தாதிபஞ்சகு	ஓசை முதலிய ஐந்தும்
பரிமாணம் ச	அளவும்
ஸங்க்யா ச	எண்ணும்
ஸம்யோகவிபாகௌ ச	சேர்க்கையும் பிரிவுமாகிய இரண்டும்
ஸ்வபாவதः	இயல்பிலே
ப்ருதக்த்வம் ச	வேற்றுமையும்
மாநாநுகூலு	கனமும்
த்ரவதா வேகः	நெகிழ்ச்சியும்

வாக்கம் ச	முன்மையும்
கவாக்கம் ச	பின்மையும்
ஸ்நேஹம்	சினேகமும்
ஸம்ஸ்காரம் இதி கவி	ஸம்ஸ்காரம் என்பதும்
மதிம்	புத்தியும்
தெஷஸுவஃவெஹாம்	வெறுப்பும் இன்பமும் துன்பமும் இச்சையும்
யமநியமஸுயத்நகாம்	அறமும் பாவமும் முயற்சியும் (உச குணங்களாம்).

உச, உரு.

ஸம்ஸ்காரம்	ஸம்ஸ்காரம்
த்ரிவிதம்	மூவகைத்தாக (உளது) :
வேகம்	வேகம்
ஆஸ்வாதெம்	அம்பு முதலியவற்றினுடைய
மதிகாரணம்	போக்கிற்குக் காரணமாய் (உள்ளது) ;
பாவநா ச	பாவனையென்பது
த்ருஷ்டஸ்ருதாநுபூதா-யுஸ்த்ரிஹேதுகம்	பார்ப்பதனாலும், கேட்பதனாலும்-அநுபவிக்கப்பட்ட விஷயங்களின் நினைவிற்கு காரணமாய் (உள்ளது) ;
ஸ்திதஸ்தாவகதா நாம்	நிலைபெறுத்துகையாவது
வபுவுவகு	முன்போல
ஸ்திதிகாரணம்	நிலைகொள்ளுதற்குக் காரணமாய் (உள்ளது) ;
ஆக்ரமணாவாஹபுஜாதள	இழுக்கப்பட்ட கொப்பிலும், பூர்ஜ மரத்திலும், பிறவற்றிலும்
ஸ்பஷ்டம் வவ	தெளிவாகவே
உபலக்ஷ்யதெ	காணப்படுகின்றது.

உசூ.

வை-யாஃ	புலவர்கள்
கஉ2	கர்மத்தை
உதெ்க்ஷவணழ	எழும்பல்
கவக்ஷவஃ	வீழ்தல்
ஸஉநம் வ	நடத்தல்
வ்ரஸாரணழ	நிமிர்தல்
சூக-ஞ்ஜநழ	வளைதல்
இதி	என
வஞ்ஜியழ	ஐந்துவிதமாக
வ்ராஹ-ஃ	கூறுகிறார்கள்.

உஎ, உஎஒ.

ஸாஉாநழ	சாமான்னியம்
வரழ வ	மேல் (எனவும்)
கவரழ வஸவ வ	கீழ் (எனவும்)
ஜிவியழ	இருவகைத்தாக
வ்ரொக்தழ	கூறப்பட்டுளது.
வரழ	மேற்சாமான்னியமாவது
ஸத்தா வஸவ	உள்ளதன்மையே.
தகூ	அது
ஸவதூ	எங்கும்
கந-ஸ்ய-ஏதவதநழ	தொடர்ந்திருப்பது.
தயா	அப்படியே
கவரம் ஸாஉாநழ	கீழ்ச்சாமான்னியமாவது
ஊவ்ருக்வழ	திரவியத்தன்மை
ஸ-ணதா	குணத்தன்மை
உத்ஸாஹி	என்பன முதலிய (தாம்).

உஅ.

விஶேஷாः	விசேஷங்கள்
கணநாः	அளவில்லாதவை
ஸ்யுः	ஆகும்.
தெ	அவை
வ்யாவ்ருத்திஜ்ஞாநஹேதவः	வேற்றுமையுணர்விற்குக்காரணங்கள்.

உஅஉ.

ஸமவாயகः	சமவாயமாவது
வடெ	குடத்திலே
ரூபவஸ்ய இவ	உருவத்தினது (ஸம்பந்தம்) போல,
நித்யः	நித்யமான
ஸம்பந்தः	சம்பந்த (மாம்).

உக, உகூஉ.

காலாகாஶதிமாத்மாநः	காலமும், ஆகாசமும், திக்கும், ஆத்மாவும்
நித்யாः ச	நித்யமாயும் (உள்ளன).
தெ	அவை
விபவः ச	வியாபகமாயும் (உள்ளன.)
பரமாணவः	பரமாணுக்கள்
சதுர்விதாः	நான்குவகையுள்ளவையாக
பரிகீர்த்திதாः	வகுக்கப்பட்டவை,
நித்யாः ச	நித்யமாயும் (உள்ளவை).

ஙo.

இதி	இவ்வாறு
ஷட்	ஆறு
பதார்தாः	பொருள்கள்

வைஶேஷிகமிதி	வைசேஷிகமதத்தில்
ப்ரகீர்திதாஃ	கூறப்பட்டுள்ளன.

௩௧.

மாயா	மாயையானது
ப்ரதாநம்	பிரதாநம் (என்றும்),
அவ்யக்தம்	அவ்யக்தம் (என்றும்),
அவித்யா	அவித்யை (என்றும்),
அஜ்ஞாநம்	அஜ்ஞாநம் (என்றும்),
அக்ஷரம்	அக்ஷரம் (என்றும்),
அவ்யாகிருதம்	அவ்யாகிருதம் (என்றும்),
ப்ரகிருதிஃ	பிரகிருதி (என்றும்),
தமஃ இதி ச	தமஸ் என்றும்
கதீயதே	கூறப்படுகின்றது.

௩௨.

மஹத்காலபுருஷாஃ	மஹத்தும், காலமும், புருஷனும்
மாயாயாம்	மாயையிலே
ப்ரஹ்மைதந்ய-ப்ரதிபிம்பாந்தர்ஜாதாஃ	ப்ரஹ்மசைதந்யத்தினுடைய பிரதிபிம்பசம்பந்தத்தினால்
ஸந்தி	உண்டாகும்.
மஹதஃ	மஹத்தத்துவத்தினின்று
அஹங்காரஃ	அஹங்காரம்(உண்டாகும்).

௩௩, ௩௪.

வாயுராபோபூமயஃ	ஆகாசமும், வாயுவும், தீயும், நீரும், நிலமும்
தாமஸாத்	தாமஸமான
அஹங்காராத்	அஹங்காரத்தினின்று

ஸ்யாஃ — உண்டாகும் ;
ஶப்தஃ — ஓசையும்
ஸ்பர்ஶஶ்ச — ஸ்பர்சமும்,
ரூபம் ச — உருவமும்,
ரஸஃ — சுவையும்,
கந்தஃ ஸுவி — நாற்றமும்
கந்தாஸ்ரயாஸு — முறையே (உண்டாகும்).

தே — அவை
இந்த்ரியாணாம் — இந்திரியங்கட்கு
விஷயாஃ ச — விஷயங்களாகவும்,
பூதாநாம் — பூதங்களுடைய
கு3ணாஃ ஸுவி — குணங்களாகவும் (உள்ளன).
தே3வாஃ — தேவதைகள்
ஸதாஶிவஃ ச — ஸதாசிவனும்,
ஈஶாநஃ — ஈசனும்,
ருத்ரஃ — ருத்திரனும்,
விஷ்ணுஃ — விஷ்ணுவும்,
சதுர்முக2ஃ — நான்முகனு(மாம்).

நகசஉ.

அஹங்கரணாந்த்ரியம் — அகக்கரணமும், ஞானேந்திரியமும்
ஸாத்ஸ்விகாஸு — ஸாத்துவிகமான
அஹங்காராத்ஸு — அகங்காரத்தினின்று
ஸ்யாஸு — உண்டாகும்.

நடு, நசூ.

ஆந்தரம் — உள்ளேயுள்ள
கரணம் — கருவியானது
மநஃ — மனம்

஬ுத்தி:	புத்தி
அஹங்காரः	அகங்காரம்
சித்தம்	சித்தம் (என நால்வகைத்து).
ஸம்ஶயः	ஸந்தேகம்
நிஶ்சயः	நிர்ணயம்
மமதா	கர்வம்
ஸ்மரணம்	நினைவு
ஏதே	இவை
விஷயாः	விஷயங்க(ளாம்).
சந்த்ரः	சந்திரன்
ப்ரஜாபதिः	பிரஜாபதி
ருத்ரः	ருத்திரன்
க்ஷேத்ரஜ्ஞः	க்ஷேத்ரஜ்ஞன்
இதி	என்ற (இவர்)
தேவதாः	தேவதைகள்.

௩௭.

ஶ்ரோத்ரம்	செவியையும்
த்வக்சக்ஷுஷீ	மெய்யையும், கண்ணையும்
ஜிஹ்வாக்ராணம்	நாக்கையும், மூக்கையும்
ஜ்ஞானேந்த்ரியம்	ஞானேந்திரியமாக
விது:	(வித்வான்கள்) அறிகிறார்கள்.
திக்வாதஸூர்ய-வருணாஶ்வினாः	திக்கு, வாதம், சூரியன் வருணன், அச்வின்
இதி	என்ற (இவர்)
தேவதாः	தேவதைகள்.

நஎஉ.

கர்மேந்த்ரியஸரீரணாம்	கர்மேந்திரியங்களும், வாயுக்களும்
ராஜஸாத்	ராஜஸமான
அஹங்காராத்	அகங்காரத்தினின்று
ஸ்யாத்	உண்டாகும்.

நஅ, நக.

கர்மேந்த்ரியாணி	கர்மேந்திரியங்கள்
வாக்	வாய்
பாணிம்	கை
பாதம்	கால்
பாயுஃ	பாயு
உபஸ்தகுதௌ	(ஆண்பெண்) குறி (என்பன).
விஷயாஃ	விஷயங்கள்
வதநாதாநமுதந-விஸர்கானந்தஸம்ஜ்ஞகாஃ	பேசுதல், எடுத்தல், செல்லுதல் விடுத்தல், இன்புறுதல் என்னும் பெயருடையவை.
வஹ்நீந்த்ரோபேந்த்ர-ம்ருத்யவஃ	வன்னி, இந்திரன், உபேந்திரன் மிருத்தியு (என்பவர்)
தேஷாம்	அவற்றிற்கு
தேவதாஃ	தேவதைகள்.

நகஉ.

வாயவஃ	வாயுக்கள்
ப்ராணஃ	பிராணனும்
அபாநஃ	அபாநனும்
ஸமாநஃ ச	ஸமாநனும்
உதாநவ்யாநௌ ச	உதாநனும், வியாநனும் (என்பவையாம்).

சஂ, சஂஹ.

ஸாஂக்யாஹ்வாவிஃ	ஸாங்க்யநூலை யுணர்ந்தவர்கள்,
வங்குஹிஃ ஊதைஃ தஂ	ஐந்து பூதங்களாலும்
(வங்குஹிஃ) வாணைஃ	(ஐந்து) பிராணங்களாலும்
வதஂஷுஹிஃ	பதினாலு
இஂத்ரியைஃ	இந்திரியங்களாலும்
வதஂவிஂஶதிதத்வாநி	இருபத்துநாலு தத்துவங்களை
விதுஃ	அறிகிறார்கள்.

சக, சகஹ.

வைராணிகாஃ	பௌராணிகர்கள்
தைஃ ஸஹ	அவற்றோடுகூட
மஹாந்	மஹத்து
காலஃ	காலம்
ப்ரதாநம் ச	பிரதாநம்
மாயாऽவித்யை ச	மாயை, அவித்யை
வுருஷஃ	புருஷன்
இதி	என
த்ரிஂஶத்தத்வாநி	முப்பது தத்துவங்களை
வதாஹுஃ	சொல்லுகிறார்கள்.

சஉ, சஉஹ.

ஶைவாகமவிஶாரதைஃ	சைவநூலில் தேர்ந்தவரால்
ததஃ பரம்	அவற்றிற்குமேல்
விந்துநாதௌ	பிந்து, நாதம்
ஶக்திஶிவௌ	சக்தி, சிவன்
ஶாந்தாதீதௌ	சாந்தம், அதீதம்
இதி	என

ஷட் த்ரிம்ஶத்தத்வ — முப்பத்தாறு தத்துவங்கள்
உக்தா — கூறப்பட்டன.

சங, சச, சசஉ.

ஸவெ — எல்லா
விகல்பாः — வேற்றுமைகளும்,
ஸீஜெ — விதையினுள்
சுங்கராः இவ — முளைபோல,
ப்ராக் — முதலில்
ஆத்மநி — ஆத்மாவினிடத்து
ஆஸந — இருந்தன.

தெ — அவை
இச்சாஜ்ஞாநக்ரியாரூபவ- — இச்சை, அறிவு, முயற்சி என்னும் வடிவான
மாயயா — மாயையினால்
விஜ்ரம்பிதாः — காட்டப்பட்டன.
யஸ்மாத் — எதனால்
ஸவபாः — எல்லா
ப்ரவ்ருத்தயः — செய்கைகளும்
இச்சாஜ்ஞாநக்ரியாவபுவபாः — இச்சை, அறிவு, முயற்சிஎன்றவற்றை முன்னிட்டுநிற்கின்றனவோ

தஸ்மாத் — அதனால்
ஸவெ — எல்லா
ஜீவாः ஸுவி — பிராணிகளும்
ஈஶ்வராः இதி — ஈச்வரர்களாக
நிஶ்சிதாः — நிச்சயிக்கப்பட்டார்கள்.

சரு, சசு, சஎ, சஅ.

ஸீஜாஸு	" விதையினின்று
வ்ருக்ஷாः	மரமும்,
தரோாः	மரத்தினின்று
ஸீஜம்	விதையும்
வாரம்வயெுண	பரம்பரையாக
ஜாயதெ	உண்டாகின்றது "
உதிஶங்காநிவ்ருத்ர்யர்தம்	என்னும் சங்கையை நீக்கும்பொருட்டு
யொகிஜ்ருஷ்டாந்தகீதுநம்	யோகியினது திருஷ்டாந்தத்தைக் கூறுதல் (ஆயிற்று).
பரிபக்வஸமாயயः	பரிபக்குவமான ஸமாதியை யுடைய
விஶ்வாமித்ராதயः	விச்வாமித்திரர் முதலிய
பூர்வெ	முன்னோர்கள்
உபாதாநொபகரணவ்யொஜநவிவர்ஜிதாः	உபாதாநகருவியும் பயனும் இல்லாதவராய்
ஸர்வுலொகொபவ்ரும்ஹிதம்	எல்லாப்போகங்களும் பெருகிய
ஸ்வர்க்கம்	ஸ்வர்க்கத்தை
ஸ்வெச்ச்யா	தனது இச்சையினால்
ஸஸ்ருஜுः	படைத்தார்கள்.
ஈஶ்வரः	ஈச்வரன்
அநவதிகஶக்திக்வாசு	அளவிலா வல்லமை யுடைமையினால்
ஸ்வதந்த்ரः	சுதந்திரனாய்
அந்யாநபெக்ஷயா	பிறவற்றை வேண்டாது,
ஸகலம்	யாவற்றையும்
ஸ்வெச்சாமாத்ரேண	தனதுஇச்சைமாத்திரத்தினால்
ஸ்ருஜதி	படைக்கிறான்,

கஸ்ய	இந்த
ஜகதः	ஜகத்திற்கு
நிமித்தம்	நிமித்தகாரணமாக
ஹேதுஶ்சேத்	இருந்தால்,
கஸ்ய	இவனுக்கு
குலாலவத்	குயவன்போல
விகாரித்வம்	விகாரித்தன்மையும்
விநாசித்வம்	விநாசித்தன்மையும்
ஹேதுஶ்	ஆகும்.

நுச.

஬ுத்யாதயः	புத்திமுதலிய
நவ	ஒன்பது
கு॒ணாः	குணங்களும்
ஈஶ்வரஸ்ய	ஈச்வரனுக்கு
நித்யாः வத	எப்பொழுது முள்ளவையாகவே
(ஸ்யு॒ः) சேத்	இருந்தால்,
(ஸः)	(அவன்)
நிதெ॒ஹாவாந்	எப்பொழுதும் இச்சையை யுடையவனாய்
ஜகத்ஸ்ருஷ்டௌ	பிரபஞ்சத்தைப் படைப்பதிலே
ஸதா	எப்பொழுதும்
ப்ரவர்தத வத	தலைப்படவே வேண்டும்.

நுரு.

ஸம்ஸாரः	ஸம்ஸாரமானது,
ப்ரவ்ருத்தி॒வை஫லாஹாவாத்	செய்கைக்கு ஓய்வில்லாமையினால்
ந நிவ்ருத்தி வத	அழிவதே இல்லை ;
மோக்ஷாவதெஶः	மோக்ஷத்தை உபதேசித்தல்
வ்யர்தः	வீண்

ஸ்யாசு	ஆகும் ;
சூஸ்த்ரம் சுவி	சாஸ்திரமும்
நிரர்த்தகம்	பயனில்லை (தாகும்).

நுசு.

தஸ்மாசு	ஆதலால்,
ஈஶ்வரஸ்ய	ஈச்வரனுக்கு
ஜகத்கர்த்துருத்வமேவ	ஜகத்கர்த்திருத்துவமானது
சுயம்	இந்த
மாயாவிலாஸம்	மாயாவிலாஸ (மாம்).
பந்தமோக்ஷோபதேசாதி-	பந்தம், மோக்ஷம், உபதேசம் முதலியவற்றின்
வ்யவஹாரம் சுவி	வியவகாரமும்
மாயயா	மாயையினால் (நிகழ்கின்றது).

நுஎ.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி-	ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய
ஸ்தோத்ரார்த்த-	ஸ்தோத்திரத்தின் பொருளை
வேதிவாஹகே	உணர்த்துகின்ற
மாநஸோல்லாஸே	மாநஸோல்லாஸம் (என்ற)
ஸ்ரவணே	நூலினுள்
த்விதீயோல்லாஸஸம்ஸ்ரூஹ:	இரண்டாம் உல்லாஸப்பொழிப்புரை
இதி	முற்றிற்று.

கூ ய

தூ ரீ யொ ஆ ஸ ஃ ॥

ஸ தாஷுரதெ ஹாவெஷு கூத சூமதூ ஸஜுதெ।
விம்வாஹிஉவபுணநூயாசு இகூலம் வ்ரஹ்ங வ்ரவொயூதெ ॥

ங. யஷ்வெவ ஷுரணம் ஸஹாதுகஉஸசு-
கூவாயஃமம் ஹாஸதெ

மூன்றும் உல்லாஸம்.

க.

உடம்பினுள் நின்று வெளியிலுள்ள எல்லாப்பொருள்களையும் காண்கின்ற அறிவான ஆத்மாவாகிய ஜீவன், அ - ஆம் பக்கத்திலுள்ள முதல் சுலோகத்தினால் குறிக்கப்பட்டது. பிரபஞ்சத்தைப் படைக்கின்ற ப்ரஹ்மம் சச - ஆம் பக்கத்திலுள்ள இரண்டாம் சுலோகத்தினால் குறிக்கப்பட்டது. இனி, அவ்வாறு குறிக்கப்பெற்ற அவ்விருபொருளும் ஒரேபொருளெனக் காட்டுகின்ற மூன்றும் சுலோகத்திற்கு உரையிடும்பொருட்டு வினா எழுகின்றது :

உண்மையும் விளக்கமும் பொருள்களில் எங்கிருந்து வந்து சேர்ந்தன ?—இவ்வாறு பிம்பாதிதர்ப்பணநியாயத்தால் வினவுகின்ற (மாணாக்கன், மூன்றும் சுலோகத்தினால்) அறிவுறுத்தப்படுகிறான்.

உண்மையும் விளக்கமும், அறியும்பொருளான ஆத்மாவின் இயல்பேயன்றி அறியப்படும்பொருளான குடம்முதலியவற்றின் இயல்பு இல்லை எனக் கீழேகூறப்பட்டது. அப்படியானால், அந்த உண்மையும் விளக்கமும் குடம்முதலியவற்றினுடைய இயல்பாய் இல்லையானால், அவை அக்குடம்முதலியவற்றோடு ஒட்டிநிற்பனவாக எப்படிக் காணப்படுகின்றன ?— முகம்முதலியன கண்ணாடியினுள்போல அவை குடம்முதலியவற்றுள் பிரதிபிம்பித்தலால் அவற்றினிடத்துக் காணப்படுகின்றனவா? அல்லது, தீ இரும்புக்கட்டியொடுபோல, அவை குடம்முதலியவற்றோடு கூடியுள்ளமையால் அவற்றினிடத்துக் காணப்படுகின்றனவா? (க)

விடை கூறுவோம் :

ங. எதனுடையதேயான விளக்கமானது, இல்லதுபோன்ற பொருள்களில் புகுந்து உண்மைவடிவாய் விளங்குகின்றதோ, எது (தன்னை)

ஸாக்ஷாத்தத்ஸஸீதி வெஷவவஸா
யொ வொயயத்யாஶ்ரீதாநு ।
யத்ஸாக்ஷாத்காரணாத்ஸவெந வாநநா-
வ்ருத்திஸுவாம்ஸொநியள
தஷ்ஷை ஶ்ரீமதாசார்யாத்தயெ நஜ ஜ்ஞம்
ஶ்ரீதக்ஷிணாமூர்த்தயெ ॥

யடைந்தவர்களை "நீ அதுவாக இருக்கிறாய்" என்னும் வேதவாக்கினால் நேரே அறிவுறுத்துகின்றதோ, எதனை நேரே காண்பதனால் ஸம்ஸாரஸமுத்திரத்துள் மீண்டும் திரும்புத லில்லையோ, அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

இல்லாதபொருளான முயற்கொம்பு முதலியவற்றிற்கு விளக்கமில்லை; அதாவது, அவை விளங்குவனவில்லை. ஆனால், கயிற்றிலே பாம்பு - இல்லாதபொருளாயினும், எதிரே தோற்றுகின்றது ; அதனால் வாஸ்தவமாகவே மனநடுக்கம் உடம்பு ப்பதட்டம் முதலியனவும் உண்டாகின்றன. ஆகவே, பாம்பை - முயற்கொம்பு போல இல்பொருளாகக் கொள்ளுதல் ஆகாது. அன்றியும், அது வாஸ்தவமாகவே இல்லையாதலால், அதனை - கயிற்றைப்போல உள்பொருளாகக் கொள்ளுதலும் ஆகாது. ஆதலால், அது [பாம்பு] இல்பொருளுமல்லதாய், உள்பொருளுமல்லதாய் இன்னதென்று சொல்லவாராத பொய்ப்பொருளாம் என்க. இவ்வாறாகப் பாம்பிற்கு உண்மையும் விளக்கமும் தனக்கென்று சொந்தமாக இல்லையாயினும், அது உள்பொருளான கயிற்றினுடைய உண்மையையும் விளக்கத்தையும் பெற்று நிற்கின்றது. அதுபோல, ஆகாசம்முதலிய பொருள்களெல்லாம் பெரும்பான்மை இல்பொருளே நிகர்த்தவையாய், தானேவிளங்கும் உள்பொருளான பரமேச்வரனுடைய உண்மையையும் விளக்கத்தையும் பெற்றுநிற்கின்றன ; இல்லாவிடில், பிரபஞ்சம் குருடா யிருக்கும். ஆகவே, பாம்பு வாஸ்தவத்தில் கயிறாயிருப்பதுபோல பிரபஞ்சம் வாஸ்தவத்திலே ப்ரஹ்மஸ்வரூபமாசவே இருக்கின்றது என்பதாம்.

இனி, இவ்வாறு பொய்ம்மையான ஜகத்தின்மேல் மெய்ம்மைஎன்னும் நிச்சயமும், ஆத்மாஅல்லாத உடம்புமுதலியவற்றின்மேல் ஆத்மாஎன்னும் நிச்சயமும் ஸகலஸம்ஸாரத்திற்கும் காரணமாம். ஆதலால், பகவான் பரமேச்வரன் அத்தகைய தீய நிச்சயத்தைப் போக்குபவராய், அமைதி அடக்கம் பொறுமை முதலிய ஸாதநங்களைக்கொண்டு அப்பகவானாகிய பரம்பொருளைப் பார்க்க ஆவலுற்று அதனையே அடைக்கலமாக அடைந்தவர்க்குத் தானே குருவாக வந்து "நீ அதுவாக இருக்கின்றாய்" (சா - சு - க - ச) என்னும் வேதத்திருவாக்கினால் உண்மையை நேரேஉபதேசித்தருளுகின்றான். அருளவே, "தானேவிளங்கும் ப்ரஹ்மமாகிய

ஊஉஉ்ரூகூ ஏதழ—

உ.

ஸுஸ்தஸ்வ்ஷ ஹாவெஷ ஜெஷ க்ஷணநாஶிஷ ।
ஸுஸ்திக்வம் வ வ்ரகாஶக்வழ நித்ரூாதம்க்ரூாஉதீஶ்வரூாக ॥

பேரறிவான ஆநந்தஸ்வரூபமாக இதோ நானிருக்கின்றேன்" என ஒருவன் தன்னை ப்ரஹ்மமாகக் கண்டுணர்ந்தவளவிலே, தொல்லைநிரம்பிய இச்சம்சாரக்கடலினுள் மீட்டும் திரும்பிவருதலில்லை. அவ்வண்ணமே, எண்ணிறந்த சுருதிகள் கூறுகின்றன ; அவற்றுள், சில வருமாறு :

"தரதி ஶொகஉாதவிக"

"ஆத்மாவை அறிந்தவன் துயரத்தைக் கடந்திடுகிறான்"— (சா - எ - க - ௩)

"ப்ரஹ்ம வெஉ ப்ரெஹ்வ ஹவதி"

"ப்ரஹ்மத்தை அறிகிறான், ப்ரஹ்மமாகவே ஆகிறான்"— (மு - ௩ - உ - க)

"ந ஸ வ நரூாவதழெத"

"அவன் மறுபடியும் திரும்புவதில்லை"—(காலாக்நி - ௨) (௩)

இது இங்கே கருத்து :—

எல்லாம் ஆத்மஸ்வரூபந்தான்.

உ.

உண்மையும் விளக்கமும் நித்யமான ஈச்வரனிடத்தினின்று (இப்பொருள்களிலே அளாவுகின்றன,) இல்பொருளை ஒத்தவையாய்க் கணப்பொழுதுள் அழியுந்தன்மையுடைய ஜடமான பொருள்களிலே சேர்கின்றன.

தோற்றுவனவெல்லாம், கயிற்றிலே பாம்புபோல, பார்க்கும்பொழுதே அழிந்திடும்இயல்பினவாய் ஜடமாயிருத்தலால் பொய்ம்மையாம். வாஸ்தவத்திலே ஆத்மா ஒன்றே இருக்கின்றது. என்றாலும், கயிறு பாம்பாகத் தோற்றுவதுபோல, ஆத்மா பிரபஞ்சமாகத் தோற்றுகின்றது. ஆத்மாவினுடைய உண்மையும் விளக்கமும் பொய்ப்பொருளோடு சேர்ந்து, அப்பொய்ப்பொருளிலே உள்ளவைபோல் அப்பொய்ப்பொருளாகவே தோற்றுகின்றன ; கயிற்றினுடைய உண்மையும் விளக்கமும் பாம்போடு சேர்ந்து, அப்பாம்பிலே உள்ளவைபோல் அப்பாம்பாகவே தோற்றுவனபோல என்க. ஆகவே, ஆத்மாவையல்லது வேறு இல்லையாதலால், ஆத்மாவிற்குப்புறம்பாக ஒன்று மில்லையாதலால், ஆத்மாவும் பிரபஞ்சமும் - முகமும் கண்ணாடியும்போலவாயினும், தீயும் இரும்புக்கட்டியும்போலவாயினும் வேறுவேறாகத் தனித்தனி நின்று சேர்தலில்லை.—மற்றென்னவெனின், — "உண்மையும்

ங.

ஆதுஸலெத்வ ஸலெத்ஷாழ ஹாவாநாம நதெதாऽயிகா ।
தயெவ ஷ்ஸ்வரூபம் வெஷாழ நாதுஷ்ஸ்வரூபதொऽயிகுழ ॥

விளக்கமும் நித்யமான ஈச்வரனிடத்திலின்று ..... பொருள்களில் சேர்கின்றன'' என்றவிடத்து, அவை அப்பொருள்களுள் புகுதல் கருத்தன்று ; அவை அந்தந் தப்பொருள்வடிவமாகத் தோன்றுகின்றன என்பது கருத்தாம். கற்பிக்கப்பட்ட பாம்பிலே கயிற்றினது உண்மையும் விளக்கமும் நுழைதலில்லை ; கற்பிக்கப்பட்ட பாம்பிற்கு – ஆதாரமான கயிற்றிற்குப்புறம்பாக வடிவம், ஸ்வரூபம் இல்லையாத லின் என்க. அதுபோல இங்கும் நோக்கிக்கொள்க. (உ)

ங.

கீழ்க்கூறியதையே தெளிவுபெறக் காட்டுகிறார் :

இப்பொருள்களினது உண்மை ஆத்ம உண்மையேதான் ; அதனி னும் அதிகமாக இல்லை. அப்படியே, இவற்றினது விளக்கமும் ஆத்மவிள க்கத்தினும் அதிகமாக இல்லை.

முகம்பிரதிபிம்பிக்கப்பெறாத கண்ணாடியும் தீயொடு கூடாத குளிர்ந்த இரு ம்புக்கட்டியும் முறையே முகத்தினும் தீயினும்வேறாகத் தனியே விளங்குகின்றன. அதுபோல, ஆகாசம் முதலிய பொருள்கள் ஆத்மாவினும் வேறாகத் தனியே விளங் குகின்றனவில்லை. ஆதலால், அதனது உண்மையும் விளக்கமும் அவற்றுள் பிரதி பிம்பித்தலாயினும், அவற்றொடு கலத்தலாயினும் இல்லை என்பதாம்.

இனி, கண்ணாடிமுதலியன முகம்முதலியவற்றிற்கு வேறாக, புறம்பாகத் தனித்து விளங்குகின்றமையால் முந்தினவற்றினுடைய உண்மையும் விளக்கமும் பிந்தினவற்றினுடைய உண்மைவிளக்கங்களினும் அதிகமாக உள்ளன : அதாவது உண்மைவிளக்கங்கள் முந்தினவற்றிற்குத் தமக்கென்று சொந்தமாக உள்ளன. ஆனால், முகம் கண்ணாடிக்குவேறாக விளங்குவதுபோல், பாம்பு கயிற்றிற்குவேறாக புறம்பாகத் தனித்து விளங்காமையினால், பாம்பினுடைய உண்மையும் விளக்கமும் கயிற்றினுடைய உண்மைவிளக்கங்களினும் அதிகமாக இல்லை : அதாவது,உண்மை விளக்கங்கள் பாம்பிற்குத் தனக்கென்று சொந்தமாக இல்லை. அதுபோல, ஆகா சம் முதலிய இந்த ஜகத்தினது உண்மையும் விளக்கமும் ஆத்மாவினுடைய உண் மைவிளக்கங்களினும் அதிகமாக இல்லை : அதாவது, உண்மையும் விளக்கமும் இந்த ஆகாசம் முதலிய பொருள்கட்குத் தமக்கென்று சொந்தமாக இல்லை.

எனவே, பாம்பு கயிற்றினது உண்மையிலே உள்ளதாகி கயிற்றினது விளக்க த்திலே விளங்குவதுபோல, எல்லாம் - ஆத்மஸ்வரூபமான ப்ரஹ்மத்தினது உண் மையிலே உள்ளனவாகி ப்ரஹ்மத்தினது விளக்கத்திலே விளங்குகின்றன என்ப தாம். (ரு)

௪.

ஜ்ஞாநாநி ஸஹ-ரு-வாணி தேஷாங் விஷயா ஸுவி ।
அஹங்காரேऽந-ஷஜ்ஜ்ஜ்

ஆகாசம் யெதி தத்ஸாக விஸ்ராந்யுஞாதநி ॥

எ.

வடாதிகாநி காயபூணி விஸ்ராந்தி யூஹாதிஷு ।
விஸ்வம் வ்யகாஸாலிநுகுவாக விஸ்ராந்தெ ஸ்வாத்மநெ ॥

என்றே (வெளிப்பட்டு) நிற்கின்றதோ, அது, பின்னர், உள்ளேயுள்ள ஆத்மாவினுள் "என்னால் அறியப்பட்டது" என அமர்ந்து [தங்கி] விடுகின்றது.

"நான் குடத்தை அறிகின்றேன்," "என்னால் குடம் அறியப்பட்டது" என்ற இரண்டிலும் - அறிவின்விஷயமாகிய குடம் குறிக்கப்படுகின்றது என்பது உண்மை. என்றாலும், முந்தினதில், குடத்தை அறிதலாகிய செயல்மாத்திரமே சொல்லுவான் குறிப்பு; பிந்தினதிலோ, அந்த அறிதலாகிய செயல் தன்னோடு [ஆத்மாவொடு] ஒற்றித்துத் தன்னிடத்து [ஆத்மாவினிடத்து] அமர்ந்திட்டது என்பது, சொல்லுவான் குறிப்பு. (சு)

எ.

ஆகாசம்முதலிய இப்பொருள்களெல்லாம் எப்பிரகாசத்தினால் விளங்குகின்றனவோ, அப்பிரகாசமானது ஆத்மப்பிரகாசத்தினும் வேறு இல்லை: அதாவது, அப்பிரகாசம் ஆத்மப்பிரகாசமேதான் என முந்தின சுலோகத்தினால் உணர்த்தினர். இனி, அந்த ஆகாசம்முதலியவற்றினுடைய உண்மையும் [இருப்பும்] ஆத்ம உண்மையினும் வேறு இல்லை: அதாவது, அவற்றினது உண்மை ஆத்மஉண்மையேதான் எனத் திருஷ்டாந்தத்தால் காட்டுகிறார்:

(எப்படிக்) குடம்முதலிய காரியங்கள் மண்முதலியவற்றில் முடிகின்றனவோ, (அப்படிப்) பிரபஞ்சமானது பிரகாசத்தினும் வேறாகாமையினால் பரமேச்வரனிடத்து முடிதல்வேண்டும்.

காரியம் காரணத்திற்குப் புறம்பாக இல்லை. உதாரணமாக, குடமாகிய காரியம் தனது உபாதாநகாரணமாகிய மண்ணிற்குப் புறம்பாக, வேறாக இல்லை; மண்ணோடு ஒன்றாகி மண்ணாகவே உள்ளது. அதுபோல, இந்த ஜகத்தானது தனதுஉபாதாநகாரணமாகிய ஆத்மஸ்வரூபத்திற்குப் புறம்பாக, வேறாக இல்லை; ஆத்மஸ்வரூபத்தோடு ஒன்றாகி ஆத்மஸ்வரூபமாகவே இருக்கின்றது. ஆகவே, வாஸ்தவத்திலே மண் மெய்ம்மையும் குடம் பொய்ம்மையுமாய் இருக்குமாறு போல, ஆத்மப்பொருள் மெய்ம்மையும் பிரபஞ்சம் பொய்ம்மையுமாம் என்க. (எ)

அவித்யை யயக்கத்திற்குக் காரணம்.

இவ்வாறு, உண்மை ஒன்றேயானால், ஏன் எல்லாப்பிராணிகளும் அதனை அறிதலில்லை? எனில்,—அதனது காரணத்தைத் திருஷ்டாந்தத்தோடு கூறுகிறார்:

அ.

வஸ்துதைவைவ காரணீபூதா உபாதுணா மலிநா யதா ।
ஸஜ்ஜாதைநாவ்ருதம் ஜ்ஞாநஸ்ய தேந ஸம்ஹ்ருணோதி ஜந்துவ: ॥

கூ.

வடாகாஶோ மஹாகாஶ: வடோபாயிக்ருதோ யதா ।
தேஹோபாயிக்ருதோ ஜீவ: ஜீவாத்மபரமாத்மநோ: ॥

அ.

தன்மேல்படிந்த கறையினால் எப்படிக் கண்ணாடி மங்கலாகின்றதோ, (அப்படி) அறிவு அறியாமையினால் மூடிண்டுகிடக்கின்றது; அதனால் பிராணிகள் மயங்குகின்றன.

அவித்யை, பிராணிகட்கு ஆத்மஸ்வரூபத்தை மறைத்துப் பொய்யுணர்வைச் செய்கின்றது: உணர்வது உணரப்படுவது, காரணம் காரியம் என்பனமுதலான வேற்றுமைகளை வாஸ்தவவிஷயங்களாகவே கொள்ளும்படி செய்கின்றது என்பது கருத்து. (அ)

உடம்பு, ஜீவனை ஈச்வரனினும் வேறகப் பிரிக்கின்றது.

கூ.

வேற்றுமைவியவகாரங்கட்கெல்லாம் அஜ்ஞானமே அடிக்காரணம் என்றார். இனி, ஜீவன் ஈச்வரன் என்னும் வேற்றுமை தோன்றுதற்கு ஓர் அதிகமான காரணத்தைத் திருஷ்டாந்தத்தோடு காட்டுகிறார்:

எப்படி கடாகாசமும் மஹாகாசமும் கடமாகிய உபாதியினால் ஆவனவோ, (அப்படி) ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமானது உடம்பாகிய உபாதியினால் ஆனதாம்.

வரையறுக்கப்படாது எங்கும் வியாபகமாயுள்ள ஆகாசத்திலே – குடமாகிய உபாதி காரணமாக அக்குடத்தால் தன்னுள் முகக்கப்பட்ட ஆகாசம்மாத்திரம் குடாகாசம் எனவும், அக்குடத்திற்குப்புறம்பாக வெளியிலுள்ள ஆகாசம் மஹாகாசம் எனவும் படுகின்றன. ஒருகட்டையை இரண்டாகத் துணித்துப் பிரித்தல் போல், அவயவமில்லா ஆகாசத்தைப் பகுத்தல் எதனாலும் நிகழாது. அதுபோலவே,—எங்குமுள்ள ப்ரஹ்மமான ஆத்மஸ்வரூபத்திலே-உடம்பாகிய உபாதி காரணமாக அவ்வுடம்பினால் வரையறுக்கப்பெற்ற ஆத்மாமாத்திரம் ஜீவன் எனவும், அவ்வுடம்பிற்குப்புறம்பாக வெளியிலுள்ள ஆத்மா ஈச்வரன் எனவும், அவயவமில்லாத அவ்வாத்மஸ்வரூபத்திலே பாகுபாடென்பது, பிரிவென்பது வாஸ்தவத்தில் ஏலாதெனவும் கூறப்படுகின்றன. "நான் மநுஷ்யன், நான் ஸ்திரீ, நான் புரு

கo.

தத்ஸ்வாஹிவாமெகூஹ் தயொரெகூ வூஹ்யூதெ ।
ஸொऽயம் வாஸுஷ ஹ்ருக்தெ வாஸாநெகொஹி வாயூதெ॥

கக.

யஜ்ஜடாரணம் தத்ஸ் தத்ஹாயுஃ ஸ உச்யதெ ।
ஜெஹாஹிஹிஃ வரிஹிநொ ஜீவஸ்ய கூஹ்ஹாஹியஃ ॥

ஷன்" என இதுபோன்றவாறு உடம்பினால் விசேஷிக்கப்படுகின்ற அந்த அறிவான ஆத்மாவே ஜீவாத்மாவாம்; அதனால் விசேஷிக்கப்படாத அதுவே ஈச்வரனும் என்றபடி.

உடம்புமுதலிய உபாதிகட்கு ஆத்மஸ்வரூபத்தோடு ஒட்டானது – மயக்கமில்லாவழி இல்லையாதலால், ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் வாஸ்தவமான பேதம் நிகழமாட்டாதென்பது உட்கருத்து. (க)

தத்துவமஸி என்னும் சுருதி, ஜீவனும் ஈச்வரனும் ஒரேபொருள் என உபதேசிக்கின்றது.

கo.

ஆகவே,

அவ்விரண்டும் ஒன்று என - தத்துவமஸிமுதலான வாக்கியங்களால் நன்கு உணர்த்தப்படுகின்றது. "அவன் இம்மனிதன்" என்றவிடத்து, ஒரேமனிதனன்றோ உணரப்படுகின்றான் [குறிக்கப்படுகின்றான்].

கக.

தத்துவமஸி என்னும் வாக்கியத்தின் பொருளுணர்ச்சி உண்டாகும் விதத்தை உணர்த்தும்பொருட்டு, முதலில், அவ்வாக்கியத்திலுள்ள 'தத்' 'துவம்' என்னும் சொற்களின் அர்த்தத்தைக் கூறுகிறார்:

பிரபஞ்சத்திற்குக் காரணமான மூலப்பொருள் எதுவோ, அது - தத் என்னும் சொல்லின் அர்த்தமாகக் கூறப்படுகின்றது. உடம்புமுதலியவற்றால் அளவிடப்பெற்ற ஜீவனோ, துவம் என்னும் சொல்லே(த் தனது) பெயராகக் கொண்டவன்.

நாம் வெளியே காண்கின்ற இந்த ஆகாசம் பூமி முதலான உலகங்களைப் படைத்து, அவ்வவற்றைத் தம்தம் இயல்பு பிறழாது தம்தம்வரம்பிலே நிற்கச்செய்கின்றதாய், நமக்குத் தெரியாததாயிருக்கின்ற பொருள் எதுவோ, அப்பொருள் - தத் என்னும் சொல்லின் அர்த்தம். நமது சரீரத்தால் வரைசெய்யப்பெற்றுத் தனக்குத் தானே தெரிகின்றதாய், நாம் உள்ளே காண்கின்ற பொருள் எதுவோ,

௧௨, ௧௩, ௧௪.

தஶ்ஶகாலாவஸ்தாஸு ஸ்வஷ்டாஃ ஸ இதி கத்யதே ।
தமேவ தஶ்ஶகாலாஸு ஸ்வஷ்டாऽயமிதி கீர்த்யதே ॥
ஸர்வம் தஶ்தஶ்மிந்ஸ்வஷ்டரி விஸ்ரஜ்ய வஸுயோஸ்துயோஃ ।
வாசாத்மம் மக்ஷயத்யேகம் யஸ்மாந்நோऽயம் வாசாநுஜஃ ॥
ஸ்ரோத்ரேண வாசாக்ஷுஷா த்ருக்ஷா தத்ரஸீதி வாக் ।
தமேவ மக்ஷயத்யேகம் ஜீவாத்மபரமாத்மநோஃ ॥

௧௩, ௧௩உ.

ஸாமாநாதிகரண்யாத்ஃ ஸம்பந்தஃ வஸுயோரிஹ ।

அப்பொருள் - துவம் என்னும் சொல்லின் அர்த்தம். முந்தினது - ப்ரஹ்மம் எனவும், ஈச்வரன் எனவும் பெயர் பெறும். பிந்தினது - ஆத்மா எனவும், ஜீவன் எனவும் பெயர் பெறும். (௧௧)

௧௨, ௧௩, ௧௪.

இனி, "அவன் இவனாயிருக்கிறான்" என்னும் திருஷ்டாந்தவாக்கியத்தில்,

அந்த இடத்திலே அந்தக்காலத்திலே அந்த நிலைமைமுதலியவற்றிலே காணப்பட்டவன் - "அவன்" என்று சொல்லப்படுகிறான். அவ்வாறே, இந்த இடத்திலே இந்தக்காலம் முதலியவற்றிலே காணப்பட்டவன் - "இவன்" என்று சொல்லப்படுகிறான்.

"அவன் இம்மனிதனாய் [இவனாய்] இருக்கிறான்" என்னும் வாக்கியமானது - (அவன், இவன் என்னும்) இருசொற்களுடைய முக்கிய அர்த்தமான அச்சம்பந்தத்தையும் இச்சம்பந்தத்தையும் விட்டு, ஒரு மனிதனைமாத்திரம் எப்படி உணர்த்துகின்றதோ,

அப்படியே, "நீ அதுவாயிருக்கிறாய்" என்னும் வாக்கியமானது - உள்தன்மையையும் வெளித்தன்மையையும் விட்டு, ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்பதை உணர்த்துகின்றது.

அவ்வாக்கியம், ஒரேபொருளை உணர்த்துவது என்றால் எப்படி? எனின்,— அந்த வகையை விளங்கவைக்கிறார் :

௧௩. ௧௩உ.

இ(வ்வாக்கியத்)திலே (நீ, அது என்னும்) இருசொற்களின் சம்பந்தமானது, ஸாமாநாதிகரண்யம் என்னும் பெயருடைத்து. (அவ்)விரு

விஶேஷணவிஶேஷ்யக்ஷ ஸம்வந்஧: ஸ்யாத்ஸூயுயோ: ॥
ஶக்ஷ்யஶக்ஷணஸம்யோ஗ாசு வாக்யஶெக்யுது வொயயெசு ।

சொற்களுடைய அர்த்தங்களின் சம்பந்தமானது, விசேஷணவிசேஷ்யத் தன்மை யாம்.

வாக்கியமானது உணர்த்தப்படுவதும் உணர்த்துவதுமாகிய சம்பந்தத்தால் (ஜீவப்ரஹ்ம) ஐக்கியத்தை உணர்த்தும்.

"அந்தஇடத்திலே" (ரு - கஉ) என்பது முதலான இச்சுலோகங்களின் பொருள் வருமாறு :—

"அவன் இவனு யிருக்கிருன்" என்பது, திருஷ்டாந்தவாக்கியம். இதனை - மார்க்கழிமாசத்திலே ஸ்ரீரங்கத்தில் சோமத்தன் என்னும் பெயருடையவனைக் கண்ட விசாகதத்தன் என்பவன் மறுபடியும் அவனை மாசிமாசத்தில் மதுரையில் பார்த்தவுடன் சொல்வதாகக் கொள்ளுமிடத்து,—மார்கழிமாசமாகிய இறந்தகாலத்தோடும் ஸ்ரீரங்கமாகிய முந்தின இடத்தோடும் சம்பந்தித்துள்ளமைபற்றி "அவன்" என்னும் சொல் வந்தது ; அவ்வண்ணமே, மாசிமாசமாகிய நிகழ்காலத்தோடும் மதுரையாகிய பிந்தின இடத்தோடும் சம்பந்தித்துள்ளமைபற்றி "இவன்" என்னும் சொல் வந்தது. இவ்வாருக வெவ்வேறு காரணம்பற்றிவந்த அவ்விருசொற்களும், சோமதத்தசரீரபிண்டமாகிய ஒரேபொருளின்மேல் நிற்றல் - ஸாமாநாதிகரண்ய மாம். இதனது லக்ஷணத்தை மேலே (ரு - கஅ, கஅ௮) கூறுவர். இனி, விசேஷணவிசேஷ்யத்தன்மையாவது - விசேஷிப்பதும் விசேஷிக்கப்படுவதுமாகிய தன்மை. விசேஷிப்பது - வேறுபடுத்துவது ; விசேஷிக்கப்படுவது - வேறுபடுத்தப்பெறுவது. "அவன் இவனு யிருக்கிருன்," அல்லது "இவன் அவனு யிருக்கிருன்" என்றவாக்கியத்திலுள்ள "அவன்" என்னும் சொல்லுக்கு - இறந்தகாலம் முதலியவற்ருேடு சம்பந்தித்த சோமதத்தன் என்பது பொருள் ; அப்படியே, "இவன்" என்னும் சொல்லுக்கு - நிகழ்காலம் முதலியவற்ருேடு சம்பந்தித்த சோமதத்தன் என்பது பொருள். எனவே, "அவன்," "இவன்" என்னும் சொற்களுடைய இந்தஅர்த்தங்கள் தம்முள் ஒன்றற்கொன்றுள்ள பேதத்தை வரையறுத்து வேறுபடுத்துகின்றமையால் ஒன்றற்கொன்று விசேஷணமும் விசேஷ்யமும் ஆகின்றன.

வினு :—ஆயின், விரோத முண்டாகின்றது. அவன் அவனுகவே இருத்தலும், இவன் இவனுகவே இருத்தலும் நேராகும் ; இதற்குமாருக, அவன் இவனுகஇருத்தலும் இவன் அவனுகஇருத்தலும் நேராகமாட்டா : அதாவது, இறந்தகாலம் முதலியவற்ருேடு சம்பந்தித்தவன் நிகழ்காலம்முதலியவற்ருேடு சம்பந்தித்தவனுய் இருக்கிருன் என்றலும், நிகழ்காலம்முதலியவற்ருேடு சம்பந்தித்தவன்

கசு, கஎ, கஎஉ.

மஜ்ஜாயாம் வொஷ உதிவஸ ந ஜஹ்ஹ்ருக்ஷணா ஹவெஸ ॥
நாஜஹ்ஹ்ருக்ஷணா >வி ஸ்யாஸ ஷ்வெதொ யாவதிவாகூவஸ ।
தத்ஸ்வ்யாஷிவாகூ்யாநாடி ஹ்ருக்ஷணா ஹாமஹ்ருக்ஷணா ॥

இறந்தகாலம்முதலியவற்றோடு சம்பந்தித்தவனாய் இருக்கிறான் என்றலும் முரணும். ஆகவே, "அவன் இவனாயிருக்கிறான்," அல்லது "இவன் அவனாயிருக்கிறான்" என்றவிடத்து சொல்அர்த்தம் பொருந்தாமையினால், அவ்வாக்கியத்தின் பொருளை உணர்தல் எதனாலாகும்?

விடை:—லக்ஷணையினாலாகும். (இதனை மேலே [௩ - கஎ, கஎஉ] காண்க.) ஆகவே, "அவன்," "இவன்" என்னும் இருசொற்களும் அவற்றினது அர்த்தங்களும் - ஒன்றற்கொன்று முரணான இறந்தகாலம் நிகழ்காலம் முதலிய விரோத பாகத்தை நீக்கி, விரோதமில்லாத சோமதத்தசரீரபிண்டத்தை உணர்த்துகின்றன என்பது.

இதுபோலவே, தத்துவமஸி [நீ அதுவாக இருக்கின்றாய்] என்னும் தார்ஷ்டாந்திகவாக்கியத்தை விரிவாக ஆராய்ந்துகொள்க. ஆயினும், அவ்வாராய்ச்சியின் முடிபு சுருக்கமாய் விளங்குமாறு சிறிது கூறுவோம்: "நீ" என்னும் சொல்லுக்கு - உடம்பினால் வரைசெய்யப்பட்டதாய் உள்ளேயுள்ள அறிவுப்பொருள் என்பது அர்த்தம். "அது" என்னும் சொல்லுக்கு - உலகங்களைப்படைத்தல் முதலியவற்றையுடையதாய் வெளியிலுள்ள அறிவுப்பொருள் என்பது அர்த்தம். மஹாவாக்கியமானது உள்என்பதையும் வெளிஎன்பதையும் பிறவற்றையும் நீக்கி, எங்குமுள்ள கேவல அகண்ட அறிவுப்பொருளைமாத்திரம் லக்ஷணையால் உணர்த்துகின்றது என்பது தேர்ந்த கருத்து.

கசு, கஎ, கஎஉ.

ஆயின், லக்ஷணை யென்பது - விட்டலக்ஷணை விடாதலக்ஷணை விட்டுவிடாத லக்ஷணை என மூவகைத்தாயிருக்க, அவற்றுள் மகாவாக்கியத்திற்குப் பொருந்துவது யாதெனின்,— கூறுகிறார்:

"கங்கையில் இடைச்சேரி" என்பதுபோல, (மகாவாக்கியத்திற்கு) விட்டலக்ஷணை வாராது.

"வெண்மை[வெண்மையான குதிரை] ஓடுகின்றது" என்னும் வாக்கியம்போல, விடாதலக்ஷணையும் வாராது. தத்துவமஸிமுதலான

ஸொऽயம் வாரூஷ ஊத்யாதிவாக்யாநாமிவ கீதிபூதா ।

கஅ, கஅஉ.

ஸிநவ்யுதிநிஷ்தாநாழ் ஶஷ்வாநாஶேகவஸ்தூநி ॥

வ்யவ்யுதிஸ்ஸ ஸமாநாயிகரணகுவிஹொவ்யுதெ ।

வாக்கியங்கட்கு லக்ஷணையானது - "அவன் இம்மனிதன்" என்பது முதலிய வாக்கியங்கட்குப்போல, பாகலக்ஷணையாகக் கூறப்பட்டுளது.

விட்டலக்ஷணையாவது - சொல்லின் அர்த்தம்முழுதையும் விட்டு, அதனோடு சம்பந்தித்துள்ள வேறோர்பொருளை அறிவித்தல். "கங்கையில் இடைச்சேரி" என்றால், "கங்கை" என்னும் பதம் - நீரோட்டமாகிய தன்அர்த்தத்தை முற்றும் விட்டு, அதனோடு சம்பந்தித்துள்ள கங்கையை அறிவித்துநின்றது. விடாதலக்ஷணையாவது - சொல்லின் அர்த்தத்தை விடாது, அதனது சம்பந்தமுடையதை அறிவித்தல். "வெண்மை ஓடுகின்றது" என்றால், "வெண்மை" என்னும் பதம்- வெண்மைநிறமாகிய தன்அர்த்தத்தை விடாது, அதனது சம்பந்தமுடைய குதிரையை உணர்த்திநின்றது. விட்டுவிடாதலக்ஷணையாவது - சொல்லின் அர்த்தத்தினுடைய ஏகதேசத்தை விட்டு, ஏகதேசத்தை அறிவித்தல். இது, பாகலக்ஷணை எனவும் பெயர் பெறும். அது "அவன் இவனாயிருக்கிறான்" என வரும். க0க, க0உ - ஆம்பக்கங்களைப் பார்க்க.

மகாவாக்கியத்திற்கு விட்டலக்ஷணையைக் கொண்டால்,— "நீ," "அது" என்னும் பதங்களின் முக்கியஅர்த்தங்களை முற்றும் விட்டிடுதல் ஏலாது; அறிவாகிய அம்சம் ஒன்றாயிருப்பதிலே விரோதநின்மையின். எனவே, மகாவாக்கியத்திற்கு விட்டலக்ஷணை பொருந்தாதென்க. இனி, விடாதலக்ஷணையைக் கொள்ளுங்கால்,— அவ்விருசொற்களின் முக்கியஅர்த்தங்களை விடாதிருத்தல் ஏலாது; ஒரேபொருளானது - ஆளப்படுகின்ற ஜீவனாகவும், ஆள்கின்ற ஈச்வரனாகவும் உள்ளது என்றல் விரோதப்படுகின்றமையின். எனவே, மகாவாக்கியத்திற்கு விடாதலக்ஷணையும் பொருந்தாதென்க. மற்று, விட்டுவிடாதலக்ஷணையைக் கொள்ளுமிடத்து,— அவ்விருசொற்களின் முக்கியஅர்த்தங்களுடைய ஒருபாகத்தை விட்டு, ஒருபாகத்தைவிடாதுநிற்றல் ஏற்கின்றது. க0க, க0உ - ஆம் பக்கங்களைப் பார்க்க. ஆகவே, விட்டுவிடாதலக்ஷணையே மகாவாக்கியத்திற்குப் பொருந்துவது என்பதாம். (கசு, கஎ, கஎற.)

கஅ, கஅஉ.

நிற்க. கீழே (க - கரு) ஸாமாநாதிகரண்யம் என்று கூறப்பட்டதே; அதனது லக்ஷணம் யாது?

வெவ்வேறு மொழிப்பொருட்காரணமுடைய சொற்கள் ஒரேபொருளின்மேல் செல்லுதல், இங்கே ஸாமாநாதிகரண்யம் எனப்படுகின்றது.

௧௯, ௨௦, ௨௦௨.

வாஸ்யாம்ஶோ விகாரோ வா ஜீவோ வாக்ஶ்ரயோ ஹி ॥
ஜீவாத்மநா வ்ரவிஷ்யாஸ ஸ்வாயாஸ்ரஷ்டுஶ்ச திஷ்ட ।
நிராம்ஶோ நிவிகாரோऽஸௌ ஶ்ருத்யா யுக்த்யா ச ஸித்யதி ॥
வடாகாஶோ விகாரோ வா நாம்ஶோ வா வியதோ யதா ।

மொழிப்பொருட்காரணம் எனினும், பிரவிருத்திநிமித்தம் எனினும் ஒக்கும். பிரவிருத்திநிமித்தமாவது - சொற்கள் பொருள்களை அறிவித்தற்குக் காரணம்.

சுருதி - ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் வாஸ்தவத்திலே எத்தகைய பேதத்தையும் காட்டுவ தில்லை.

௧௯, ௨௦, ௨௦௨.

இனி, "விரல் கையா யிருக்கின்றது," "உவர்மண் நிலமா யிருக்கின்றது," "நெய்தல் கருமையா யிருக்கின்றது" என்பது முதலியவற்றில் முறையே அம் சாம்சித்தன்மையையும் விகாரவிகாரித்தன்மையையும் குணகுணித்தன்மையையும் பிறவற்றையும் கொள்ளுமாறுபோல, "நீ அதுவா யிருக்கிறாய்" என்பதிலே அத் தன்மைகளுள் யாதாயினுமொன்றைக் கொள்ளக்கூடாதோ? எனின்,— கூடாது; ஏனெனில், அவ்வாறு கொள்வதற்கு இடமில்லை.—எப்படி?—கூறுவோம்:

வாக்கியமானது - ஜீவன் பரம்பொருளினுடைய அம்சமாகவாயி னும், விகாரமாகவாயினும் இருக்கிறான் என்று அர்த்தம்கொள்ளாது; (அப்பொருள்) தன்மாயையினால் படைக்கப்பட்ட உருவங்களுள் ஜீவ வடிவாகப் புகுந்துள்ளமையின். அது அவயவமில்லதாக விகாரமில்ல தாகச் சுருதியினாலும் யுக்தியினாலும் அறியப்படுகின்றது. எப்படிக் கடாகாசமானது மகாகாசத்தினுடைய விகாரமாகவாயினும் அம்சமாக வாயினும் ஆகமாட்டாதோ, (அப்படிப்போல என்க).

ப்ரஹ்மம் தான்படைத்த பொருள்களுள் தானே ஜீவாத்மாவாகப் புகுந் திருப்பதற்குச் சுருதிகள் பல உள்ளன; அவற்றுள், சில வருமாறு:

"தத்ஸ்ரஷ்ட்வா । தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்"

"அதனைப் படைத்து, அதனுள்ளேயே புகுந்தது"—(தை - உப - உ - சு)

"ஸைஷா ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய"

"இந்த ஜீவாத்மாவாகப் புகுந்து"—(சா - சு - ௩ - உ)

உக.

கூசிம்ஹ்ரூாऽஸீதிவஆகயுழ நவமுஷுதிதுரூழ ॥

ப்ரஹ்மம் அம்சமில்லாததாய் விகாரமில்லதா யிருப்பதற்குச் சுருதிஸ்மிருதிகள் வருமாறு:

"நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம்"

"அவயவமில்லாதது, கிரியையில்லாதது, சாந்தமானது"—(ச்வே - ௬ - கக)

"கூரஷுவஷவுயழ"

"உருவமில்லாதது, தேய்தலில்லாதது"—(கட - ௩ - கரு)

"நிதுழ.....தஷவுயழ"

"அது நித்யமானது, குறைதலில்லாதது"—(மு - ௪ - ௬)

"கூவிகாயெழாऽயழ"

"இது விகாரப்படாதது"—(வே - கீ - உ - உரு)

இதற்கு யுக்தியும் வருமாறு:—ஜகத்திற்குக் கர்த்தாவான முதற்பொருளாகிய ப்ரஹ்மம் என்னும் ஈச்வரன் அம்சங்களை யுடையவனாயின், அவயவங்களா லாகியவனாயின்,—அவை அவச்யம் அவனுக்குமுந்தி இருத்தல்வேண்டும்; அவை தம்மாலாகிய அவ்வீச்வரனுக்குமுன்னமே இருத்தல் இன்றியமையாததாம். ஆகவே, அங்ஙன மவன், படைக்கப்பட்ட பொருள்களுள் தானும் ஒரு படைக்கப்பட்ட பொருளாகின்றமையால், முற்றுமுணர்ந்தவனாய் எல்லாம்வல்ல ஜகத்கர்த்தாவான ஈச்வர னாகமாட்டான். அன்றியும், அந்த அவயவங்களைக் கார்யப்படுத்தி அவனைப் படைத்தற்கு ஒருகர்த்தா வேண்டும் என இது இவ்வாறு வரம்பின்றி ஓடும். ஆகவே, ப்ரஹ்மத்தினிடத்து அம்சமென்பது பொருந்தாது. அவ்வாறே, அதனிடத்து விகாரமும் பொருந்தாது; உருவமும் அவயவமுமில்லாத உண்மைமாத்திரமா யிருத்தலின் என்க.

எனவே, தத்துவமஸிவாக்கியமானது அம்சாம்சித்தன்மையையும், விகாரவிகாரித்தன்மையையும் குறிக்கமாட்டா தென்பதாம். (கக, உ0, உ0ற.)

உக.

மேலும், அது புகழ்ச்சியையும் குறிக்கமாட்டாது:

வாக்கியமானது - "நீ இந்திரனா யிருக்கிறாய்" என்பதுபோல, புகழ்ச்சியின்மேல் நிற்பதாகவே மாட்டாது.

இந்திரனல்லாதவனை "நீ இந்திரனா யிருக்கிறாய்" என்றால், அது வெறும் புகழ்ச்சியேயன்றிப் பிறிதில்லை. அதுபோல, "நீ அதுவா யிருக்கிறாய்" என்ப

உகற.

ந ஸாஹ்ரஸ்ரவரம் வாக்ய கூறிஹ்ரணவகாரிவக ॥

உஉ.

ந காயகாரணக்வஸ்ய ஸாயநம் ஹ்ரஉபாரிவக ॥

திலே ஜீவனை ஈச்வரனாகப் புகழ்தல் ஒவ்வாது; எங்ஙனமெனில்,—பேதமுள்ள வழியன்றோ புகழ்ச்சி கூடும். மற்றுச், சுருதிகளெல்லாம் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் அபேதத்தை முழக்குகின்றன. ஆகவே, பேதமில்லாவழி, புகழ்ச்சிக்கற்பனைக்கு இடமில்லை என்பதாம். (உக)

உகற.

அன்றியும், அது ஒப்புமையையும் குறிக்கமாட்டாது:

வாக்கியமானது - "மாணுக்கன் நெருப்பா யிருக்கிறான்" என்பது முதலியனபோல், ஒப்புமையின்மேல் நிற்பதாகாது.

ஒப்புமையாவது - ஒன்றனுடைய குணமாயினும் செய்கையாயினும் உறுப்பாயினும் மற்றொன்றனுடைய குணத்தோடு செய்கையோடு உறுப்போடு சமானமாயிருத்தல். "மாணுக்கன் நெருப்பா யிருக்கிறான்" என்றால், "மாணுக்கன் நெருப்புப்போல பொன்மைநிறமுடையவனு யிருக்கிறான்" எனப் பொன்மைநிறமாகிய குணம் ஒப்புமையாம். ஆனால், "நீ அதுவா யிருக்கிறாய்" என்பதற்கு - ஜீவன் ஈச்வரன்போ லிருக்கிறான் என்ற பொருள்கொள்ளுதல் பொருந்தாது; ஏனெனில், ஈச்வரன் - நிர்க்குணன், குணமில்லாதவன்; நிரவயவன், உறுப்பில்லாதவன்; நிஷ்க்கிரியன், செய்கையில்லாதவன் என்பது. ஆகவே, "மாணுக்கன் நெருப்பா யிருக்கிறான்" என்னும் வாக்கியம் ஒப்புமையைக் குறியாதென்க. (உகற)

உஉ.

மற்றும், அது காரியகாரணத்தன்மையையும் கூறாது:

(வாக்கியமானது) - "குடம் மண்ணு யிருக்கின்றது" என்பதுமுதலியனபோல், காரியகாரணத்தன்மையைக் குறிப்பதன்று.

"குடம் மண்ணு யிருக்கின்றது" என்றால், மண் குடமாகக் காரியப்பட்டிருக்கின்றது என்பது. ஆனால், "நீ அதுவா யிருக்கிறாய்" என்பதற்கு - ஈச்வரன் ஜீவனுகக் காரியப்பட்டிருக்கிறான் என்ற பொருள் கொள்ளுதல் பொருந்தாது; ஈச்வரன் நித்தியமான நிரவயவப்பொருளாதலின் என்க. (உஉ)

இன்னும், அது ஜாதிவ்யக்தித்தன்மையையும் உணர்த்தாது:

உஉ.

ந ஜாதிவ்யக்திமகேடி ஸ்ளஃ வ்ஸ்ண இதிவசவஃ |

உங.

ஸ்ணஸ்ணாதிகம் வாக்யம் நெத நீயொத ஆதிவசு ||

உஙஉ.

நொவாஸநாவாரம் வாக்யம் வ்ரதிரோஷீஸவ ஜீவசு |

உஉ.

வாக்கியமானது - "துண்டம் ஆவா யிருக்கின்றது" என்பது போல் ஜாதிவ்யக்திகளைக் குறிப்பதன்று.

"துண்டம் ஆவா யிருக்கின்றது" என்றால், அதள் முதலியவற்றையுடைய சரீரபிண்டமாகிய வ்யக்தியிலே ஆத்தன்மையாகிய ஜாதி இருக்கின்றது என்பது. (அதள் - ஆவின் கழுத்தில் தொங்கும் சதை.) ஆனால், "நீ அதுவா யிருக்கிறாய்" என்பதற்கு - ஜீவவடிவான வ்யக்திகளிலே ஈச்வரனாகிய ஜாதி உள்ளது என்று பொருள்கொள்ளுதல் கூடாது; ஏனெனில், ஜாதியென்பது அசேதநமாதலால், சேதநப்பொருளாகிய ஈச்வரன் ஆத்தன்மைபோல ஜாதி யாகமாட்டான் என்க. (உஉ)

உங.

மேலும், அது குணகுணித்தன்மையையும் காட்டாது:

இந்த வாக்கியமானது - "நெய்தல் கருமையா யிருக்கின்றது" என்பதுமுதலியன்போல், குணகுணித்தன்மையை யுடைய தன்று.

ஜீவனை ஈச்வரனுடைய குணமாகக் கொண்டால், அங்ஙனம் ஈச்வரன் ஜீவனைப்போல் பிறந்து இறந்து உழலும் சம்சாரியாதல் வேண்டும். ஆகவே, அது - ஈச்வரனை, இயல்பாகவே நித்யனாக சுத்தனாக முக்தனாக முற்றுமுணர்ந்தவனாக எல்லாம் வல்லவனாகக் கூறுகின்ற சுருதிகட்கு முரணும். அல்லது, ஈச்வரனை ஜீவனுடைய குணமாகக் கொண்டால், ஜீவன் சம்சாரியாகாது நித்ய முக்தனா யிருத்தல் வேண்டும்; வேண்டவே, அங்ஙனம் பந்தமோக்ஷத்தைப் பற்றிய சாஸ்திரம் வீணும். (உங)

உஙஉ.

மற்றும், அது உபாஸனையையும் குறிப்பதாகாது:

வாக்கியமானது - விக்கிரகங்களிலே ஈச்வரபுத்திபோல, உபாஸனையின்மேல் நிற்பதன்று.

"நீ அதுவா யிருக்கிறாய்" என்னும் வாக்கியமானது - ஜீவனை ஈச்வரனாக

உச.

ந வளவவாரிகம் வாக்ய ராஜவஜாஜவ ஞாஷெ ॥

உசஉ.

ஜீவாத்மா வ்ரவிஷ்டோ ஸௌ ஈஶ்வரஃ ஸ்ரு ஞயதெ யதஃ ।

வாயினும், ஈச்வரனை ஜீவனாகவாயினும் தொழுதல் வேண்டும் என விதிக்கின்றது என்று பொருள் கொள்ளாது. ஏனெனில், அவ்வாறு அர்த்தம்கொடுக்கக்கூடிய யாதொரு பதமும் அவ்வாக்கியத்தில் இல்லை; அன்றியும், அவ்வாக்கியமானது உபாஸனையைக் கூறுகின்ற பிரகரணத்தினுள்ளும் வரவில்லை. மற்று, "இருக்கிறாய்" என்னும் பதம் அடுத்துநிற்றலால் அவ்வாக்கியம் ஸ்வரூபமாத்திரத்தில் தீர்கின்றது என்பது நிச்சயமாம். (உ௩௮)

உச.

அன்றியும், அது உபசாரவழக்கைக் குறிக்கமாட்டாது:

இன்னும், வாக்கியமானது - அரசனது வேலைக்காரனிடத்து அரசனைப்போல, உபசாரவழக்கினால் வந்த தன்று.

அரசனுடைய வேலைக்காரனை அரசனென்றல் போல, ஜீவனை ஈச்வரனென்றல் உபசாரவழக்காம் எனின், — அது அமையாது; சாந்தோக்யஉபநிஷத்தில் ஆறும் அத்தியாயத்துள் "தத்துவமஸி" என்ற அதே வாக்கியத்தை ஒன்பதுமுறை திரும்பத்திரும்பச் சொல்லித் தேற்றமாக உறுதிபடுத்தியிருத்தற்கு இவ்வுபசார வழக்கு விரோதப்படுமாதலின். உபசாரத்தால் கூறிய வார்த்தையைத் திரும்பத் திரும்பச்சொல்லித் தேற்றமாக உறுதிப்படுத்துதற்கு இட மேது?—இல்லை.— ஆகவே, வாக்கியமானது உபசாரத்தைக் குறித்துநிற்ப தன்றென்க. (உச)

உசஉ.

வாக்கியத்திலே இந்தப் புதழ்ச்சி (௩ - உக) முதலான பேதகற்பனைகட்கு இட மில்லை:

ஏனெனில், அந்த ஈச்வரன் ஜீவாத்மாவாகப் புகுந்திருக்கிறான் எனச் சுருதி கூறுகின்றது.

எனவே, உடம்புமுதலியவற்றினுடைய சேர்க்கையுள் புகுந்துள்ள ஈச்வரனே ஜீவன் என்னும் பெயரைப் பெறுகிறான் என அமைந்தது. ஆகவே, அந்த உடம்பு முதலியஉபாதிகளை நீக்கியவழி, ஜீவன் என்று ஒருவேறுபொருள் இல்லாமல் எல்லாம் ப்ரஹ்மமாகவே இருத்தலால், தத்துவமஸி என்னும் வாக்கியமானது உண்மைப்பொருளான ஆத்மாவாகிய ப்ரஹ்மஸ்வரூபத்தையே உள்ளபடி உணர்த்துகின்றது என்பது தேர்ந்த கருத்து. (உசற)

உ௫, உ௬.

தெஹெந்ரியஃபொவை-ஜீவ்ராணாஹம்காரஸம்ஹதள ।
சூதஸம்கஶநாஉஜ்ஜெஃ சூதக்வம் வ்ரதிவாஹ்யதெ ।
வஹ்னியீஃ காஷ்டயொஹாஉள வஹ்னிஸம்கஶநாதிவ ॥

உ௭, உ௮, உ௯, ௩௦, ௩௦௨.

தெஹஃநுயம் கொஶ்ச சுவிஶ்யாதா வ்ரகாஶதெ ।
ஸ-ஏயொ வாயஃ கூஶஃ கூஷஃ வணபூஶ்ரஃவிகஶ்வாஸ ॥
வ்ராணகொஶெऽவி ஜீவாதி க்ஷ-யிதொऽஸ்ரி விவாஸிதஃ ।

அஜ்ஞானிகள் உடம்புமுதலியவற்றையே ஆத்மாவாக மயங்குதல்.

உ௫, உ௬.

இனி, எல்லாவற்றினுடைய ஆத்மாவும் ப்ரஹ்மமான ஈச்வரனுல்,—"நான் ப்ரஹ்மமாயிருக்கிறேன்" என்று ஏன் ஆத்மா ஈச்வரனுகத் தோன்றவில்லை? "நான் மநுஷ்யனு யிருக்கிறேன்" என்பதுமுதலாக ஈச்வரனினும் வேருகவே யன்ரே ஆத்மா தோன்றுகின்றது எனில்,— கூறுவோம், கேட்பாயாக:

உடம்பு, இந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன், அகங்காரம் என்றிவற்றினது சேர்க்கையிலே ஆத்மக்கலப்பினுல் அஜ்ஞானிகள் (அச்சேர்க்கையையே) ஆத்மாவாகக் கொள்கிருர்கள்; விறகு உலோகம் முதலியவற்றிலே நெருப்புக்கலப்பினுல் நெருப்பென்னும்புத்திபோல.

விறகிலே நெருப்பின் கலப்பினுல் அவ்விறகையே நெருப்பாகக் கொள்வது போல, உடம்புமுதலியவற்றிலே ஆத்மாவின் கலப்பினுல் அவ்வுடம்புமுதலியவற்றையே ஆத்மாவாக அஜ்ஞானிகள் அறிகிருர்கள். (உ௫, உ௬)

ஐந்து கோசங்களுள்ளும் ஆத்மா விளங்குதல்.

உ௭, உ௮, உ௯, ௩௦, ௩௦௨.

ஆத்மா இவ்வாறு உடம்புமுதலிய உபாதிகளால் ஈச்வரனினும் வேருகத் தோன்றுதலைக் கூறி, அவ்வாத்மா அளவுபட்டவன்போல் தோற்றுதலையும் எடுத்துச் சொல்கிருர்:

ஆத்மா அன்னமயமாகிய சரீரத்தைப் புகுந்து பருத்தவனுக, சிறியவனுக, மெலிந்தவனுக, கறுத்தவனுக, ஜாதிவித்தியாசமும் ஆச்ரமவித்தியாசமும் உடையவனுகப் புலப்படுகிருன்.

ஸம்ஸிதொ நிஶ்சிதொ உநெ ஊதி கொஶெ உநொஉயெ ॥
விஜ்ஞாநமயகொஶஸ்ஸ விஜாநாதீதி திஷ்டதி ।
ஆநந்தமயகொஶாவெ ஆஹங்காரெ வ்யவஸ்தித:
வ்யெணெ ஸுகாவாஸநாஶ்ச ஸுவிதொ ஸீதி தொஉதெ ।
வநவம் கஞ்சுகிதம் கொஶெஶு கஞ்சுகெரிவ வஞ்சிதம் ॥
வஸிஷ்ஹ உவாஹாதி வ்யாவெஶாऽவி வாரிஶ்வரம் ।

௩௧, ௩௨.

யதா ஸுஷிஶாவிஶ்ய ஸுஹ்ரயா ஹாதி ஹாஸ்வரம் ॥
ததா ஶரீராணாவிஶ்ய ஸுஹ்ரயா ஸ்வரதீஶ்வரம் ।

(அவன்) பிராணகோசத்திலும் "வாழ்கிறேன்," "பசியுள்ளவனாயிருக்கிறேன்," "தாகமுடையவனாயிருக்கிறேன்" (எனக் கருதுகின்றான்). மனோமயகோசத்திலே "ஸந்தேகமுடையவனாயிருக்கிறேன்," "நிச்சயமுடையவனாயிருக்கிறேன்," "நினைக்கிறேன்" என(க் கொள்கிறான்).

(அவன்) விஜ்ஞானமயகோசத்தி லிருக்கும்பொழுது "உணர்கிறேன்" என்று நிற்கிறான். மற்றும், ஆநந்தமயகோசம் என்னும் பெயருடைய அஹங்காரத்திலே, முன்செய்த நல்வினைகளாலும் உபாஸனைகளாலும் "இன்புற்றவனாயிருக்கிறேன்" என மகிழ்கின்றான்.

பரமேச்வரன் எங்கும் நிறைந்தவனானாலும், ஐந்து போர்வைகள் போன்ற ஐந்து கோசங்களினாலும் போர்த்துமூடப்பெற்றவனாய் (அவற்றால்) அளவுபட்டவன்போல் தோன்றுகிறான்.

ஆத்மா சரீரந்தோறும் விளங்குதல்.

௩௧, ௩௨.

பரிபூர்ணனான பரமேச்வரன் இவ்வாறு உடம்புமுதலிய உபாதிகளால் அளவுபட்டவன்போல் தோற்றுதலை எடுத்துக்கூறி, அவன் சரீரந்தோறும் பேதமாய் அனேகமாய்த் தோன்றுதலைத் திருஷ்டாந்தத்தால் எடுத்துக்காட்டுகிறார் :

எப்படி சூரியன் நீரினுள் புகுந்து பலபடியாகத் தோற்றுகின்றானோ, அப்படி ஈச்வரன் உடம்புகளுள் புகுந்து பலபடியாகத் தோற்றுகின்றான்.

எனவே, அனேக ஜலபாத்திரங்களுள் தோன்றுகின்ற சூரியபிம்பத்திற்கு ஜலமாகிய உபாதியை நோக்காவிடத்து, அதனது [சூரியபிம்பத்தினது] இயல்பிலே பேதத்தை நிரூபித்தல் இயலாதவாறுபோல,— அனேக சரீரங்களுள் விளங

நஉ, நங, நச, நசஉ.

காரணக்வம் ச காரயக்வே தடஸ்தம் லக்ஷணம் தயோः ।
ஸாவாயாம் சம்ஹ ஏதிவஸ மெநவ ஏவ்வுவிஹம் ஏதே ।
ஏஹாவுகாஸமிதுகே ஸாரஏவம் சம்ஹலக்ஷணே ।
ஸஹிதாநந்தரூபவக்வே ஸாரஏவம் லக்ஷணம் தயோः ।
வாகலக்ஷணயொரேகுவே வாமேகுந வுதிவாஹுமெத ॥
தஸாஏகவுகாஸகவே ஸவுதாதுவுதி ஸ்ரிதே ।

குகின்ற ஆத்மபிம்பத்திற்கும் சரீரமாகிய உபாதியை நோக்காவிடத்து, அதனது [ஆத்மபிம்பத்தினது] இயல்பிலே பேதத்தை நிரூபித்தல் இயலாது. ஆகவே, எல்லாத் தேகங்களுள்ளும் இருக்கின்ற ஆத்மா - உண்மையிலே ஒருபடித்தாய் எங்கும் நிறைந்த ஒரேபொருள்தான்; பலபடித்தவான பல ஆத்மப்பொருள்கள் இல்லை என்றபடி. (நக, நகஉ.)

ஜீவனும் ஈச்வரனும் உண்மையிலே ஒரேபொருள.

நஉ, நங, நச, நசஉ.

இனி, ஜீவச்வரர்களுடைய பொதுவியல்பையும் சிறப்பியல்பையும் நோக்குடத்தும், மகாவாக்கியமானது ஒரேபொருளை உணர்த்துகின்றது எனக் காட்டுகிறார்:

காரணத்தன்மையும், காரியத்தன்மையும் அவ்விருவருடைய தடஸ்த லக்ஷணமாம். இது - "மரக்கொப்பிலே சந்திரன்" என்பதுபோல, முதன்மையேயான கொள்கையன்று.

மகாப்பிரகாசமாயிருப்பது எதுவோ, அது) சந்திரனுடைய ஸ்வரூப லக்ஷணமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஸச்சிதாநந்தவடிவமாயிருத்தல் அவ்விருவருடைய ஸ்வரூபலக்ஷணமாம்.

ஓரலக்ஷணங்களுடைய (அவ்விருவர்க்கும்) வாக்கியத்தால் ஐக்கியம் உணர்த்தப்படுகின்றது.

ஆதலால், ஒரேபிரகாசமாயிருப்பது (எதுவோ, அதுவே) எல்லாவற்றிலுமுள்ள ஆத்மஸ்வரூபமாம் என நின்றது [நிச்சயிக்கப்பட்டது].

சூரியன் கடலினுள் வீழ்வதுபோலவும், சந்திரன் மரக்கொப்பிலே இருப்பது போலவும் தோற்றுகின்றமையால், தோற்றமாத்திரத்தைக்கொண்டு, "சூரியன் கடலினுள் வீழ்கின்றது," "சந்திரன் மரக்கொப்பிலே இருக்கின்றது" என்பது. ஆனால், "எது மரக்கொப்பிலே இருக்கின்றதோ, அது சந்திரன்" என்பது - எப்

௩௫, ௩௬௨.

தேவதியபுருஷாணாதி வ்யகாரணாந்து வ்யவஸ்தித: ॥
ஜீவவ்யகாரணாதிந்நவாச ஸவபூதேத்ருஸ்தியேதி ।

௩௬, ௩௬௨.

வஸவம் வ்யகாரணாதுவக்வவாரிஜ்ஞாநே ஹ்யபீக்ஷ்யதே ॥
வ்யாவ்ருத்திரஹிதம் கைவல்யம் வஹிஷ்ஸ்யதே ।

௩௭, ௩௭௨.

ஸகுத்ர ஸகுதோதோ>வி ஸவபூதிகே யஹ்யுபயா ॥

படி சந்திரனுடைய ஸ்வரூபலக்ஷணமாகாதோ, அப்படி,— காரணத்தை [மாயையை] உபாதியாகக்கொண்டவன் ஈச்வரன் என்பதும், காரியத்தை [அகக்கரணத்தை] உபாதியாகக்கொண்டவன் ஜீவன் என்பதும் அவருடைய தடஸ்தலக்ஷணமாகுமேயன்றி ஸ்வரூபலக்ஷண மாகா.—மற்றென்னவெனின்,—"மகாப்பிரகாசமா யிருப்பது எதுவோ, அது சந்திரன்" என்பது - சந்திரனது ஸ்வரூபலக்ஷணமாமாறுபோல,—ஸச்சிதாநந்தவடிவமே அவ்விருவரது ஸ்வரூபலக்ஷணமாம் என்க. தடஸ்தலக்ஷணம் எனினும், பொதுவியல்பு எனினும் ஒக்கும். ஸ்வரூபலக்ஷணம் எனினும், சிறப்பியல்பு எனினும் ஒக்கும். (௩௨ . . . . . ௩௪௨.)

௩௫, ௩௬௨..

தேவர் மநுஷ்யர் முதலிய பேத முள்ளமையால், இவ்வாறு எல்லாம் ஆத்மஸ்வரூபமேதான் என்று எப்படி நிச்சயித்த லாகும்? எனின்,—அருளிச்செய்கிறார்:

தேவர் விலங்கு மநுஷ்யர்கட்குப் பிரகாசத்தினும் வேறாக நிலை இல்லை. ஜீவனும் பிரகாசமும் ஒன்றாயிருத்தலால் (ஜீவன்) எல்லாவற்றிலுமுள்ள ஆத்மா எனப்படுகிறான். (௩ - ௫ ஐப் பார்க்க.)

ஆத்மஅறிவு முக்தியைத் தரும்.

௩௬, ௩௬௨.

இனி, வாக்கியப்பொருளினுடைய அநுபவத்தின் பயனை அருளிச்செய்கிறார்:

இவ்வாறாக, (எல்லாம் ஆத்மஸ்வரூபமான) பிரகாசவடிவமாம் என்னும் அநுபவஅறிவைத் திடப்படுத்திக்கொண்டவளவிலே, (ஒருவன்), மீண்டும் திரும்பிவருதலில்லாத கைவல்யநிலையை யடைகிறான்.

௩௭, ௩௭௨.

ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்றறியும் ஞானத்தின் மாட்சிமையைக் கை முதிகநியாயத்தால் கூறுகிறார்:

(ஒருவன்) ஸர்வாத்மஸ்வரூபத்திலே தற்செயலாய் ஒருகால் சென்

ஸவபுவாவவிநிஶுத்தஃ ஶிவலொகெ ஶஹீயதெ ।

௩௮, ௩௮௨.

ஸவபூதஹாவநா யஸ்ய வாரிவக்ஷா ஶஹாதநஃ ॥
ஸம்ஸாரதாரகஃ ஸாக்ஷாக் ஸ வனவ வாரஶெஶ்வரஃ ।

௩௬, ௩௬௨.

இதி ஸ்ரீதக்ஷிணாமூர்திஸ்தொத்ரவ்யாகிவாஹகெ ॥
வ்ரவிரெ ஶாநஸொல்லாஸெ தரதீயொல்லாஸஸம்ஜ்ரஹஃ ॥

றவனேயானாலுங்கூட, எல்லாப்பாவங்களினின்றும் நீங்கியவனாய் சிவனாகிய லோகத்திலே நன்குமதிக்கப்படுகிறான்.

(கைமுதிக நியாயமாவது - "பூனைக்கு இவ்வளவு அஞ்சினால், புலிக்கு அஞ்சுதல் எவ்வளவு என்பது சொல்லவேண்டியதில்லை" என்பதுபோன்ற ஒரு நியாயம். கிமுத - எவ்வளவு; இதனது தத்திதரூபம் - கைமுதிகம் என்பது.) தற்செயலாய் - முன் செய்த புண்ணியத்தின் ஒட்டினால். சிவனாகிய லோகத்திலே நன்குமதிக்கப்படுகிறான் - சிவபெருமான்போல் பூஜிக்கத்தக்கோனாகிறான் என்பது பொருள். (௩௭, ௩௭௮)

௩௮, ௩௮௨.

ஈச்வரனை ஸர்வாத்மஸ்வரூபமாக ஒருதரம் அறிவதற்கே இத்தகைய பயனாயின், — அந்த ஞானம் பயிற்சிவசத்தால் அசையாது திடப்பட்டு உறுதியாக நிலைத்திட்டவளவிலே, ஸம்ஸாரமும் அதனது காரணமும் அறத் தொலைந்திடுகின்றன என்று கூறவும் வேண்டுமோ:

எந்த மஹாத்மாவினுடைய ஸர்வாத்மபாவனையானது முற்றும் பழுத்துளதோ, அவனேதான் ஸம்ஸாரத்தினின்று (ஸகலரையும்) நேரே மீட்டுகின்ற ஸாக்ஷாத் பரமேச்வரன்.

௩௬, ௩௬௨.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் மூன்றும் உல்லாஸப்பொழிப்புரை முற்றும்.

மூன்றாம உல்லாஸம்.

பதவுரை.

க.

ஸத்தாஷ்ரேதி	உண்மையும், விளக்கமும்
ஹாவேஷு	பொருள்களில்
கு தஃ	எங்கிருந்து
ஆகத	வந்து
ஸஜ்ஜதெ	சேர்ந்தன ?
இகம்	இவ்வாறு
ஸிம்வாதிஉவபுணத்யாயாத்	பிம்பாதிதர்ப்பணநியாயத்தால்
வ்யுஹ்ய	வினவுகின்ற
(ஶிஷ்யஃ)	(மாணுக்கன்)
ஆவொயதெ	அறிவுறுத்தப்படுகிறான்.

ங.

யஸ்ய ஸவ	எவனுடையதேயான
ஷ்ரேணம்	விளக்கமானது
ஸுஸத்யாயமம்	இல்லதுபோன்ற பொருள்களை யடைந்ததாய்
ஸத்தாத்மகம்	உண்மைவடிவாய்
ஹாஸதெ	விளங்குகின்றதோ,
யஃ	எது
ஆஶ்ரிதாநு	(தன்னை) யடைந்தவர்களை
கூடி	"நீ
தஸ	அதுவாக

கஸி	இருக்கிறாய்''
இதி	என்னும்
வெதவசஸா	வேதவாக்கினால்
ஸாக்ஷாத்	நேரே
வொயயதி	அறிவுறுத்துகின்றதோ,
ஸவாம்ஹொநியளா	சம்சாரக்கடலினுள்
வ ந்நாவ்ருத்திம்	மீண்டும் திரும்புதல்
யத்ஸாக்ஷாத்க்ரணாத்	எதனை நேரே காண்பதனால்
ந ஸவெத்	நிகழமாட்டாதோ,
தஸ்மை	அந்த
ஸ்ரீ ம ஹ ஆசார்யாய	ஸ்ரீமதாசார்ய ஸ்வரூபமான
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
இதி	இந்த
நம:	நமஸ்காரம்.

இதி	இது
இத	இங்கே
ஸங்க்ரஹ:	கருத்து :—

உ.

கஹ்ஹிக்வம்	உண்மையும்
வ்யாகாஸக்வம் ச	விளக்கமும்,—
கஸ்தத்வேஷு	இல்பொருளை நிகர்த்தவையாய்
க்ஷணநாஸிஷு	கணப்பொழுதுள் அழியும் இயல்பினவாய்
ஜடேஷு	ஜடமான
பாவேஷு	பொருள்களில்
நித்யாத்	நித்யமான

ஈஶ்வராத்	ஈச்வரனிடத்தினின்று
ஸம்ஸாரிதி	வந்து கலக்கின்றது.

௩.

ஏஷாம்	இந்த
ஹ்ருதாநாம்	பொருள்களுடைய
ஸத்தா	உண்மையானது
ஆத்மஸத்தா ஏவ	ஆத்ம உண்மையேதான் ;
தத:	அதனினும்
அயிகா	அதிகமாக
ந (ஹவதி)	இல்லை.
தயா ஏவ	அப்படியே
ஏஷாம்	இவற்றினுடைய
ப்ரகாசம் ச	விளக்கமும்
ஆத்மப்ரகாசத:	ஆத்மவிளக்கத்தினும்
அயிகம்	அதிகமாக
ந (ஹவதி)	இல்லை.

௪.

ஸஹ்ரஶோ வாணி	பலவகையான
ஜ்ஞாநாநி	அறிவுகளும்
தேஷாம்	அவற்றினுடைய
விஷயாஶ் ச ஸர்வே	விஷயங்களும்,—
ஸூத்ரே	நூலிலே
மணிகணா: இவ	ரத்நவரிசைபோல
அஹங்காரே	அகங்காரத்திலே
அநுஷஜ்யந்தே	ஒட்டிச் சேர்ந்துகொள்கின்றன.

ரு.

வத ஸு	இந்த
விஶ்வம்	பிரபஞ்சம்
வ்ரகாஶாஹிநீ வவ	விளக்கத்திலும் வேறாகாத தாகவே
ஸவபுஷ	யாவர்க்கும்
ஹாஸதெ	விளங்குகின்றது.
ஶஹரீவொஊஊாதீநாம்	அலை, குமிழி முதலியவற்றின்
ஸ்ரிதிஃ	நிலையானது
ஸலியாஸு	ஜலத்திலும்
வ்ரயக்	வேறாக
ந (சுஷ்தி)	இல்லை.

சு.

யஸு	எந்த
ஜ்ஞாநம்	அறிவானது
ஹாவாநு	பொருள்களை
சுவிஶ	புகுந்து
ஜாநாமி	"அறிகிறேன்"
இதி வவ	என்றே
வதபுதெ	இருக்கின்றதோ,
தஸு	அது
வஶாஸு	பின்பு
ஶயா	"என்னால்
ஜ்ஞாதம்	அறியப்பட்டது"
இதி	என்று
சுகுஹாதநி	உள்ளேயுள்ள ஆத்மாவினுள்
விஶ்ராஶ்ரதி	அமர்ந்திடுகின்றது.

எ.

வடாதிகாநி	குடம் முதலிய
காயபூணி	காரியங்கள்
ஃபூமிஷு	மண் முதலியவற்றில்
விஶ்ராஃபுஞ்ஜி	(எப்படி) அமர்கின்றனவோ,
விஶ்வ	(அப்படி) ஜகத்தானது
வ்ரகாஶாவிநாகாஸ	பிரகாசத்தினும் வேறாகாமையினால்
பரமேஶ்வரே	பரமேச்வரனிடத்து
விஶ்ராஃபுஞ்ஜ	அமர்த லாகும்.

அ.

யதா	எப்படி
உபபுணம்	கண்ணாடி
ஸமதெந வாவ	தன்மேலேயுள்ள
காலிநா	அழுக்கினால்
மலிநம்	மங்கலாக (ஆகின்றதோ),
ஜ்ஞாநம்	(அப்படி) அறிவு
ஸஜ்ஞாநெந	அறியாமையினால்
ஆவ்ருதம்	மூடப்பட்டிருக்கின்றது;
தெந	அதனால்
ஜந்தவ:	பிராணிகள்
முஹ்யந்தி	மயங்குகின்றன.

கூ.

யதா	எப்படி
வடாகாஶ:	கடாகாசமும்
மஹாகாஶ: (ச)	மஹாகாச(மும்)
வடோபாயிகுணாத:	குடமாகிய உபாதியினால் ஆனவை யோ,

ஜீவாத்மபரமாத்மநோः	(அப்படி) ஜீவாத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும்
஭ேதः	வேற்றுமையானது
தேஹோபாதிகृதः	உடம்பாகிய உபாதியினால் ஆனது.

கo.

தயோः	அவர்கட்கு
வைகृம்	ஐக்கியமானது
தத்த்வமஸ்யாதிவாக்யைः தத்	தத்துவமஸிமுதலான வாக்கியங்களாலேயே
ப்ரதீயதே	நன்கு உணர்த்தப்படுகின்றது.
ஸः	"அவன்
அயம்	இந்த
மனுஷ்யः	மனிதன்"
இதி	என்று
உக்தே	சொன்னவிடத்து,
ஏகः	ஒரே
மனுஷ்ய ஹி	மனிதனன்றோ
ஜ்ஞாயதே	அறியப்படுகிறான்.

கக.

யத்	எது
ஜகத்காரணம்	பிரபஞ்சத்திற்குக் காரணமான
தத்த்வம்	மூலப்பொருளாய் (உள்ளதோ),
ஸः	அது
தத்ஶப்தார்थः	தத் என்னும் சொல்லின் அர்த்தமாக
உச்யதே	சொல்லப்படுகின்றது.
தேஹாதிபிः	உடம்பு முதலியவற்றால்
பரிச்சிந்नः	அளவுபட்ட

ஜீவஃ து	ஜீவனே
ஸ்வாஹாலியஃ	துவம் என்னும் சொல்லை(த் தனது) பெயராகக்கொண்டவனாய் (இருக்கிறான்).

கஉ, கங, கச.

தத்ரைஸகாலாவஸ்தாஉள	அந்த இடம் காலம் நிலைமை முதலியவற்றிலே
த்ருஷ்டஃ	காணப்பட்டவன்
ஸஃ	"அவன்"
இதி	என்று
கத்யதெ	சொல்லப்படுகிறான்.
தயா	அப்படியே
வா தத்ரைஸகாலாஉள	இந்த இடம் காலம் முதலியவற்றிலே
த்ருஷ்டஃ	காணப்பட்டவன்
கயழ	"இவன்"
இதி	என்று
கீத்யதெ	சொல்லப்படுகிறான்.
யயா	எப்படி
ஸஃ	"அவன்
கயம்	இந்த
வாஸாங	மனிதன்"
வசஃ	(என்னும்)வாக்கியமானது
உயொஃ	இரண்டு
வசயொஃ	சொற்களுடைய
ஸாம்யம்	முக்கிய (அர்த்த)மான
தத்தெதரெஸிஷ்யம்	அச்சம்பந்தத்தையும், இச்சம்பந்தத்தையும்
விஸ்ருஜ்ய	விட்டு

வாகம்	ஓரே
வாம்ஶாத்ரம்	மனிதனைமாத்திரம்
ஆக்ஷயதி	உணர்த்துகின்றதோ,
தயா வாவ	அப்படியே
க்வம்	"நீ
தக	அதுவாக
ஆஸி	இருக்கிறாய்"
இதி	என்னும்
வாக	வாக்கியமானது
ஆத்ருக்ம் ச	உள்தன்மையையும்
வாஹ்ருக்ம் ச	வெளித்தன்மையையும்
த்ருக்ரா	விட்டு
ஜீவாத்மபரமாத்மநோः	ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும்
வைகாம்	ஐக்கியத்தை
ஆக்ஷயதி	உணர்த்துகின்றது.

கரு, கருஉ.

இஹ	இதிலே
வசயோः	இருசொற்களுடைய
ஸம்பந்தः	சம்பந்தமானது
ஸாமாநாதிகரண்யாக்யः	ஸாமாநாதிகரண்யம் என்னும் பெயருடைத்து.
வசாயயோः	சொற்களின் அர்த்தங்களுடைய
ஸம்பந்தः	சம்பந்தமானது
விஶேஷணவிஶேஷ்யக்வம்	விசேஷணவிசேஷ்யத்தன்மையாக
ஸ்யாத்	ஆகும்.
வாக்யம் ச	வாக்கியமானது

லக்ஷ்யலக்ஷணஸம்யோகாத்	உணர்த்தப்படுவதும் உணர்த்துவது மாகிய சம்பந்தத்தால்
வைகுண்ட	ஐக்கியத்தை
வொயயெத்	உணர்த்தும்.

கசு, கள, கஎஉ.

ஆஜ்ஞாயாம்	"கங்கையில்
வொஷிஃ	இடைச்சேரி"
இதிவத்	என்பதுபோல
ஜஹல்லக்ஷணா	விட்டலக்ஷணை
ந ஹிவத்	வாராது.
ஶ்வேதோ யாவதி வாக்யவத் (ஶ்வேதஃ யாவதி இதி வாக்ய இவ)	"வெண்மை ஓடுகின்றது" என்னும் வாக்கியம்போல
அஜஹல்லக்ஷணா ஏவ	விடாத லக்ஷணையும்
ந ஸ்யாத்	வாராது.
தத்த்வமஸ்யாதிவாக்யாநாம்	தத்துவமஸிமுதலான வாக்கியங்கட்கு
லக்ஷணா	லக்ஷணையானது,—
ஸஃ	"அவன்
அயம்	இந்த
வாராவஷிஃ	மனிதன்"
இத்யாதிவாக்யாநாம் இவ	என்பதுமுதலிய வாக்கியங்கட்குப் போல,
ஜஹல்லக்ஷணா	பாகலக்ஷணையாக
கீதிர்தா	கூறப்பட்டுளது.

கஅ, கஅஉ.

விநவ்யதிநிதிதாநாம்	வெவ்வேறு மொழிப்பொருட்காரணமுடைய
ஶப்தாநாம்	சொற்களுக்கு
வகவஸ்துநி	ஒரேபொருளின்மேல்
வ்ரவ்யதிஃ தா	சக்தியோ
இஹ	இங்கே
ஸாமாநாதிகரணக்யம்	ஸமாநாதிகரணத்தன்மையாக
உச்யதெ	கூறப்படுகின்றது.

கக, உ0, உ0உ.

ஸ்வமாயாஸ்ருஷ்டரூபேஷு	(பரம்பொருள்) தன்மாயையினால் படைக்கப்பட்ட உருவங்களுள்
ஜீவாதநா	ஜீவவடிவாக
ப்ரவிஷ்டத்வாத்	புகுந்துள்ளமையின்,—
வாக்யேந	வாக்கியத்தினால்
ஜீவஃ	ஜீவன்
பரஸ்ய	பரம்பொருளினுடைய
அம்ஶஃ	அவயவமாகவாயினும்
விகாரஃ வா	விகாரமாகவாயினும்
ந உச்யதெ	உணர்த்தப்படுகிறானில்லை.
அஸௌ	இவன்
நிரம்ஶஃ	அவயவமில்லாதவனாக
நிர்விகாரஃ	விகாரமில்லாதவனாக
ஶ்ருதிபி:	சுருதியினாலும்
யுக்திபி: ச	யுக்தியினாலும்
மத்யதெ	அறியப்படுகிறான்.
யதா	எப்படி

வடாகாஶஃ	கடாகாசம்
வியதஃ	மகாகாசத்தினுடைய
விகாரஃ வா	விகாரமாகவாயினும்
அம்ஶஃ வா	அவயவமாகவாயினும்
ந (ஹவதி)	ஆகமாட்டாதோ, (அப்படிப்போல என்க).

உக.

வாக்யம்	வாக்கியமானது
த்வம்	"நீ
இந்த்ரஃ	இந்திரனாக
அஸி	இருக்கிறாய்"
இதிவத்	என்பதுபோல
ஸ்துதிதத்வாம்	புகழ்ச்சியின்மேல் நிற்பதாக
ந (ஹவதி) வை	ஆகமாட்டாது.

உகஉ.

வாக்யம்	வாக்கியமானது
ஸுஶீர்ஷோ மாணவகாதிவத்	"மாணக்கன் நெருப்பா யிருக்கிறான்" என்பது முதலியனபோல
ஸாஹ்ரூப்யவாம்	ஒப்புமையைக் குறிப்பதாக
ந (ஹவதி)	ஆகாது.

உஉ.

(வாக்யம்)	(வாக்கியமானது)
ரூபாதிவத்	"குடம் மண்ணா யிருக்கின்றது" என்பது முதலியனபோல
கார்யகாரணத்வஸ்ய	காரியகாரணத்தன்மையை

ஸாயநம் சாதிப்பதாக
ந (ஹவதி) ஆகாது.

உஉஉ.

வயஃ வாக்கியமானது
வணுஃ "துண்டம்
மளஃ ஆவாக (இருக்கின்றது)"
ஐதிவஸ என்பதுபோல
ஜாதிவ்யக்திமதுகூழ ஜாதிவ்யக்திகளைக் குறிப்பதாக
ந (ஹவதி) ஆகாது.

உங.

வஸதஸ இந்த
வாகூழ வாக்கியம்
நீயொதமாஹிவஸ "நெய்தல் கருமையா யிருக்கின்றது" என்பது முதலியனபோல
மணமணாதகூழ குணகுணித்தன்மையை யுடையதாக
ந (ஹவதி) ஆகாது.

உஙஉ.

வாகூம் வாக்கியமானது
வ்ரதிரேஸு விக்கிரகங்களிலே
ஈஶ்வரபுத்திவஸ ஈச்வரபுத்திபோல
உபாஸநாவாழ உபாஸனையின்மேல் நிற்பதாக
ந (ஹவதி) ஆகாது.

உச.

ச	அன்றியும்
வாக்யம்	வாக்கியமானது
ராஜவ-ஸ்ரீ-ஷெ	அரசனுடைய மனிதனிடத்து
ராஜவத்	அரசன்போல
ஔபசாரிகம்	உபசாரத்தால் வந்ததாக
ந (ஹவதி)	ஆகமாட்டாது.

உச௨.

யதஃ	ஏனெனில்
ஸஔ	அந்த
ஈஶ்வரஃ	ஈச்வரன்
ஜீவாத்மநா	ஜீவவடிவமாக
ப்ரவிஷ்டஃ	புகுந்திருப்பவனாய்
ஶ்ரு-யதெ	சுருதியில் கூறப்படுகிறான்.

உ௫, உ௬.

ஸஜ்ஜெஃ	அஜ்ஞானிகளால்,—
தெஹெந்த்ரியமநொவ-ஜீவ்ரா-ணாஹங்காரஸங்ஹாதள	உடம்பு, இந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன், அகங்காரம் இவற்றின் தொகுதியில்
ஆத்மஸங்கமநாத்	ஆத்மாவின் கலப்பினால்
ஆத்மத்வம்	ஆத்மத்தன்மையானது
ப்ரதிபாத்யதெ	கொள்ளப்படுகின்றது ;
காஷ்டலொஹாதள	விறகு, உலோகம் முதலியவற்றில்
வஹ்நிஸங்கமநாத்	நெருப்பின் கலப்பினால்
வஹ்நியீஃ இவ	நெருப்பென்னும் புத்திபோல.

உஎ, உஅ, உகூ, ௩௦, ௩௦உ.

ஆத்தா	ஆத்மாவானவன்
அந்நமயம்	அன்னமயமான
தெஹம்	தேகமாகிய
கோஶம்	கோசத்தை
ஆவிஶ்ய	புகுந்து
ஸ்தூலாः	பருத்தவனுக
வாலாः	சிறுவனுக
க்ருஶாः	மெலிந்தவனுக
க்ருஷ்ணாः	கறுத்தவனுக
வணாஶ்ரமவிகல்பவாந்	ஜாதி, ஆச்ரமம் இவற்றின் வேற்றுமையை யுடையவனுக
வ்யகாஶதெ	புலப்படுகிறான் ;
ப்ராணகோஶெ கவி	பிராணகோசத்திலும்
ஜீவாமி	"உயிர்க்கிறேன்,"
க்ஷுயிதः	"பசியுள்ளவனுய்
கவ்மி	இருக்கிறேன்,"
விபாஸிதः	"தாகமுள்ளவனு (யிருக்கிறேன்" எனப் புலப்படுகிறான்) ;
மநோமயெ	மனோமயமான
கோஶெ	கோசத்தில்
ஸம்ஶிதः	"சம்சயமுள்ளவனு (யிருக்கிறேன்),"
நிஶ்சிதः	"நிச்சயமுடையவனு (யிருக்கிறேன்),"
மந்ய	"நினைக்கிறேன்"
இதி	என(ப் புலப்படுகிறான்) ;
விஜ்ஞாநமயகோஶஸ்தः	விஜ்ஞாநமயகோசத்தி லிருப்பவனுய்
விஜாநாமி	"அறிகிறேன்"

இதி	என
திஷ்ட	நிற்கிறான் ;
ஆநந்தமயகோஶாவ்ய	ஆநந்தமயகோசம் என்னும் பெயரு டைய
அஹங்காரே து	அகங்காரத்திலோ,—
வ்ரா	முன்
க்ருதைः	செய்யப்பட்ட
வ்ரணைः	புண்ணியங்களாலும்
உபாஸநாஶிः ச	உபாஸனைகளாலும்
ஸுவிதः	"இன்புற்றுவனாய்
அஸ்மி	இருக்கிறேன்"
இதி	என்று
ஶோ஭தே	மகிழ்கின்றான்.
பரமேஶ்வரः	பரமேச்வரன்
வ்யாப்தः அபி	எங்கும் நிறைந்தவனானாலும்
அநுபவைः இவ (ஸ்ரீதைः)	போர்வைகள்போ(லிருக்கின்ற)
பஞ்சபிः	ஐந்து
கோஶைः	கோசங்களால்
ஏவம்	இவ்வாறு
அநுபகிதः	போர்த்தப்பெற்றவனாய்
பரிச்சிந்நः இவ	அளவுப்பட்டவன்போல்
ப்ரதீயதே	தோன்றுகிறான்.

நக, நகஉ.

யதா	எப்படி
ஆதித்யः	சூரியன்
ஸலிலம்	ஜலத்தை
ப்ரவிஶ்ய	புகுந்து
பஹுதா	பலவாறு

ஹாதி	விளங்குகிறானே,
தயா	அப்படி
ஈஶ்வரஃ	ஈச்வரன்
ஶரீராணி	தேகங்களை
ஆவிஶ	புகுந்து
பஹுயா	பலவாறு
ஸ்ஃரதி	விளங்குகிறான்.

௩௨, ௩௨௨.

காரணக்வ	காரணத்தன்மையும்
காயத்வம் ச	காரியத்தன்மையும்
தயோஃ	அவ்விருவருடைய
தடஸ்த	தடஸ்தமான
லக்ஷணம்	லக்ஷணமாய் (உளது);
இதம்	இது,—
ஶாவாயாம்	"கொப்பிலே
சந்த்ரஃ	சந்திரன்"
இதிவத்	என்பது போல
முக்யவ்ய	முக்கியமேயான
இதம்	கொள்கை
ந (ஹ்வதி)	அன்று.

௩௩, ௩௩௨.

மஹாப்ரகாஶம்	மகாப்பிரகாசமானது
ஸ்வரூபம்	ஸ்வரூபமான
சந்த்ரலக்ஷணம்	சந்திரலக்ஷணம்
இதி	என்று
உக்தம்	கூறப்பட்டுள்ளது;

ஸச்சிதாநந்தரூபகம்	ஸச்சிதாநந்தவடிவமாயிருத்தல்
தயோஃ	அவ்விருவருடைய
ஸ்வரூபம்	ஸ்வரூபமான
லக்ஷணம்	லக்ஷணமாக (உள்ளது).

௩௪.

வாக்யேந	வாக்கியத்தால், —
ஏகலக்ஷணயோஃ	ஓரேலக்ஷணங்களுடைய
(தயோஃ)	(அவ்விருவர்க்கும்)
ஐக்யம்	ஐக்கியமானது
ப்ரதீயதே	உணர்த்தப்படுகின்றது.

௩௫.

தஸ்மாத்	ஆதலால்,
ஏகப்ரகாசகம்	ஓரேபிரகாசமாயிருப்பது
ஸர்வாத்மகத்வம்	ஸர்வாத்மத்தன்மை
இதி	என
ஸ்திதம்	நிலைத்தது.

௩௬, ௩௭.

தேவதிர்யங்மனுஷ்யாணாம்	தேவர், விலங்கு, மநுஷ்யர்கட்கு
ஸ்திதிஃ	இருப்பு
ப்ரகாசாத்	பிரகாசத்தினும்
வ்யதிரேகம்	வேறாக
ந (ஸ்தி)	இல்லை ;
ஜீவப்ரகாசாவிநாபாவாத்	ஜீவனும், பிரகாசமும் வேறு யில்லை யாதலால்

ஸவபூதா　　(ஜீவன்) எல்லாவற்றினுடைய ஆத்மா

இதி　　என்று

கதியதெ　　கூறப்படுகிறான்.

௩௬, ௩௬உ.

ஏவம்　　இவ்வாறு

ப்ரகாஶாத்மகஸர்வரிஜ்ஞானெ　　(எல்லாம்) பிரகாசவடிவமாம் என்னும் அநுபவஅறிவு

ஸ்தீக்ருதெ (ஸதி)　　திடமாகச் செய்யப்பட்டபொழுது,

பூநராவ்ருத்திரஹிதம்　　மீளவும் திரும்புத லில்லாத

கைவல்யம்　　கைவல்யமான

பதம்　　நிலையை

கதெ　　(ஞானி) யடைகிறான்.

௩௭, ௩௭உ.

ஸவபூதஸ்தெ　　(ஒருவன்) ஸர்வாத்ம ஸ்வரூபத்திலே

யதாஹ்யா　　தற்செயலாய்

ஸகுத்　　ஒருகால்

ப்ரஸக்தோ ஹி　　சென்றவனேயானாலும்,

ஸவபாபவிநிர்முக்தஃ　　எல்லாப்பாவங்களினின்றும் தப்பியவனாய்

ஶிவலொகெ　　சிவனாகிய லோகத்திலே

மஹீயதெ　　நன்குமதிக்கப்படுகிறான்.

௩அ, ௩அஉ.

யஸ்ய	எந்த
மஹாத்மநஃ	மஹாத்மாவினுடைய
ஸவபாவஹாவநா	ஸர்வாத்மபாவனையானது
வஸிவக்ரா	நன்றாய்ப்பழுத்துளதோ,
ஸஃ ஏவ	அவனே
ஸாக்ஷாத்	நேரே
ஸம்ஸாரதாரகஃ	ஸம்ஸாரத்தினின்று விடுவிக்கின்ற
பரமேஶ்வரஃ	பரமேச்வரனாய்
(ஸ்யாத்)	(இருக்கிறான்).

௩க, ௩கூஉ.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்ர-ரஹஸ்யபரிவாஹே	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற
மாநஸோல்லாஸே	மாநஸோல்லாஸம் என்னும்
ப்ரவஹே	நூலினுள்
தாரதீயோல்லாஸ ஸம்ரஹஃ	மூன்றாம் உல்லாஸப்பொழிப்புரை
இதி	முற்றும்.

கூ௰

வ.த ௳ ௌ ௨ ா ஹ ா ஸ ஃ ।

க.

ஷ்வதஃ ஸஹஃ ஷ்வகாஶஷெ ஹாவா வடவடாஷயஃ ।
நெஶ்வரஸ்ய ஸரோவெஶாசு உதயஸ்யொதர உஷ்வதெ ॥

நான்காம் உல்லாஸம்.

இவ்வாறு ஆத்மஸ்வரூபத்தையும் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் ஆராய்ந்து, அவையிரண்டும் ஒரேபொருள் என்று கீழே உணர்த்தப்பட்டது ; அன்றியும், இதுவே - ஸகலவேதாந்தங்களும் முழக்குகின்ற பரமரஹஸ்யமான அத்வைததத்துவம் என்றும், பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றோர் இதனையே தெளியக் கண்டு ஈடேறுத லாகும் என்றும் எடுத்துக்காட்டப்பட்டன. என்றாலும், மாணுக்கன் பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்களால் அத்வைததத்துவத்திலே சங்கைநிகழப்பெற்றவனாய் ஆகாசம், பூமி, மலை, கடல், சரீரம் முதலியவற்றைக் கண்டு தெளிவுபிறவாது மீள மீள மலைக்கின்றான். ஆகவே, அவனது சங்கையை நீக்கித் தெளிவு பிறப்பித்து அத்வைத உண்மையைத் திடப்படுத்தும்பொருட்டு இவ்வுல்லாஸம் எழுகின்றது :

சுருதி கூறுகின்ற ஆத்மஉண்மையையும் ஆத்மப்பிரகாசத்தையும் ஆக்ஷேபித்தலும், ஸமாதாநமும்.

க.

“குடம் ஆடை முதலிய பொருள்கள் தாமே உள்ளவையாய் விளங்குகின்றன ; ஈச்வரனது கலப்பினால் இல்லை” என்ற இதற்கு மறுமொழி கூறப்படுகின்றது :

ஆக்ஷேபம் :—“இப்பொருள்களினது உண்மை ஆத்மஉண்மையேதான் ; அதனினும் அதிகமாக இல்லை. அப்படியே, இவற்றினது விளக்கமும் ஆத்மவிளக்கத்தினும் அதிகமாக இல்லை” (ங - ங)எனக் குடம்முதலிய எல்லாப்பொருள்கட்

ச. நாநாச்ரீரவடோரரஷ்ரீதரஹா-
ஸீவஸ்ரூலாலாஷ்வாரீ
ஜ்ரூநம் யஸ்ய தா வக்ஷுராதிகாரண.
யாரா ஸஹிஃ ஷ்ரதெ ।
ஜ்ரூநாஸீதி தரெவ லாகுரநலா-
தெ்ரூதத்ஸ்ரஷ்டும் ஜமஸ
தஸ்மை ஸ்ரீ மாரரூரூதாயெ நம ஹம்
ஸ்ரீ தக்ஷிணாரூதாயெ ॥

குமே தமக்கென்று சொந்தமான உண்மையும் விளக்கமும் இல்லை யெனவும், ஆனால் அவற்றில் காணப்படுகின்ற உண்மையும் விளக்கமும் ஆத்மாவான ஈச்வரனது உண்மையும் விளக்கமு மாம் எனவும் கூறியது நேரன்று; அநுபவத்திற்கு விரோதமாதலின். "குடம்முதலிய பொருள்கள் தாமாகவே உள்ளன; தாமாகவே விளங்குகின்றன" என்பது, நம்மனோர்க்குத் தடையிலா அநுபவமா யிருக்கின்றது. ஆகவே,—"குடம்முதலிய பொருள்களுள் ஈச்வரன் புகுந்திருக்கின்றான்; அதனால் அவை உள்ளன; அதனால் அவை விளங்குகின்றன" என்பதற்கு யாதொரு பிரமாணத்தையும் காணோம் என்க.

ஸமாதாநம்:—வருமாறு: (க)

ச. எதனுடைய அறிவானது - பல துவாரங்களையுடைய குடத்தினுள்ளே யுள்ள பெரிய விளக்கின் ஒளிபோல் ஒளிர்கின்றதாய்க் கண் முதலிய இந்திரியங்களின் வழியாக வெளியிற் செல்லுகின்றதோ, "அறிகிறேன்" என்று (எது தானே விளங்குகின்றதோ, அதுவே விளங்க,) இந்த ஜகத்தெல்லாம், விளங்குகின்ற அதனையே அடுத்து விளங்குகின்றது. அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

பல துவாரங்களையுடைய ஒரு குடத்தினுள் உள்ள ஒருபெரிய விளக்கின் ஒளியானது - அத்துவாரங்களின் வழியாக வெளியிற் சென்று, அருகிலுள்ள பொருள்களை விளக்குவதாய்த் தானே விளங்குமாறுபோல,—பல இந்திரியத்துவாரங்களையுடைய இத்தேகத்தினுள் உள்ள ஆத்மப்பொருளின் ஸ்வரூபஅறிவானது - கண்முதலிய அவ்விந்திரியத்துவாரங்களின் வழியாக வெளியிற் சென்று, உருவம் முதலிய பொருள்களை விளக்குவதாய்த் தானே விளங்குகின்றது. எங்ஙனமெனில்,—"யான் குடத்தை அறிகிறேன்," "ஆடையை அறிகிறேன்," "மரத்தை அறிகிறேன்" என்றவிடத்து, ஆத்மஅறிவு - குடம்முதலியவற்றைத் தனது சுதந்

சுஸ்ய சுயம் ஹாவஃ—

உ.

சுஹரி தூ ந ஸூர்யோ ஜாதா ஜாதாரீதி ந வெசு ஷ்ரோரு ।

திரமான சொந்தப் பிரகாசத்தால் விளக்கித், தான் விளங்குதற்குப் பிறிதோர் பிரகாசத்தை வேண்டாது தானே விளங்கிநிற்றல் காண்க.

இவ்வாறு சூரியன், சந்திரன், மண், விண் முதலிய இப்பிரபஞ்சமெல்லாம் ஸ்வப்பிரகாசமான[தானே விளங்குகின்ற] ஆத்மாவையே அடுத்துவிளங்குகின்றது; அவை தமது இயல்பிலே ஜடமாதலால் தாமே விளங்குதல் செல்லாமையின்.

இதனை உதாரணத்தில் வைத்துக் காட்டுவோம்:—பழுக்கக் காய்ந்த உலோகத்தைக் குறித்து, "உலோகம் சுடுகின்றது" என்கிறோம். ஆனால், சுடுதற்செய்கை உலோகத்தினிடத்து இல்லை; தீயினிடத்தே உளது. ஆகவே, அதற்குத்தீயோடொத்த செய்கை எப்படி நிகழ்கின்றது? எனில்,—உலோகமானது, சுடுகின்ற தீயையடுத்துச் சுடுகின்றது: அதாவது - உலோகம் தீயொடு மயங்கி [கலந்து] நிற்பதனால், உலோகத்தினிடத்துத் தீயோடொத்த செய்கை ஏற்றப்பட்டது. எனவே, வாஸ்தவத்தில் தீயே சுடுவதாயிருக்க, உலோகம் சுடுகின்றது என்பதுபோல,—வாஸ்தவத்தில் ஆத்மஸ்வரூபமே விளங்குவதாயிருக்க, சூரியன் சந்திரன் மண் விண் முதலியவெல்லாம் விளங்குகின்றன என்பது. ஆகவே, ஆதாரமான ப்ரஹ்மத்தின் விளக்கத்தினாலேயே ஜகத்து விளங்குகின்றது; ஜகத்து விளங்குதலானது வேறோர் விளக்கமன்று என்பது கருத்து. அவ்வண்ணமே, சுருதிஸ்மிருதிகள் கூறுகின்றன:

"ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா
விद्युதோ பாந்தி குதோऽயமக்நிः । தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥"

"அங்கு சூரியன் விளங்கவில்லை: சந்திரனும், நக்ஷத்திரங்களும் விளங்கவில்லை: இந்த மின்னல்களும் விளங்கவில்லை: இந்த அக்நி எங்கிருந்து(விளங்கும்)? எல்லாம், விளங்குகின்ற அதனையே யடுத்து விளங்குகின்றது; இதெல்லாம் அதனது விளக்கத்தால் விளங்குகின்றது"—(கட - டு - கடு; ச்வே - சு - கச - ; மு - உப - உ - உ - க0)

கக. ஆம் பக்கத்திலுள்ள மேற்கோள்களையும் பார்க்க. (ச)

இது இதன் கருத்து:—

உ.

"நான்" என்று நினைப்பவன் - "அறிகிறேன்" என்று விளங்காவிட்

கஸ்ய கோ வா வ்ரகாஶேத ஜகத்ஸு ஸ்யாத்ஸுஷுப்தவத் ॥

ங.

வ்ராஹ்யம் யாவதாம் வக்ஷு வதுரோநெऽவி ந ஸ்வதः ।
தஸ்யாதீஶே ஸ்ஹிதம் வக்ஷு வ்ராஹ்யுகுவிவஜிதெ ॥

டால், எதற்கு எதுதான் விளங்கும்? ஜகத்து உறக்கத்தில்போல இருக்கும்.

அறியும்பொருளான விஷயியானது - "நான் குடம்முதலியவற்றை அறிகின்றேன்" எனக் குடம்முதலாக அறியப்படும் விஷயங்களோடு கூடி விளங்காவிட்டால், அங்ஙனம் ஒருவர்க்கும் ஒன்றும் விளங்காது; விளங்காதாகவே, பிரபஞ்சம் தூக்கத்தில் எப்படி இருக்கின்றதோ, அப்படியே எப்பொழுது மிருத்தல் வேண்டும். ஆனால், இது இல்லை; அதாவது, ஜகத்து விளங்குகின்றது: பேசுதல் உண்ணுதல் முதலிய வியவகாரங்களெல்லாம் நடக்கின்றன. ஆதலால், உள்ளேயுள்ள ஆத்மஅறிவானது, சூரியன் மண் விண் முதலியவற்றை விளங்கச்செய்வதாய்த் தானே விளங்குகின்றது என்க; எனவே, அப்பொருள்களின் விளக்கம் பராதீனமாம் என்பது. (உ)

ங.

அவற்றினது விளக்கம் பராதீனமா யிருப்பதுபோல, அவற்றினது உண்மையும் பராதீனமாம்; எப்படியெனில்,—

முன்னும் பின்னும் இல்லாதவற்றிற்கு நிகழ்காலத்திலும் [நடுவிலும்] உண்மை, தானே இல்லை. ஆதலால், உண்மையானது முன்மைபின்மையில்லாத ஈச்வரனிடத்து நிலைத்ததாம்.

முன்னும் - சென்ற காலத்திலும். பின்னும் - வருங்காலத்திலும். குடம்முதலிய பொருள்கள் முன்னுமில்லாது, பின்னுமில்லாது, கயிற்றிலே பாம்புபோல, இடையே தோன்றுகின்றமையால், அவற்றிற்குத் தமக்கென்று சொந்தமான சுதந்திரஉண்மை இல்லை. அவற்றிற்குச் சுதந்திரமான உண்மை உளதாயின், அவை ஆத்மாபோலத் தாமே விளங்கவும் வேண்டும்; வேண்டவே, அங்ஙன மவை அறிவினால் அறியப்படும்பொருளாதல் செல்லாது. ஆனால், இது இல்லை: அவை அறியப்படும்பொருளாகவே இருக்கின்றன. ஆதலால், அவற்றிற்குச் சுதந்திரமான உண்மை இல்லை யென்பது.

மற்று, அவை எந்த எல்லையில் தோன்றி மறைகின்றனவோ அந்த எல்லையாக ஈச்வரன் எப்பொழுது மிருக்கின்றான்; அன்றியும், அவன் எல்லா நிலைமைகட்கும் ஸாக்ஷியாய் உள்ளேயுள்ள ஆத்மஸ்வரூபமாய் எப்பொழுதும் விளங்குகின்றான். அவன்இல்லாதகாலமும் அவன்விளங்காதகாலமும் முன் இருந்ததில்லை; இனி

ச, சஉ.

ஸ்வயமேவ வ்ரகாஶரூபஜ்ஞா யதி விநேஶ்வரீ ।
ஸவபும் ஸவபுஷ்ய ஹாஸெத நவா ஹாஸெத கிம்வந ॥
தஸ்மாதவபுஜ்ஞேஜ்ஞம் வா ஜடஸ்யாதெகாரூபகே ।

ரு, சு.

தரூபெ ஸ்வயம்வ்ரகாஶகெ ஜடவெதநயொரிபுயோ: ॥

இருப்பது மில்லை. ஆதலால், இறந்தகாலத்து இல்லனவாய் வருங்காலத்து அழிவனவாய் நிகழ்காலத்துத் தோன்றிநிற்கின்ற குடம் முதலிய பொருள்கட்கு உண்மையானது எப்பொழுதுமுள்ள தனிமுதற்பொருளான ஈச்வரனது உண்மையால் உள்ளதாம். அவற்றினது உண்மை வேறோர் உண்மை யில்லை என்றபடி. (ரு)

ச, சஉ.

இங்ஙனம் விஷயங்களினுடைய உண்மைவிளக்கங்கள் ஈச்வரனைச் சார்ந்தவை என்று கூறியதையே தெளியக் காட்டுகிறார் :

ஜடங்கள் ஈச்வரனில்லாது தாமாகவே விளங்குமாயின், எல்லாம் எல்லாவற்றிற்கும் விளங்கும் ; அல்லது, ஒன்றும் விளங்காது. ஆகவே, ஜகத்து எல்லாவற்றையும் அறிவதாகவாயினும், (ஒன்றையும்) அறியாததாகவாயினும், ஒருபடித்தா யிருக்கும்.

ஈச்வரனை – விஷயங்களை யறிவதாய்த் தானேவிளங்குகின்ற ஞானஸ்வரூபமான பொருளை என்றபடி. எல்லாம் எல்லாவற்றிற்கும் விளங்கட்டும், அல்லது விளங்காதிருக்கட்டும். அதனா லாவதென்ன ? —எல்லாம் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் விளங்குமாயின், அங்ஙனம் எல்லாம் எல்லாவற்றையும் அறிவதாகும். ஒன்றும் ஒன்றற்கும் ஒருபொழுதும் விளங்காவிடில், ஒன்றும் ஒன்றையும் அறிவதாகாது. ஆகவே, (க) எல்லாவற்றையும் அறிவதும், (உ) ஒன்றையும் அறியாதது மாகிய இவ்விருதன்மையினுள் எதுவாயினும் ஆகுக ; ஜகத்து அந்த ஒரேதன்மையதாகவே இருத்தல் வேண்டும். ஆனால், இது இல்லை : பிரபஞ்சம் அறியப்படும்பொருளாக இருக்கின்றது. ஆதலால், அது தானாகவே விளங்கா தென்பதாம். (ச, சஅ)

ரு, சு.

விஷயங்களும் ஆத்மாபோல ஸ்வப்பிரகாசமாம் எனக் கொண்டவிடத்துப் படும் குற்றம் கூறப்பட்டது. இனி, அங்ஙனம் வரும் வேறோர் குற்றத்தைக் கூறுகிறார் :

ஜடமும் சேதனமும் ஸ்வப்பிரகாசமா யிருத்தல் ஒருநிகரான வளவிலே, உணரப்படுவதும் உணர்வதுமாகிய தன்மை முதலியன

தஸ்யைவ ஸ்வஜ்ஞாந ஸ்வாத்ம்யாத்மகதாத்மயம் ।
இந்த்ரியாணாமநியமாத் ஸ்வாக்ஷஸ்யாம் ஸ்யுரஸாத்மயம் ॥

எ, எஉ

மநோநாமநோநாமஸ்வபாவஸ்வாத்மாத்மதஸ்யயோ: ।
க்ரியாஸக்திஜ்ஞாநஸக்த்யோ: கதம் கரணஸாம்யயோ: ॥
ஸ்வதிவிவைவ ஸ்வரூபீஸ: கதா ஜ்ஞாதேதி கத்யதே ।

ஒன்றற்கொன்று சமமாகவே ஆகிவிடும். (அங்ஙனம்) இந்திரியங்கட்கு முறை இன்மையால், சுவைமுதலியன கண்ணால் அறியப்படுவனவாகும்.

ஜடமும் சேதநம்போல ஸ்வப்பிரகாசமானவளவிலே, ஒன்றையொன்று அறிதல்வேண்டும்; அதாவது – எல்லாம் எல்லாவற்றையும் அறிவனவாகவும், எல்லாம் எல்லாவற்றாலும் அறியப்படுவனவாகவும் வேண்டும். வேண்டவே, — "கண் உருவத்தைமாத்திரம் அறியுமேயல்லாது, உருவம் திருப்பிக் கண்ணையறியாது" எனவும், "மூக்கு நாற்றதைமாத்திரம் அறியுமேயல்லாது, நாற்றம் திருப்பி மூக்கை யறியாது"எனவும் ஆகிய இவைபோன்ற நியமமில்லை. இல்லையெனவே, கண்ணும் சுவைமுதலியவற்றை அறிதலாகும்; சுவைமுதலியனவும் திருப்பிக் கண்ணை அறிதலாகும். ஆனால், இது இல்லை. ஆகவே, விஷயங்களினுடைய உண்மைவிளக்கங்கள் பராதீனமாம். சுதந்திரமான சொந்த உண்மைவிளக்கங்கள் ஈச்வரனுக்காம் என்பது தேர்ந்த கருத்து. (ரு,சு)

ஈச்வரன் உபாதிகளின் வழியாகச் செய்பவனும் அறிபவனு மாகிறன்.

எ, எஉ.

தாமேஉண்மையும் தாமேபிரகாசித்தலு மில்லாத வெறும் ஜடமாய்க் காணப்படுகின்ற குடம்முதலிய இப்பொருள்களெல்லாவற்றினுள்ளும் ஈச்வரன் உண்மைப்பிரகாசமாய் வியாபித்துநிற்றல் எடுத்துக்காட்டப்பட்டது. இப்பொழுது, அவன் உபாதிவசத்தால் செய்பவனும் அறிபவனு மாதலை அருளிச்செய்கிறார்:

கண்ணாடியினுடைய மழுங்கலான பின்பக்கத்தையும் துலக்கமான முன்பக்கத்தையும் நிகர்த்தவையாய்க் கிரியாசக்தி ஞானசக்திகளான அந்தக்கரணப்பக்கங்களிலே விளங்கும் ஈச்வரன் "செய்பவன்," "அறிபவன்" எனப்படுகிறான்.

பிராணன், அகக்கரணத்தினுடைய கிரியாசக்திவடிவான பாகமாம். இது கண்ணாடியினுடைய மழுங்கலான பின்பாகத்தைப்போன்றது. மனமும் புத்தியும் அகக்கரணத்தினுடைய ஞானசக்திவடிவமான பாகமாம். இது கண்ணாடி

அ, அஉ.

வாஜீः ஸத்ஸமாணொ தக்ஷபூரக நிஉபுயொ உவபுணொ யயா ॥
ஸ்ரஹாதி விஷயஹாயாழ் சூதஹாயாநாஹாவதः ।

கூ, கூற.

கதீःகரணஸம்வந்நாக நிவியா நீம்ரியாணாவி ॥
ரயாஉமெநிவயெ கீவிதா உவ கீயகாः ।

யினுடைய துலக்கமான முன்பக்கத்தைப்போன்றது. எங்கும் உண்மைப்பிரகாசமாய் வியாபித்திருக்கும் ஈச்வரனை ஆத்மா தொழிலையுடைய பிராணனாகிய உபாதியினால் வரைசெய்யப்பட்டவனாய் "கர்த்தா, செய்பவன்" எனப் பெயர்பெறுகிறான்; அவ்வாறே, அவன் - மாறுந்தன்மையுள்ள புத்திமனங்களாகிய உபாதியினால் வரைசெய்யப்பட்டவனாய் "ஞாதா, அறிபவன்" எனப் பெயர்பெறுகிறான்; என்பது பொருள். (எ, எஅ)

அறிதற்கருவியான அகக்கரணம்.

அ, அஉ.

ஆத்மா அறிபவனாதற்கு உபாதியாயுள்ளது ஞானசக்தியான அகக்கரணமாம் என்று கூறியதையே விரித்துரைக்கின்றார்:

புத்தியானது அழுக்கில்லாத கண்ணாடிபோல ஸத்துவகுணமேம்பாட்டினால் (துலக்கமா யுள்ளவளவிலே, தன்னிடத்துள்ள) ஆத்மப் பிரதிரூபத்தினால் விஷயப்பிரதிரூபத்தைப் பிடிக்கின்றது.

ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டவிடத்து, உலோபம் தவறு முதலிய உண்டாகு மாதலால், அது கூடாதென "ஸத்துவகுணமேம்பாட்டினால்" என்று கூறப்பட்டது. அவ்வாறே, பகவானும் அருளிச்செய்கிறார்:

"ஸத்ஜாதம்ஜாயதெ ஜ்ஞாநம் ரஜஸொ யொஹ வாவ ச ।
ப்ரமாதமொஹௌ தமஸः ஸவதொऽஜ்ஞாநமேவ ச ॥"

"அறிவு ஸத்துவத்தினின்று பிறக்கின்றது: உலோபம் ரஜஸினின்று (உண்டாகின்றது): தவறும், மயக்கமும், அறியாமையும் தமஸினின்று பிறக்கின்றன"—(வே - கீ - கச - கஎ) (அ, அஎ)

கூ, கூஉ.

அகக்கரணம், புறக்கரணமான இந்திரியங்களை ஆளுகின்றது. — எப்படியெனில், — உருவம்முதலிய விஷயங்களில் சேர்ந்தவையாய், ஆதலால்,

சக்கிரவட்டையிலே பொருத்தப்பட்ட ஆரைக்கால் போன்ற இந்திரியங்களெல்லாம், அகக்கரணசம்பந்தத்தினால் (தம்தம் தொழில்களைச் செய்கின்றன).

க○, கக.

நாஸ்யோऽஹம் கரணை ஸ்யுக்தாः ஜாக்ரஸம்ஸ்யுக்தஸுப்தவத் ॥
தாஹிஷ்டு மொக்ஷகாதாஹிः வ்ரஜவதுந்தி ஷ்டுஷிஷ்டவத் ।
கரணாநி ஸஷ்டாநி யதாஷ்டு விஷயம் வ்ரதி ॥

உருவம் ஓசை முதலிய விஷயங்கட்கும் கண் செவி முதலிய இந்திரியங்கட்கும் சம்பந்த முள்வழியும், எதிரிலுள்ள விஷயத்தை அறிவதில்லை. ஒருவனுடைய முன்னிலையிலுள்ள புஸ்தகத்தைக் குறித்து "நீ இப்புஸ்தகத்தைப் பார்த்தனையோ?" ஏனின்,— அவன் "என்மனம் வேறோரிடத்துச் சென்றிருந்தது; நான் இதனைப் பார்க்கவில்லை" (பிரு - க - ரு - ங) என்கிறான்; அவ்வாறே, "நீ இவ்வார்த்தையைக் கேட்டனையோ? எனின், — "என்மனம் வேறோரிடத்துச் சென்றிருந்தது; நான் இதனைக் கேட்கவில்லை" (பிரு - க - ரு - ங) என்கிறான் ஆகவே, இந்திரியங்களோடு அகக்கரணம் சேர்ந்தவழியே, உருவம் ஓசை முதலிய பொருளுணர்ச்சி உண்டாகின்றது: அகக்கரணமானது அந்தந்த இந்திரியங்கட்குரிய பார்த்தல் கேட்டல் முதலிய தொழில்களை நியமிக்கின்றது என்றபடி. கௌஷீ - ங - எ ஐப் பார்க்க. (கூ, கூற)

நாடிகள்.

க○, கக.

இனி, ஆத்மா உடம்பாகிய உபாதியினால் நனவு கனவு உறக்கம் என்னும் மூன்று நிலைமைகளோடும் சம்பந்தமுறுதலைக் கூறுபவராய், அவற்றது அநுபவமுண்டாகும் இடத்தை முதலில் விரித்துரைக்கின்றார்:

வலையிலே நன்கு பின்னப்பட்ட நூல்கள்போல, அகக்கரணத்திலே நாடிகள் பின்னப்பட்டிருக்கின்றன. இந்திரியங்களெல்லாம், கோலகம்வரையிற் சென்றுள்ள அவற்றின் வழியாகவே தமக்குரிய விஷயத்தை நோக்கி, தீப்பொறிகள்போலச் சஞ்சரிக்கின்றன.

ஞானசக்திக்கிரியாசக்தியோடமைந்த லிங்கசரீரம் என்று சொல்லப்பட்டதாய், விஷயங்களாகிய மீன்களைப் பிடிப்பதற்குக் கருவியான அகக்கரணம் என்னும் வலையிலே நாடிகளாகிய நூல்கள் ஒன்றோடொன்று குறுக்குமறுக்காகப் பின்னிக்கொண்டு, அந்தந்த இந்திரியகோலகமுடிவுவரை வியாபித்திருக்கின்றன. கிழக்கூறிய இந்திரியங்களெல்லாம் அவ்வாறுள்ள அந்நாடிகளின் வழியாகவே சஞ்சரிக்கின்றன; தீப்பொறிகள் பறந்தோடி விழுமாறுபோல, மனோவிருத்தியோடுகூட தம்தம் விஷயங்களிற் செல்லுகின்றன. (க○, கக)

இந்திரியங்கள்சஞ்சரிக்கின்ற வழிகள் நாடிகளெனக் கூறப்பட்டது. அதிலே, அந்நாடிகளின் பெயர் இடம் தொழில் முதலியவற்றை ககற – சுலோகங்களால் கூறுகிறார்:

கஉ.

தெஹஸ்ய உய்யம் ஷூநடு உஎயாரூஸி தீயடுதெ ।
ஶுஷாத்ர ஆஜ்யாஉஎவ்வடு தெஜ்ராத்ர ஆஜ்யாஉயஃ ॥

கங, கஙஉ.

திரகொணொऽயொஉவாஶ்ரு கஸ்ய காயொநிஷந்திஃ ।
யத்ர கண்ணலிநீ நாஉ வாரா ஶக்திஃ ப்ரதிஷ்டிதா ॥
ப்ராணாக்நிவிந்துநாதாநாடு ஸவிதீ ஸா ஸரஸ்வதீ ।

கச, கடு, கடுற.

உஎயாரூரூகொணஷ்டா ஸுஷும்நா ப்ரஹ்மரந்த்ரகா ॥

கஉ.

உடம்பினுடைய நடுஇடமானது மூலாதாரம் எனப்படுகின்றது; பாயுவினின்று இரண்டங்குலத்திற்கு மேலாகவும், ஆண்குறியினின்று இரண்டங்குலத்திற்குக் கீழாகவும் உள்ளது.

கங, கஙஉ.

(அது) முக்கோணமுடையதாய்த் தலைகீழாகக் கவிழ்ந்து, கன்னிகையினது யோனியை நிகர்த்துளது. பிராணன், அக்னி, பிந்து, நாதம் என்றிவற்றைக் கிளப்புவதாகிய குண்டலிநீ என்னும் பராசக்தி அங்கே தங்கியுளது; அது ஸரஸ்வதீ (எனவும்படும்).

அங்கே - மூலாதாரத்தினுள். பராசக்தி - மேலான சக்தி, மூலப்பிரகிருதி; அது மூலாதாரத்தை அதிஷ்டித்துநிற்கும் தேவதை; சர்ப்பகுண்டலவடிவமுடைமையால், அதற்கு "குண்டலிநீ" என்று பெயர். பிராணனென்பது - ஐவகைத் தொழிலோடு உடம்பினுள் சஞ்சரிக்கின்ற ஓர்வகை வாயு. அக்னியாவது - இரைப்பையினுள் உணவை ஜீர்ணப்படுத்துகின்ற ஓர்வகை நெருப்பு. இப்பிராணனும் அக்நியும் யோகநூலினுள் முறையே "சந்திரன்," "சூரியன்" எனப் பெயர் பெறும். இவை, இனிக்கூறப்போகின்ற இளைபிங்களைகளின் தேவதைகளாம். பிந்துவென்பது - வெளிப்படாத ஓர்வகைச்சப்தநிலைமை. நாதமோ - செவிகளைப் பொத்திக்கொண்டு கேட்கப்படும் ஓங்காரமாய் எல்லா ஒலிகட்கும் பொதுவாய் வெளிப்பட்ட சப்தம். இவற்றையெல்லாம் அந்தப் பராசக்தி கிளப்பி நடத்துகின்றது. அது எழுத்தொலிவடிவமாக வெளிப்படுமளவிலே, ஸரஸ்வதீ எனப்பெயர் பெறுகின்றது. (கங, ஙகற)

கச, கடு, கடுற

ஸுஷும்நையானது மூலாதாரத்தினுடைய முதல் முனையினின்று ப்ரஹ்மரந்திரத்திற்குச் செல்வது; அடியிலே, பாதிவெடித்த மூங்கிற்

உஷ்ணெऽயுஹி நவம்ஸாலா ஷலாயாரஸஉஹிதா ।
தத்வாஸ்வுகொணயொஜுாதெ தெ ஊவாவிஹுஎ ஸ்ரிதெ ॥
நாஸீவக்ரிதி வ்ராஹுः தஸ்ஸாநாவுः ஸஉஹுதாः ।

கசு, கசுற.

மாநாரீஹஸ்திஜிஹ்வாவெ நயநாதுं வ்ரயாவதः ॥
நாஸீவக்ரெண ஸம்ஸ்ருஷ்டெ நாஸிகாதுஉஹெ மதெ ।

கள, கஅ, கக, கக்கூற.

நாஸிஷ்ணுஉஸ்ரிதெ கூக்டாணுஷிவ ஸ்ரிதெ ॥
வஷ்ஷா யாஉம்வுஸா நாஸீ கணுஉயஉவாஸ்ரிதெ ।

குழல் போன்றது; ஆறு ஆதாரங்களை யுடையது. இடைபிங்களையிரண்டும் அதனது பக்கமுனைகளிலே கிளம்பி நிற்கின்றன. (இம்மூன்று நாடிகளும் இவ்வா றமைந்துநிற்றலை, யோகிகள்) நாடீசக்கிரம் என்கிறார்கள். (மற்றை) நாடிகள் அதனின்று கிளம்பியுள்ளன.

ஸுஷும்னை என்னும் நாடியானது மூலாதாரத்தினுடைய அடிமுனையினின்று ஒருபடித்தாய் நேராக உச்சித்துவாரம்வரை நீண்டுநிற்கின்றது; உள்ளே வெண்டோடியும் வெண்டோடாது பிருக்கின்ற மூங்கிற்குழல்போல, அடியிலே பிக நுண்ணிய துவாரத்தை யுடையது; மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தம், ஆஜ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் கொண்டது. ஸுஷும்னை எனினும், மூர்த்தந்யநாடி எனினும், ப்ரஹ்மநாடி எனினும் ஒக்கும். இதற்கு இடப்பக்கத்திலுள்ள மூலாதாரமேல்முனையினின்று கிளம்பியது, இடை என்னும் நாடியாம்; அவ்வாறே, வலப்பக்கத்திலுள்ள மூலாதாரமேல்முனையினின்று கிளம்பியது, பிங்களை என்னும் நாடி யாம். அவையிரண்டும் நெற்றிஅடிவரைச் சென்றிருக்கின்றன. (கச ... ... கஞற)

கசு, கசுற.

நாடீசக்கிரத்தோடு பின்னிநிற்கும் காந்தாரி ஹஸ்திஜிஹ்வை என்னும் பெயருடைய இரண்டு (நாடிகளும்) மூக்குவரை சென்றவையாய்க் கண்வரை ஓடுகின்றன.

இயல்பிலே மூக்குவரை சென்றுள்ள அந்நாடிகள் - இடைபிங்களைகளுள் வாயுநிரம்புதலால் மேலே நிமிர்ந்து கண்வரையிலும் ஓடுகின்றன என்பது, (கசு, கசுற)

கள, கஅ, கக, கக்கூற.

பூஷை, அலாம்புஸை என்னும் நாடிகள், கோழிமுட்டைபோன்ற கொப்பூழ்வட்டத்தினின்று இரண்டுசெவிகளையும் ஒட்டிநிற்கின்

நாயீ ஸுஷும்நாஹ்வயா தஷ்ஸு ஸ்ரஷ்டுர்வஸவபூதி ॥
ஸரஸ்வத்யாஹ்வயா நாயீ ஜிஹ்வாக்ரே வாகுஸாரிணீ ।
நாயீ விஶ்வோதரீ நாம ஸுஂக்ஷேத்ரம் ஸா ஹ்யதுர்விபுயத் ॥
வீக்ஷா வயஸ்விநீ தொயத் கண்ணஸ்தா கரதெ க்ஷுதம் ।

உ0, உ0ற.

நாயீவக்ராத்ஸமுத்ஸ்ருதாஃ நாயஸ்ஸிஸ்ரஸ்யொமுவாஃ ॥
ராகா ஸுகம் ஸிநீவாலீ மமுதம் முஞ்சேத்தமுஹுயத் ।

உக, உகற.

ஸுக்ரா நாரஸமாஹாய ஸஜிநீ யமநீ வநஃ ॥
கவாலகுஹரம் மக்வா மமுயிபுஸஞ்சிநுதெ ஸுயாத் ।

றன ; சுக்லை என்னும் நாடி அதனின்று (கிளம்பி) புருவநடுவைக் கிட்டி நிற்கின்றது ; ஸரஸ்வதி என்னும் நாடி நாக்குவரையுள்ளதாய் வாக்கைக் கிளப்புகின்றது ; (இரைப்பையிலுள்ள) விச்வோதரீ என்னும் நாடி (எதுவோ), அது நால்வகைத்தான உணவை உண்கின்றது ; பயஸ்விநீ (என்னும்) நாடி ஜலத்தைக் குடித்து, தொண்டையிலே நிற்பதாய் இருமலை (அல்லது தும்மலைச்) செய்கின்றது.

நால்வகை உணவைப்பற்றி வே - கீ - கரு - கச - ஆம் சுலோகத்தின் பாஷ்யத்தைப் பார்க்க. (கஎ ,.. ... ககற)

உ0, உ0ற.

(ராகை, ஸிநீவாலீ, குகூ என்னும் இம்)மூன்று நாடிகளும் நாடீ சக்கிரத்தினின்று கீழ்முக மாகக் கிளம்பியுள்ளன ; (அவற்றுள்,) ராகை ரேதஸையும், ஸிநீவாலீ மூத்திரத்தையும், குகூ மலத்தையும் விடும்.

உக, உகற.

அன்றியும், சங்கினீ என்னும் நாடியானது, உட்கொண்ட உணவின் ஸாரத்தை எடுத்து, உச்சித்துவாரத்திற்குச் சென்று, சிரசிலே அமிருதத்தைப் பெருக்குகின்றது.

சிரசிலே - ஸஹஸ்ராரபத்மம் என்னும் இடத்திலே. இந்த அமிருதத்தை லம்பிகாயோகத்தால் அடைத லாகும் என்று யோகிகள் கூறுகிறார்கள். க - நஉ ஐப் பார்க்க. (உக, உகற)

உஉ, உஉற.

ஶதம்வைகா ச நாட்யஃ ஸ்ருதாஃ தாஸாமேகா ஶிரோமதா ॥
தயோர்஧்வமாயந்நுக்தி ஸ்யாசு உதி வைஷாஞ்ஶாஸநே ।

உங, உஙற.

யதா ஸுஷுப்தைஃ ஸுஷ்ணைஃ ஸ்ரோரிதைஃ ஶ்ரயமாணுதஃ ॥
ஸஸ்வாதீந்த்ரியாந்ஸ்ரீஷ்ட்ரை ததா ஜாமரிதம் ஹவேசு ।

உஉ, உஉற.

பலவாகச் சொல்லி என்ன? இன்னும் எத்தனையோ வேறு நாடிகள், பிராணஇந்திரியமனங்கட்குச் சஞ்சாரமார்க்கமாக உள்ளன என, நாடீவிஷயத்தை முடிக்கிறார்:

"நூற்றொன்று நாடிகள் உள்ளன. அவற்றுள், ஒன்று உச்சியிற் சென்றிருப்பது. அதன்வழியாக மேலே செல்கிறவன் (கட்டு) நீங்கியவனாவான்" என்பது, வேதாந்தத் தீர்ப்பு.

இவ்வேதாந்தத்தீர்ப்புவாக்கியம் வருமாறு:

ஶதம் வைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாம் ஶிரஸ்யேகா நாடிர்நிஷ்ரிதைகா । தயோர்஧்வமாயந்நுக்தி ஸ்ரவதி விஷ்வங்ஙந்யா உதுஶ்ரேணி ஸவந்தி ॥"

"ஹிருதயத்திற்கு நூற்றொரு நாடிகள் உள்ளன; அவற்றுள், ஒன்று உச்சியை நோக்கிச் சென்றிருப்பது. அதனால் மேலே செல்கிறவன், சாகாமையை யடைகிறான். மற்றை (நாடிகள்) பலவாகச் செல்பவையாய் (பிராணன்) வெளியே போதற்குக் காரணமா யுள்ளன [ஸம்ஸாரத்தை மீள அடைதற்கே வழியாகின்றன]" (சா - அ - சு - சு; கட - சு - கசு)

"நூற்றொன்று நாடிகள்" என்றது, முக்கியநாடிகளை; அவை எண்ணிறந்தவை யாதலின். முக்கியநாடிகட்குக் கிளைநாடிகளும், கிளைநாடிகட்குச் சிறு கிளைநாடிகளுமாக இவ்வாறு நாடிகள் கோடிக்கணக்கா யுள்ளன வென்க. ப்ர - ந - சு ஐப் பார்க்க. (உஉ, உஉற)

நனவு நிலை.

உங, உஙற.

இனி, அந்நாடிகளில் திரிகின்ற இந்திரியங்களாலேயே விழிப்பென்னும் நிலை நிகழ்கின்றது என்கிறார்:

(ஆத்மாவானவன்) - புத்தியினுள் பதிந்துகிடக்கும் புண்ணிய (பாவ) கர்மங்களாலே முடுக்கப்பட்ட இந்திரியங்களின் வழியாக ஓசை முதலிய விஷயங்களை எப்பொழுது அநுபவிக்கின்றானோ, அப்பொழுது நனவாம்.

உச, உசற.

ஸம்ஹ்ருதெஷ்வீந்த்ரியெஷ்வேஷு ஜாக்ரத்ஸ்வப்ந ஜாக்ரதி ॥

ஸாநஸாந்விஷயாந்ஜந்துர்ஜ்ஞாநாவஸ்தா ததா ஹ்யஸௌ ।

உரு.

உநஸோऽவ்யவஸம்ஹாரஃ ஸுஷுப்திரிதி கத்யதே ॥

புண்ணியமென்பது, பாவத்திற்கும் உபலக்ஷணம். அகக்கரணத்தினுள் அமுந்திக்கிடக்கும் பிராரப்தவினைகளுள் ஒரு நல்வினையேனும் தீவினையேனும் - தனது பயனைத் தருதற்கு அமைந்தகாலமும் தகுந்தஇடமும் ஏற்றகாரணமும் கூடிய வழி, இந்திரியங்களை உசுப்புகின்றது; உசுப்பவே, அவை கீழ்க்கூறிய தம்தம் நாடிகளின்வழியாகத் தம்தம் கோளகத்திற்குச் சென்று வெளியில் போய் ஓசை முதலிய விஷயங்களை அநுபவிக்கின்றன, அவற்றைப் பிரத்தியக்ஷமாகவும் அநுமாநமாகவும் இவைபோன்ற வேறுவிதமாகவும் உணர்கின்றன. இனி, இத்தகைய உணர்வான அநுபவம் எப்பொழுது நிகழ்கின்றதோ, அப்பொழுது அது நனவு என்னும் நிலைமையாம். எனவே, இந்திரியங்களால் ஓசைமுதலியபொருளுணர்ச்சி ஜாகர மென்பதாயிற்று. ஜாகரம் எனினும், நனவு எனினும் ஒக்கும். (உரு, உரூ,ற)

கனவுநிலை.

உச, உசற.

இனி, ஸ்வப்நம் நிகழ்தலைக் கூறுகிறார்:

இவ்விந்திரியங்கள் (உள்ளே) ஒடுங்கியவழி, ஆத்மாவானவன் - நனவுவாஸனையினாலான மாநஸப்பொருள்களை (எப்போழுது) அனுபவிக்கின்றானோ, அப்பொழுது கனவாம்.

இந்திரியங்கள் நாடிகளின்வழியாகத் தம்தம் கோளகத்தினின்று அகக்கரணத்திற்கு மீளச் சென்று அதனுள் ஒடுங்க, அங்ஙனம் ஆத்மாவானவன் நனவுப் பயிற்சியெல்லாம்பதிந்துகிடக்கும் மனத்தினது விகாரமான ஓசைமுதலிய விஷயங்களை உணர்தல் கனவாம் என்பது. (உச, உசற)

உறக்கநிலை.

உரு.

இப்பொழுது, உறக்கத்தைக் கூறுகிறார்:

மனமும் ஒடுங்குதல் உறக்கம் எனப்படுகின்றது.

மனம் ஒடுங்குதலாவது - வாஸனையோடைமைந்த அகக்கரணம் தனது காரணமான அஜ்ஞானவடிவமாய் நிற்றல். (உரு)

ஆத்மா என்றும் ஸச்சிதாநந்தமாம்.

இவ்வாறாக ஆத்மாவிற்கு நனவு முதலிய நிலைமைகள் உபாதிமூலமாக இருக்கின்றன. உபாதிகளோ, அஸங்கஅறிவான ஆத்மாவிற்கு மாயையினாலன்றி வேறுவகையாலமையா:

உசு.

தஸ்யா நாயாஸரூபஃ ஸந்தோ வதுதெ வாரூ ।
உலுரூ உதோऽஜ்ஞ உதெவுவ்ரு ரூயாऽऽவெஸாத்ரு காஸதெ ॥

உஎ.

ஸாவஸ்வாஸ்ரிதெவுவ்ரு வாவொயஸரூயெ வாரூ ।
ஸச்சிதாநந்தாலுவஃ ஸந் ஸ்ரூமெவ வாகாஸதெ ॥

உசு.

ஆகவே, ஆத்மா மாயையினால் மறைப்புண்டு உண்மைமாத்திரமா யிருக்கிறான் ; மாயாசம்பந்தத்தினால் மயங்கியவனாகவும், பித்தனாகவும், அறியாதவனாகவும் இவ்வாறு புலப்படுகிறான்.

ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்றாயிருக்க, "நான் ப்ரஹ்மமா யிருக்கிறேன்" என்று ஒருவர்க்கும் புலப்படாவிடினும், ஆத்மா "நான் இருக்கிறேன்" என உண்மைவழக்கிற்குமாத்திரம் உரியவனா யிருக்கிறான் ; எனினும், ப்ரஹ்மத்தினுடைய மற்றைய இயல்பு புலப்படாது, மாயையினால் மறைப்புண்டு நிற்கிறான் ; "நான் மூடனா யிருக்கிறேன், நான் அறியாதவனா யிருக்கிறேன்" என விபரீதஉணர்வும் அறியாமையும் காணப்படுகின்றமையின். அல்லாவிடில், ஸச்சிதாநந்த இயல்பிலே மூடத்தன்மை முதலியன எவ்வாறு வருத லாகும் ? என்பது கருத்து. (உசு)

உஎ.

ஆயினும், ஆத்மா எப்பொழுதும் தன்இயல்பிலே ஸ்வப்பிரகாசமான ஸச்சிதாநந்தமே யாம் ; என்பதற்கு அறிகுறியை அருளிச்செய்கிறார் :

"சுகமாகத் தூங்கினேன்"என இவ்வாறு விழிப்புசமயத்திலே ஆத்மா ஸச்சிதாநந்தவடிவமாய்ச் செவ்வனே விளங்குகிறான்.

"சுகமாகத் தூங்கினேன்"என்றுவிடத்து, "சுகமாக" என்பது - ஸ்வயம்பிரகாச உண்மையாய், புதிதாக இடையே வந்தமையாது என்றுமுள்ள ஆநந்தவடிவமான ஆத்மஸ்வரூபத்தையும், "தூங்கினேன்"என்பது - உபாதியனைத்தும் ஒழிந்துநிற்றலைக் குறிக்கின்றன. உறக்கத்திலே சுகமானது வெளியிலிருந்து புதிதாக வருவ தன்று ; உயர்ந்த மேல்மாடமும், மெல்லிய தென்றலும், ஒள்ளிய நிலவும், இனிய வீணையும், மதர்த்த மங்கையும், ஹம்ஸதூலமயில்தோகையினாலான பூமெத்தையும், பிறவுமாகிய பொருள்களை அனுபவித்தற்குத் கருவியான இந்திரியங்கள் அங்ஙனம் ஓய்ந்துவிட்டமையின் என்க. மேலும், உபாதிஒடுங்குவதனாலான தொழிலொழிவானது சுகத்திற்குக் கருவியாகாது ; ஒன்றுபோக மற்றொன்று வருதல் காணப்படாமையானும், இன்மையினின்று உண்மை உண்டாகமாட்டாமையானும் (வே - சீ - உ - கசு) என்க. அன்றியும், துன்பமின்

உஅ.

உத்தம ஜமதஶாவிஶ்ய ஹாஸஶாநெ ஶஹெஶ்வரெ ।
ஸுஷுப்தாவுயொऽவி ஹாஸஹெ கிஶுதாநெ வடாஹயம் ॥

உகூ.

தஸ்ஸாத்தா ஷ ஹாவாநாழ் ஂஸ்வரூபாஶ்ரயணாஶ்ரயா ।
ஸத்யம் ஆநஶநஶம் ஷ ஶுத்தா ஷ்ரஹ்மாவஶிஶ்யதெ ॥

மையே சுகம் என்னும் சொல்லால் கூறப்படுகின்றது என்றல் பொருந்தாது; உறக்கத்திலே துன்பமின்மையை அநுபவித்தற்கான கருவி இல்லாமையாலும், முன் அநுபவியாததைப் பின் நினைவுகூர்தல் செல்லாமையாலுமென்க. ஆகவே, "சுகமாகத்தூங்கினேன்" என்பது - அநுபவித்ததை நினைவுகூர்த லாதலால், உறக்கத்திலே அனுபவிக்கப்பெற்ற சுகமானது உள்ளதுஉள்ளபடியான ஸ்வரூபஆநந்தத்தைக் குறிக்கின்றது. தொழிற்பாடில்லாது, உறுப்பில்லாது, திரிபில்லாதிருக்கும் ப்ரஹ்மமான ஆத்மாவிற்கு நிற்றலும், நடத்தலும், உட்காருதலும், படுத்தலும், உறங்கலும், விழித்தலும் இயல்பிலே தாமாகவே இல்லையாதலால், இவையெல்லாம் உபாதிகளா லானவை என உபாதிகள்ஒடுங்கிநிற்றலே அதற்கு உறக்கமாம்; அது "தூங்கினேன்" எனக் குறிக்கப்படுகின்றது. ஆகவே, இந்த ஆத்மாவானது எல்லா நிலைமைகளிலும் ஸச்சிதாநந்தஸ்வரூபமே யாம் என்றபடி. (உஎ)

ஈச்வரனே ஸ்வயம்பிரகாசஉண்மை.

உஅ.

அப்படிப்பட்ட

மஹேச்வரன் இவ்வாறு ஜகத்திலுள் புகுந்து விளங்க, சூரியன் முதலானவையும் விளங்குகின்றன; குடம்முதலிய மற்றை(ப்பொருள்கள்) எவ்வளவு?

ப்ரஹ்மமானது கீழேகூறியபடி நனவு கனவு உறக்கம் எனப்பட்ட மூன்று நிலைமைகளிலும் நன்கு விளங்குகின்றது; விளங்கவே, சூரியன்முதலியவை அதனால், அதனது மகிமையினால், அதனது பிரகாசத்தினால் விளங்குகின்றன; தமது சொந்த மகிமையினால், சொந்தப் பிரகாசத்தினால் அல்ல. இங்ஙனம் "பிரகாசத்தன்மையன" எனப்படும் சூரியன்முதலியவற்றிற்கே சொந்தப்பிரகாசம் இல்லையாயின் "அப்பிரகாசத்தன்மையன" எனப்படும் குடம்முதலியவற்றிற்குச் சொந்தப்பிரகாச மில்லையெனச் சொல்லவும் வேண்டுமோ? என்பது பொருள். (உஅ)

உகூ.

இவ்வாறு இப்பிரபஞ்சத்திற்குச் சொந்தப் பிரகாச மில்லை; சொந்த உண்மையு மில்லை:

ஆதலால், பொருள்களுடைய உண்மையும் ஈச்வரனைச் சார்ந்த நிலையுடைத்து. "ப்ரஹ்மம் ஸத்தியமானது, அறிவானது, அளவில்லாதது" என சுருதியினால் உணர்த்தப்படுகின்றது.

உகூ.

ஜாக்ரதஸ்வப்நஸுஷுப்தி ஸுஸத்யம் ஜடமநுபவசு ।

"உண்மையும்" என்பதிலுள்ள உம்மை - விளக்கத்தையும் தழுவிநிற்கின்றது. உண்மையும் விளக்கமும் ஈச்வரனிடத்து உள்ளன. அவை அவனது சம்பந்தத்தால் குடம்முதலிய பொருள்களில் செல்லுகின்றமையின், இந்த ஜடப் பிரபஞ்சம் ஈச்வரனால் உள்ளது, ஈச்வரனால் விளங்குகின்றது என்பதாம் ஆயின், உண்மையும் விளக்கமும் ஈச்வரனிடத்து உள்ளன என்பதற்குச் சுருதிப் பிரமாணம் யாதெனின், அது வருமாறு :

"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம ।"

"ப்ரஹ்மம் ஸத்தியமானது, அறிவானது, அளவில்லாதது"—

(தை - உப - உ - க)

என்பது, ப்ரஹ்மஸ்வரூபத்தை உணர்த்துகின்ற திருவாக்கு. யாதொன்று எவ்வடிவமாக நிச்சயிக்கப்பட்டதோ அவ்வடிவம் பிறழாதிருக்க, அது ஸத்தியமாம் ; அதுதான் உள்ள தென்பதாம். யாதொன்று எவ்வடிவமாக நிச்சயிக்கப்பட்டதோ அவ்வடிவம் பிறழ, அது அஸத்தியமாம், பொய்ம்மையாம். எனவே, ஸத்தியமாகிய உண்மையும், அறிவாகிய விளக்கமும் ப்ரஹ்மத்தினுடைய சிறப்பியல்பாம் என்றவாறு. (உகூ)

உகூ.

ஆயினும், அவை வேறோர் பொருளினுடைய இயல்பாதல் செல்லாதோ ? எனச் சங்கித்து, செல்லாதென்பதைக் காட்டுகிறார் :

நனவுகனவுகளிலே உண்டாவனவெல்லாம் அஸத்தியமாம், குருடன்போல ஜடமாம்.

நனவிலும் கனவிலும் காணப்படுவனவெல்லாம் கானல்நீர்போலப் பிறழ்ந்திடும் ஜடமாதலால், பொய்ம்மையாம் என்க. அவ்வாறே, அவை குருட்டுமுடவன்போல் பராதீனச்செயலுடைமையால், ஜடமாம் என்றபடி. (உகூ.)

"நான்" என்பது.

இந்தப் பொய்ம்மையான ஜடப் பிரபஞ்சமனைத்திற்கும் ஆதாரமாய் எங்குமுள்ள ஈச்வரனே உண்மைப்பிரகாசமாம் என உணர்த்தி, அவ்வீச்வரனே உள்ளேயுள்ள ஆத்மாவு மாம் என அருளிச்செய்கிறார் :

௩௦, ௩௦௮.

ஂஸ்வஸ்ஸ்வாஹிதெ்வழி ஹாஸதெ ஸவுஜஹ-ஂஷ-ஂ ॥
நிவிகுலுஸ்ஸ ஸ-ஂஐஸ்ஸ ஶிநஸ்ஸெ்தாஹம் தி்யா ।

௩க, ௩கற.

நிவிகுலுஂ வாஸ்ஂ ஸ்ரஹ நியகு-ஏதாவியகுலுநழி ॥
ய-ஏயுஸ்ஸகாஸ்ய-ஏசாஹ்ர நிஶ-ஂகூமஂமொவஶழி ।

௩உ, ௩உற.

விவெகஸஶெய ஸ-ஂஐழி ஹெஹாதீநாஂ வுவொஹநாஸ ॥
யயாஹரிகூஂ ஸஂகூஷிவுநகூஷெ்தெ: கிஞ்சிதீகூயுதெ ।

௩௦, ௩௦௮.

எல்லாய்பிராணிகளுள்ளும்(எது) "நான்"என இவ்வாறு புலப்படுகின்றதோ, (அது) ஈச்வரனேதான். "நான்" என்பது - நிர்விகல்பம் [வேற்றுமையில்லது], சுத்தம், மலினம் [மங்கல்] என மூவகைத்து.

௩க, ௩கற.

அவற்றுள், முதல் அகங்காரத்தைக் கூறுகிறார் :

நிர்விகல்பமாவது - தூசியும், இருளும், புகையும், மேகமும் முற்ற நீங்கிய ஆகாசம்போல், கற்பனையெல்லாம் துடைக்கப்பெற்ற பரப்ரஹ்ம மாம்.

தூசிமுதலியமறைப்பெல்லாம் முழுதும் அகன்று பளிச்சென்று வெளிவாங்கிநிற்கும் வானம்போல், வேற்றுமையெல்லாம் போனவிடந்தெரியாது சிதறடிக்கப்பெற்றதாய்த் தன்இயல்பிலே "நான்"என விளங்கும் ஆத்மா, ப்ரஹ்மமே என்றபடி. (௩க, ௩கற)

௩உ, ௩உற.

இரண்டாம் அகங்காரத்தைக் கூறுகிறார் :

ஆராய்ச்சிசமயத்திலே உடம்புமுதலியவற்றை அற்றிநிற்பதனால், சுத்த (அகங்காரம்) - குறைந்த நக்ஷத்திரங்களால் (குறிக்கப்படும்) ஆகாசம்போல், சிறுதுபொழுது காணப்படுகின்றது.

ஆத்மாவானது யாவர்க்கும் எப்பொழுதும் விளங்காவிடினும், ஆத்மப்ரஹ்மஇயல்பைத் தீர ஆராய்ச்சிசெய்தவனுக்கு அது [ஆத்மா] விளங்கவேவிளங்குகின்றது. அடக்கம் பொறுமை முதலிய நற்குணம்மிக்கவன் சுருதியுக்திகளால் அத்வைததத்வத்தை ஆராய்ச்சிசெய்யுங்கால், உடம்புமனம்முதலியவற்றை ஆத்மப்பொருளல்லாதவையாகக் கண்டு தள்ள, அங்ஙனம் ஆத்மாவை வரைசெய்வ

௩௩, ௩௩௨.

தெஹெந்த்ரியாதிஸம்ஸர்காத் ஸமிநம் கலுஷீக்ருதம் ।
யதாऽऽகாஶம் தஶோபாதிஶம் ஷுபாத்ருஶவகாஶவத் ।

௩௪, ௩௪௨.

கஹிதெ.தாஶ்வாஶ் ஹாவதி யதா ஜீவஃ ப்ரவர்ததெ ॥
ஸவஜ்ஞஃ ஸவகுதாபி ஸ ததா ஜீவோ ஹவிஷ்யதி ।

தொன்று இல்லாமையின் சுத்தமாயிருக்கும் "நான்"என்னும் ஆத்மாவானது ப்ரஹ்மமாக விளங்குகின்றது. குறைந்த நக்ஷத்திரங்களால் - தோற்றம்குறைந்த விண்ணொளிகளால். "குறைந்த நக்ஷத்திரங்களால் (குறிக்கப்படும்)ஆகாசம்போல்"என்னும் திருஷ்டாந்தமானது - ஆராய்ச்சிசமயத்திலே விளங்குகின்ற ஆத்மவடிவத்தைத் தெளிவிப்பதோடு, நிர்விகல்பஅகங்காரத்திற்கும் சுத்தஅகங்காரத்திற்குமுள்ள வேற்றுமையையும் எடுத்துக்காட்டுவதை நோக்குக. (௩௨,௩௨௮)

மூன்றும் அகங்காரத்தைக் கூறுகிறார்:

௩௩, ௩௩௮.

இருள்வியாபித்த ஆகாசம் எப்படி இடமல்லாததுபோல் தோற்றுகின்றதோ, (அப்படி) மலின(அகங்காரமானது) உடம்புஇந்திரியம்முதலியவற்றின் கலப்பினால் கலக்கப்பட்டு (ப்ரஹ்மமல்லாததுபோல் புலப்படுகின்றது).

கலப்பினால் - மயக்கத்தினால். இடமல்லாததுபோல் - வரைசெய்யப்பட்டுநிற்பதுபோல். இந்த அகங்காரம் எல்லாப்பிராணிகட்கும் சாதாரணமாயுள்ளது. (௩௩, ௩௩௮)

௩௪, ௩௪௮.

உடம்புமனம்முதலியவற்றால் இவ்வாறு மயங்குகின்ற

ஜீவன் எப்பொழுது ஈச்வரநிலையை 'நான்"எனத்'தெளிகின்றானோ, அப்பொழுது ஜீவன் எல்லாம் அறிபவனாகவும் எல்லாம் செய்பவனாகவும் ஆவான்.

"எப்பொழுது"என்றல், தெளிதலருமைமைநோக்கி. (௩௪, ௩௪௮)

ஆயின், மயக்கம் நீங்க ஆத்மாவைக் காணுதல் எப்படி? —கூறுவோம்:

௩௫, ௩௫௨.

ஶாயயாऽயிகஸம்ஶுஶ்ஶ விஶ்யெஶ்ஶ வ்ரகாஶதெ ॥
நிவிகல்பாநுபவஸ்ஸாநெ ஸஶ்மாத்மா வ்ரகாஶதெ ।

௩௬, ௩௬௨.

அவிஶ்யாவ்ருதிரோயாநவ்ருவாயெ வரஶெஶ்வரஃ ॥
ஶக்ஷிணாஶுதிபுரஶுவொऽஸள ஸ்வயமேவ வ்ரகாஶதெ

௩௭, ௩௭௨.

இதி ஸ்ரீஶக்ஷிணாஶுதிபுஷ்தோத்ரவ்யாக்யாயாம் ।
வ்ரவெஶ்ஶாநஸொல்லாஸெ ஷஷ்஠ஶுல்லாஸஸம்ஶ்ரஹஃ ॥

௩௫, ௩௫௨.

மாயையினால் மயங்கிநிற்கும் ஈச்வரன் வித்யையினால் புலப்படுகிறான். நிர்விகல்பத்தைச் சிந்திக்க, ஆத்மா செவ்வனே விளங்குகிறான்.

மாயையினால் மயங்கிநிற்பவன் முற்பிறவியிலேனும், இப்பிறவியிலேனும் செய்யப்பட்ட நல்வினையினால் நன்றாகப் புத்திதிருந்தியவனாய் வேதாந்தநூல்களை ஆராய, ஆங்கவனுக்கு ஞான முதிக்கின்றது. அதனால், ஆத்மா ஒருவாறு புலப்படுகின்றது (ச - ௩௨, ௩௨௮). இனி, அவ்வாறு புலப்படும் ஆத்மாவைச் சிந்திக்கச்சிந்திக்க மயக்கம் அறத்தீர்ந்து மேன்மேலும் தெளிவேறுவதனால், ப்ரஹ்மமான ஆத்மஸ்வரூபம் நிர்விகல்பஅறிவான ஆநந்தமாய், பூர்ணமாய் விளங்குகின்றது (ச - ௩௧, ௩௧௮). (௩௫, ௩௫௮)

௩௬, ௩௬௮.

இவ்வுல்லாஸப் பொருளை முடிக்கிறார் :

அவித்யை என்னும் திரையைத் தள்ளினவளவிலே, தக்ஷிணாமூர்த்திவடிவான அப்பரமேச்வரன் தானே விளங்குகிறான் [புலப்படுகிறான்].

௩௭, ௩௭௮.

கஷ - ஆம் பக்கத்திலுள்ள ச - ஆம் சுலோகத்தின் உரையை, இதனோடு முடிக்கிறார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் நான்காமுல்லாஸப் பொழிப்புரை முற்றும்.

நான்காம் உல்லாஸம்.

பதவுரை.

க.

வடவடாஉயஃ	"குடம் ஆடை முதலிய
ஹாவாஃ	பொருள்கள்
ஷுதஃ	தாமே
ஸதஃ	உள்ளவையாய்
ஷுகாஶதெ	விளங்குகின்றன ;
ஈஶ்வரஸ்ய	ஈச்வரனுடைய
ஸாவெஶாத்	கலப்பினால்
ந(ஷுகாஶதெ)	(விளங்குகின்றன)வில்லை"
இதி	என்ற
ஈஹ	இதற்கு
உத்தரம்	மறுமொழி
உச்யதெ	கூறப்படுகின்றது.

ச.

யஸ்ய தத்	எதனுடைய
ஜ்ஞாநம்	அறிவானது
நாநாஶக்தி-	பல சில்லிகளையுடைய
வடொஷரஷ்ஷித-	குடத்தின்உள்ளேவைக்கப்பட்ட
ஶஹாதீபவத் லா-	பெரிய விளக்கின் ஒளிபோல்
லாஸ்ஸரம்	ஒளிர்கின்றதாய்

வக்ஷுராதிகரண த்வாரா	கண் முதலிய இந்திரியங்களின் வழியாக
வஹிஃ	வெளியில்
ஸ்ருதெ	செல்லுகின்றதோ,
ஜாநாமி	"அறிகிறேன்"
இதி	என்று
(யத்)	(எது)
(ஸ்வயமேவ)	(தானே)
(ஸ்ரீதி)	(விளங்குகின்றதோ,)
ஸ்ரீயதே	விளங்குகின்ற
தமேவ	அதனையே
ஸமந்த	அடுத்து
ஸர்வத	இந்த
ஸகலம்	எல்லா
ஜகத்	பிரபஞ்சமும்
ஸ்ரீதி	விளங்குகின்றது;
தஸ்மை	அந்த
ஸ்ரீகுருமூர்த்தி ஸ்வரூபாய	ஸ்ரீகுருமூர்த்தி ஸ்வரூபமான
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயெ	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
இதி	இந்த
நமஃ	நமஸ்காரம்.

அஸ்ய	இதற்கு
அயம்	இது
பாவஃ	அபிப்பிராயம்.

உ.

அஹம்	"நான்"
இதி	என்று

கூநாஸம்யாதா	நினைப்பவன்
ஜாநாதி	"அறிகிறேன்"
இதி	என்று
ந ஸ்ஹாரெக வெக	விளங்காவிட்டால்,
கஸ்ய	யாருக்கு
கஃ வா	யார்தான்
ப்ரகாஸெத	விளங்கக்கூடும்?
ஜகத் ச	ஜகத்தும்
ஸுஷுப்தவத்	தூக்கத்தில் போல
ஸ்யாத்	இருக்கும்.

௩.

ப்ராக்	முன்னும்
ஊர்த்வம் ச	பின்னும்
கஸ்தாதி	இல்லாதவற்றிற்கு
ஸத்த்வ	உண்மையானது
வர்தமாநெ கஸி	நிகழ்காலத்திலும்
ஸ்வதஃ	ஸ்வயமாக
ந (கஸ்தி)	இல்லை.
தஸ்மாத்	ஆதலால்,
ஸத்த்வ	உண்மையானது
ப்ராக்ஸ்வ்வுக்வவிவர்ஜிதெ	முன்மையும் பின்மையும் இல்லாத
ஈஶெ	ஈச்வரனிடத்து
ஸ்தித	நிலைத்தது.

௪, ௪௮.

ஜகாஃ	ஜடங்கள்
ஈஶ்வரம் விநா	ஈச்வரனில்லாது

ஸ்வயமேவ	தாமாகவே
ப்ரகாஶேரந் யதி	விளங்குமாகில்,
ஸர்வம்	எல்லாம்
ஸர்வஸ்ய	எல்லாவற்றிற்கும்
஭ாஸேத	விளங்கும் ;
வா	அல்லது,
கிம் சந	ஒன்றும்
ந ஭ாஸேத	விளங்கமாட்டாது.
தஸ்மாத்	ஆகவே,
ஜடம்	ஜகத்தானது
ஸர்வஜ்ஞம்	எல்லாவற்றையும் அறிவதாகவாயினும்
ஈஷத்ஜ்ஞம் வா	(ஒன்றையும்) அறியாததாக வாயினும்
ஸகரூபகம்	ஒருபடித்தாய்
ஸ்யாத்	இருக்கும்.

ரு, சு.

ஜடசேதநயோ:	ஜடமும் சேதனமும்
ஸ்வயம்ப்ரகாஶகே	ஸ்வப்பிரகாசமாயிருத்தல்
தாவேவ	ஒரு நிகரானவளவிலே,
ப்ராஹ்ய ப்ராஹக தாதயோ:	உணரப்படுவதும் உணர்வது மாகிய தன்மை முதலியன
ஏகயோ:	ஒன்றற்கொன்று
தாவேவ	சமமாகவே
ப்ரஸஜ்யேரந்	ஆகிவிடும்.
இந்த்ரியாணாம்	(அங்ஙனம்) இந்திரியங்கட்கு
ஸநியதத்வாத்	முறை இன்மையால்,

ரஸாஶயாः	சுவைமுதலியன
சாக்ஷுஷாः	கண்ணால் அறியப்படுவன
ஸ்யுः	ஆகும்.

எ, எஉ.

உலிநாஉலிநாஉபுவஶாதா-ஹாமதயுயொः	கண்ணாடியினுடைய மங்கலான பின்பக்கத்தையும் துலக்கமான முன்பக்கத்தையும்நிகர்த்தவையாய்
க்ரியாஶக்திஜ்ஞாநஶக்தெயாः	கிரியாசக்தி ஞானசக்திகளான
சுந்தःகரணஸாமயொः	அந்தக்கரண பக்கங்களிலே
ப்ரதிபிம்பெ	பிரதிபிம்பத்தில் [பிரதிபிம்பத்தோடு ஒன்றாக]
ஸுரங்கு	விளங்கும்
ஈஶ்வரः	ஈச்வரன்
கதா	"செய்பவன்,"
ஜ்ஞாதா	"அறிபவன்"
இதி	என்று
கத்யதெ	சொல்லப்படுகிறான்.

அ, அஉ.

புத்தெः	புத்தியானது
நிஉபுலः	அழுக்கில்லாத
உபபுணः யதா	கண்ணாடி போல்
ஸத்ஸுணொத்கர்ஷாசு	ஸத்துவகுணமேம்பாட்டினால் (துலக்கமாயுள்ள வளவிலே,)
ஆதஹாயாநுஹாவதः	(தன்னிடத்துள்ள) ஆத்மப் பிரதிரூபமகிமையினால்
விஷயஹாயாடு	விஷயப்பிரதிரூபத்தை
ஹ்ரஹாதி	பிடிக்கின்றது.

க, கூஉ.

ரயாஜுநெநிவயெ	சக்கிரவட்டையிலே
கீலிதாஃ	பொருத்தப்பட்ட
கீலகாஃ உவ	ஆரைக்கால் போன்ற
நிவியாநி	எல்லா
ஐந்ரியாணி கவி	இந்திரியங்களும்
கதஃகரணஸம்வாஸாத்	அகக்கரண ஸம்பந்தத்தினால்
(ஸ்வஸ்வ்யாவாரான்)	(தம் தம் தொழில்களை)
(கரவுஜி)	(செய்கின்றன.)

கo, கக.

ஜாலஸம்ஸ்ரிதஸூத்ரவத்	வலையிலே நன்கு பின்னப்பட்ட நூல்கள் போல,
கந்தஃகரணெ	அகக்கரணத்திலே
நாட்யஃ	நாடிகள்
ஸ்ரிதாஃ	பின்னப்பட்டிருக்கின்றன.
ஸஹ்ஸாநி	எல்லா
கரணாநி	இந்திரியங்களும்,
லொகாகாலிஃ	கோலகம் வரையிற் சென்றுள்ள
தாலிஃ கர	அவற்றின்வழியாகவே
யதாஸ்வம்	தமக்குரிய
விஷயம் ப்ரதி	விஷயத்தை நோக்கி,
ஸ்ரவிஜ்வத்	தீப்பொறிகள் போல
ப்ரஸவ்ஜி	சஞ்சரிக்கின்றன.

கஉ.

தெஹஸ்ய	உடம்பினுடைய
மத்யே	நடு

ஸ்தாநம்	இடமானது
மூலாதாரம்	மூலாதாரம்
இதி	என்று
கதயந்தி	கூறப்படுகிறது ;
வாயோ:	பாயுவினின்று
த்விதலாத்	இரண்டங்குலத்திற்கு
ஊர்த்வம் து	மேலாகவும்,
ஹ்ரஸ்வாத்	ஆண்குறியினின்று
த்விதலாத்	இரண்டங்குலத்திற்கு
அதஃ து	கீழாகவும் (உள்ளது).

கங. கஙஉ.

த்ரிகோணம்	(அது) முக்கோணமுடையதாய்
அதோமுகம் ச	தலைகீழாகக் கவிழ்ந்ததுமாய்
கந்யகாயோநிஸந்நிபம்	கன்னிகையினது யோனியை நிகர்த்ததாய் (உள்ளது).
ப்ராணாக்நிபிந்துநாதாந்	பிராணன், அக்னி, பிந்து, நாதம் என்றிவற்றை
ஸவிதீ	கிளப்புவதாகிய
குண்டலிநீ நாம	குண்டலினீ என்னும்
வரா	மேலான
ஶக்தி:	சக்தி
யத்ர	எங்கே
ப்ரதிஷ்ட்டிதா	தங்கியுளதோ ;
ஸா	அது
ஸரஸ்வதீ	ஸரஸவதீ (எனவும் படும்.)

கச, கரு, கருஉ.

ஸுஷும்நா	ஸுஷும்நையானது
மூலாதாரத்ரிகோணஸ்தா	மூலாதாரத்தினுடைய முதல் முனையி லிருப்பதாய்

ப்ரஹ்மரந்த்ரமார்க்கேண	ப்ரஹ்மரந்திரத்திற்குச் செல்வதாய்
உபரி	அடியில்
கந்த்ரஹ்ஸ்தி நவம்ஸாகா	பாதி வெடித்த மூங்கிற்குழல் போன்றதாய்
ஷடாதாரஸமந்விதா	ஆறு ஆதாரங்களை யுடையதாய்
(ஹவதி)	(உள்ளது).
ஊநாவிஜுரெ	இடை பிங்களை
தெ	இரண்டும்
தத்ராஸ்தகோணயோஃ	அதனது பக்கமுனைகளிலே
ஜாதெ	கிளம்பியவையாய்
ஸ்திதெ	நிற்கின்றன.
நாடீசக்ரம்	(இவை இவ்வாறமைந்து நிற்றலை யோகிகள்) நாடீ சக்கிரம்
இதி	என்று
வதந்தி	கூறுகிறார்கள்.
நாட்யஃ	(மற்றை) நாடிகள்
தஸ்மாத்	அதனின்று
ஸமுத்பன்னாஃ	கிளம்பியுள்ளன.

கசூ, கசூஉ.

நாடீசக்ரேண	நாடீசக்கிரத்தோடு
ஸம்ஸ்ரிதெ	பின்னி நிற்கும்
காந்தாரீ ஹஸ்திஜிஹ்வெ	காந்தாரி ஹஸ்திஜிக்வை என்னும் பெயருடைய
உபெ	இரண்டு (நாடிகளும்)
நாஸிகாந்தம்	மூக்குவரை
கதெ	சென்றவையாய்
நயநாந்தம்	கண்வரை
வ்ரஜதஃ	ஓடுகின்றன.

கஎ, கஅ, கக, ககூ.

வ-ஷா	பூஷை,
கூலம்வ-ஷா வ	அலம்புஸை என்னும்
நாஃீ	நாடிகள்
கூ-க்கு-டாண்ணழ ஊவ	கோழிமுட்டைபோல்
ஷ்ரிதழ	உள்ள
நாஹிண்ணயழ	கொப்பூழ் வட்டத்தை
சூஷ்ரிதா	சார்ந்து
கணஉயழ	இரண்டு செவிகளையும்
உவாஷ்ரிதெ	ஒட்டிநிற்கின்றன ;
ஶு-க்லாஹ்வயா	சுக்லை என்னும்
நாஃீ	நாடி
கஷ்ஸாக	அதனின்று (கிளம்பி)
ஹ-ஊயயழ	புருவங்களின் நடுவை
உவஸவடுதி	கிட்டி நிற்கின்றது ;
ஸரஸ்வத்யாஹ்வயா	ஸரஸ்வதீ என்னும்
நாஃீ	நாடி
ஜிஹ்வாக்ரா	நாக்குவரை யுள்ளதாய்
வாக்ப்ரஸாரிணீ	வாக்கைக் கிளப்புவதாய்(உள்ளது);
விஶ்வோதரீ நாக	(இரைப்பையிலுள்ள) விச்வோதரீ என்னும்
நாஃீ	நாடி (எதுவோ),
ஸா	அது
வத-விதயழ	நால்வகைத்தான
கநம்	உணவை
ஹ-ம்கெ	உண்கின்றது ;
வயஸ்வினீ	பயஸ்வினீ (என்னும் நாடி)
தொயழ	ஜலத்தை

வீக்வா　　குடித்து,
கண்ணஷ்வா　　தொண்டையிலே நிற்பதாய்
க்ஷுதி　　இருமலை (அல்லது தும்மலை)
கரோதி　　செய்கிறது.

உ0, உ0ற.

திஸ்ரஃ　　மூன்று
நாட்யஃ　　நாடிகளும்
நாடீசக்ராத்　　நாடீசக்கிரத்தினின்று
அயோமுகாஃ　　கீழ்முகமாக
ஸமுத்ஃதாஃ　　கிளம்பியுள்ளன ;
ராகா　　(அவற்றுள்,) ராகை
ரக்தம்　　ரேதஸையும்,
ஸிநீவாலீ　　ஸிநீவாலீ
மூத்ரம்　　மூத்திரத்தையும்,
குஹ்யம்　　குகூ
மலம்　　மலத்தையும்
முஞ்சேத்　　விடும்.

உக, உகஅ.

வாநஃ　　அன்றியும்,
ஸங்கிநீ　　சங்கினீ (என்னும்)
நாடீ　　நாடியானது,
ஆஹாரஸாரம்　　உட்கொண்ட உணவின் ஸாரத்தை
ஆதாய　　எடுத்து,
ஊர்த்வாபாகாய　　உச்சித்துவாரத்திற்கு
கச்சா　　சென்று,
மூர்த்நி　　சிரசிலே

ஸுயாம்	அமிருதத்தை
ஸஞ்ஜநயதி	பெருக்குகின்றது.

உஉ, உஉஉ.

ஶதம் ச ஏகா ச	"நூற்றொன்று
நாட்யஃ	நாடிகள்
ஸந்தி	உள்ளன.
தாஸாம்	அவற்றுள்,
ஏகா	ஒன்று
ஶிரோமுகா	உச்சியிற் சென்றிருப்பது.
தயா	அதன் வழியாக
ஊர்த்வ	மேலே
ஆயன்	செல்கிறவன்
முக்தஃ	(கட்டு) நீங்கியவனாக
ஸ்யாத்	ஆவான்"
இதி	என்பது;
வேதாந்தநிர்ணயஃ	வேதாந்தத் தீர்ப்பு.

உங, உங உ.

ஹ்ருதயகுஹரகதைஃ	புத்தியினுள் பதிந்துகிடக்கும்
புண்யைஃ	புண்ணிய (பாவ) கர்மங்களாலே
ப்ரதிபந்தகைஃ	முடுக்கப்பட்ட இந்திரியங்களின் வழியாக
ஶப்தாதீன்	ஓசை முதலிய
விஷயான்	விஷயங்களை
யதா	எப்பொழுது
ஸேவதே	(ஆத்மாவானவன்) அநுபவிக்கின்றானோ;

தஹா	அப்பொழுது
ஜாக்ரிதம்	நனவாக
ஹவேசு	ஆகும்.

உச, உசஎ.

வஷ	இந்த
இந்த்ரியெஷ	இந்திரியங்கள்
ஸம்ஹ்ருதெஷ	(உள்ளே) ஒடுங்கியவழி,
வ ஆத்ம	ஆத்மாவானவன்
ஜாக்ரத்ஸ்வாப்நாந்	நனவுவாஸனையினாலான
பாவாந்	மனோவிகாரங்களாகிய
விஷயாந்	பொருள்களை
ஹ்ரம்கெ	(எப்பொழுது)அனுபவிக்கின்றானோ,
தஹா	அப்பொழுது
ஸ்வாவஸ்தா	கனவுநிலை
ஹவேசு	ஆகும்.

உடு.

உபஸம் ஸுவி	மனத்தினுடையவும்
உபஸம்ஹாரஃ	ஒடுங்குதல்
ஸுஷுப்திஃ	உறக்கம்
இதி	என்று
கத்யெ	கூறப்படுகின்றது.

உசு.

தஸ்மாசு	ஆகவே,
வ ஆத்ம	ஆத்மா
மாயாஸம்வ்ருதஃ	மாயையினால் மறைக்கப்பட்டவனாய்

ஸந்நாதம்	உண்மைமாத்திரமாக
வதுதெ	இருக்கிறான் ;
மாயாऽऽவெஶாக	மாயாசம்பந்தத்தினால்
மஹம்	மயங்கியவனாகவும்,
மதம்	பித்தனாகவும்,
அஜ்ஞம்	அறியாதவனாகவும்
இதி வனவம்	இவ்வாறு
வ்யகாஶதெ	புலப்படுகிறான்.

உஎ.

ஸு஖ம்	"சுகமாக
அஸ்வாபம்	தூங்கினேன்"
இதி	என
வனவழ	இவ்வாறு
வ்யவொயஸமயெ	விழிப்புசமயத்திலே
வாஶாங	ஆத்மா
ஸச்சிதாநந்த ரூபம் ஸங	ஸச்சிதாநந்த வடிவமாய்
ஸமுக் வனவ	செவ்வனே
வ்யகாஶதெ	விளங்குகிறான்.

உஅ.

மஹேஶ்வரெ	மஹேச்வரன்
இதம்	இவ்வாறு
ஜகத	பிரபஞ்சத்தை
ஸமாவிஶ்ய	புகுந்து
஭ாஸமாநெ	விளங்க,
ஸூர்யாதயः கவி	சூரியன் முதலானவைகூட
஭ாஸதெ	விளங்குகின்றன ;

வடாஉயம்	குடம் முதலிய
சுநெ	மற்றை (ப் பொருள்கள்)
கிஉ௦த	எவ்வளவு ?

உகூ.

தஷாசு	ஆதலால்,
ஹாவாநாழ	பொருள்களுடைய
ஸதா வ	உண்மையும்
ஈஶ்வராஶ்ரயணாஶ்ரயா	ஈச்வரனைச் சார்ந்த நிலையுடைத்தாய்
(வதுதெ)	(இருக்கின்றது.)
ப்ரஹ	"ப்ரஹ்மம்
ஸத்ய	ஸத்தியமாய்
ஜ்ஞாநம்	அறிவாய்
சுநஞ்ச வ	அளவில்லதுமாய் (உள்ளது)"
(இதி)	(என்று)
ஶ்ருதா	சுருதியினால்
உவகிஶ்யதெ	உணர்த்தப்படுகிறது.

உகூஉ.

ஜாக்ரதிவொஹவழ	நனவுகனவுகளிலே உண்டாகின்ற
ஸவபுழ	எல்லாம்
சுஸத்ய	அஸத்தியமாய்
சுநுவசு	குருடன்போல
ஜடம்	ஜடமாய்
(ஹவதி)	(இருக்கின்றது.)

௩௦, ௩௦உ.

ஸவபுஜ்ஞஷ	எல்லாப் பிராணிகளுள்ளும்
சுஹம்	(எது) "நான்"

இதி	என
வனவழி	இவ்வாறு
ஹாஸதெ	புலப்படுகின்றதோ,
ஈஶ்வரஃ ச	(அது) ஈச்வரனேதான்.
அஹம்	"நான்" (என்பது)
நிவிகல்பஃ ச	நிர்விகல்பம் [வேற்றுமையில்லது],
ஶுத்தஃ ச	சுத்தம்,
மலிநஃ ச	மலினம் [மங்கல்]
இதி	என
த்ரயா	மூவகைத்தாய்
(வதுதெ)	(உளது.)

நக, நகஉ.

நிவிகல்பழி	நிர்விகல்பமாவது
யதுயுகாரா யதுசாஜ - நிஶாக்ஷ மஹநொவழி	தூசியும், இருளும், புகையும், மேகமும் முற்ற நீங்கிய ஆகாசம் போல்,
நியதுதாவிலகுவுநழி	கற்பனையெல்லாம் துடைக்கப்பெற்ற
வரா	மேலான
஬்ரஹ	ப்ரஹ்மமாய்
(ஹவதி)	(உளது.)

நஉ, நஉஉ.

விவெகஸமயெ	ஆராய்ச்சிஸமயத்திலே
தெஹாதீநாழி	உடம்பு முதலியவற்றை
வுவொஹநாக	அகற்றிநிற்பதனால்,
ஶுத்தழி	சுத்த (அகங்காரம்)
ஸங்க்ஷிவுநக்ஷதெஃ	குறைந்த நக்ஷத்திரங்களால் (குறிக்கப்படும்)
கம்தரிக்ஷழி யயா	ஆகாசம்போல்,

கிஞ்சித்	சிறிதுநேரம்
ஂரம்க்ஷ்யதெ	காணப்படுகின்றது.

௩௩, ௩௩௨.

தமோ ஂரஜ்ஜ	இருள்வியாபித்த
ஆகாஶ	ஆகாசம்
யதா	எப்படி
அநவகாஶவத்	இடமல்லாததுபோல்
ஂரதி	தோற்றுகின்றதோ,
மலிநம்	(அப்படி) மலின(அகங்காரமானது)
தெஹேந்த்ரியாதிஸம்ஸர்கா	உடம்பு இந்திரியம் முதலியவற்றின் கலப்பினால்
கலுஷீக்ருதம்	கலக்கப்பட்டுளது.

௩௪, ௩௪௨.

ஜீவ:	ஜீவன்
யதா	எப்பொழுது
ஈஶ்வர	ஈச்வரனுடைய
பாவ	நிலையை
அஹம்	"நான்"
இதி	என
ப்ரவேதி	அறிகின்றானோ,
ததா	அப்பொழுது
ஜீவ:	ஜீவன்
ஸர்வஜ்ஞ:	எல்லாம் அறிபவனாகவும்
ஸர்வகர்தா ச	எல்லாம் செய்பவனாகவும்
பவிஷ்யதி	ஆவான்.

௩௫, ௩௫௨.

மாயயா	மாயையினால்
ஸுமிகஸம்மோஹஃ	மிக மயங்கிநிற்கும்
ஈஶ்வரஃ	ஈச்வரன்
வித்யயா	வித்யையினால்
ப்ரகாஶதே	புலப்படுகிறான்.
நிர்விகல்பாநுஸந்தாநே	நிர்விகல்பத்தைச் சிந்திக்க,
ஆத்மா	ஆத்மா
ஸ்வயம்	செவ்வனே
ப்ரகாஶதே	விளங்குகிறான்.

௩௬, ௩௬௨.

அவித்யாவ்யதிரேகாநவ்யவா-யே	அவித்யை என்னும் திரையைத் தள்ளினவளவிலே,
தக்ஷிணாமூர்திரூபஃ	தக்ஷிணாமூர்த்திவடிவான
ஸகல	அந்த
பரமேஶ்வரஃ	பரமேச்வரன்
ஸ்வயமேவ	தானே
ப்ரகாஶதே	விளங்குகிறான் [புலப்படுகிறான்].

௩௭, ௩௭௨.

ஸ்ரீதக்ஷிணாமூர்திஸ்தோத்ரா-ர்த்த ப்ரதிபாதகே	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற
மாநஸோல்லாஸே	மாநஸோல்லாஸம் (என்னும்)
ப்ரபந்தே	நூலினுள்
சதுர்தோல்லாஸஸம்பூர்ணஃ	நான்காம்உல்லாஸப்பொழிப்புரை
இதி	முற்றும்.

ஸுயி

வ ஸு தெ ரா ஜு ரா ஸஃ ।

க.

ப்ரமாணமேகம் ப்ரத்யக்ஷம் தத்ஸம்ஸ்த்வத்வாஸ்தியத் ।
மோக்ஷஶ்ச மரணாந்ந்யஃ காமாயுள வாஸ்தியுகள ॥

ஐந்தாம் உல்லாஸம்.

இனி, சுருதி ஸ்மிருதி புராணம் இதிஹாஸம் நியாயம் அறிஞரநுபவம் ஆகிய எல்லாவற்றோடும் முரணுகின்ற நூல்களை, தம்தம் புத்திகற்பனைக்குஏற்ப பலர் பலவாறு செய்துள்ளமையால் - மந்தபுத்தியர் சிலர் தாம் உறுதியான நலத்தைப் பெறும்பொருட்டு அவற்றைக் கொள்ளுத லாகும். ஆகவே, அவற்றினது கொள்கைகளையும் அக்கொள்கைகளினுடைய ஆபாஸங்களையும் எடுத்துக்காட்டி, அம் மந்தபுத்தியர்களை நல்வழிப்படுத்த எழுகின்றது இந்த ஐந்தாம் உல்லாஸம் :

(க) உடம்பே ஆத்மா என்னும் கோள்கை.

க.

பிரத்தியக்ஷம் ஒன்றே பிரமாணம் : பூதங்கள் நான்கும் தத்துவங்கள் : மோக்ஷமும் மரணத்தின் வேறாய் இல்லை : இன்பமும் பொருளும் மனிதர்க்கு வேண்டியவை.

அநுமானம் முதலியவற்றால் அறியப்படும் பொருள்கள் இந்திரியங்கட்குப் புலப்படாமையால், அவை [அநுமானம்முதலியன] பிரமாண மாகா. ஆதலால், காணுதலென்னும் பிரத்தியக்ஷம் ஒன்றே பிரமாணமாம். நான்கு பூதங்கள் - நிலம், நீர், தீ, வாயு என்பன. ஆகாசம்முதலிய பொருள்கள் கண்முதலிய இந்திரியங்கட்குப் புலப்படாமையின், இல்லை யென்க. இனி, இந்நான்குபூதங்களின் சேர்க்கையே உடம்பு. வெற்றிலையும் பாக்கும் சுண்ணும்பும் ஒருங்குகூடியவழி செந்நிறம் பிறக்குமாறுபோல, இப்பூதங்களின் கூட்டரவில் ஓர் உணர்வு உண்டாம். இக்கூட்டரவாகிய உடம்பு வளர, உணர்வும் வளரும் ; அது தேய, உணர்வும் தேயும். ஆகலின், உடம்பே ஆத்மாவாம் ; உடம்பிற்கு வேறே ஆத்மாஒன்று

கஉ.

ந கஶ்சிதீஶ்வரः கதா வாமயாககயா வ்யயா ।

உ, உஉ.

தெஹம் விநாऽஹி தெஹாதா கஂஹவஹ்ஹ்ஶ்ரீகாம் வாமः ॥
ஹ்ரஷ்வோ தீவெபா யஂவா வாமः இதி தெஹோऽஹிஹ்ஶ்ரீதெ ।

உளதென்பது பொய். நான்குபூதக்கூட்டரவாகிய உடம்பினின்று பிராணவாயுமாத்திரம்நீங்குமாகில், உடம்பு உணர்வுஇழந்து நாசமாம்; இந்நாசமே மோக்ஷம்; வேறே மோக்ஷமுண்டென்பது பொய். இளமைப்பருவத்து இனிய மகளிரோடு உண்டு உடுத்து இம்மையின்பங்களை நுகர்ந்து வாழ்தலே மனிதர்க்கு வேண்டிய பயனும். இதற்குச் சாதநமா யிருத்தலால், பணம் குதிரை வண்டி சோலை முதலிய பொருளும் மனிதர்க்கு வேண்டிய பயனும் என்க. (க)

கஉ.

அன்றியும்,

(உலகிற்குக்) கர்த்தாவான ஈச்வரன் ஒருவன் இல்லை; மறுமையுலகப்பேச்சு வீணும்.

பொருள்களெல்லாம் இயல்பாகவே விகாரப்படுகின்றன. மயிலைச் சித்திரித்தாரும், பாலைத் தயிராக்கினாரும், குயிலைக் கூவுவித்தாரும், வேளாளர்விதைத்த விதையை முளையாக தளிராக கொப்பாக இலையாக பூவாக காயாக பழமாகச் செய்வித்தாரும் நமது இந்திரியங்கட்குக் காணப்படாமையின், கடவுள் உண்டென்பது பொய். உடம்பிற்கு இன்பதுன்பங்கள் இயல்பா யுள்ளமையால், இவற்றிற்குக் காரணம் முன்செய்த புண்ணியபாவமென்பதும் பொய். ஆகவே, மறுமையென்று ஒன்று இல்லை. இவ்வுண்மையுணராத மூடர்கள் மறுமை உண்டெனக் கொண்டு, தவம் விரதம் பட்டினி முதலியவற்றால் வருந்துவர். பணம் நிலம் உணவு ஆடை முதலிய தானங்களை உயர்த்துக்கூறும் நூல்கள் - பசியால் வருந்தும் தரித்திரர்களால் செய்யப்பட்டன. தண்ணீர்ப்பந்தல் குளம் சோலை முதலியன செய்தலை உயர்த்துக்கூறும் நூல்கள் - வழிச்செல்வோரால் செய்யப்பட்டன. ஆகவே, மறுமையைப்பற்றிய வார்த்தை வீணென்பதாம். (கற)

உ, உஉ.

மற்றும், உடம்பிற்கு வேறாய் ஆத்மாவைக் கொள்ளுதலும் பிரத்தியக்ஷத்திற்கு விரோதமாம்; எப்படியெனில்,—

உடம்பிற்குப் புறம்பாக ஆத்மா இருக்குமாகில், குடம்போல எதிரே காணப்படட்டும். உடம்பு - குட்டையாக, நெட்டையாக, யௌவநப்பருவத்ததாக, பாலப்பருவத்ததாக எதிரே காணப்படுகின்றது.

ங, ங உ.

கூஷ்டி ஜாதஃ வரிணதஃ வ்ருஜஃ க்ஷீணோ ஜரந்ருதஃ ॥
இத்யவஸ்தாஃ ஷட்பாவவிகாரா தெஹஸம்ஶ்ரயாஃ ।

ச, ரு.

வணாஶ்ரமவிஹாரஶ்ச மஹஹெஷ்வெவ வ்ருத்திஷ்டிதஃ ॥
ஜாதகர்மாதிஸம்ஸ்காரஃ தெஹஸ்யைவ வியீயதெ ।
ஶதம் ஜீவெதி தெஹஸ்ய வ்ரயஸ்ஸஞ்ஜ்ஞாஶிஷம் ஶஸ்தி ॥

ஆத்மா உடம்பிற்கு வேறாய் உளதாயின், குடம்போல நமது முன்னிலையில் காணப்படுதல் வேண்டும். ஆனால், அப்படிக் காணப்படுதலில்லை. உடம்போ - குட்டையாக, நெட்டையாக, யௌவனப்பருவமுடையதாக, பாலப்பருவமுடையதாக நமக்கு நேரே பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றமையால், அதுவே [உடம்பே] ஆத்மாவாம். (உ, உற)

ங, ங உ.

மேலும்,

இருத்தல், பிறத்தல், மாறுதல், வளர்தல், தேய்தல் (அல்லது) முதிர்தல், அழிதல் எனப்பட்ட பொருள்விகாரங்கள் ஆறும் உடம்பையே சார்ந்தவை.

பொருள்கட்கு ஆறுவகையான வேறுபாடுகள் உண்டு. க. பிறத்தல், உ. இருத்தல், ங. மாறுதல், ச. வளர்தல், ரு. தேய்தல் அல்லது முதிர்தல், சு. அழிதல் என்பது அவற்றின் முறைமை. இவ்விகாரங்களைப் பெறுவது உடம்பேயாதலால் இதற்கு வேறாய் ஆத்மா உளதென்று கொள்ள இடமில்லை: அதாவது, உடம்பே ஆத்மா வென்க. (ங, ங ற)

ச, ரு.

இன்னும், ஆஸ்திகருடைய சாஸ்திரவியவகாரத்தை நோக்குமிடத்தும் உடம்பே ஆத்மா எனவும், உடம்பிற்கு வேறாய் ஆத்மா இல்லை யெனவும் நன்கு விளங்கும். எங்ஙன மெனில்,—

ஜாதிவகுப்பும் ஆச்ரமப்பகுப்பும் உடம்புகளின்மேலேயே வைக்கப்பட்டிருக்கின்றன; ஜாதகர்மம் முதலிய சடங்கும் உடம்பிற்கே விதிக்கப்படுகின்றது; "நூற்றாண்டு வாழ்வாயாக" என்னும் மங்கள ஆசீர்வாதத்தை (ஆஸ்திகர்கள்) உடம்பிற்கு வழங்குகிறார்கள்.

"ஜாதகர்மம் முதலிய" என்பதனால் - சௌளம் உபநயநம் முதலியவற்றைக் கொள்க.

ரு௨.

இதி வ்ரவணம் சாவபூகம் வாவயத்ரவ்வெதநம் ।

"வெஹிகெகம் கஉபுஹிம் வ-ணெ்ரு நிபுஷெகாஹிஷிபு-
ஜநநாடி । காயபும் ஶரீரஸம்ஸ்காரம் வாவநம் வ்ரெத்ரு
வெஹ வ ॥"

"இம்மையிலும் மறுமையிலும் பரிசுத்தப்படுத்துவதாய் [பாவம் தேய்தற்குக் காரணமாய்] வேதத்திற் கூறியுள்ள நல்ல கர்மங்களால் இருபிறப்பாளர்க்கு கர்ப்பாதானம் முதலிய தேகஸம்ஸ்காரமானது செய்யப்படவேண்டியது"— (மநு - உ - உசு)

என்னும் ஸ்மிருதியினால் - சடங்கென்னும் ஸம்ஸ்காரமானது உடம்பிற்கே விதிக்கப்பட்டிருத்தலை நோக்குக.

உடம்பே ஆத்மா என்பது - பிரதிவாதியினுடைய கொள்கையினாலேயும் நிரூபித்தபடியாம். (ச, ரு)

ரு௨.

பரம நாஸ்திகனான சார்வாகனுடைய கொள்கையை முடிக்கிறார் :

அற்பஅறிவுள்ள சார்வாகன் பிரபஞ்சத்தை இவ்வாறு கற்பிக்கிறான்.

அற்பபுத்தியுடைய சார்வாகன் பிரபஞ்சத்தைப்பற்றி சிஷ்யர்கட்கு இவ்வாறு பாடம் சொல்லுகிறான் என்பது பொருள். (ரு௨)

(உ) இந்திரியமே ஆத்மா என்னும் கொள்கை.

எ, எ௨.

முழுமூடனாவான் பணம், நிலம், வீடு, மனைவி, மக்கள் முதலானோரை அடைந்தவிடத்து "நான் வாழ்கிறேன்" என்கிறான் ; அவர்களை இழந்தவிடத்து "நான் கெட்டேன்" என்கிறான். இவ்வாறு அவன் தனது உடம்பிற்கு வேறாய் வெளியிலுள்ள பணம் முதலிய பொருள்களை ஆத்மாவாகக் கொள்கிறான். அவனிலும் மேலானவர் "உடம்பே ஆத்மா" என்கிறார்கள் (ரு - க, உ, ங, ச, ரு). அவரிலும் மேலானவர் "இந்திரியங்களே ஆத்மாக்கள்" என்கிறார்கள்.— எப்படி ?—

சிலர் - "நான் கேட்கிறேன்," "காண்கிறேன்," "முகர்கிறேன்," "ருசிபார்க்கிறேன் [உண்கிறேன்]" என இந்திரியங்கள் ஆத்மாக்களென்று அவனினும் மேலாகக் கொள்கிறார்கள்.

அவனினும் - சார்வாகனைக்காட்டிலும். "நான் குடத்தை, ஆடையை ... ... பார்க்கிறேன்" என்றவழி, "நான்" என்னும் எண்ணமானது கண்ணாகிய இந்

௬, ௬௨.

கெவிஹ்ஹஸிதி ஜீவாதி க்ஷுயிதொऽஹ்ஸி விவாஸிதः ॥
உதாஹிவ்ரதுயவயாஸ வ்ராண கூதெதி உநுதெ।

எ, எ௨.

கெவிஹ்ஹணொதி வஸ்யாதி ஜிவ்ராதி ஸ்வாஹயாஹ்ஹழி ॥
உதீந்ரியாணாஸாதுகுழி வ்ரதியதி ததொऽயிகுழி।

திரியத்தின்மேல் காணப்படுகின்றது. அவ்வண்ணமே, "நான் மல்லிகையை, மாம்பழத்தை ... ... முகர்கின்றேன்" என்றவழி, "நான்" என்னும் எண்ணமானது மூக்காகிய இந்திரியத்தின்மேல் காணப்படுகின்றது. அவ்வாறே, செவி முதலிய இந்திரியங்களின்மேலும் அந்த எண்ணம் காணப்படுதலால், இந்திரியங்களே ஆத்மாக்க ளாம். அன்றியும், செவியினால் அநுபவிக்கப்படும் சங்கீதத்தை நாக்குமுதலிய இந்திரியங்கள் அநுபவித்தல் காணப்படாமையால், ஓரோ ரிந்திரியமும் தனித்தனி ஆத்மாவாம். ஆகவே, ஆத்மாக்கள் பல வென்க.

குறிப்பு:—இந்திரியங்களெல்லாம் ஓய்ந்தபொழுது [கனவிலாயினும், உறக்கத்திலாயினும்] பிராணனது செய்கை ஓய்வுறுமையின் - இந்திரியாத்மக்கொள்கையை இங்கு முதலில் பெயர்த்துவைத்தோம். வார்த்திககாருடைய பாடமுறையோ "ஹெஹம் வ்ராணஸ்வீந்ரியாணாவி வயாம்" என்னும் மூலச்லோகத்தை யநுஸரித்து, பிராணாத்மக்கொள்கையை முன்னாகவும் இந்திரியாத்மக்கொள்கையைப் பின்னாகவும் கொண்டு எழுதப்பட்டதாம். (எ, எ௧)

(ங) பிராணனே ஆத்மா என்னும் கொள்கை.

௬, ௬௨.

இந்திரியாத்மவாதிகளினும் மேலானோர் "பிராணனே ஆத்மா" என்று கூறுகிறார்கள்:

சிலர் - "மூச்சுவிடுகிறேன், ஜீவிக்கிறேன், பசியுடையவனாயிருக்கிறேன், தாகமுடையவனாயிருக்கிறேன்" என இத்தகைய எண்ணங்களின் வலிமையினால் "பிராணனே ஆத்மா" எனக் கொள்கிறார்கள்.

மூச்சுவிடுதல், ஜீவித்தல், பசித்தல், தாகித்தல் முதலியன பிராணனது செயலாகலின் - "நான் மூச்சுவிடுகிறேன், ஜீவிக்கிறேன் ... ..." என்றவிடத்து, "நான்" என்னும்எண்ணமானது பிராணனின்மேல் காணப்படுகின்றது. மேலும், பிராணன் உள்ளவளவிலே, உடம்பு ஜீவிப்பதாம்; அது போனவளவிலே, உடம்பு பிணமாம். ஆதலின், பிராணனே ஆத்மா என்பது. (௬, ௬௧)

அ.

ஜாநாமிவ்ருதயவயாக வ்ருஜிரிதயவரொ ஜமுஃ ॥

அ௨.

உயாவ்யாஉஉஉஜிதாநாழி தெஷாம் உஉஷணஉவ்யுதெ ।

ரு. தெஹம் வ்ராணஉவீம்ரியாணுவி சயுாம்
வ்ருஜிம் ச ஸுகுநும் விஉஃ
ஸ்ரீவாயுாஸுஜஒவஉாஷ்வஹஜிதி
ஸ்ராஹா ஸ்ரஸ் வாஜிநஃ ।
உாயாஸக்திவியுாஹகுயிதஉஹா-
வ்யாஒஹஹம்ஹாரிணெ
தஷ்வெ ஸ்ரீமுஸுஉஉதுயெ நஉ உஉம்
ஸ்ரீஉக்ஷிணாஉதுயெ ॥

(ச) புத்தியே ஆத்மா என்னும் கொள்கை.

அ.

இனி, பௌத்தமதத்தைக் கூறுகிறார் :

சிலர் - "அறிகிறேன்" என்னும் எண்ணத்தின் வலிமையினால், புத்தி(யே ஆத்மா) எனக் கொள்கிறார்கள்.

அறிதல் புத்தியின் செயலாதலால் - "நான் குடத்தை, ஆடையை, சுவரை ... ... அறிகிறேன்" என்றவிடத்து, "நான்" என்னும் எண்ணமானது புத்தியின்மேல் காணப்படுகின்றது. ஆகலின், புத்தியே ஆத்மா என்பது. (அ)

உடம்புழுதலியன ஆத்மாவாகமாட்டா.

அ௨.

மாயையினால் மதிமயங்கிய அவர்கட்குக் குற்றம் கூறப்படுகின்றது :

கீழ்க்கூறிய கொள்கைகளெல்லாம் அவரவருடைய வெறும்மயக்கத்தாலானமையின், அவற்றை நம்புதல் கூடாதென அவற்றினது குற்றத்தைக் கூறுகிறார் : (அ௨)

ரு. (எந்த) வாதிகள் - உடம்பையாயினும், பிராணனையாயினும், இந்திரியங்களையாயினும், சஞ்சலமான புத்தியையாயினும், சூந்யத்தையாயினும் "நான்" என்றே அறிகிறார்களோ, (அவர்கள்) பெண்டுகளுக்கும் குழந்தைகளுக்கும் குருடர்களுக்கும் பேய்பிடித்தவர்களுக்கும் சமானராய் மிக்க மயங்கியுள்ளார். மாயாசக்தித்தளுக்கினாலான பெரும் மயக்கத்தை அறத் துடைக்கும் தன்மையுள்ள அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

வாதிகள் - வாதமுடையவர்; வாதஞ்செய்பவர், தம்தம் கொள்கையை நிறுத்துவோர் என்றபடி. அவர்கள் - தலை கை கால் முதலியன இயைந்துநிற்கும் பிண்டமே ஆத்மா என்போரும், உருவம் ஓசை முதலியவற்றை உணரும் கண் காது முதலிய இந்திரியங்களே ஆத்மாக்கள் என்போரும், வாய்மூக்குகளின் வழியாகச் சஞ்சரிக்கும் பிராணனே ஆத்மா என்போரும், கணந்தோறும் தோன்றி யழியும் புத்தியே ஆத்மா என்போரும், பாழாகிய சூன்யமே ஆத்மா என்போருமாய்ப் பலதிறத்தா ராவர். அவர்கள் இவ்வாறு பெண்டுகள்போல, குழந்தைகள்போல, குருடர்கள்போல, பேய்பிடித்தவர்கள்போல ஆழ்ந்தஆராய்ச்சியில்லாது தம்தமக்குத் தோன்றியன கூறுபவராய், உண்மைப்பொருளை உள்ளபடி உணராது வேறுவகையாக விபரீதமாய்க் கிரகித்து மிகத் தடுமாறிநிற்கிறார்கள்.

வினா:— ஆயின், அவர்கள் ஏன் இவ்வாறு நாஸ்திகர்களாய், உண்மையொன்றிருக்க வேறொன்றை உண்மையாகக் கொள்கிறார்கள்? எனில்,—

விடை:— நன்று வினாவினாய்! அவர்கள் பகவானைத் தொழாமையினால் அவனது அநுக்கிரகத்தைப் பெறுதலில்லை. இல்லையாகவே, அவனது மாயாசக்தியினுடைய தளுக்குமயக்கத்தின் ஏய்ப்புவலையில் அகப்பட்டுக்கொண்டவராய், உண்மையல்லாததை உண்மையாகக் கொள்கிறார்கள். அவ்வண்ணமே, ஸ்மிருதி கூறுகின்றது:

"ந மாம் துஷ்கிநோ மூடாः ப்ரபத்யந்தே நராधமாः ।
மாயயாऽபஹ்ருதஜ்ஞாநாः ஆஸுரம் பாவமாஶ்ரிதாः ॥"

"மாயையினால் அறிவு அபகரிக்கப்பட்டு, அஸுரத்தன்மையை யடைந்து, மனிதர்களுள் கடைப்பட்டவராய்த் தீவினைகளைச் செய்யும் மூடர்கள் என்னை யடைவதில்லை"—(வே - கீ - எ - கடு)

ஆனால், எவர்கள் அவன்கூறியுள்ள வைதிகவழியைப் பின்பற்றி அவனைத் தொழுகிறார்களோ, அவர்கட்கு அவனது அருளினால் இத்தகைய மயக்கமில்லையென்பார் "மாயாசக்தித்தளுக்கினால் பெரும்மயக்கத்தை அறத்துடைக்கும்தன்மையுள்ள" என அருளிச்செய்தனர். அவ்வாறே, பகவான்திருவாக்கும் வருமாறு:

"தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥"

"(முக்)குணங்களாலாகியதான என்னுடைய இந்தத் தைவமாயையானது கடக்கஅரிதுதான். எவர்கள் என்னையே அடைகிறார்களோ, அவர்கள் இம் மாயையைக் கடந்துவிடுகிறார்கள்"— (வே-கீ-எ-கச) (கு)

ஊஷ்ய தாதாரு—

க, கூ ற.

தெஹாதீநாம் ஜடாயூநாழ் வாஷாணவதுநாதுநாழ் ॥
கயம் ஹவெதுஹம்ஹாவம் ஸதாவெஸம் விநெஸிதும் ।

க0, க0 ற.

தெஹஸ்தாவதுயம் நாதா ஏஸ்ருக்வாஜாயுவத்ருதம் ॥
ஈஸுவாதிதுதாதாம்ஸக்வாஸ ஹளதிகுக்வாது கூம்ஹவஸ ।

இது இதன் கருத்து:—

க, கூ ற.

இனி, உடம்பே ஆத்மா என்பதுமுதலாகக் கூறிய கொள்கைகளெல்லாவற்றிற்கும் பொதுவான குற்றத்தைக் கூறுகிறார்:

கல்போல் அநாத்மாவான உடம்புமுதலிய ஜடப்பொருள்கட்கு ஈச்வரன் புகுதலின்றி "நான்" என்னும்எண்ணம் எப்படி நிகழக் கூடும்?

"உடம்பு" என்னாது "உடம்பு முதலிய" என்றமையால் - இந்திரியங்கள், பிராணன், புத்தி என்றவையும் கொள்ளப்படும். அவையனைத்தும் ஜடமாதலால், கல்போல அநாத்மப்பொருள்களாம், ஆத்மாஅல்லாத பொருள்களாம். ஆகவே, பாவைபோன்ற இவற்றுள் ஸ்வப்பிரகாச அறிவுவடிவான ஈச்வரன் புகுதலில்லையாயின், இவற்றிற்கு 'நான்' என்னும் எண்ணமாகிய சேதநத்தன்மை வாராது. ஆதலால், அவற்றிற்கு வேறாய் ஆத்மா ஒன்று உள தென்றபடி.(க, கூ ற)

(க) உடம்பே ஆத்மா என்னும் கொள்கையை மறுத்தல்.

க0, க0 ற.

இவ்வாறு பொதுவான குற்றத்தைக் கூறி, இனி ஓரோர் மதத்திலும் தனித்தனி குற்றங் கூறுகிறார்:

இனி, உடம்பு ஆத்மாவன்று; காணப்படுவதாதலாலும், ஜடத்தன்மையுடைமையினாலும், நிறம் வடிவம் முதலியவற்றை யுடைமையினாலும், அவயவங்களோ டமைந்தமையினாலும், பூதங்களா லாகியதனாலும் என்க: குடம்போல.

க. உடம்பு, குடம்போலப் பார்க்கப்படும்பொருளாய் உள்ளது; உ. குடம் போல ஜடமானது; கூ. குடம்போல நிறம் வடிவம் முதலியவற்றை யுடையது;

கக, ககஉ.

உ-ஔஊஸ-ஷ-ஷ்ஷிஸணெஷ்ஷவி ஹெஹ: வ்ரஉ்ரஶுதெ ॥
ஹெஹாஹிவ்ருதிரிகூகூவாஸ ஹஹாऽऽஹ்ரா ந வ்ரதீயதெ ।

கஉ, கங, கங உ.

யயா ஜஔஹ்வ்ரத்தீநாழி ஸூஹிகாரணஶம்ஶ-ஶாங ॥
வ-ஶாம்ஷ்ஷியெவ ஹெஹாஹிவ்ரவ்ரத்ள காரணம் வாழி ।
ஔ ஔஹொऽயிதெ்ருவழி ஹ்ரீ வாஹொऽஸுஶ்ரு உநுதெ ॥
ஹெஹொऽஹிதி நாவெதி கூஹாஹிஉவி கூஶ்ரு ந ।

உ. குடம்போல அவயவங்களை யுடையது; ங. குடம்போல ஐந்து பூதங்களாலாகியது. ஆகவே, அது [உடம்பு] ஆத்மா அன்றென்க. (கo, கoற)

கக, ககற.

இந்த ஐந்து அநுமானங்கட்கும் அநுகூலமான ஓர் நியாயத்தை எடுத்துக் காட்டுகிறார்:

மயக்கம் உறக்கம் மரணம் என்றவற்றிலும் உடம்பு காணப்படுகின்றது. உடம்புமுதலியவற்றிற்கு வேறாயிருத்தலால் அப்பொழுது ஆத்மா காணப்படவில்லை.

உடம்பே ஆத்மாவாயின், அப்பொழுது மூந்தினது விளங்குங்கால், பிந்தினது விளங்காதிருத்தல் கூடாது. உண்மை; விழிப்புநிலைமையிலும் கனவுநிலைமையிலும் ஆத்மா 'நான்' என விளங்குகின்றது. ஆனால், மூர்ச்சை தூக்கம் மரணம் என்னும் நிலைமைகளிலே உடம்புமட்டும் விளங்குகின்றதேயன்றி ஆத்மா 'நான்' என விளங்கவில்லை. ஆகவே, எல்லா நிலைமைகளிலும் உடம்பு விளங்குவதாயிருக்க, சில நிலைமைகளில் 'நான்' என விளங்கியும் சில நிலைமைகளில் 'நான்' என விளங்காமலும் இருக்கின்ற ஆத்மா - உடம்பிற்கு வேறாகவே உடம்பினுள் உள்ளதென்றமைந்தது. (கக, ககற)

கஉ, கங, கங உ.

இதற்கு இன்னும் சில வேறு அநுமானங்களைக் கூறுகிறார்:

உலகம் தொழிற்படுதற்குச் சூரியன்எப்படி மூலகாரணமோ, அப்படியே உடம்புமுதலியன தொழிற்படுதற்கு ஆத்மா மூலகாரணமாம்.

"இது என் உடம்பு" என ஸ்திரீ கொள்கிறாள்; குழந்தையும் இப்படியே கொள்கிறான்; குருடனுங்கூட இப்படியே கொள்கிறான். "யான் உடம்பு" என ஒருவனும் ஒருபொழுதும் உணர்வதில்லை.

கச, கரு, கசு.

இந்த்ரியாணாமி நாதாநாம் காரணக்வாதஸீவவசு ॥
வீணாவாஉநவொதாதி ஶப்தாநாஹணஸாயநி ।
சக்ஷுஷொஜ்வலிதயவசு ரூபாணாஹணஸாயநி ॥
ஸ்ஸ்ய ஸ்ராஹகம் ப்ராணி வாஷ்வஸம்வாடகாதிவசு ।
ரஸஸ்ய ஸ்ராஹிகா ஜிஹ்வா உயிக்ஷளஸ்வாதாதிவசு ॥

சூரியன் இல்லையாயின், பக லில்லை; பக லில்லையாயின், உலகம் வியாபரித்தல் [தொழிற்படுதல்] இல்லை. அதுபோல, ஆத்மா இல்லையாயின், ஜீவித்த லில்லை; ஜீவித்த வில்லையாயின், உடம்பு வியாபரித்த லில்லை. ஆகவே, உலகம் வியாபரித்தற்குச் சூரியன் அடிக்காரணம் ஆமாறுபோல, உடம்பு வியாபரித்தற்கு ஆத்மா அடிக்காரண மாம்.

மற்றும், உடம்பே ஆத்மாவாயின், அங்ஙனம் "நான் உடம்பு" என விளங்க வேண்டும். ஆனால், அப்படி இல்லை; "என் வீடு," "என் ஆடை," "என் மனைவி," "என் மக்கள்" என்பனபோல, "என் உடம்பு" என்றே யாவரும் கொள்கிறார்கள். அதாவது, உடம்பு - 'நான்' என்னும்உணர்ச்சிக்கு இட மாவதில்லை; 'எனது' என்னும் உணர்ச்சிக்கே இட மாகின்றது.

ஆகவே, அது [உடம்பு] ஆத்மாவன்றாம். (கஉ, கரு, கரு)

(உ) இந்திரியமே ஆத்மா என்னும் கொள்கையை மறுத்தல்.

கச, கரு, கசு.

இனி,

இந்திரியங்களும் ஆத்மாக்க ளல்ல; கருவியாதலால், விளக்குப் போல.

காது - வீணாவாத்தியம்போல, ஓசையை உணர்தற்குக் கருவியாம். கண் - மூன்று ஒளிகள்போல, உருவத்தை உணர்தற்குக் கருவியாம். மூக்கு - பூக்குடலை முதலியனபோல, நாற்றத்தை உணர்தற்குக் கருவியாம். நாக்கு - தயிர் தேன் நெய் முதலியனபோல, சுவையை உணர்தற்குக் கருவியாம்.

மூன்று ஒளிகள் - சூரியன், சந்திரன், தீ என்பன. பொருள்களைக் காண்பதற்கு வெளிச்சம் ஸாதகமா யிருப்பதுபோல, உருவம் ஓசை முதலியவற்றை உணர்தற்கு கண் காது முதலிய இந்திரியங்கள் ஸாதகங்களாம். எப்படியெனில்,— உருவம்முதலியவற்றின் உணர்ச்சிகள் குடம்போலக் கார்ய மாதலால், ஸாதநங்களா லமைகின்றன. குடமாகிய கார்யத்திற்கு மண் தண்டம் சக்கிரம்

கஎ.

இந்ரியாணி நஹி ஸந்தி உஷ்ணகோऽஸ்மி வயிரோऽஸ்யஹம் ।
உத்யாஹரணிந்ரியெஹீநாः ஜநாः கிம் தெ நிராத்மகாः ॥

கஅ, கஉ.

ப்ராணோவ்யாத்மா நலவதி ஜ்ஞாநாலாவாத்ஷுஷ்வஷ்விஷு ।
ஜாக்ரத்ஸ்வப்நாவஸ்தாஸுஸுஷுப்திஹேதவெ ॥
ஸுஷ்வஷ்விம் வ்யாபாரஷெ ப்ராணெ ஶரீரரக்ஷிதுः ।
ஶெஷகரெபாவஸ்தாயாம் ப்ராணஸ்ஸாதி கெவலः ॥

முதலியன ஸாதகங்களாமாறுபோல, ஓசையுணர்ச்சியாகிய கார்யத்திற்கு வீணையும் காதும் பிறவும் ஸாதநங்களாம்; அவ்வாறே, நாற்றஉணர்ச்சிக்கு பூவும் மூக்கும் பிறவும் ஸாதநங்களாம். இப்படியே, மற்றையவற்றையும் காண்க.

இவ்வாறாகச் செவிமுதலிய இந்திரியங்கள் ஓசைமுதலியவற்றின் உணர்ச்சிகளாகிய கார்யத்திற்கு வீணைமுதலியனபோலக் கருவிகளாய் நிற்றலின், அவற்றை [இந்திரியங்களாகிய கருவிகளை] 'நான்' என்னும் கர்த்தாவாகக் கூறுதல் ஒவ்வாது. ஆதலால், உடம்பினுள் ஆத்மா இந்திரியங்கட்கு வேறாக உண்டென்பது.()

கஎ.

மேலும்,

"இந்திரியங்கள் எனக்கு இல்லை; நான் ஊமையாயிருக்கிறேன், நான் செவிடனாயிருக்கிறேன்" என இந்திரியங்களில்லாத மனிதர்கள் கூறுகிறார்கள். அவர்கள் ஆத்மாஇல்லாதவரா?

இந்திரியங்கள் 'எனது' என்னும் உணர்ச்சிக்குச் சார்பிடமாம்; 'நான்' என்னும் உணர்ச்சிக்குச் சார்பிட மன்று. ஆகவே, குருடன் ஊமை முதலான யாவருடைய உடம்பினுள்ளும் இந்திரியங்கட்கு வேறாக ஆத்மா உண்டென்று தெளியப்படும் என்றபடி. (கஎ)

(ங) பிராணனே ஆத்மா என்னும் கொள்கையை மறுத்தல்.

கஅ, கஉ.

இனி,

பிராணனும் ஆத்மாவாகமாட்டாது; தூக்கத்திலே அறிவின்மையின். நனவுவாழ்க்கையினாலும் கனவுவாழ்க்கையினாலும் ஆன சிரமத்தைத் தீர்த்துக்கொள்ளப் புருஷன் நித்திரையை யடைந்தவளவிலே, மிச்சமான கர்மத்தை அநுபவித்தற்காக உடம்பைக் காப்பாற்றும்பொருட்டுப் பிராணன்மாத்திரம் சஞ்சரிக்கின்றது.

உ0, உக.

ப்ராணஸ்ய தத்வைதந்ய கரணைர்வரதே யதி ।
ப்ராணே வ்யாவ்ரியதாமே தத் கரணைர்வரதே கதி ॥
ஸுப்தாவிவ கரணைர்ஹீனே விரதிஜ்ஞ நைஷநிகாம் ।
சஷ்டாந்த கரணஸ்யாபி ப்ராணோ ஹவிதமுஹுதி ॥

மிச்சமான கர்மத்தை - புருஷன் இவ்வுடம்பினால் அநுபவிக்கவேண்டிய கர்மத்தின் பயனில் அநுபவித்துக் கழிந்ததுபோக, இனி அநுபவிக்கக்கடவதாய் மிகுந்துகிடக்கும் கர்மத்தின் பயனை என்றபடி. தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது பிராணன்மாத்திரம் இருக்கின்றது. இருக்கின்றதாயினும், தலையடியிலிருக்கும் பணப்பெட்டியைத் திருடன் வந்து எடுத்துக்கொண்டுபோதலை அது அறிவதில்லை. ஆகவே, அது ஜடமாதலால் ஆத்மாவன்றாம். (கஅ, கக)

உ0, உக.

சங்கை:—மிச்சமான கர்மத்தை எவன் அநுபவிக்கும்பொருட்டுப் பிராணன் உடம்பைக் காப்பாற்றுகின்றதோ, அந்த வேறோர் புருஷனில்லை; பிராணனே தன்சிரமத்தை ஆற்றிக்கொள்ளத் தூங்குகின்றது எனில்,—

ஸமாதாநம்:— கூறுவோம்:

பிராணனுக்குச் சேதநத்தன்மை யுளதாயின் [பிராணனே ஆத்மாவாயின்], அதிலே இந்திரியங்கட்கு ஓய்வுள்ளவழி (பிராணன் வியாபரியாதிருத்தல் வேண்டும்). அன்றியும், பிராணன் வியாபரித்துக்கொண்டிருக்கும்போது, இந்திரியங்கட்கு ஓய்வு எப்படி யாகும்? அரசன் போரிலே முனைந்திருக்குங்கால், சேனைஜனங்கள் ஓய்வுறுரன்றோ. ஆதலால், பிராணன் இந்திரியங்கட்கு அதிபதி யாகமாட்டாது.

அதிலே - உறக்கத்திலே. பிராணனே - தூக்கத்தில் சிரமபரிகாரத்தைத் தேடுகின்ற ஆத்மாவாயின்,— அங்ஙனம் அது வியாபரித்தல் கூடாது; தூக்கம் கெடு மாதலின். ஆனால், அப்படி இல்லை; தூக்கத்தில் பிராணன் வியாபரித்து நிற்கின்றது. மேலும், பிராணனே ஆத்மாவாயின்,— அங்ஙனம் அது தன்காரியத்தில் முனைந்திருக்கும்பொழுது, இந்திரியங்கள் ஓய்ந்திருத்தல் கூடாது; அவை அதனது கருவியாதலால், அவற்றினது செய்கை அதனைச் சார்ந்துநிற்றலின். ஆனால், அப்படி இல்லை; தூக்கத்தில் இந்திரியங்கள் ஓய்ந்திருக்கின்றன.

ஆதலால், இந்திரியங்கட்கு அதிபதி பிராணனன்று; வேறொன்றும். என்பது கருத்து. திருஷ்டாந்தம் - வெளிப்படை. (உ0, உக)

உஉ.

உநஸஃ வொ ஈகெ வாஂஸி விஈதெ விஈஷ்ய தஃ ।
கூஈணாநி ஸஹ்ஹாநி தெஷாஂ ஹ்வாஃ ததஃ வாஃ ॥

உங.

வாஃஸ்ஹ்ய க்ஷணிகா வெஷ்யா ஸாஃஸஹஃஷ்வி தா ।
சூத்தநஃ வ்ரதிவிஂவெந ஹாஸிதா ஹாஸயெஜ்ஜஸ ॥

உச.

சூத்தந்ய வ்ரதெ வாஃஸி சூத்தெநைவ வ்ரமீயதெ ।
வ்ரமாஃ ஸ்வயஂ ஹாஸதீ வாஃஸி ஹ்வயவெ ந ஹியுதி ।

உஉ.

இவ்வாறாக உடம்பினுள் பிராணனுக்கு வேறாய் ஆத்மா உண்டென்பது பரிசேஷப்பிரமாணத்தால் அமைகின்றது :

மனத்தை நடத்துகின்ற புருஷன் ஓய்ந்தவிடத்து, இந்திரியங்களெல்லாம் ஓய்கின்றன. ஆதலால், அவற்றிற்குத் தலைவனாவான் அதனினும் (வேறான) புருஷனாம்.

அதனினும் - பிராணனினும். எல்லாவற்றிற்கும் தலைவனான ஆத்மா ஓய்ந்தவிடத்து, மனமும் இந்திரியங்களும் ஓய்வுறுதல் கூடுமாதலால் - மனத்திற்கும் எல்லா இந்திரியங்கட்கும் தலைவனான ஆத்மா பிராணனுக்கு வேறானவனேஎன்க.

(ச) புத்தியே ஆத்மா என்னும் கொள்கையை மறுத்தல்.

உங.

இனி, கணந்தோறும் தோன்றி யழியும் புத்தியே ஆத்மா என்னும் க்ஷணிக விஜ்ஞாநாத்மக்கொள்கையைக் கண்டித்துத் தள்ளுகிறார் :

புத்தியோ, க்ஷணமாத்திர முள்ளதாய்ப் போதலையும் வருதலையுமுடையதாக அறியப்படுவது ; ஆத்மாவினுடைய பிரதிபலநத்தினால் விளங்கப்பெற்றதாய் உலகத்தை விளங்கச்செய்கின்றது.

புத்தி ஆத்மாவாகமாட்டாது ; கணப்பொழுது நிலைத்தலாலும், தோற்றக்கேடுகளை யுடைமையினாலும், தான் பிறிதொன்றைச்சார்ந்து விளங்குதலாலும்என்க.

உச.

புத்தி பிறிதொன்றைச் சார்ந்து விளங்குதலை [அதற்கு ஸ்வப்பிரகாசமின்மையை]ச் சாதிக்கிறார் :

புத்தி ஆத்மாவினிடத்துத் தோன்றுகின்றது, ஆத்மாவினிடத்தே மறைகின்றது. முன்னும் பின்னும் இல்லாதபுத்தி, தானே அமையாது.

உரு, உருற.

ஆதா நாவெத்வ ஏவாவ ஏவாஸ்யாஸ் உத்தரோத்தராஸ்லவாஃ ।
யாஸாவஷ்ஷ ஹாவாஜிக்வி வாஸஜ்ஜ்.த க்ஷணெக்ஷணெ ॥
வாஸ்ஸாஹாரம் ந ஜநயெஸ் நாரோத்தராஸ்லக்ஷதாஃ ।

"தனது தோற்றக்கேடுகளைத் தானே அறியமுடியாது" என்னும் நியாயத்தால், புத்தி தனது தோற்றக்கேடுகளைத் தானே அறிதல் செல்லாது; அதாவது, புத்தி தன்னைத் தானே அறியமாட்டாது. என்றாலும், தோற்றம்முதலான புத்திவிகாரங்களெல்லாம் அறியப்படுகின்றன. ஆகவே, புத்தி வேறொன்றினால் அறியப்படுகின்றமையின் ஆத்மாவன்றாம் என்பது பொருள். (உச)

உரு, உருற.

கணப்பொழுதுநிற்கும் புத்தியாகிய ஞானமே ஆத்மா வாகவேண்டாம்; கணந்தோறும் தோன்றி யழியும் புத்திகளின் தொடர்ச்சியே ஆத்மா வாகும் எனில்,— அது செல்லாது எனக் காட்டுகிறார்:

முந்தினமுந்தின ஞானத்தினின்று பிந்தினபிந்தின ஞானம் பிறக்குமாயின், ஒரேகாலத்தில் பல ஞானங்களிருத்தல் க்ஷணந்தோறும் அமையவேண்டும். (ஒரு ஞானம் தனது)அழிவிற்குப் பின் இல்லாமையின், மற்றோர் ஞானத்தைப் பிறப்பிக்கமாட்டாது.

க. முந்தின ஞானத்தோடுகூடிப் பிந்தின ஞானம் பிறக்கின்றதா? அல்லது, உ. அதனோடு கூடாது பிறக்கின்றதா?

க. முதற் பக்ஷமாயின்,— அங்ஙனம், ஓரோர் ஞானமும் கணப்பொழுதுமாத்திர முள்ளமையால், அந்தந்த ஞானமுண்டாகும் க்ஷணங்களிலே எண்ணிறந்த முந்தின ஞானங்கள் தொடர்ந்திருத்த லாகும்; அதாவது, எண்ணிறந்த ஞானங்கள் ஒரேகாலத்து உள்ளன வாகும். ஒரேகாலத்துள்ளனவாகவே, "ஓரோர் ஞானமும் க்ஷணமாத்திர முள்ளது" என விஜ்ஞாநவாதி தான் மேற்கொண்டதைத் தள்ளவேண்டி வருகின்ற தென்க.

உ. இரண்டாம் பக்ஷமாயின்,— அங்ஙனம், முன்க்ஷணத்தில் தோன்றிய ஞானம் பின்க்ஷணத்தி லில்லாமையினால், ஓரோர் ஞானமும் இன்மையினின்று உண்டாதல் வேண்டும். ஆனால், அது நேரன்று; இன்மையினின்று ஒன்று உண்டாதல் கூடாமையின் என்க.

ஆகவே, கணந்தோறுந் தோன்றி யழியும் ஞானங்களின் தொடர்ச்சியே ஆத்மாவென்றல் ஏலாது என்பது கருத்து. (உரு, உருற)

உசு, உசுஉ.

வஷாம் ஸம்வாத ஸூத்ரா வெஷ வநகுஹெஶ வ்யாகுர்யாத் ॥
ந வெதந்யம் வ்ரஸஜ்யேத ஸம்வாதாஹாவதஸ்ஹா ।

உஎ, உஎஉ.

ஸிந்நிஹ்ருதாஸிவ்ராயம் வஹா வெதந்ந வ்ரஜிதி ॥
ஸஹ்யா ஸிந்நம் ஹவெஹெதஸ் நிஷ்க்ரியம் வா ஹவிஷ்யதி ।

உடம்புமுதலியவற்றின் ஸமுதாயமும் ஆத்மா வாகாது.

சங்கை :— உடம்பு, இந்திரியங்கள், பிராணன், புத்தி என்பனவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனி ஆத்மாவாதல் கீழ்க்கூறியவாறு அமையாதாயினும், அவையனைத்தும் கூடிய ஸமுதாயமே ஆத்மாவாம்.

ஸமாதாநம் :— அப்படியானால், க. சேதநத்தன்மை ஸமுதாயத்திற்கே உளதா? உ. அல்லது, ஒவ்வொன்றற்கும் தனித்தனி உளதா?

உசு, உசுஉ.

க. முதற் பக்ஷமாயின், அதற்குக் குற்றங் கூறுகிறார் :

இவற்றின் ஸமுதாயம் ஆத்மாவாயின்,— அங்ஙனம் ஓர் உறுப்புப் பிரிக்கப்பட்டவளவிலே ஸமுதாயமின்மையால், சேதநத்தன்மை வாராது.

உறுப்புக்களெல்லாம் நிறைந்தவழி, ஸமுதாய மாம்; அவற்றுள் ஒன்று குறைந்தவழி, ஸமுதாயமின்மை யாம். ஆதலின், அதனது உறுப்பாகிய கண்ணாயினும் காதாயினும் இல்லாவிடத்து ஸமுதாயமின்மையால், சேதநத்தன்மை அமையாதிருத்தல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை; குருடர்களும் செவிடர்களும் அறிவொடு வாழ்தலைக் காண்கின்றோம். ஆதலால், ஸமுதாயமே ஆத்மா வென்றல் பொருந்தாது என்பது பொருள். (உசு, உசுற)

உஎ, உஎஉ.

உ. இரண்டாம் பக்ஷமாயின், அதற்குக் குற்றங் கூறுகிறார் :

(சேதநப்பொருள்கள்) பல உளவாயின், (அவற்றிற்கு) வெவ்வேறு திசையை நோக்கிச் செல்ல விருப்ப முண்டாகும். அது ஸமஞ்ஜஸ மன்று; (ஏனெனில்,) ஒன்று இது உடனே முறிந்திடுவதாகும், அல்லது செய்கையற்ற தாகும்.

ஒரே ஸமுதாயத்தில் பல ஆத்மாக்க ளிருந்தால், அப்பொழுது அவற்றுள் ஒன்று அதனைக் கிழக்கே இழுக்க, மற்றொன்று மேற்கே இழுக்க, வேறொன்று

உஅ, உஅஉ.

தெஹஸ்யாஜமுதொऽவ்யாதா வ்யாவ ஸவெதி ஸ-யுதெ ॥
ஈண-வ்ரோணஸ்ரெஷிஃ வ்யாவ-யாந்நாஸ்மியம் வவ-ஃ ।

வடக்கே இழுக்க, நான்காவது தெற்கே இழுக்க, அந்த ஸமுதாயம் உடனே தெறித்துப்போகும்; அல்லது, ஒன்று அதனை இழுக்க, மற்றொன்று நிறுத்துவதாகும். நிறுத்துவதாகுமளவிலே, ஸமுதாயம் அசைவற்றுநிற்கும். நிற்கவே, வாழ்க்கை நடைபெறுதிருத்தல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை; வாழ்க்கை நடைபெறுதலைக் காண்கின்றோம். ஆகவே, ஸமுதாயத்தின் உறுப்புக்களும் தனித்தனி ஆத்மாவாகமாட்டா என்றவாறு. (உஎ, உஎ௨)

ஆத்மா எங்கும் நிறைந்த பொருள்.

உஅ, உஅஉ.

இவ்வாறாக ஆத்மா உடம்பிற்கும் வேறாய், இந்திரியங்கட்கும் வேறாய், பிராணனுக்கும் வேறாய், புத்திக்கும் வேறாய், இவற்றினது ஸமுதாயத்திற்கும் வேறாய், இந்த ஸமுதாயத்தினுடைய உறுப்புகட்கும் வேறாய், உடம்பினுள் உள்ளது என உணர்த்தப்பட்டது. என்றாலும், ஆத்மாவினுடைய அளவைப்பற்றிச் சந்தேகம் எழுகின்றது. ஏனெனில், ஆத்மா உடம்பளவிற்று என்பார் சிலர்; ஆத்மா அணுவளவிற்று என்பார் சிலர்; ஆத்மா வியாபகம் [எங்கும் நிறைந்தது] என்பார் சிலர். எனவே, இவற்றுள் யாது நேரிது என்று நிச்சயிக்கத் தொடங்குகிறார்:

ஆத்மா உடம்பினுள் உள்ளதாயினும், வியாபகப்பொருளே என்று நிர்ணயிக்கப்படுகின்றது. இது அணுஅளவிற்றாயின், உடம்புமுழுவதையும் வியாபித்த லாகாது.

ஆத்மா அணுஅளவை யுடையதாயின், அது உடம்பினுள் ஒருஇடத்தில்தான் இருத்தலாகும். அப்பொழுது அது உடம்பினுடைய எந்த இடத்தி லிருக்கின்றதோ, அந்த இடத்தில்மாத்திரம் உணர்ச்சியும் செய்கையும் உள்ளனவாகும். மற்றைய இடங்களிலோ இவையிரண்டும் இல்லையாதல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை; கோடை காலத்து நடுப்பகல்வெயிலிலே கரைமரத்து நிழல்படியாத ஒரு ஆற்றின்வழிக், குடையும் மிதியடியு மில்லாது ஈரமணலின்மேல் செல்வோனுக்குத் தலையிலே வெப்பத்தின் உணர்ச்சியும், காலிலே குளிர்மையின் உணர்ச்சியும் வெவ்வேறான இரண்டு இடங்களிலே ஒரேகாலத்து உண்டாகின்றன; அவ்வண்ணமே, காலால் நடத்தலும் கையால் தாளம்போடுதலும் வாயால் பாடுதலும் தலையை ஆட்டுதலும் முதலான செய்கைகளெல்லாம் உடம்பினுடைய (பல இடங்களிலே) பல அங்கங்கட்கு ஒரேகாலத்து உண்டாகின்றன. ஆகவே, ஆத்மா அணுவளவிற்று என்றல் பொருந்தாது. (உஅ, உஅ௨)

உகூ, உகூஉ.

தெஹவுசோணஸ்ரெந ஸ்யாஸ வாஸுவஸ்ய ஸுவிராஷிதா ॥
தெஹவுஸிணாஃ வெஸ தஉதெவ விநஸ்யதி ।

உகூ, உகூஉ.

ஆத்மா அணுவளவிற்று என்னும் கொள்கைக்குக் குற்றம் கூறப்பட்டது. இனி, ஆத்மா உடம்பளவிற்று என்னும் கொள்கைக்கும் குற்றங் கூறுகிறார் :

(ஆத்மா) உடம்பளவிற்றாயின், குழந்தைக்கு மூப்பு முதலியன பொருந்தா ; உடம்புபோலத் திரிபுஉடையதாயின், அதுபோலவே அழிந்துவிடும்.

ஆத்மா சரீரஅளவிற்றாயின்,— அங்ஙனம் பாலசரீரஅளவிற்றான ஆத்மாவும், யுவசரீரஅளவிற்றான ஆத்மாவும், வ்ருத்தசரீரஅளவிற்றான ஆத்மாவும் ஒன்றற்கொன்று வேறுபடுதலால், ஆத்மாக்கள் பலவாகும்; பலவாகவே, பால்யம் யௌவநம் வார்த்தக்யம் என்பன ஒன்றற்கே இல்லையாதல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை ; "எந்த நானே பால்யத்தில் பெற்றோர்களை அநுபவித்தேனோ, அந்த நானே யௌவநத்தில் மனைவியையும் மக்களையும் அநுபவிக்கின்றேன்" எனவும், "எந்த நானே யௌவநத்தில் மனைவியையும் மக்களையும் அநுபவித்தேனோ, அந்த நானே வார்த்தக்யத்தில் பேரன் பேத்திகளை அநுபவிக்கின்றேன்" எனவும் மிகத்திடமான ப்ரத்யபிஜ்ஞை உண்டாகின்றது. மேலும், "குட்டிச்சுவரில் தேள் கொட்டினால், கட்டுத்தறியில் நெறி ஏறாது" என்னும் நியாயத்திற்குஇணங்க, ஒன்றனிடத்துள்ள வாஸனையானது தனக்குரிய நினைப்பை வேறொன்றனிடத்துப் பிறப்பிக்கமாட்டாதன்றோ. ஆதலால், ஆத்மா உடம்பளவிற்று என்பது, நேரன்றாம். (ப்ரத்யபிஜ்ஞையின் லக்ஷணத்தை, எ - ௩ - ஆம் சுலோகத்தில் காண்க.)

இனி, உடம்பு - பால்யமாக, யௌவநமாக, வார்த்தக்யமாக மாறுங்கால், அதனுள் உள்ள ஆத்மாவும் அதுபோல அதற்குஇயையத் தானும் மாறுகின்றது எனில்,— அங்ஙனம் ஆத்மா உடம்புபோல் அழிவதாகும் ; அன்றியும், கீழ்க்கூறிய ப்ரத்யபிஜ்ஞை கூடாது. ஆனால், அப்படி இல்லை : ஆத்மா அழியாதது ; ப்ரத்யபிஜ்ஞையோ நிகழ்கின்றது. ஆகவே, ஆத்மா உடம்பளவிற்று என்றல் மந்த மாம். (உகூ, உகூஉ)

இன்னும், அதற்குக் குற்றம் கூறுபவராய், "ஆத்மா வியாபகமாம்" என்னும் கொள்கையினுடைய அழகை எடுத்துக்காட்டுகிறார் :

௩௦, ௩௦௨.

கஉுணாம் வரிணாஉெந கிரிஹஹ்ஸ்ராஹிஉ ஏதிஷு ॥
வ்ராவுக்வாதவிஶ்ரதாதா வடாஹிஷ்ஹரிக்ஷவக ।

௩௧, ௩௧௨.

வரஶோண ஈவ்ரசோணெ ஸவி உநஸி வ்ரதிஹாஸதெ ॥
ஸ்வெ ஸரரவரம் விஶ்வ சூதநெவ வ்ரதிஷ்ஹிதது ।

௩௦, ௩௦௨.

வினைகள் மாறுதற்குஏற்ப புழு யானை முதலியவற்றினுடைய உடம்புகளுள் ஆத்மா புகுகின்றது; வியாபகமாதலால், குடம் முதலியவற்றுள் ஆகாசம்போல.

ஒருஆத்மாவிற்குப் பற்பலவகையான கர்மங்க ளுள்ளமையால், அவை மாறுதற்குத்தக்கபடி ஒன்றற்கொன்று விரோதமான பல உடம்புகளுள் புகுதல்வேண்டி வரும். வரவே, மனிதஉடம்பளவிற்ருன ஆத்மா ஒருகால் ஒருகர்மத்தினுல் யானைஜன்மத்தை யடையும்பொழுது, அந்த யானையுடம்பினுள் எங்கும் நிறைந்துநிற்காது; மனிதஉடம்பினும் யானையுடம்பு பெரிதாதலின். அப்படியே, மனிதஉடம்பளவிற்ருன ஆத்மா ஒருகால் ஒருகர்மத்தினுல் புழுஜன்மத்தை யடையும்பொழுது, அந்தப் புழுவுடம்பினுள் அடங்காது; மனிதஉடம்பினும் புழுவுடம்பு சிறிதாதலின். ஆகவே, ஆத்மா உடம்பளவிற்று என்றல் பொருந்திய தன்ரும்.

இனிப் பொருந்தியது யாதெனில்,— ஆத்மா வியாபகமாம் என்பது.— எப்படி?— கூறுவோம்: ஆகாசமானது குடம் சுவர் முதலியவற்றுள் புகுந்து அவ்வவற்றினது அளவிற்குத் தக்கவாறு அவ்வவற்றுள் நிரம்பிநிற்குமாறுபோல, வியாபகமான ஆத்மா தனது வினைக்கு ஈடாக வரும் புழுஜன்மம் யானைஜன்மம் மனிதஜன்மம் முதலான உடம்புகளுள் புகுந்து அவ்வவற்றினது அளவிற்குத் தக்கவண்ணம் அவ்வவற்றுள் நிறைந்துநிற்கின்றது என்றபடி. (௩௦, ௩௦௨)

௩௧, ௩௧௨.

ஆத்மா வியாபக மென்பதற்கு நியாயம் கூறுகிருர்:

பரமாணுஅளவிற்ருன மனத்தினுள்ளும் ஆத்மா விளங்குகின்றது. கனவிலே, ஸ்தாவரஜங்கமமான பிரபஞ்சம் ஆத்மாவினிடத்தே தங்கியுளது.

"பரமாணுஅளவிற்ருன" என்பதற்கு - "மிகநுண்மையான" என்று உரைக்க; ஏனெனில், இங்குச் சொல்லக்கருதிய பொருள் நையாயிகர்கொண்ட பரமாணு அன்று, மனம் மத்யமபரிமாண மாதலின். க. ஆத்மா அதிநுண்மையான மனத்தினுள்ளும் விளங்குதலும், உ. கனவிலே கடல் மலை மரம் செடி

௩௨, ௩௨௨.

தெஹாதிஷ்வஹமிதெ்யவடி ஹ்ரூஃ ஸம்ஸாரஹெதுகஃ ॥
ஸுகஃவ்ரவிஷஃ ஶாஸ்தீதி ஶொக்ஷாயொவாதிஶஹ்ரூதிஃ ।

௩௩, ௩௩௨.

ஸவஶெஷா ஃஹாஶாயா வாதிநாஶவி ஶொஹிநீ ॥
யஸ்மாதாக்ஷாத்க்ரதெ ஸஹ்யஃ மீயதெ ச ஸஹாஶிவெ ।

யானை குதிரை வண்டி மனிதன் மாடு முதலான ஸ்தாவர ஜங்கமமாய் விரிந்து காணப்படும் ஜகத்து ஆத்மாவினிடத்துத் தங்கிநிற்றலு மாகிய இவ்விரண்டு குறிகளும் - ஆத்மா வியாபக மென்பதை, அர்த்தாபத்திப்பிரமாணத்தினால் அறிவிக்குமாறு கண்டுகொள்க. (௩௧, ௩௧௮)

மாயை என்னும் மயக்கம்.

௩௨, ௩௨௨.

ஆகவே, உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக் கொள்ளுதல் வெறும்மயக்கமாம் :

உடம்புமுதலியவற்றிலே 'நான்' என்னும் (எண்ணம்) மயக்கமாம். (இது) ஸம்ஸாரத்திற்கு (க் காரணமான அவித்யையினால்) லாகின்றது. "(ஈச்வரன்) உள்ளே புகுந்து ஆளுகிறான்" என்பதை மோக்ஷத்திற்காக சுருதி உபதேசித்துளது.

"ஸுகஃ வ்ரவிஷஃ ஶாஸ்தா ஜநாநாம் । ஸகஃ ஸங்
வஹுயா விசாரஃ"

"(ஈச்வரன்) உள்ளே புகுந்து ஜனங்களை ஆள்பவன், ஒருவனாய் இருந்து பலவாறாக இருப்பவன்"— (தை - ஆ - ௩ - ௧௧)

என்பது சுருதி. உடம்பு இந்திரியங்கள் பிராணன் மனம் புத்தி எனப் படைக்கப்பட்ட இவையனைத்தும்கூடிய ஸமுதாயத்துள் இவற்றிற்கு வேறான பொருளொன்று புகுதலை அந்த சுருதி கூறுதல் - ஆத்மாவை உடம்புமுதலியவற்றிற்கு வேறாகப் பகுத்தறியும்பொருட்டு என்பதாம். (௩௨, ௩௨௮)

௩௩, ௩௩௨.

இவ்வாறு, ஆத்மா - உடம்பு முதலியவற்றிற்கு வேறென்பது சுருதியினாலும் உணர்த்தப்பட்டது. இனி, ஜனங்கள் உடம்புமுதலியவற்றை ஆத்மாவாக மயங்குதற்குக் காரணத்தையும், அது நீங்குதற்கான உபாயத்தையும் அருளிச்செய்கிறார் :

இவ்வாறு இந்த மஹாமாயை வாதிகளையும் மயக்குகின்றது; ஏனெனில், ஸதாசிவனை நேரே கண்டவழி (அது) உடனே மறைகின்றது.

ரூச, ரூசஉ.

ஜெஹெஂஜ்ரயாஸுஹீநாய ஶாநஉ ஏரஷுரு ஏவிணெ ॥
ஐதாநாநஷுஷுரு ஏவாய உக்ஷிணாஶு ஏ தபுயெ நமஃ ॥

ரூரு, ரூருஉ.

ஊதி ஸ்ரீஉக்ஷிணாஶு ஏ திபுஷ்ஷொ ஆரூயபுவ்ரதிவாஉகெ ।
வ்ரவஸெ ஶாநஷொஷுரூஸெ வஙுஶொஷுரூஸஸம்ரு ஹஃ ॥

இந்த - ஈச்வரனுடைய. கஎரு-ஆம் பக்கத்தைப் பார்க்க. (ரூரு, ரூருஉ)

ரூச, ரூசஉ.

இனி, எந்த ஈச்வரனை நேரே தரிசித்தவழி மயக்கம் தீர்ந்திடுமோ, அந்த பகவானை வணங்குகிறார் :

உடம்பு இந்திரியம் பிராணன் என்பன இல்லாது, பிரமாணங்கட்கு விலக்கமான இயல்புள்ளதாகி, ஞான ஆநந்தவடிவமாய் (த் தானே விளங்கும்) தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

பிரமாணங்கட்கு விலக்கமான - பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்களால் அளந்தறியவொண்ணாத என்றபடி. வே - கீ - உ - கஅ - ஆம் சுலோகத்தின் பாஷ்யத்தைப் பார்க்க. (ரூச, ரூசற)

ரூரு, ரூருஉ.

இவ்வுல்லாஸத்தை இதனோடு முடிக்கிறார் :

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் ஐந்தா முல்லாஸப் பொழிப்புரை முற்றும்.

ஐந்தாம் உல்லாஸம்.

பதவுரை.

க.

வ்ரதுக்ஷிழ வஸகு	பிரத்தியக்ஷம் ஒன்றே
வ்ரமாணம்	பிரமாணமாய் (உள்ளது) ;
ஸ்ரு.தவ.த-ஷயம்	நான்கு பூதங்களும்
தக்வம்	தத்துவங்களாய் (உள்ளன) ;
மொக்ஷஃ வ	மோக்ஷமும்
ஶாணாக	சாதலைக்காட்டிலும்
கூநுஃ	வேறாக
ந (கஷ்தி)	இல்லை ;
காமாயுள	இன்பமும், பொருளும்
வ-ரு-ஷாயக்கள	புருஷார்த்தங்களாய் (உள்ளன).

கஉ.

கதா	கர்த்தாவான
ஈஶ்வரஃ	ஈச்வரன்
கஶ்சிக	ஒருவன்
ந (கஷ்தி)	இல்லை ;
வாரயொககயா	மறுமையுலகவார்த்தை
வ்யா	வீணாய் (உளது).

உ, உஉ.

ஆதா	ஆத்மா
தெஹம் விநா	உடம்பின்றி

க்ஷீணே சேக	இருக்குமானால்,
கும்஭வக	குடம்போல
வாராः	எதிரே
ஏஷ்யதாம்	காணப்படட்டும்.
தேஹः	உடம்பு
ஹ்ரஸ்வம்	குட்டையானது
தீர்கம்	நெட்டையானது
யௌவ	யௌவநமுடையது
வாலः	பால்யமுடையது
இதி	என்று
கலிஏஷ்யதே	எதிரே காணப்படுகின்றது.

ங, ஙஉ.

க்ஷீணே	இருக்கின்றது
ஜாதः	பிறந்தது
வர்ஷிதः	திரிந்தது
வர்தितः	வளர்ந்தது
க்ஷீணः	தேய்ந்தது
ஜீர்ண	முதிர்கின்றது
ஏதः	இறந்தது
இதி	என
ஏவம்	இவ்வாறு
உக்தாः	கூறப்பட்ட
ஷட்பாவவிகாராः	பொருள்விகாரங்கள் ஆறும்
தேஹஸம்ஸ்ரயாः	உடம்பைச் சார்ந்தவையாய் (உள்ளன).

ச, ரு.

வர்ணாஶ்ரமவிஶேஷः ச	ஜாதிவகுப்பும், ஆச்ரமவகுப்பும்
தேஹேஷு ஏவ	சரீரங்களிலேயே

வ்ரதிஷ்டிதம்	நிலைத்துளது.
ஜாதகர்மாதிஸம்ஸ்காரம்	ஜாதகர்மம் முதலிய சடங்கானது
தெஹஸ்ய வாவ	சரீரத்திற்கே
விஹிதே	விதிக்கப்படுகின்றது.
(ஸ்ருஷ்டிகாம்)	(ஆஸ்திகர்கள்)
ஶதம்	"நூறு (வருஷம்)
ஜீவ	வாழ்க"
இதி	என்ற
மங்களம்	மங்களமான
ஆஶிஷம்	ஆசீர்வாதத்தை
தெஹஸ்ய	உடலுக்கு
வ்ரயஂஜந்தி	வழங்குகிறார்கள்.

நுஉ.

ஸர்வவேதநம்	அற்பஅறிவுள்ள
சாவாகம்	சார்வாகன்
ஜகதம்	ஜகத்தை
இதி	இவ்வாறு
வாசயதி	கற்பிக்கிறான்.

சு, சுஉ.

கேசித்	சிலர்,—
ஶ்வஸிமி	"மூச்சுவிடுகிறேன்,
ஜீவாமி	ஜீவிக்கிறேன்,
க்ஷயிதம்	பசியுள்ளவனாக
ஸ்ம	இருக்கிறேன்,
விவாஸிதம்	தாகமுடையவனாக
(ஸ்ம)	(இருக்கிறேன்)"
இத்யாதிப்ரத்யயமாத்ர	என்பனமுதலானஉணர்ச்சிகளின் வலிமையினால்

ப்ராணஃ	பிராணன்
ஆத்மா	ஆத்மா
இதி	என்று
உபாஸதே	கொள்கிறார்கள்.

எ, எஅ.

கேசித்	சிலர்,—
அஹம்	"நான்
ஶ்ருணோமி	கேட்கிறேன்,
பஶ்யாமி	காண்கிறேன்,
ஜிக்ராமி	முகர்கிறேன்,
ஆஸ்வாதயாமி	ருசிபார்க்கிறேன்"
இதி	என்று
ததஃ	அவனைக்காட்டிலும்
அதிகம்	மேலாக
இந்த்ரியாணாம்	இந்திரியங்கட்கு
ஆத்மத்வம்	ஆத்மத்தன்மையை
ப்ரதிபந்தி	கொள்கிறார்கள்.

அ.

அபரே	மற்றையோர்கள்
ஜாநாமிப்ரத்யயவஶாத்	"அறிகிறேன்" என்னும் உணர்ச்சியின் வலிமையினால்
புத்திஃ	புத்தி
(ஆத்மா) இதி	(ஆத்மா) என்று
ஜல்பந்தி	கூறினார்கள்.

அஉ.

மாயாவ்யாமோஹிதாந்தராம்	மாயையினால் மயங்கிய மனத்தையுடைய

தெஷாம்	அவர்கட்கு
ஊஷணம்	குற்றம்
உச்யதெ	கூறப்படுகின்றது.

ரு.

(யெ)	(எந்த)
வாதிநஃ	வாதிகள்
தெஹம்	உடம்பையாயினும்
ப்ராணமு சுவி	பிராணனையாயினும்
இந்த்ரியாணி சுவி	இந்திரியங்களையாயினும்
சலாம்	சஞ்சலமான
புத்தி ச	புத்தியையாயினும்
ஶூந்யம்	சூந்யத்தையாயினும்
சுஹமு இதி து	'நான்' என்றே
விதுஃ	அறிகிறார்களோ,
(தெ)	(அவர்கள்)
ஸ்ரீவாலாநுஜலொவஶாஃ	ஸ்திரீ, பாலன், குருடன், பேய்பிடித்தவன் (ஆகிய இவர்கட்கு) ஒப்பானவராய்
ஸுபம்	மிகவும்
ஸுதாஃ	மயங்கியிருக்கிறார்கள்.
மாயாஶக்திவிலாஸ-கல்பித-	மாயாசக்தியினுடைய தளுக்கினால் ஆன
மஹாவ்யாமோஹ -	பெரிய மயக்கத்தை
ஸம்ஹாரிணெ	முற்றும் தொலைக்கின்ற
தஸ்மை	அந்த
ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான	ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான
ஸ்ரீதக்ஷிணாமூர்தயெ	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
ஏஷம்	இந்த
நமஃ	நமஸ்காரம்.

இதம்	இது
அஸ்ய	இதனுடைய
தாத்பர்யம்	அபிப்பிராயம்.

கூ, கூற.

வாஷாணவத்	கல்போல
அநாத்மநாம்	அநாத்மாவான
தேஹாதீநாம்	உடம்பு முதலிய
ஜடாயூநாம்	ஜடப்பொருள்கட்கு
ஈஶ்வரஸ்ய	ஈச்வரனுடைய
ஸம்பந்தம் விநா	புகுதலின்றி
அஹம்பாவம்	'நான்' என்னும் எண்ணம்
கதம்	எப்படி
பவேத்	நிகழும்?

கo, கoஉ.

தாவத்	இனி
அயம்	இந்த
தேஹம்	சரீரம்
கும்பவத்	குடம்போல
த்ருஶ்யத்வாத்	காணப்படுவதாதலாலும்
ஜாட்யவத்த்வாத்	ஜடத்தன்மையையுடைமையினாலும்
ரூபவாதித்வாத்	நிறம் வடிவம் முதலியவற்றை யுடைமையினாலும்
ஸாம்ஶத்வாத்	அவயவங்களோடு கூடியுள்ளமையினாலும்
பௌதிகத்வாத் ச	பூதங்களா லாகியதனாலும்
ஆத்மா	ஆத்மாவாக
ந (பவேத்)	ஆகாது.

கக, ககஉ.

தெஹஃ	சரீரம்
உ-ஔஹ-ூஸ-ஷ-ஷ்ஹிஈணெ-ஷ-ு கூவி	மூர்ச்சை, தூக்கம், இறப்பு என்ற வற்றிலும்
வ்ரூ ஃ ஸ்ரூதெ	காணப்படுகின்றது.
சூதா	ஆத்மா
தெஹாதிவ்ரூ திரிசூகூவாசு	சரீரம் முதலியவற்றிற்கு வேறு யிருத்தலால்
தஉா	அப்பொழுது
ந வ்ரூ தீயதெ	காணப்படவில்லை.

கஉ, கங, கங உ.

யயா	எப்படி
சுஂஸ-ுஃாங	சூரியன்
ஜகதவ்ரூ த்தீநாம்	உலகம் தொழிற்படுதற்கு
சூதிகாரணம்	ஆதிகாரணமாய்
(ஹவதி)	(இருக்கின்றதோ,)
தயா வன	அப்படியே
வ-ுஃாங	ஆத்மாவானது
தெஹாதிவ்ரூவ்ரூ த்தள	உடம்புமுதலியன தொழிற்படுதற்கு
வாரம்	முதன்மையான
காரணம்	காரணமாய்
(ஹவதி)	(இருக்கின்றது.)
ஸ்ரீ	ஸ்திரீயும்
வாலஃ	சிறுவனும்
சுஃலஃ ஃ வ	குருடனும்
சுயம்	" இது
ஃஃ	என்னுடைய
தெஹஃ	சரீரம் "

இதி	என்று
ஏவம்	இப்படி
உந்யதெ	நினைக்கிறான்.
அஹம்	"நான்
தெஹஃ	சரீரம்"
இதி	என்று
கஶ்ந	ஒருவனும்
கதாசிந் கவி	ஒருபொழுதும்
ந சுவெதி	உணர்கிறானில்லை.

கச, கடு, கசு.

இந்த்ரியாணி கவி	இந்திரியங்களும்
ப்ரதீபவத்	விளக்குப்போல
காரணத்வாத்	கருவியாதலால்
ஆத்மாநஃ	ஆத்மாக்களாக
ந (ஏவம்தி)	ஆகமாட்டா.
ஶ்ரோத்ரம்	காது
வீணாவாதநவத்	வீணைவாத்தியம்போல
ஶப்தக்ரஹணஸாதநம்	ஓசையை உணர்தற்குக் கருவியாம்.
சக்ஷுஃ	கண்
தெஜஸ்த்ரிதயவத்	மூன்று ஒளிகள்போல
ரூபக்ரஹணஸாதநம்	உருவத்தை யுணர்தற்குக்கருவியாம்.
க்ராணம்	மூக்கு
வுஷ்பஸம்வாடகாதிவத்	பூக்குடலை முதலியனபோல
கந்தஸ்ய	நாற்றத்தை
க்ராஹகம்	உணர்வதாக
(ஏவெத்)	(ஆகும்.)
ஜிஹ்வா	நாக்கு

உயிக்ஷளஊவ்ரதாஹிவசு	தயிர், தேன், நெய் முதலியனபோல
ரஸஸ்ய	சுவையை
ஸ்ராஹிகா	உணர்வதாக
(ஹவெசு)	(ஆகும்.)

கள.

இந்ரியெஃ	இந்திரியங்களால்
ஹீநாஃ	குறைந்த
ஜநாஃ	மனிதர்கள்
இந்ரியாணி	"இந்திரியங்கள்
மெ	எனக்கு
ந ஸந்தி	இல்லை;
அஹம்	நான்
உத்ரகஃ	ஊமையாக
அஸ்மி	இருக்கிறேன்.
வயிரஃ	செவிடனாக
அஸ்மி	இருக்கிறேன்"
இதி	என்று
ப்ரூவந்தி	சொல்லுகிறார்கள்;
தெ	அவர்கள்
நிராத்மகாஃ	ஆத்மாஇல்லாதவராக
(ஹவந்தி) கிம்	ஆகிறார்களா?

கஅ, கசு.

ஸுஷுப்திஷு	தூக்கங்களிலே
ஜ்ஞாநாபாவாசு	அறிவின்மையால்
ப்ராணஃ அபி	பிராணனும்
ஆத்மா	ஆத்மாவாக
ந ஹவதி	ஆகாது.
வ்ரஷ்ஷெ	புருஷன்

ஜாக்ரதஸ்வப்னஸுஷுப்தி-	நனவுகனவுவாழ்க்கையினு லான
ஸுவிஹித்திஹேதவே	இளைப்பு நீங்கும்பொருட்டு
ஸுஷுப்திம்	நித்ரையை
ப்ராப்தே	அடைந்தபோது,
ஸுஷுப்தகர்மோபலப்தாயம்	மிச்சமான கர்மத்தை அநுபவித்தற் காக
ஶரீரம்	தேகத்தை
ரக்ஷிதும்	காக்க
ப்ராணஃ கேவலம்	பிராணன்மாத்திரம்
வர்தி	சஞ்சரிக்கின்றது.

உ0, உக.

ப்ராணஸ்ய	பிராணனுக்கு
சைதந்யம்	சேதநத்தன்மை
(ஸ்தி) யதி	இருக்குமாயின்,
தத்	அதிலே [தூக்கத்திலே]
கரணோபரமே	இந்திரியங்கட்கு ஓய்வு
(ஸதி)	(உள்ளபோது)
(ப்ராணஃ)	(பிராணன்)
(நிவ்ருத்தாபாரஃ)	(செய்கையில்லதாய்)
(ஸ்யாத்)	(இருக்கவேண்டும்.)
தத்	மற்று
ப்ராணே	பிராணன்
வ்யாபாரயதி	வியாபரித்திருக்கும்பொழுது
கரணோபரமஃ	இந்திரியங்கட்கு ஓய்வு
கதம்	எப்படி
(ஹ்யேத்)	(ஆகும்?)
ஸம்ராட்	அரசன்
ரணோத்யுக்தே	போரிலே முனைந்திருக்கும்பொழுது

வைஸிகாः	சேனைஜனங்கள்
ந விராஜி ஹி	ஓயமாட்டார்க ளன்றோ.
தஸ்மாத்	ஆதலால்,
ப்ராணः	பிராணன்
கரணஸ்ய	இந்திரியங்கட்கு அதிபதியாக
ஸ்வாமீ	ஆக
ந ஸுஹுரிதி	தக்கதன்று.

உஉ.

உநஸः	மனத்தை
ப்ரேரகெ	செலுத்துகின்ற
வாயுஸி	புருஷன்
விரதெ (ஸதி)	ஓய்ந்தபொழுது,
ஸர்வாணி	எல்லா
கரணாநி	இந்திரியங்களும்
விரமந்தி	ஓய்கின்றன.
ஸுதः	ஆதலால்
ததः	அதனினும்
(அந்யः)	(வேறான)
வாயுர	புருஷன்
தேஷாம்	அவற்றிற்கு
ஸ்வாமீ	உடையவனாக
(ஸ்யாத்)	(ஆவான்.)

உ௩.

வாயுः தா	புத்தியோ
க்ஷணிகா	க்ஷணமாத்திர முள்ளதாக
மரீமரீஸஹிதா	போதலோடும் வருதலோடும் கூடி யதாக

வெஹ்யா	அறியப்படுவது ;
சூத்ரஃ	ஆத்மாவினுடைய
வ்ரதிஃபிம்பைந	பிரதிபலநத்தினால்
லாஸிதா	விளங்கப்பட்டதாய்
ஜகத்	பிரபஞ்சத்தை
லாஸயெத்	விளங்கச்செய்யும்.

உச.

஬ுத்தி:	புத்தி
சூத்ரே	ஆத்மாவினிடத்து
உத்பத்யதெ	உண்டாகின்றது ;
சூத்ரே ஏவ	ஆத்மாவினிடத்தே
ப்ரலீயதெ	மறைகின்றது.
ப்ராக்	முன்னும்
உத்பத்தேஃ ச	பின்னும்
அஸதீ	இல்லாத
஬ுத்தி:	புத்தி
ஸ்யாத் ஏவ	தானே
ந ஸியாதி	அமைகிறதில்லை.

உரு, உருற.

வ-ஏவ-ஏவ-ஏவ-ஏவாத்	முந்தின முந்தின
ஜ்ஞாநாத்	ஞானத்தினின்று
உத்பத்தி-உத்பத்தி-ஸம்ஸ்லவ:	பிந்தின பிந்தின (ஞானம்) உண்டாதல்
(அஸ்தி) செத்	இருக்குமாயின்,
ய-ஏவ	ஒரேகாலத்தில்
ஸஹ-ஏவ-ஜிக்வம்	பல புத்திகளிருத்தல்
க்ஷணெ க்ஷணெ	க்ஷணந்தோறும்
ப்ரஸஜ்யெத	ஆகவேண்டும்.

(கிம்சித்)	(ஒரு)
(ஜ்ஞாநம்)	(ஞானம்)
(ஸ்வஸ்ய)	(தனது)
நாஶாத்தரம்	அழிவிற்குப் பின்
ஸுஸ்தித:	இல்லாமையின்
வ்யஞ்ஜயேத்	மற்றோர் ஞானத்தை
ந ஜநயேத்	பிறப்பிக்கமாட்டாது.

உசு, உசூஉ.

ஏஷாம்	இவற்றின்
ஸம்வாத:	ஸமுதாயம்
ஆத்மா	ஆத்மாவாக
(ஸ்யாத்) சேத்	(இருக்கு) மாயின்,
ததா	அப்பொழுது
ஏகஸம்பந்த:	ஓர் உறுப்பு
வ்யபதேஶே (ஸதி)	பிரிக்கப்பட்டவளவிலே
ஸம்வாதாபாவத:	ஸமுதாயமின்மையின்
சேதநத்வம்	சேதநத்தன்மை
ந ஸ்யாத்	வாராது.

உஎ, உஎஉ.

(சேதநம்)	(சேதநப்பொருள்)
அநேகம்	அனேகமாக
(ஸ்யாத்) சேத்	(இருக்கு) மாயின்
விநிஹிதாவிஹாய:	வெவ்வேறு திசையை நோக்கிச் செல்லுதலிலே விருப்பம்
(ஸ்யாத்)	(உண்டாகும்.)
தத்	அது
ந வ்யுசிதம்	ஸமஞ்ஜஸ மன்று.

(யதஃ)	(ஏனெனில்)
ஸத்ஸு	இது
ஸத்யஃ	உடனே
விநஶ்யதி	முறிந்திடுவது
ஹி	ஆகும்;
வா	அல்லது
நிஷ்க்ரியம்	செய்கையற்றது
ஹவிஷ்யதி	ஆகும்.

உஅ, உஅஉ.

ஆத்மா	ஆத்மா
தேஹஸ்ய	உடம்பினுடைய
ஸதஃ	உள்ளே
மதஃ ஸதி	உள்ளதாயினும்
வ்யாபகஃ ஸன்	வியாபகப்பொருளே
இதி	என்று
ஜ்ஞாயதே	அறியப்படுகின்றது.
ஸஷஃ	இது
ஸூக்ஷ்மபரிணாமஃ	அணு அளவுஉள்ளதாக
(ஸ்யாத்) சேத்	(இருக்கு) மாயின்
ஸர்வம்	எல்லா
வபுஃ	உடம்பையும்
ந வ்யாப்நுயாத்	வியாபியாது.

உகூ, உகூஉ.

(ஆத்மா)	(ஆத்மா)
தேஹபரிணாமஃ	உடம்புஅளவுஉள்ளதாக
ஸ்யாத் சேத்	இருக்குமாயின்
பாலஸ்ய	குழந்தை

ஸுவிராஜிதா	மூப்புமுதலியவற்றை யுடைமை
ந ஸ்யாசு	கூடா ;
ஶெஹவசு	உடம்புபோல
வரிணாஜீ	திரிபுஉடையதாக
ஸ்யாசு ஶெசு	இருக்குமாயின்
தஶசு வன	அதுபோலவே
விநம்க்ஷ்யதி	அழிந்திடும்.

௩0, ௩0௨.

சூத்தா	ஆத்மா
வ்யாபக்வாசு	வியாபகமாயிருத்தலால்
வடாஜிஷு	குடம்முதலியவற்றுள்
சுகாரிக்ஷவசு	ஆகாசம்போல
கிரிஹஸ்யாஜிஶு திஷு	புழு யானை முதலியவற்றினுடைய உடம்புகளுள்
சுஶுணாம்	வினைகளுடைய
வரிணாஶெ	மாறுபாட்டிற்குத்தக்கபடி
வ்ரவிஶதி	புகுகின்றது.

௩க, ௩௧௨.

(சூத்தா)	(ஆத்மா)
வாரோண-வ்ரோணெ	பரமாணுஅளவுஉள்ள
உநஸி சுவி	மனத்தினுள்ளும்
வ்ரதிஹாஸதெ	விளங்குகின்றது.
ஸ்வெ	கனவிலே
ஶரீரம்	ஸ்தாவர ஜங்கமமான
விஶ்வம்	ப்ரபஞ்சம்
சூத்தநி வன	ஆத்மாவினிடத்தே
வ்ரதிஷிதம்	தங்கியுளது.

௩உ, ௩உஉ.

தெஹாதிஷு	உடம்புமுதலியவற்றிலே
அஹம் இதி ஜ்ஞாநம்	'நான்' என்ற இவ்வாறான
ஜாயே	மயக்கம்
ஸம்ஸாரஹேதுகம்	ஸம்ஸாரத்திற்குக் காரணமாக
(ஜாயதி)	(இருக்கின்றது.)
(ஈஶ்வரஃ)	(ஈச்வரன்)
அந்தஃ	உள்ளே
ப்ரவிஷ்டஃ	புகுந்தவனாய்
(ஜநாந்)	(ப்ராணிகளை)
ஶாஸ்தி	ஆளுகின்றான்
இதி	என்று
ஶ்ருதிஃ	சுருதியானது
மோக்ஷாய	முக்திக்காக
உபதிஶதி	உபதேசித்துளது.

௩௩, ௩௩உ.

ஜ்ஞாநம்	இப்படி
ஜ்ஞாநா	இந்த
மஹாமாயா	மகாமாயை
வாதிநாதி ஜ்ஞாநி	வாதிகளையும்
மோஹிநீ	மயக்குவதாய்
(ஜாயதி)	(இருக்கின்றது.)
யஸ்மாத்	ஏனெனில்
ஸதாஶிவே	ஸதாசிவன்
ஸாக்ஷாத்ப்ரதே (ஸதி)	நேரே காணப்பட்டவளவிலே
ஸத்யஃ	உடனே
லீயதே ச	மறைகின்றது.

௩௪, ௩௪௨.

தெஹேந்த்ரியாஸுஹீநாய	உடம்பு இந்திரியங்கள் ப்ராணன் என்பன இல்லாததாய்
ஶாநஶுஷ்வாஸுவிணே	ப்ரமாணங்கட்கு எட்டாத இயல்பினதாய்
ஆநாநந்தஸ்வாஸுவாய	அறிவான ஆநந்தவடிவாகிய
தக்ஷிணாமூர்த்தயே	தக்ஷிணாமூர்த்திக்கு
நமஃ	நமஸ்காரம்.

௩௫, ௩௫௨.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி-ஸ்தோத்ரவிவரணே	ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய ஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற
ஶாநஸோல்லாஸே	மாநஸோல்லாஸம் என்னும்
ஸ்ரவணே	நூலினுள்
வஸுஶோல்லாஸஸம்ஜ்ஞஃ	ஐந்தாம் உல்லாஸப்பொழிப்புரை
இதி	முற்றும்.

ஈ ய

ஷ ஷ ா ஜ ா ஸ ஃ ॥

க.

ஸ்வெ விஶ்வம் யயா ததி ஜாஶ்ரதுவி தயெதி வெக ।
ஸ்வஷ்வள கஸ்ய கிம் ஹாதி கஃ ஸ்யாயீ தது வெதநஃ ॥

ஆறும் உல்லாஸம்.

எப்படிக் கனவிலே தோற்றுவனவெல்லாம், ஆத்மஸ்வரூபமான பரமேச்வரனிடத்துக் கற்பிக்கப்படுகின்றனவோ, அப்படியே நனவில் தோற்றுவனவும் அதனிடத்தே கற்பிக்கப்படுகின்றன எனக் கீழே விளக்கப்பட்டது; அன்றியும், உடம்பே ஆத்மா என்னும் கொள்கையினையும் மற்றுமிதுபோன்றவற்றையும் மறுத்தலால், ஆத்மாவென்பது அத்தோற்றங்கட்கெல்லாம் அடிக்காரணமாகிநிற்கும் தனி முதலான நிர்விகாரப்பொருளாம் என உணர்த்தப்பட்டது. அதிலே,—பௌத்தராவார் ஆத்மஉண்மையிலே நிகழ்த்துகின்ற ஆக்ஷேபங்கட்கு ஸமாதாநம் கூறுவதாய், அதுவே [ஆத்மாவே] நிலையான உண்மையென்று இவ்வுல்லாஸம் சாதிக்கின்றது:

பௌத்தமதத்தார் - மாத்யமிகர் யோகாசாரர் ஸௌத்திராந்திகர் வைபாஷிகர் என நால்வகைப்படுவர். இந் நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர். இவருள், மாத்யமிகர் - எல்லாப்பொருளும் பாழ் என்பர்; யோகாசாரர், கணந்தோறும் தோன்றி யழியும் அறிவே ஆத்மா என்பர்; ஸௌத்திராந்திகரும் வைபாஷிகரும், ஜகத்துமுழுதும் புறம் அகம் என்னும் இருவகைச்சமுதாயமே என்பர்.

(க) சூந்யவாதம்.

க.

இனி, இக்கொள்கைகளை மறுக்கும்பொருட்டு, முதலில், மாத்யமிகனுடைய ஆக்ஷேபத்தைக் கூறுகிறார்:

எப்படிக் கனவிலே ப்ரபஞ்சம் அதனிடத்துத் தங்கியுளதோ அப்படியே நனவிலுமாம் எனில்,—உறக்கத்திலே யாருக்கு யாது விளங்குகின்றது? அதிலே, எது நிலையான அறிவுப்பொருள்? (கூறுவாயாக.)

கஉ.

ஸவம் ச க்ஷணிகம் ஶூந்யம் ஸவமேவ ஸ்வயக்ஷணம் ।

உ.

ஸம்வாதஃ வாயுஜலாணுநாம் ஸ்வாம்வாஹிஸரணாஃ ॥

அதனிடத்து - என்றுமுள்ள ஈச்வரனான ஆத்மாவினிடத்து. கனவுப்பிரபஞ்சம்போல, நனவுப்பிரபஞ்சமும் நித்யமான ஆத்மாவைச் சார்ந்துநிற்கின்றது என்பது அப்படியே இருக்கட்டும். ஆயினும், உறக்கத்திலே பார்ப்பவன் யார்? அவனால் பார்க்கப்படும் பொருள் யாது? அதிலே எது நிலையான அறிவுப்பொருள்?—உறக்கத்திலே எத்தகைய அறிவுப்பொருளும் இல்லை; அங்ஙனம் எதற்கும் எதுவும் விளங்கவில்லை. ஆகவே, வேதாந்திகொண்ட ஆத்மா இல்லை என்பது சூந்யவாதிகளின் கருத்து. (க)

(உ) க்ஷணிக விஜ்ஞாநவாதம்.

கஉ.

இனி, யோகாசாரனுடைய மதத்தைக் கூறுகிறார்:

எல்லாம் க்ஷணிகமானது, சூந்யமானது; எல்லாமே தனக்குரிய தன்மைத்து.

ஆத்மாஉள்பட ஸகலமான பொருளும் கணப்பொழுதுமாத்திரம் உள்ளவை; அவ்வாறே சூந்யமானவை, முற்கணத்திலும் பிற்கணத்திலும் இல்லாதவை; அவ்வண்ணமே தமக்குரிய தன்மையுடையவை, தம்தமக்கே இன்றியமையாமல் உரியதாய்நிற்கும் இயல்பினை யுடையவை. (கற)

(ங) ஸமுதாயவாதம்.

உ.

இனி, ஸௌத்திராந்திக வைபாஷிகருடைய சமுதாயவாதத்தை விரித்துக் காட்டுபவராய், புறம் அகம் என்னும் இருவகைச் சமுதாயத்துள் புறச்சமுதாயத்தைக் கூறுகிறார்:

நிலம், நீர், நெருப்பு, வாயு என்பன - பரமாணுக்களின் சமுதாய மாம்.

புறச்சமுதாயமாவது, நிலம் நீர் முதலியன. இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை, நிலவணு நீரணு தீயணு வாயுவணு என நால்வகைப்படும். அவை ஒருங்கு பலகூடித் திரண்டவழிப் புறச்சமுதாயம் தோன்றும் என்பது. இவர் தார்க்கிகர்போல பரமாணுகாரணவாதிக ளாயினும், பரமாணுக்கள் ஒருங்கு

௩.

உபாஷ்யாதிஶரீராணி ஸ்ஸுவங்குகஸம்ஹதிः ।
ஸ்ஸுராஶு ஈஶுவவிஜ்ஞாநஸம்ஜ்ஞாஸம்ஸ்காரவெதநாः ॥

௩௨.

ஈஶுவ்ருக உதி ஈஶுவாணி விஷயாஶ்சேந்த்ரியாணுவி ।

பலகூடிக் காரியமாம் என்பர். தார்க்கிகரோ அவ்வாறன்றி ஈச்வரனிச்சைவசத்தால் பரமாணுக்களில் கிரியைதோன்றி இவ்விரண்டு பரமாணுக்கள் தம்முள் சேர்ந்து இரட்டையணுவாய் அவை மும்மூன்று தம்முள் சேர்ந்து மும்மையணுவாய் இவ்வாறே ஒன்றினுக்கொன்று அவயவமும் அவயவியுமாய் முறையே தோன்றிக் காரியப்படும் என்றும், ஒடுங்கும்பொழுதும் ஈச்வரனிச்சைவசத்தால் அம்முறையே ஒடுங்கும் என்றும் கொள்வர். (உ)

௩.

இனி, அகச்சமுதாயத்தைக் கூறுகிறார்:

மனிதர்முதலானோருடைய உடம்புகள், ஐந்து ஸ்கந்தங்களின் சமுதாயமாம். ஸ்கந்தங்களாவன - ரூபம் விஜ்ஞாநம் ஸம்ஜ்ஞை வாஸனை வேதனை (என ஐந்து).

அகச்சமுதாயமாவது, ரூபம்முதலிய ஸ்கந்தங்கள். அவை - ரூபஸ்கந்தம், விஜ்ஞாநஸ்கந்தம், ஸம்ஜ்ஞாஸ்கந்தம், வாஸநாஸ்கந்தம், வேதநாஸ்கந்தம் என ஐவகைப்படும். இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலால் அகச்சமுதாயம் தோன்ற, அதுவே உலகவாழ்க்கையனைத்தையும் கொண்டுசெலுத்துவது. (ரு)

௩௨.

அவற்றுள், ரூபஸ்கந்தத்தைக் கூறுகிறார்:

ரூபிக்கப்படுகின்றன என்பன, ரூபங்கள்; (அவை) விஷயங்களும் இந்திரியங்களு மாம்.

ரூபிக்கப்படுகின்றன - சுட்டி யறியப்படுகின்றன. விஷயங்கள் எந்த இந்திரியங்களால் ரூபிக்கப்படுகின்றனவோ அவை ரூபங்கள். அன்றியும், எந்த விஷயங்கள் ரூபிக்கப்படுகின்றனவோ அவை ரூபங்கள். இவ்வாறு, ரூபம் என்னும் சொல் - கரணவ்யுத்பத்தியினால் இந்திரியத்தையும், கர்மவ்யுத்பத்தியினால் விஷயத்தையும் உணர்த்த, இந்திரியங்களும் விஷயங்களும் ரூபஸ்கந்த மாம். விஷயங்கள் புறத்துள்ளனவாயினும், உடம்பிலுள்ள இந்திரியங்களால் உணரப்படுகின்றமையின் அகச்சமுதாயத்துள் வைத்து எண்ணப்பட்டன. (ரூ,ற)

௪.

விஷயெந்த்ரியயொஜ்ஞாநம் விஜ்ஞாநஸ்கந்த உச்யதெ ॥

௫.

ஸம்ஜ்ஞாமணக்ரியாஜாதிவிஶிஷ்டவ்ரதாயாதிகா ।
வத்யா கவ்ஷாவெராதா ஸம்ஜ்ஞாஸ்கந்தஸ்ய ஸஸமதெஃ ॥

௬, எ.

மவாம் மளரிதி ஸம்ஜ்ஞாகா ஜாதிமெஃகவம் தா மொமதி ।
மணாஃ ஶுக்லாஶயஸ்ய மஹத்யாஹ்யாதயா க்ரியாஃ ॥

௪.

விஜ்ஞாநஸ்கந்தத்தைக் கூறுகிறார் :

விஷயஇந்திரியங்களுடையஉணர்ச்சி விஜ்ஞாநஸ்கந்தமாகச் சொல்லப்படுகின்றது.

உருவம்முதலிய விஷயங்களைப்பற்றி இந்திரியம்முதலியவற்றால் உண்டாகும் அறிவே விஜ்ஞாநஸ்கந்தமாம் என்பது. (௪)

௫.

ஸம்ஜ்ஞாஸ்கந்தத்தைக் கூறுகிறார் :

பெயர் பண்பு செயல் ஜாதி சிறப்புணர்ச்சி என்ற வடிவிற்றான ஐந்துவகைக்கற்பனையானது பௌத்தர்களால் ஸம்ஜ்ஞாஸ்கந்தத்திற்குக் கூறப்பட்டிருக்கின்றது.

ஸம்ஜ்ஞாஸ்கந்தமென்பது - ஸவிகல்பமான உணர்வு. க. பெயர் - சாத்தன் கொற்றன் மரம் மலை மாடு முதலிய சொற்கள். உ. பண்பு - நிறம் முதலிய குணம். ங. செயல் - அந்தந்தக் காரியத்தைப் பிறப்பிக்கும் ஆற்றல். ச. ஜாதி - வரைசெய்துநிற்கும் ஓர்வகைத் தன்மை. ரு. சிறப்புணர்ச்சி - பல உறுப்புக்களின் அமைப்பினாலாகும் உணர்வு. இவ்வாறு பௌத்தர்கள் ஸம்ஜ்ஞாஸ்கந்தத்தை ஐந்து திறமாகப் பகுக்கிறார்கள். (ரு)

௬, எ.

இந்த ஐந்து விதத்தையும் உதாரணத்தால் காட்டுகிறார் :

ஆக்களின் பெயர் ஆ எனப்படுகின்றது. ஜாதியாவது ஆவினிடத்துள்ள ஆத்தன்மை. அதனது குணங்கள், வெண்மை முதலியன.

ஶ்யாமீ வதாஷாமாஜாதாயீ விஶிஷ்டாதாயா ஹ்யஸள ।
ஸவம் வதுவியா களத்தீ: ஸாஜ்ஞாஸ்ரு உதீயுதெ ॥

எ உ.

நாமாஹ்யா: வாணாவாவெ ச ஸாஸ்ரு உச்யுதெ ।

அ.

ஸாவம் உாவம் ச ஶொக்ஷ்ஶ ஸ்ரு: ஸ்யாஉஹாஹ்ய: ॥

அ உ.

வதுஹ்ய ஸவ ஸ்ரெஹ்ய: நாந்ய ஸ்தாஸ்தி கஶ்ச ।

அப்படியே (அதனது) செயல்கள், செல்லுதல்முதலியன. அது கொம்புடையது, நான்குகாலுடையது, வாலுடையது (என்பது) சிறப்புணர்ச்சி. இவ்வாறு ஐவகைத்தான கற்பனை ஸம்ஜ்ஞாஸ்கந்தம் எனப்படுகின்றது.

அதனது - ஆவினது. அது - ஆ. (சு, எ)

எ உ.

வாஸநாஸ்கந்தத்தைக் கூறுகிறார்:

பற்று முதலியனவும் புண்ய பாவங்களும் வாஸநாஸ்கந்தமாகச் சொல்லப்படுகின்றது.

பற்று - விஷயங்களின்மேல் செல்லும் அவா. (எ ற)

அ.

வேதநாஸ்கந்தத்தைக் கூறுகிறார்:

இன்பமும் துன்பமும் (அவற்றின்) நீக்கமும் - வேதனை என்னும் பெயருடைய ஸ்கந்தமாம்.

(அவற்றின்) நீக்கம் - இன்பதுன்ப மிரண்டுமில்லாத நொதுமல் என்னும் நிலை. இன்பம் முதலியவற்றின் உணர்வு, வேதநாஸ்கந்தமென்பது. (அ)

ஜகத்திற்குக் கர்த்தா இல்லை.

அ உ.

இனி, இவ்வைந்து ஸ்கந்தத்திற்கும் வேறாய் நிலையான ஆத்மா உண்டோ எனின்,— அஃதொன்று உள்ளதற்கு ப்ரமாண மின்மையின், அது இல்லை என்று பௌத்தர் கூறுகிறார்:

ஐந்து ஸ்கந்தங்களினுமே வேறாய் ஆத்மா ஒன்று இல்லை.

கூ.

ந கஶ்சித்ஶரீரகதா ஸுகதாதிஶயம் ஜநஸ ॥

க0.

ஸுகெஸுஃ வரீரேண ஸுஃ க்ஷணிகெஷ்வாऽஹிஜாயதெ ।
வ-ஏவுவ-ஏவுக்ஷணாதெவ க்ஷணஃ ஸ்யாஉ-தரொதரஃ ॥

கூ.

அப்படியே இருக்கட்டும். இருந்தாலும், நிலவணு நீரணு முதலியவற்றைச் சேர்த்தமைப்பவன் இல்லாக்கால், சமுதாயம் அமையாது. ஆகவே, அவற்றைச் சேர்த்தமைப்பவனான ஈச்வரனைக் கொள்ளவேண்டும்; வேண்டவே, அவனேதான் ஆத்மாவாம் எனில்,— அப்படியன்று:

கர்த்தாவான ஈச்வரன் ஒருவனில்லை. ஜகத்திற்கு உதவி தன்னிடத்தே உள்ளது.

நிலவணு நீரணு முதலியவற்றைச் சேர்த்தமைத்து ஒழுங்காக வரைசெய்து உலகத்தை நடத்த, சேதநப்பொருளான கர்த்தா என்னும் ஈச்வரனொருவன் வேண்டா; ஏனெனில், ப்ரபஞ்சம் தானே ஆனது, தனக்கு வேண்டிய உதவியெல்லாம் தன்னிடத்தே அமையப்பெற்றது, ஆகவே வேறொன்றின் உதவியை வேண்டாதது, தானே மாறிமாறி வேறுபடுவது, தன்னையே சார்ந்தது, தானாகவே செல்வது என்பதாம். (கூ)

க0.

ஆதலின்,

கணப்பொழுதுமாத்திரமுள்ள ஸ்கந்தங்களினின்று (அகச்சமுதாயமும்), கணப்பொழுதுமாத்திரமுள்ள பரமாணுக்களினின்று (புறச்சமுதாயமும்) உண்டாகின்றன. முந்தினமுந்தின க்ஷணத்தினின்றே பிந்தினபிந்தின க்ஷணம் தோன்றுவதாம்.

ஈச்வரன் (க) வேறொன்றையும் அபேக்ஷியாது ப்ரபஞ்சத்தைப் படைக்கின்றானா? அல்லது, (உ) அபேக்ஷித்துப் படைக்கின்றானா?

(க) முதற்பக்ஷமாயின்,— அது அநுபவத்திற்கு விரோதமாம்; தச்சன்முதலானோர் மரம்முதலியவற்றை வேண்டாமலே வீடுமுதலியவற்றைக் கட்டுவோராகக் காணப்படவில்லையன்றோ. மேலும், படைப்பவனுதலென்பது - படைத்தற்குவேண்டிய ஸாமக்ரியை வேண்டிநிற்றலால், அந்த ஸாமக்ரி இல்லாவழி அமையாதென்க.

கக.

வபுவபுஷாஷெவ ஹி ஜூநாநாஷ ஜாயதெ ஜூநாநஷுதாரு ।
ஸ வனவாயஷிதி ஜூநாநு ஷெயம் ஜ்வாஷெதிவ ஹ்ரூ ஷுஃ ॥

(உ) இரண்டாம் பக்ஷமாயின்,— (க) தாமேசேர்ந்தமையும் ஆற்றலுடைய பொருள்களை ஈச்வரன் சேர்த்தமைக்கின்றானா? அல்லது, (உ) அந்த ஆற்றலில்லாத பொருள்களைச் சேர்த்தமைக்கின்றானா?

(க) முதற்பக்ஷமாயின்,— அது பொருந்தாது; தாமேசேர்ந்தமையும் பொருள்கட்குப் பிறிதொன்று வேண்டாமையின்.

(உ) இரண்டாம் பக்ஷமாயின்,— அதுவும் ஒவ்வாது; நீரினாலும் தயிரை உண்டாக்குதல் வேண்டுமாதலின்.

ஆகவே, ஜகத்திற்குக் கர்த்தாவான ஈச்வரனொருவன் வேண்டா.

அன்றியும், ஒருகாரியத்தைப் பிறப்பிக்கும் தன்மையானது கணப்பொழுது மாத்திரமுள்ள அணுக்களுக்கும் ஸ்கந்தங்களுக்கும் தம்மிடத்தே உள்ளமையால், ஒன்றும் செய்யாத ஈச்வரனொருவன் உண்டு என்பது ஏலாது.

ஆதலால், முந்தினக்ஷணஇருப்பினின்றே பிந்தினக்ஷணஇருப்பு அவற்றிற்கு அமைவதாம் என்க. (கo)

விஷயஞானம்போல, விஷயிஞானமும் க்ஷணிக மாம்.

கக.

இன்னும், பௌத்தமதத்தைக் கூறுகிறார்:

முந்தின அறிவினின்றே பிந்தின அறிவு பிறக்கின்றது. 'இது அதேதான்' என்னும் அறிவும் - 'இது அதேசுடர்' என்பதுபோல, மயக்க மாம்.

ஆக்ஷேபம்:— ஞானம் நிலையாய் நிற்றலின் க்ஷணிக மன்று. எங்ஙனமெனில்,— நேற்று ஓர் சித்திரத்தைக் கண்டுவைத்தவன் இன்று அதனை மறுபடியும் காணுங்கால், அவனுக்கு "இச்சித்திரம் அதேதான்" என சித்திரமாகிய விஷயத்தின் அறிவு என்னும் ப்ரத்யபிஜ்ஞை நிலையாய் நிற்கின்றது. அப்படியே,— சிறுபிராயத்து வீதியில் விளையாடிப் பின்பு யௌவநத்திலே மனைவியை மணந்து மக்களைப் பெற்று மூப்பிலே நிற்பவன் தன் மக்களது மக்களைக் கொஞ்சும்பொழுது, அவனுக்கு "எந்த நான் சிறுபிராயத்திலே வீதியிலே ஓடி விளையாடினேனோ, அந்த நானே இப்பொழுது பேரன்மார்களை அநுபவிக்கின்றேன்" என 'நான்' என்னும் விஷயியின் அறிவாகிய ப்ரத்யபிஜ்ஞை நிலையாய் நிற்கின்றது. ஆகவே, அறிவு க்ஷணிகமா மென்றல் ப்ரத்யபிஜ்ஞைக்கு முரணும்.

கஉ.

கூஷி ஹாதீதி யீஹ்ரூாஷெஃ ஸூதா நாதுஷ கூவ்ரூதெ ।
ஹாநொவாஷாநாஹிதுாகூ ஸூகாஶஃ கிம் வ்ரூகாஶதெ ॥

கஉஉ.

இதெ்ரூவம் வளஊஷிஊஹீ ஹாஷஶாணொ நிஷியுதெ ।

ஸமாதாநம்:—அப்படியன்று; ப்ரத்யபிஜ்ஞை மயக்கமாதலின். அறிவு, சுடர் போல இடையருது தோன்றிக்கொண்டிருக்க, முற்கணத்துஅறிவிற்கும் பிற்கணத்துஅறிவிற்குமுள்ள வேற்றுமையை உணராமையினால் அம் மயக்க முண்டாகின்றது என்பது. (கக)

உண்மையும் விளக்கமும் இல்லை.

கஉ.

இதனோடு, பௌத்தமதத்தை முடிக்கிருர்:

ஆத்மாவிலும் அநாத்மாவிலும் 'உள்ளது' 'விளங்குகின்றது' என்னும் எண்ணமானது மயங்கியவர்களால் கொள்ளப்படுகின்றது; தள்ளுதலும் கொள்ளுதலும் இன்மையால் (அது மயக்க மாம்). ஆகாசம் விளங்குகின்றதா?

ஆத்மாவிலும் - விஷயியிலும், அநாத்மாவிலும் - விஷயத்திலும். ஒருவன் ஆகாசத்தைச் கொள்ளவாவது தள்ளவாவது முயலுகின்ருனில்லையாதலால், அஃதோர் பொருளில்லை என்பது பௌத்தரது கொள்கை. அதுபோலவே,—'குடம் உள்ளது, விளங்குகின்றது' 'நான் இருக்கிறேன், விளங்குகிறேன்' என இவ்வாறு விஷயவிஷயிகளைப்பற்றிய உண்மைவிளக்கங்களை ஒருவன் கொள்ளவாவது தள்ளவாவது முயலுகின்ருனில்லையாதலால், அவ்வுண்மைவிளக்கங்கள் இல்லையாம்; அவை ஆகாசம்போல அவஸ்துவாம், வஸ்துஇல்லையாம் என்றபடி. (கஉ)

பௌத்தமதமறுதலை.

கஉஉ.

இங்ஙனம் விரிக்கப்பட்ட பூர்வபக்ஷத்தை மறுக்கவேண்டி, மாணுக்கனை மூலச்லோகத்திற்குக் கொண்டுபோய்விடுகிருர்:

என்று இவ்வாறு கூறுகின்ற பௌத்தஸித்தாந்தி மறுக்கப்படுகின்ருன்;

சு. யாஹுஷ்ஷிவாகுரெஷுஷ்ஷுரொ
ஷாயாஷாஷ்ஷாஷநாஷ
ஷநாதுஃ கரணொவஷம்ஹரணதொ
யொஷலுஷுஷுஷுவுஃ வுஷாநு |
வுராமுஷ்வுஷ்ஷிதி வுவொயஷஷயெ
யஃ வுதுஹிஜ்ஜாயதெ
தஷ்ஷை ஸ்ரீமுமுஷுதுயெ நஷ ஷம்
ஸ்ரீஷக்ஷிணாஷுதுயெ ||

சு. எந்தப் புருஷனானவன் கரணம் ஒடுங்க உறங்கியவனாய், மாயையினால் மறைப்புண்டு, ராகுவினால்பிடிக்கப்பட்ட சூரியனையும் சந்திரனையும் நிகர்த்தவனாய் உண்மைமாத்திரமாய் நின்றானோ; எவன், '(நான்) முன் தூங்கினேன்' என விழிப்புஸமயத்திலே நினைப்பூட்டிக் கொள்கின்றானோ; அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

புருஷன் - ஆத்மா. கரணமாவது - அகக்கரணமாகிய மனம்முதலியனவும், புறக்கரணமாகிய கண்முதலியனவு மாம். ஒடுங்க - தன்காரணத்துள் மறைய.

சிறப்புணர்ச்சிக்குக் காரணமான கண் காது முதலிய இந்திரியங்களெல்லாம் மனம் புத்தி முதலியவற்றோடு ஒடுங்குங்கால், புருஷன் ஸ்வப்பிரகாசமான உண்மைமாத்திரமாய் உறங்குவோ னாகிறான், சிறப்புணர்ச்சியில்லாதவ னாகிறான் என்றபடி. இவ்வாறு உண்மைமாத்திரமாய்த் தன்ஒளியினால் தானே விளங்குவோ னானாலும், அங்ஙனம் தனது ப்ரஹ்மாத்மஸ்வரூபமானது அநாதிஇருட்டான மாயையினால் மறைப்புண்டுகிடத்தலின் அவன் பூர்ணப்பிரகாசமாக விளங்குகிறானில்லை; எப்படி ராகுவினால்பிடிக்கப்பட்ட சூரியனும் சந்திரனும் நன்று விளங்கவில்லையோ, அதுபோல நன்று விளங்குகிறானில்லை. அவன் உள்ளபடி தெளிவாய் விளங்குவோ னில்லையாயினும், உண்மைமாத்திரமா யிருக்கிறான்; எப்படி ராகுவினால்பிடிக்கப்பட்ட சூரியசந்திரர் தெளிவாய் விளங்கவில்லை என்பதனால் - சூரியனுக்காயினும் சந்திரனுக்காயினும் உண்மை இல்லையென்பது இல்லையோ, அதுபோலவே,— அகக்கரணபுறக்கரணங்களின் ஒடுக்கத்தாலும் மாயையினால் மறைப்புண்டுநிற்றலாலும் உறக்கத்திலே ஆத்மா தெளிவாய் விளங்கவில்லை என்பதனால் - ஆத்மாவிற்கு உண்மை இல்லையென்பது இல்லை. எனவே, அவன் இருக்கவே இருக்கிறான் என்பதாம்.

வினா:— ஆயின், அவன் தூக்கத்தில் இருக்கவேஇருக்கிறான் என எப்படி அறியப்படுகின்றது?

விடை:— ப்ரத்யபிஜ்ஞாநப்பிரமாணத்தினால் அறியப்படுகின்றது. உறக்கம்

சுஷுப்தாயாஸுயஃ—

கரு, கரு உ.

ஸுஷுப்தம் வெஜ்ஜமதொ ஹெதுஃ ஜமஷெவ ந ஸியுதி ॥
வடுஃ ஸுஷுப்தஃ வடுஃ ஸுஷுப்தஃ ஊதி கெஃ ப்ரதிவாஉதெ ।

தெளிந்து எழுந்தபோது, "எந்த நான் இதற்குமுன் இவ்வளவு நேரம் சுகமாகத் தூங்கினேனோ: எந்த நான் இவ்வளவு காலம் அவ்வாறு தூக்கத்திலுள்ளவனாய் ஒருவிசேஷத்தையும் அறியாது உண்மைமாத்திரமாய் இருந்தேனோ; அந்த நான் இப்பொழுது தெளிந்தவனாய், அகக்கரணபுறக்கரணமெல்லாம் விரிந்து வெளி வந்துள்ளமையின் விழித்துக்கொண்டிருக்கிறேன்" என அவன் தான் தூக்கத்தில் அநுபவித்ததை நினைவுகூர்கின்றான்; அநுபவியாததை நினைவுகூர்தல் நிகழாமை யாலும், ஒருவன் அநுபவித்ததை வேறொருவன் நினைவுகூர்தலைக் காணாமை யாலு மென்க.

ஆகவே, ஆத்மாவானது தானேவிளங்கும் உண்மையாதலால் சூந்யப்பொரு ளன்று, க்ஷணிகப்பொருளன்று, ஜடப்பொருளு மன்று என்பது தேர்ந்த கருத்து.

இனி, உறக்கத்திலே ஆத்மா இருத்தற்கு,

"ஸுஷுப்திகாலெ ஸகலெ விலீநெ தமொஹிஸுகஃ
ஸுவபாவுவெதி ॥ வுநஶ்ச ஜாக்ரதுபயொமாக
ஸ ஸுவ ஜீவஃ ஸுவிதி ப்ரவுஃ ।"

"எல்லாம் ஒடுங்கித் தூங்கும்சமயத்திலே இருட்டால் மூடுண்டு ஸுகஸ்வரூபத்தை யடைகிறான்; மீண்டும், முந்தின பிறவிகளின் கர்மப்படி அவனே ஜீவனாய்க் கனவுகாண்கிறான்; அல்லது விழித் துக்கொண்டவ னாகிறான்" (கை - கரு, கச)

என்பது முதலான சுருதிப்பிரமாணத்தையும் காண்க.

மற்றையவற்றிற்குக் கீழே பொருள் உரைக்கப்பட்டது. (சு)

இது இதன் கருத்து:—

சூந்யவாதமறுதலை.

கரு, கரு உ.

'ஜகத்திற்குக் காரணமான ஈச்வரனாகிய ஆத்மா இல்லை; ஜகத்தினுடைய முதல்நிலைமை சூந்யமேயாதலின், அதற்கு அதுவே [ஜகத்திற்கு சூந்யமே] உபா தாநகாரணம் என்னும் முதற்காரண மாம்' எனப் பௌத்தர் கூறுவதை மறுக்கத் தொடங்குகிறார்:

ஜகத்திற்கு சூந்யம் காரணமாயின், ஜகத்தே அமையாது. 'குடம் சூந்யம்,' 'ஆடை சூந்யம்' என யாரால் சொல்லப்படுகின்றது? [அப்படி ஒருவரும் சொல்லக் காணோம்.]

கச, கசஉ.

நைவ ஹாஸைத ஶூந்யம் வெசு ஜமநுரவிஷாணவசு ॥
வஷ்யீ கிஶுவாஉ்யாசு ஹாரா தூ கிம் வரி தூஜெசு ।

எந்தக் காரியத்திற்கு எது உபாதாநகாரணமோ, அது அதுவாக வழங்கப்படுவதாம்; பொன்னாலாகிய கணையாழியைப் பொன்னாகச் சொல்வதுபோல. அவ்வண்ணமே, ஜகத்திற்கு சூந்யம் உபாதாநகாரண மாயின், அதனை சூந்யமாகவே வழங்குதல் வேண்டும்; 'வீடு சூந்யம், பணம் சூந்யம், உணவு சூந்யம், ஆடை சூந்யம்' என இவ்வாறு வியவகரித்தல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை: யாவரும் ஜகத்தை உள்ளதாகவே வழங்குகிறார்கள்; 'வீடு உள்ளது, பணம் உள்ளது, உணவு உள்ளது, ஆடை உள்ளது' என இவ்வாறு வியவகரிக்கிறார்கள். ஆகவே, சூந்யமானது ஜகத்திற்குக் காரண மாகமாட்டாது என்பதாம். (கரு, கரூற)

கச, கசஉ.

(பிரதிவாதி) :—ஜகத்திற்குக் காரணம் சூந்ய மாதலின், ஜகத்தும் சூந்ய மேதான். என்றாலும், அது மயக்கத்தால் காட்சிப்பொருளாகப் புலப்படுகின்றது எனில்,—

(வாதி):— கூறுவோம்:

ஜகத்து சூந்யமாயின், மனிதன்கொம்புபோலப் புலப்படவேகூடாது. ஒருபொருளை வேண்டிநிற்போன் எதனை(த் தேடி)க் கொள்ள வேண்டும்? சுமையினால் பீடிக்கப்பட்டவன் எதனைக் (கீழே) தள்ள வேண்டும்?

சூந்யமென்பது மலடிமகன்போலும் மனிதன்கொம்புபோலும் இல்பொருளாதலால், அந்த இல்பொருளாகிய சூந்யத்தை ஜகத்தாக மயங்குதல் ஏலாது; மலடிமகனையாயினும், மனிதன்கொம்பையாயினும் பிறிதொன்றாக மயங்குத லில்லாமைபோல என்பது.

அன்றியும், உலகம் சூந்யமேயாயின்,— உணவு தண்ணீர் சுமை குடம் வீடு முதலியனவெல்லாம் இல்லாதிருத்தல்வேண்டும்; வேண்டவே, பசியுள்ளவன் பசியோடும், நீர்வேட்கையுற்றவன் நீர்வேட்கையோடும், பாரத்தினால் பீடிக்கப் பெற்றவன் பாரத்தோடும் வருந்திக்கொண்டேஇருக்கவேண்டும். ஆனால், அப்படி இல்லை: அவர் உணவை உண்பதனாலும், தண்ணீரைப் பருகுவதனாலும், சுமையை இறக்குவதனாலும் வருத்தம்தீர்கிறார்கள்.

ஆகவே, சூந்யமானது ஜகத்திற்குக்காரண மாகா தென்றவாறு. (கச, கசற)

கடு, கடுஉ.

கொ விஷயா ந்ஹிஷியெ ஷா ஶுந்யக்வாக ஷஸ்ய வாதநஃ ॥
சுவஸீஷெ ந்ஹிராக ஶுதடி தஸ்ஸாதவ ஶிஷம் ஜமக ।

கசு, கசுஉ.

ஸ்ஸுலாநாம் வாரணாஶுநாடி ந ஸம்வாதயிதாऽஸ்ஹி வெசு ॥
ஸம்வாதொ ந விநா ஹெதுஶுடி ஜலா வடவடாஷயஃ ।

கடு, கடுஉ.

சூந்யவாதமறுதலையை முடிக்கிறார்:

அன்றியும், தன்ஆத்மா சூந்யமாதலின், யார் விதிப்பான்? அல்லது மறுப்பான்? ஆகவே, இந்தப் பிரபஞ்சமெல்லாம் காரணமில்லதாய், அழியவேண்டும்.

குடம் ஆடை முதலான வியவகரிக்கப்படும்பொருள்போல, அவற்றை வியவகரிக்கும்பொருளும் சூந்யவாதத்திலே இல்லையாதலால், ஒன்றனைச் செய்தலும் தவிர்தலும் முதலிய வியவகாரமெல்லாம் அமையாதிருக்கவேண்டும்; வேண்டவே, உலகம் தான் இருத்தற்கு யாதொரு காரணமு மில்லையாய், அழிந்துபோகவேவேண்டும். ஆனால், அப்படி இல்லை. ஆகவே, சூந்யவாதம் போலியாம் என்று ஒழிக. (கடு, கடுஉ)

ஸழதாயவாதமறுதலை.

கசு, கசுஉ.

இனி,

ஸ்கந்தங்களையும் பரமாணுக்களையும் சேர்த்தமைப்பவன் இல்லையாயின்,—சேர்க்கையென்பது காரணமின்றி [சேர்த்தமைப்பவனின்றி] அமையாது. குடம் ஆடை முதலியன ஜடங்களாம்.

குயவனான சேதநனன்றோ மண் தடி முதலியவற்றைக்கொண்டு, ஸமுதாயமாகிய குடத்தை வனைப்பவனாகக் காணப்படுகிறான். மண் தடி முதலியவற்றைத் தொழிற்படுத்தும் சேதநனான குயவ னில்லாவழி, அசேதநங்களான மண் தடி முதலியன தாமே தொழிற்பட்டு ஒருபொழுதும் குடத்தை வனைக்கமாட்டா. அன்றியும், நெய்வோன் இல்லாவழி, நூல் நாடா வேமா முதலியன ஆடையை நெய்யமாட்டா. ஆகவே, ஒருகாரியமுண்டாதல் சேதநனைச் சார்ந்ததே என்றும், அவ னில்லாவழி அஃதில்லை யென்றும், ஜடங்களான மண்முதலியன தாமே ஒரு

கஎ, கஎஉ.

உஹாந-ஹாவொ ஹ-ரியாஸழ உதி ஹ்ராஹ்ஹ உந்ருதெ ॥
ஸுதாவயாவகொ வளஊ கிஉயும் வாரதி வ்ருதழ ।

காரியத்தை உண்டாக்கமாட்டா என்றும் முடிந்தன. முடியவே, இந்த ஸமுதாயவாதம் பொருந்திய தாகாதென்றவாறு. (கசு, கசுற)

க்ஷணிகவிஜ்ஞாநவாதமறுதலை.

கஎ, கஎஉ.

இனி, கணந்தோறும் தோன்றி யழியும் அறிவே ஆத்மாவாம் என்னும் பௌத்தரது கொள்கையிலே நேரின்மையைக் காட்டுகிறார் :

மேலும், மயங்கிய (பௌத்தனானவன், "நான்) மாட்சிமையுடையோ னாகவேண்டும்" என எண்ணிக்கொண்டிருக்கிறான். ஆத்மாவை மறுக்கின்ற பௌத்தன் எதற்காக வ்ரதத்தை அநுஷ்டிக்கிறான் ?

மயங்கிய - கண்டதைமாத்திரம் நம்புகின்ற. நான் என்னும்ஆத்மா க்ஷணந்தோறும் தோன்றி யழிவதனால், அதற்கு அனேக க்ஷணங்களில் நிலையான இருப்பு இல்லை : அதாவது, ஒவ்வொரு க்ஷணத்திலும் ஓரோர் புதியபுதிய வேறு வேறு ஆத்மா உண்டாகிக் கெடுவதாம். ஆகவே,— முதலில் எவனே பசியினால் வருந்தினானோ அவனே பின்பு உணவை உண்டவ னல்லன் எனவும், முதலில் எவனே பணத்தைத் திருடினானோ அவனே பின்பு கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டவ னல்லன் எனவும், முதலில் எவனே மனைவியை மணம்புரிந்தானோ அவனே பின்பு அவளை அநுபவிப்போ னல்லன் எனவுமாம் : முன்னர் பசியினால் வருந்தினவன் ஒருவன், பின்னர் உணவை உட்கொண்டவன் வேற்றுவன் ; முன்னர் பணத்தைத் திருடினவன் ஒருவன், பின்னர் அகப்பட்டுக்கொண்டவன் வேற்றுவன் ; முன்னர் மனையாளை மணம்புரிந்தவன் ஒருவன், பின்னர் அவளை அநுபவிப்பவன் வேற்றுவன் என்பதாம். இவ்வாறே, பிறவற்றிலும் கண்டுகொள்க. இது பௌத்தமதம்.

இனி, இப்படிக் கொண்ட பௌத்தன் தான் உயர்ந்தோ னாகவேண்டுமென்று முயலுதலும், மறுமைக்கான சைத்யவந்தநம்முதலிய தர்மத்தை அநுஷ்டித்தலும் வீண் என்பது சொல்லாமையே அமையும் ; செய்வோனும் அநுபவிப்போனும் ஒருவனே இல்லையாதலின் என்க. (கஎ, கஎற)

ப்ரத்யபிஜ்ஞை மயக்க மாகாது.

விளக்குச்சுடரின் ப்ரத்யபிஜ்ஞைபோல அந்தநான்என்னும்ப்ரத்யபிஜ்ஞை மயக்கமாம் என்று கீழ் (சு - கக)க் கூறியதைக் கண்டிக்கிறார் :

கஅ.

வ்ரதுஹிஜ்ஞா யதி ஹ்ராஹீ: ஹொஜநாதி கயம் ஹவெக ॥

கக.

ஹஷுஸாயநஶேவெதக கந்ந ஹதஹிநாந்நவக ।
ஹதி நிஶ்சிது வாயொऽவி ஹொஜநாஹள வ்ரவதுதெ ॥

கஅ.

ப்ரத்யபிஜ்ஞை மயக்க மாயின், உண்ணல்முதலியன எப்படி நிகழும்? [நிகழமாட்டா.]

கக.

எப்படி உண்ணல்முதலியன நிகழமாட்டா? எனின்,— கூறுவோம்:

"இவ்வுணவு (எனக்கு) வேண்டியதை ஸாதிப்பதேதான்; சென்ற தினத்து உணவுபோல" எனக் குழந்தையும் நிச்சயித்து, உண்ணல் முதலியவற்றிலே செல்லுகின்றது.

"நான் பார்க்கின்ற இவ்வுணவு எனக்கு நலத்தைச் செய்வது; உணவாதலால், நேற்று உண்ட உணவுபோல" என்பது அநுமானம். இனி, 'எந்த நானே நேற்று உணவை உண்டேனோ அந்த நானே இப்பொழுது இவ்வுணவைப் பார்க்கின்றேன்' என்னும் ப்ரத்யபிஜ்ஞை மயக்கமாயின்,—அதாவது, நேற்று உணவை உண்டோனும் இங்ஙன மிவ்வுணவைப் பார்ப்போனும் ஒருத்தனேயல்லாது வெவ்வேறானவ ராயின்,—அந்த அநுமானம் நிகழாது. அது நிகழாதவழி, உண்ணுதலைத் தலைப்படாதிருத்தல் வேண்டும். ஆனால், அப்படி இல்லை: குழந்தையுங்கூட அவ்வாறு அநுமானித்துத் துணிந்தே, உண்ணுதலைத் தலைப்படுகின்றது. ஆகவே, பிரத்யபிஜ்ஞை மயக்க மன்று; பின்னை, அது ப்ரத்யக்ஷப்ரமாணமாம் என்பது தேர்ந்த பொருள்.

(பூர்வபக்ஷம்):— அப்படியன்று; சுடரில்போல, ஒப்புமையா லாகின்றமையின். பிற்கணத்துள்ளசுடர் முற்கணத்துள்ளசுடர்க்கு ஒப்பாகநிற்றலால், பிந்தினசுடர் முந்தினசுடர்போலவேஇருத்தலால்,— 'இது அதேசுடர் [முற்கணத்துள்ளசுடர்தான், பிற்கணத்துள்ளசுடரும்]' என இரண்டு சுடரையும் ஒன்றாகமயங்குத லாகின்றது. ஆகவே, ப்ரத்யபிஜ்ஞை மயக்கமாம் என்பது.

(ஸித்தாந்தம்):— அப்படியன்று; உனது கொள்கைப்படி அறிவு கணந்தோறும் தோன்றி யழிகின்றமையால், ஒப்புமையுணர்ச்சி கூடாமையின். ஒரு பொருளைக் கண்டவன் வேறோர்பொருளைக் காணுங்கால், அந்த ஒருவனுக்கேய

உ0.

ஸுவகாஶவ்ரஹாத்ரக்வ ஸ்ரகாஶாயுக்ரியா யயா ।
தயைவாயுக்ரியா வாஂஸஂ கதுர்ரக்வஜ்ஜாத்ரதாஶிகா ॥

ன்றோ 'இது அதற்கு ஸமானம்' என்னும் ஒப்புமையுணர்ச்சி உண்டாகும். ஆனால், ஒருபொருளைப் பார்க்கின்ற ஒருவன் மற்றோர்பொருளைப் பார்க்க அடுத்த க்ஷணம் இருப்பதில்லை; அறிவு க்ஷணிகமாதலால், ஒருபொருளை ஒருதரம் பார்த்த வுடனேயே அழிந்திடுவதின் என்க.

இனி, ஒருத்தனே முற்கணத்தும் பிற்கணத்தும் காண்பவனாய் நில்லாவழி, அங்ஙனம் ஒப்புமையை உணர்வோன் இல்லை. இல்லையாகவே, பௌத்தனுக்கு - ப்ரத்யபிஜ்ஞை மயக்கமாம் என்பதும் ஏலாமை காண்க. (கக)

ஆத்மா நிலையான உண்மை.

உ0.

இனி, ஆத்மாவானது ஆகாசம்போல் ஒன்றற்கும் பயன்படுதலில்லாத இல்பொருளாம் என்னும் பௌத்தரது கொள்கையை மறுக்கும் கருத்தோடு, ஆத்மாவினிடத்து உபயோகத்தைச் சாதிக்கிறார்:

இடத்தைக் கொடுப்பதென்பது எப்படி ஆகாசத்தின் உபயோகமோ, அப்படியே, செய்பவனாதல் அறிபவனாதல் முதலியன ஆத்மாவின் உபயோகமாம்.

ஆகாசம் இல்பொருளன்று; யாதொன்றற்கும் பயன்படாத இன்மைநிலையன்று.—மற்றென்ன வெனில், அது - ஸ்தாவரம் ஜங்கமம் என்ற யாவற்றிற்கும் இடத்தைக் கொடுப்பதாய்ப் பரவிநிற்கும் உள்பொருளாம். ஆத்மாவோ செய்பவனாக அநுபவிப்பவனாக அறிபவனாக இருக்கிறான் என்பது யாவர்க்கும் தம்தம் அநுபவத்தால் நன்றாகத் தெரிந்துளது. ஆகலின், இவ்வாறு பயன்பட்டுநிற்கும் ஆத்மா நிலையான உண்மையாம் என்பது முடிந்த கருத்து. (உ0)

ஆக்ஷேபம்:—உண்மை; ஆத்மாவினது உபயோகம் நனவிலும் கனவிலும் உள்ளமையின், ஆத்மா அந்த இரண்டுசமயத்தில்மாத்திரம் இருக்கின்றது. மற்று, உறக்கத்திலோ அதனது உபயோகமொன்று மின்மையால், அஃது[ஆத்மா] அப்பொழுது இல்லையாம் எனின்,—

ஸமாதாநம்:— வருமாறு:

உக.

ஸுஷுஷ்வாபாஸயேऽவ்யாத்தா ஸத்ஸுஜ்ஞாநஸுவாத்மகஃ ।
ஸுவபாவாஸிதைர்வஷி வ்ரத்ஸுஹிஜ்ஞாயதே யதஃ ॥

உஉ.

வ்ரத்ஸுஹிஜ்ஞாயத உதி வ்ரயொமஃ கஉகுகதுரி ।
சூத்தா ஸ்வயம்வ்ரகாஶகுவாஸ ஜாநாத்யாத்தாநசாத்தநா ॥

உக.

ஆத்மா உறக்கத்திலுங்கூட உண்மையும் அறிவும் ஸுகமுமாகிய ஸ்வரூப முடைத்து; ஏனெனில், "நான் ஸுகமாகத் தூங்கினேன்" என்றிவ்வாறு நினைவுகூர்ந்தறிகின்றது.

"நான் ஸுகமாகத் தூங்கினேன்" என்பது, உண்மையையும் அறிவையும் ஸுகத்தையும் காட்டுகின்றது. எங்ஙன மெனில்,— "நான் ஸுகமாகத் தூங்கினேன்" என்றஇது, "நான் தூக்கத்தை அறிபவனாய்[அநுபவிப்பவனாய்] ஸுகமாய் இருந்தேன்" என்பது. இவ்வாக்கியத்தினுள்ளே, "அறிபவனாய்" என்பது ஆத்மஅறிவையும், "ஸுகமாய்" என்பது ஆத்மஸுகத்தையும், "இருந்தேன்" என்பது ஆத்மஉண்மையினையும் நன்கு எடுத்துக்காட்டுதல் காண்க. அவ்வாறே, உகரு - ஆம் பக்கத்தில் கூறியுள்ள கைவல்யோபநிஷத் முதலிய சுருதிகளும், உறக்கத்திலே ஆத்மாவிற்கு உண்மைஅறிவான ஆநந்தவடிவத்தைக் கூறுகின்றன.

உஉ.

சங்கை :— ஆயின், 'ஆத்மா நினைவுகூர்ந்தறியப்படுகின்றது' (சு - உக) என்றவளவிலே, அது குடம்போல விஷயமாதல் கூறப்பட்டது; 'நினைவுகூர்ந்தறியப்படுகின்றது என்னும் வினையிலுள்ள 'படு' என்னும் விகுதியினா லென்க. எனவே, ஆத்மா ஸ்வப்ரகாசமான விஷயியாம் என்னும் வேதாந்தமுடிபிற்கு விரோத மாகின்றது எனில்,—

பரிகாரம் :— கூறுவோம் :

'நினைவுகூர்ந்தறியப்படுகின்றது' எனக் கர்மகர்த்தாவில் வழங்குவதாம். ஆத்மா ஸ்வப்ரகாசமாதலால் தன்னைத் தன்னால் அறிகின்றது.

நினைவுகூர்ந்தறியப்படுகின்றது என்பது, நினைவுகூர்ந்தறிகின்றது எனக் கர்மகர்த்தாவில் வரும்; கன்று விட்டுக்கொண்டது, சோறு அட்டது, கரி பொ

உங.

ஸுஷுப்தௌ ஶாயயா ஶுயீ ஜநோऽஸ்ய ஸுக்ஷ்யதெ ।
ஸ்வப்ரகாஶதயாऽऽஹாதி ஸ்வப்ரகாஶதயாऽவி ச ॥

உங௨.

ஜாக்ரதி ச தெஹாஉள ஸாக்ஷாத்ஈஶொ விவிச்யதெ ।

ரித்தது, கூரை மேய்ந்தது என்பனபோல. இவ்வாறு வழங்குதலானது ஆத்மா ஸ்வயம்பிரகாச மென்பதற்கு முரணாகாது; அது குடம்போல விஷயமும் ஆகாது. விளக்கு தன்னைத் தன்னால் விளக்குகின்றதுபோல, ஆத்மா தன்னைத் தன்னால் அறிகின்றது; ஸ்வயம்பிரகாச மாதலின். என்பது, இந்தக் கர்மகர்த்திருப்பிரயோகத்தின் கருத்து. (௨௨)

உங.

இந்த ஆத்மா,

உறக்கத்திலே மாயையினால் மயங்கி ஜடம்போன்று, குருடன் போன்று காணப்படுகின்றது; அப்ரகாசமாகவும், ஸ்வப்ரகாசமாகவும் விளங்குகின்றது.

ஜடம் - அசேதநம், உணர்ச்சியில்லாதது. குருடன் - அறியாதன். தூக்கத்திலே சிறப்புணர்ச்சி இல்லாமையால், ஆத்மா ப்ரகாசமில்லதாக விளங்குகின்றது; மற்று, ஸ்வரூபஅறிவு உள்ளமையால், ஸ்வப்ரகாசமாகவும் விளங்குகின்றது என்பது பொருள். அப்படியே,

"ந ஹி ஶ்ரஷ்டுர்த்ருஷ்டெர்விபரிலொபொ விद्यதெऽவிநாஶிக்வாத் ।"

"பார்க்கும்பொருளின் பார்வைக்குக் கேடு இல்லை; அழியா இயல்பின தாதலின்"—(ப்ரு - ச - ங - உங)

என்னும் சுருதியை நோக்குக. (உங)

உங௨.

அன்றியும், ஜடமாகிய உடம்புமுதலியவற்றுள் (ஆத்மாவானது) ஸாக்ஷாத்ஈச்வரனாகப் பகுத்தறியப்படுகின்றது.

உடம்பு இந்திரியங்கள் மனம் புத்தி என்கின்ற இவை, தம்மையாயினும் தமது செயலையாயினும், பிறிதொன்றையாயினும் பிறிதொன்றன் செயலையாயினும் அறியாத ஜடங்களா யுள்ளன. மற்று, அவற்றினுள் உள்ள ஆத்மாவோ

உச, உசஉ.

ஸஷைவ ஶொஹி நீ நாஶ ஶாயாஶக்தி உஹெஶி தஃ ॥
ஶொஹாவொஹஃ வ்ரூஶ தூணாழ் ஶொக்ஷ உத்ருஹியீயதெ ।

உரு.

ஸுவஸ்தூ தூய நிஶ்ரூக்தஃ ஶெஹாஹிஹிர நாவிஶஃ ॥

எல்லாவற்றையும் விளக்குகின்றது. 'எந்த நான் பார்த்தேனோ அந்த நான் முகர்கின்றேன், கேட்கின்றேன், பேசுகின்றேன், நினைக்கின்றேன், அறிகின்றேன், நடக்கின்றேன், நிற்கின்றேன்' என இவ்வாறு யாவற்றையும் விளக்குவதாய் நினைவுகூர்ந்தறியும் ஆத்மாவானது அவற்றிற்கு வேறாகப் பகுத்தறியப்படுகின்றது, அவற்றை ஆளும் ஈச்வரனும் என்று தெளியப்படுகின்றது என்பது பொருள். (உரு)

உச, உசஉ.

ஆத்மாவினுடைய இந்த வாஸ்தவமான ஈச்வரஇயல்பை எது மறைக்கின்றதோ; பௌத்தர் எதனால் மயக்குண்டு, ஆத்மா இல்லை எனக் கொண்டாரோ; அந்த

இதுவே, மயக்குவதான மகேச்வரனுடைய மாயாசக்தி என்பது.

(இம்) மயக்கம்தீர்தலானது ஜீவர்கட்கு மோக்ஷம் எனப்படுகின்றது.

ஆத்மஸ்வரூபத்தை மறைத்துநிற்கும் மூட்டமாகிய மயக்கம் நீங்கியவளவிலே வேற்றுமை இன்மையால் ஸம்ஸாரம் தொலைந்திடுகின்றது; தொலைந்திடவே, அங்ஙனம் ஆத்மஸ்வரூபமான ஆநந்தமாய்நிற்றலே மோக்ஷ மென்பது.

ஆ த் ம இ ய ல் பு.

உரு.

ஆத்மா இல்லை என்னும் பௌத்தமதத்தை இவ்வாறு மறுத்து, அவ்வாத்மாவிற்கு நிலையான உண்மை சாதிக்கப்பட்டது.

(வினா) :—இனி, அந்த ஆத்மா எத்தன்மைத்து? என்பது.

(விடை) :—இதுமுதல் நக - ஆம் சுலோகமளவும் ஆத்மஇயல்பை உணர்த்துவோம்; கேட்பாயாக:

(ஆத்மாவானது) மூன்று நிலையினின்றும் அகன்றுநிற்பது, உடம்புமுதலியவற்றால் கலக்கப்படாது.

உசு.

ஈஷீக ஈவ ஸந்நாத்ரீ: ந்ருஸ்ரோயகணிகோவமீ: ।
வாஹ்யாஷ்வாஹ்யஉஸ்ரோந்ருகுகஷ்ரீகஷ்ஸந்நிஹீ: ॥

உஎ.

நிராஸ்ரோ நிவிகாரஸ்ரு நிராஹாஸ்ரோ நிரஞ்ஜந: ।
வாராஷ: கெவலீ: வ்ருணாஃ ஸ்ரோவ்ருதெ வாரஜ்ஜுராஃ ॥

மூன்று நிலையினின்றும் அகன்றுநிற்பது - நனவு கனவு உறக்கம் என்னும் மூன்று நிலைமைகளையும் பார்த்துக்கொண்டிருக்கும் ஸாக்ஷியாகவே இருத்தலால், அம் மூன்றுநிலைமையும் இல்லாதது. உடம்புமுதலியவற்றால் கலக்கப்படாதது - தன்னால் பார்க்கப்படும் உடம்பு மனம் முதலியவற்றால் கறைப்படுத்தப்படாதது, அஸங்க மாதலின் என்க. (உரு)

உசு.

மேலும், அது

உண்மைமாத்திரமானது, முஞ்ஜக்குருத்துப்போன்றது, ஆலமரத்துவிதைபோன்றது, வெளியிலிருந்து வெளிமட்டைகள்உரிக்கப்பெற்ற வாழைத்தண்டுபோன்றது.

முஞ்ஜம் என்னும் புல்லின் இளங்குருத்துப்போல, ஆத்மா ஒருபடித்தாய் உளது. அன்றியும், ஆலமரத்துவிதைபோல, அது மிகநுண்மையானது; இந்த உபமையைப்பற்றி சாந்தோக்ய உபநிஷத்தின் சு - கஉ ஐப் பார்க்க. வாழைத்தண்டுபோல, ஆத்மா உள்ளே உள்ளது; வெளியிலிருந்து மேல்மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்துத் தள்ளி உள்ளே வாழைத்தண்டைத் தேடுவதுபோல், வெளியிலிருந்து உடம்பு இந்திரியம் ப்ராணன் மனம் முதலியவற்றைப் பிரித்துத் தள்ளி உள்ளேயே ஆத்மாவைத் தேடவேண்டும் என்பதாம். (உசு)

உஎ.

அன்றியும், அந்தப்

புருஷன், அவயவமில்லாது வேறுபாடில்லாது ஆபாஸமில்லாது மாசில்லாது நிற்கும் தனிப்பொருளாய் (எங்கும்) நிறைந்த பரமேச்ரவன் எனப்படுகிறான்.

ஆபாஸமாவது - குடம்போல, வ்ருத்திஞானத்திற்கு எட்டுதல். (உஎ)

உஅ, உகூ.

வாஹோ யத் நிவதந்தெ ஹோ யத் விஜீயதெ ।
ஹனகீ ஹவஜி யத்ரைவ ஹ-ஹ்தாநி ஹ-வநாநி ச ॥
ஸஹ்ஸ்ராநி ச தத்ரைவ ஸஹ-ஹ்ரெ ஹிரணவொ யயா ।
கஃ ஶோகஸ்ஸ்ரத் கொ மோஹஃ ஸகக்ஷஹ-வஶ்ரதஃ ॥

௩0.

வாயுவாயகரு-ஹ்வக்வாஸ ஸவிகஹ்வொ ऽவி ஸந்நஹ்ரி ।

உஅ, உகூ.

இன்னும்,

சொற்கள் எங்கே பின்வாங்குகின்றனவோ; மனம் எங்கே ஒடுங்குகின்றதோ, எல்லாப் பொருள்களும் உலகங்களும் ஜீவர்களும், கடலிலே ஆறுகள்போல, எங்கேயே ஒன்றுகிறார்களோ; அங்குத் துயரம் யாது, மயக்கம் யாது, ஒன்றாயிருத்தலைக் காண்பவனுக்கு? [அவனுக்கு ஸம்ஸாரக்கட்டனைத்தும் விட்டுப்போகின்றது என்பதாம்.]

இப்படி ஆத்மஇயல்பைக் கூறும் சுருதிகள் சில வருமாறு:

"யதொ வாஹோ நிவதந்தெ । கவ்ராவ்ய ஹநஸா ஸஹ"

"சொற்கள் மனத்தோடுகூட (எதனை) அடையமுடியாது எதனினின்று மீளுகின்றனவோ"— (தை - உப - உ - சு)

"ஸூதெதெவொவாஸீதாத் ஹ்யுதெ ஸவ்ரு ஹகம் ஹவஜி"

"ஆத்மா என்றே தொழவேண்டும்; இதிலேயன்றோ எல்லாம் ஒன்றுகின்றன"— (ப்ரு - ஈ - ச - உ)

"வரொऽவ்ரயெ ஸவ்ரு ஹனகீ ஹவஜி"

"அழியாப் பரம்பொருளிலே எல்லாம் ஒன்றுகின்றன"— (முண் - ஈ - உ - எ)

"அங்குத் துயரம் யாது, மயக்கம் யாது, ஒன்றாயிருத்தலைக் காண்பவனுக்கு?" என்பது, ஈசாவாஸ்யோபநிஷத்தினுள் ஏழாவது மந்திரம். (உஅ, உகூ)

௩0.

இனி, ஆத்மா எவ்வாறு இத்தன்மைத் தாகும்? எனில்,—அருளிச்செய்கிறார்: நான்என்பது பொருளைக் கூறும் சொல்வடிவிற்றாதலால் வேற்று

தெஹாதீநாம் வ்யவொஹெந லக்ஷயெந்நிவிருகலு கு ॥

ங க.

சுஸந்தெவ லவெவிபாந சுஸஉ ஹெதி வெஉ வெசு ।
சுஷ்டி வ்ரஹெதி வெவெஉ ஸம்தசெநம் தகொ விஉஃ ॥

ங உ.

உதி ஸ்ரீதக்ஷிணாமூர்த்திருஷ்டோ தூரயுவ்ரதிவாஉகெ ।
வ்ரவெலெ சாநலொலாலெ ஷஷ்டொலாலஸ்ய ஸம்ரஹஃ ॥

மையுள்ளதாயினும், உடம்புமுதலியவற்றை நீக்குவதனால் வேற்றுமையில்லதை அறிவிக்கும்.

நான் என்னும் சொல்லுக்கு - 'உடம்புமுதலியவற்றோடுநிற்கும் ஆத்மா' என்பது பொருள். இச் சொல் - உடம்புமுதலியவற்றால் விசேடிக்கப்பட்ட ஆத்மாவைக் கூறுவதாயினும், அவற்றை [உடம்புமுதலியவற்றை]த் தனித்தனி சோதித்து இஃது ஆத்மாவன்று இஃது ஆத்மாவன்று என்று நீக்கிச்செல்லும்வழி முடிவில் உண்மைமாத்திரமாய்த் தானேவிளங்கும் கேவலஆத்மஸ்வரூபத்தை லக்ஷணையால் அறிவிப்பதாம் என்க. (ங0)

ங க.

(சங்கை) :— இவ்வாறு உடம்புமுதலியவற்றைச் சோதனைசெய்து நீக்கிச் செல்லும்வழி சூந்யம் முடிவாய்த் தலைப்படக் காண்கின்றோம். ஆகலான், அங்ஙனம் நிர்விசேஷமான ஆத்மா அமைதல் எவ்வாறு ? எனில்,—

(ஸமாதாநம்):— அதிலே சுருதி ஆராய்ச்சிசெய்து நிர்ணயித்துத் தந்திருக்கும் அவ்வாத்மஉண்மையைக் கேட்பாயாக :

புத்தியுள்ள(வனொரு)வன் ப்ரஹ்ம மில்லை என்று அறிவானாகில், இல்லாதவனே ஆகிறான் ; ப்ரஹ்மம் உள்ளது என்று அறிவானாகில், அதனால் இவனை (ஞானிகள்) உள்ளவனாக அறிகிறார்கள். (தை-உப-உ-சு)

இல்லாதவனே ஆகிறான் - ப்ரஹ்மமே ஆத்மாவாதலால், அஃதில்லாவழித் தானே இல்லாதவ னாகிறான் என்றபடி. (ங க)

ங உ.

இதனோடு, இவ்வுல்லாஸத்தை முடிக்கிறார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் ஆறும் உல்லாஸப் பொழிப்புரை முற்றும்.

ஆறும் உல்லாஸம்.

பதவுரை.

க.

யயா	எப்படி
ஸ்வெ	கனவில்
விஶ்வம்	ஜகத்து
தத்ஶ	அதனிடத்துத் தங்கியதாய்
(ஶவதி)	(இருக்கின்றதோ)
தயா	அப்படியே
ஜாக்ரதி கூவி	நனவிலும்
(தத்ஶ)	(அதனிடத்துத் தங்கியதாய்)
(ஶவதி)	(இருக்கின்றது)
இதி (உச்யதெ) வெகூ	என்று (சொல்லப்படுகிற) தானால்,
ஸுஷுப்தௌ	உறக்கத்திலே
கூஸ்ய	யாருக்கு
கிம்	எது
ஶாதி	விளங்குகின்றது ?
தத்ர	அதிலே
கஃ	யார்
ஸ்தாயீ	நிலையான
செதநஃ	அறிவுப்பொருளாய்
(ஶவதி)	(இருக்கின்றது ?)

கஉ.

ஸவும் உ	எல்லாமே
க்ஷணிகம்	க்ஷணப்பொழுதுமாத்திரமுள்ளதாய்

ஶாஶ்வதம்	பாழாய்
(சுஷ்தி)	(இருக்கின்றது.)
ஸவபூத ஸவ	எல்லாமே
ஸ்வயக்ஷணம்	தனக்குரிய தன்மைத்தாய்
(சுஷ்தி)	(இருக்கின்றது.)

உ.

உஹ்யம்ஷ்ஹிஸரீரணாம்	நிலம் நீர் நெருப்பு வாயு என்பன
வாரீரணாஶாம்	பரமாணுக்களின்
ஸம்வாதம்	ஸமுதாயம்
(ஸ்யாசு)	(ஆகும்.)

ங.

உநுஷ்யாதிஶரீரணி	மனிதர்முதலானோருடைய தேகங்கள்
ஸ்கந்வஞ்சுகஸம்ஹதிம்	ஐந்து ஸ்கந்தங்களின் ஸமுதாயம்
(ஸ்யாசு)	(ஆகும்.)
ஸ்கந்தாம் ச	ஸ்கந்தங்கள்
ரூபவிஜ்ஞாநஸம்ஜ்ஞா-ஸம்ஸ்காரவெதநாம்	ரூபம், விஜ்ஞாநம், ஸம்ஜ்ஞை, வாஸனை, வேதனை
(இதி)	(என்று)
(வஞ்)	(ஐந்து)
(ஸ்யுஃ)	(ஆகும்.)

ங உ.

ரூபாணி	'ரூபங்கள்'
(இதி)	(என்னும்)
(ஶப்தஸ்ய)	(சொல்லுக்கு)
ரூபியெ	ரூபிக்கப்படுகின்றன

உதி	என
(வ்ருத்திஃ)	(சொற்பொருளுரைத்தல்)
(ஸ்வாஸ)	(ஆகும்.)
(தாநி)	(அவை)
விஷயாஃ ச	விஷயங்களாயும்
இந்த்ரியாணி சுவி	இந்திரியங்களாயும்
(ஸவஜ்ஞி)	(உள்ளன.)

ச.

விஷயெந்த்ரியயோஃ	விஷயங்கள் இந்திரியங்கள் என்ற வற்றினுடைய
ஜ்ஞாநம்	அறிவு
விஜ்ஞாநஸ்கந்தஃ	விஜ்ஞாநஸ்கந்தமாக
உச்யதெ	சொல்லப்படுகின்றது.

ரு.

ஸம்ஜ்ஞாமாணக்ரியாஜாதி-விசிஷ்டாத்யாதிகா	பெயர் குணம் தொழில் ஜாதி சிறப்புணர்ச்சி என்ற வடிவிற்ருன
வகுயா	ஐந்துவகை
கல்பநா	கற்பனையானது
ஸௌத்ரான்திகைஃ	பௌத்தர்களால்
ஸம்ஜ்ஞாஸ்கந்தஸ்ய	ஸம்ஜ்ஞாஸ்கந்தத்திற்கு
ப்ரோக்தா	சொல்லப்பட்டிருக்கின்றது.

சூ, எ.

மவர்ம்	ஆக்களுடைய
ஸம்ஜ்ஞா	பெயர்
மளஃ	ஆ

இதி	என்று
உக்தா	கூறப்பட்டிருக்கின்றது.
ஜாதிஃ து	ஜாதியோ
மொஹதம்	ஆவினிடத்துள்ள
மொக்ஷம்	ஆத்தன்மை
(ஸ்யாத்)	(ஆகும்.)
தஸ்ய	அதனுடைய
கு³ணாஃ	குணங்கள்
ஶு³க்லாதயஃ	வெண்மை முதலியன
(ஸ்யு³ஃ)	(ஆகும்.)
தயா	அப்படியே
க்ரியாஃ	வினைகள்
க³மனாதயாஃ	செல்லுதல் முதலியன
(ஸ்யு³ஃ)	(ஆகும்.)
கஸ்ய ஹி	அது
ஶ்ருங்கீ	கொம்புள்ளதாக
சதுஷ்பாத்	நான்கு காலுள்ளதாக
லாங்கூலீ	வாலுடையதாக
(ப⁴வதி)	(இருக்கின்றது)
(இதி)	(என்ற)
(வாக்யம்)	(இது)
விஶிஷ்டப்ரத்யயஃ	சிறப்புணர்ச்சியாக
(ஸ்யாத்)	(ஆகும்.)
ஏவம்	இவ்வாறு
பஞ்சவிதா	ஐந்துவகை
கல்பிதஃ	கற்பனையானது
ஸம்ஜ்ஞாஸ்கந்தஃ	ஸம்ஜ்ஞாஸ்கந்தம்
இதி	என்று
ப்ரோச்யதே	சொல்லப்படுகின்றது.

எஉ.

ஈமாஹ்யாः	அவா முதலியனவும்
வாணுவாவெ உ	புண்ய பாபங்களும்
ஸம்ஹாரஸ்ஸுः	வாஸநாஸ்கந்தமாக
உச்யதெ	சொல்லப்படுகின்றது.

ஈச்வரன் - தொழப்படுவோனாகவும் தொழுவோனாகவும், குருவாகவும் சிஷ்யனாகவும், யஜமானனாகவும் வேலைக்காரனாகவும் தனது இச்சைப்படி விளையாடுகின்றான்.

உ - ௪௧, ௫௦, ௫௧ ஆம் சுலோகங்களைப் பார்க்க. எப்படி இன்புற்றிருப்பவன் சிரிப்போனாகப் பாடுவோனாகக் காணப்படுகின்றானோ, அப்படி ஆநந்தஸ்வரூபமான ஈச்வரன் குருவாக சிஷ்யனாகப் பலவிதமாய்க் காணப்படுகிறான் என்பது கருத்து. (எ)

அ.

தந்தைஎன்பதும் மகன்என்பதும் பிறவும் ஒன்றனிடத்து நியதமாய்க் காணப்படவில்லை. அதனாலும், அவை கற்பிதமாம் :

எவன் (தன்)தகப்பனை நோக்கி மகனாயிருக்கின்றானோ, அவன் (தன்)மகனை நோக்கித் தகப்பனாகவே இருக்கிறான். ஒன்றேயன்றோ வேறுபட்டதுபோலச் சொல்மாத்திரத்தால் கொள்ளப்படுகின்றது.

தகப்பன்என்பதும் மகன்என்பதும் கணவன்என்பதும் மனைவிஎன்பதும் இன்னு மிவைபோன்றதும் பிறிதொன்றை நாடிநிற்றலால், பரமார்த்தம் என்னும் வாஸ்தவ மாகாது என்பதாம். (அ)

கூ.

ஆகவே, வாஸ்தவத்தை ஆராயுங்கால் விளக்கம்மாத்திரம் உள்ளது. வேற்றுமையுணர்ச்சி பொய்ம்மையேதான் ; (அது) மாயையினால் ஆத்மாவின்மேல் கற்பிக்கப்பட்டதாம்.

கூ௨.

தியாகம் நாக வாயுகவு ஸ்ரீஜ்ஞாநொஉயெ ஸதி ।

க0.

ஶிஷ்யாசாயெபாஉதெஶாஜி ஸுஉவக வுதிஹாஸதெ ॥

ஆராய்ச்சிசெய்யுமிடத்து,— 'எது பிறிதொன்றை நாடிநிற்பதாகக் காணப் படுகின்றதோ அது கனவுபோல மாயமேயாம், வாஸ்தவ மன்று'எனவும், 'தானே விளங்கும் உண்மைப்பொருளொன்றே உள்ளதாம்'எனவும் முடிகின்றன என்ற வாறு. (க)

மித்யை அல்லது பொய்ம்மை.

கூ௨.

"வேற்றுமையுணர்ச்சி பொய்ம்மையேதான்" (அ - க)என்று கூறப்பட்டது. அதில், பொய்ம்மை என்பதற்கு லக்ஷணம் யாது?

பொய்ம்மைஎன்பது - நேரறிவு பிறக்குமளவிலே, இல்லாமற்போ தற்கு உரியதா யிருத்தல்.

எனவே, எது மெய்யுணர்வினால் துடைக்கப்பெறுவ தாகின்றதோ அது பொய்ம்மைஎன்பது. நேரறிவு - ஸம்யக்தர்சநம் என்னும் நேரான உணர்வு. இல்லாமற்போதற்கு - எது எங்கே உணரப்பட்டதோ அது அங்கே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலத்தும் இல்லை என்னும் உணர்ச்சியின் வியவகாரத்திற்கு உரியதாய் மறைந்துபோதற்கு. (கூற)

க0.

இவ்வாறு பொய்ம்மைக்கு லக்ஷணம் கூறி, பொய்ம்மையான பேதப்ரபஞ்சம் விளங்குதலைக் கூறுகிறார் :

சிஷ்யன்என்பதும் குருஎன்பதும் உபதேசம்என்பதும் பிறவும், கனவுபோன்று விளங்குகின்றன.

பொய்ம்மையான கனவு விளங்குமாறுபோல, பொய்ம்மையான சிஷ்யன் குரு சாஸ்திரம் உபதேசம் முதலிய வேற்றுமைப்ரபஞ்சம் விளங்குகின்றது என்ப தாம். (க0)

பொய்ம்மையினால் மெய்ம்மையுணர்ச்சி உண்டாதல்.

(சங்கை) :— ஆயின், உள்ளேயுள்ள ஆத்மாவை ப்ரஹ்மமாக உணர்த்தும் மோக்ஷசாஸ்திரம் எப்படி ப்ரமாண மாகும்?

கக.

தியாஹ்ஹெதாऽவி வெஹாகிः ஸத்யீயும் வ்ரவொயயெசு ।
தெவ.தாவ்ரதிசாவ்ஹ ஸிதூவசு வ்ரதிவிம்வவசு ॥

கஉ.

ஸவெஹாऽவி வ்யவஹாரொऽயடி சாயாயாः வரிஜ்ரம்ஹணடி ।
ஸ்ஹஷ்ஹ்விஸஹ்ரஸீ சாயா ஸவ்ரவொயெந வாய்யுதெ ॥

கக.

(பரிகாரம்) :— கூறுவோம் :

வேதாந்தம் பொய்ம்மையாயினும், தேவவிக்கிரகம்போலும் சித்திரம்போலும் பிரதிபிம்பம்போலும் ஸத்யப்பொருளை அறியச்செய்யும்.

வேதாந்தமானது தான் பொய்யாயிருந்தாலும், ஒருவனை ஸத்யமான ப்ரஹ்மாத்மஸ்வரூபத்தை நேரே அறியும்படி செய்யக்கூடும்; எப்படிக் கடவுளல்லாத விக்கிரகத்திலே பூஜகனால் கடவுள் ஏற்றப்பட்டவனாயினும், அவனுக்கு ஸத்யமான பயனைக் கொடுக்கின்றானோ, அப்படிப்போல: அல்லது, எப்படிச் சித்திரத்திலுள்ள யானை புலி முதலியன குழந்தைக்கு ஸத்யமான பயத்தை உறுத்துகின்றனவோ, அப்படிப்போல: அல்லது, எப்படிக் கண்ணாடியிலுள்ள பிரதிபிம்பமானது முகத்திலுள்ள ஸத்யமான அழுக்கையேனும் ஸத்யமான அழகையேனும் காட்டுகின்றதோ, அப்படிப்போல. (கக)

ஞானத்தினால் மாயை இல்லாமற்போதல்.

கஉ.

வெகுவாகச் சொல்லி என்ன? என முடிக்கிறார் :

இந்த எல்லா வியவகாரமும் மாயையின் பகட்டாம். உறக்கம் போன்ற மாயை, தன் அறிவினாலே விள்ளப்படுகின்றது.

இந்த வியவகாரமெல்லாமே கள்ளமான வெறும் மாயாவினுக்காம் என்பதிலே யாதொரு தடையும் இல்லை என்பது கருத்து. பகட்டு - விவர்த்தம். தன் அறிவினாலே - வேதாந்தத்தினால் உண்டாகும் ப்ரஹ்மாத்மஸ்வரூபஉணர்வினாலே. விள்ளப்படுகின்றது - துடைக்கப்படுகின்றது, இல்லாமற்போகின்றது என்றபடி.

மாயையின் லக்ஷணம்.

இனி, மாயையின் லக்ஷணத்தைக் கூறுகிறார் :

கங.

யுக்திஹீநப்ரகாஶஸ்ய ஸம்ஜ்ஞா மாயேதி கத்யதே ।
நாஸதீ த்ருஶ்யதாநா ஸா மாயாயாநா ந வா ஸதீ ॥

கச.

ந ப்ரகாஶாதியம் ஹிந்நா மாயேவாகூபஸ்ய தாத்ருஶீ ।
ந வாஹிந்நா ஜடத்வேந விரோதாந்நாஹயாதிகா ॥

கங.

யுக்தியில்லா விளக்கத்திற்கு மாயை என்னும் பெயர் சொல்லப் படுகின்றது. அது காணப்படுகின்றது; (ஆதலால்,) இல்லதன்று. (அது) அழிக்கப்படுகின்றது; (ஆதலால்,) உள்ளது மன்று.

எவ்வாற்றாலும் பொருந்துமாறு இல்லாதிருந்தும் விளங்குதலென்பது எதுவோ அது மாயையாம். —அது பொருந்துமாறில்லாத தோற்றமாயிருத்தல் எப்படி? — கூறுவோம்: ப்ரத்யக்ஷமாக எதிரே காணப்படுகின்றமையின், அதனை ஆகாயத்தாமரைபோல இல்பொருளாகச் சொல்லுதல் ஆகாது. ஆத்மாவை யறிந்தவளவிலே இல்லாமற்போகின்றமையின், அதனை ஆத்மாபோல உள்பொருளாகச் சொல்லுதம் ஆகாது. (கங)

கச.

அன்றியும்,

சூரியனுடைய இருண்ட நிழல்போல, இது ப்ரகாசத்தினும் வேறாகா தன்று; ஜடமாதலால், வேறாகாதது மன்று; விரோதத்தால், இருதன்மைத்து மன்று

ப்ரகாசத்தினும் - ஆத்மாவான ப்ரஹ்மத்தினும். சூரியனுடைய இருண்ட நிழலாவது - கண்இருண்டுகிடக்கும் பகல்குருடர்களால் சூரியன்மீது ஏற்றப் பட்டதாய் சூரியனை மறைத்துநிற்கும் நிழலாம். இங்கு, சூரியப்ரகாசமே நிழலாகத் தோற்றுகின்றது. ஆகவே, நிழலானது சூரியப்ரகாசத்திற்கு வேறாகாது. அதுபோலவே, மாயையென்பது ஆத்மாவிற்கு வேறாகாது. அன்றியும், அது ஜடமாதலால், அறிவான ஆத்மாவிற்கு வேறாகாதது மன்று. மேலும், ஒன்றே வேறானதும் வேறாகாததுமா யிருத்தல் முரணாதலால், மாயை இவ்விருதன்மையினையும் உடையதன்று. (கச)

கரு.

ஸுஹெகுவயவாஹாவாஸு நெயம் ஸாவயவொவ்யுதெ ।
ந ஸாவயவஹீநா ஸா காயெஷுவயவாஹ்வி.தா ॥

கசு.

சுவிசாரிதஸிஜெயடு ஶாயாவெஶ்வா விமா ஃநீ ।
வ ஈஷ்ஷம் வஜ்யதெவ தியாஹ ஏதெஃ ஸுவிஹ்ரெஃ ॥

கரு.

மற்றும்,

தனக்குக் காரணமான உறுப்புக்க ளின்மையால், இது உறுப்பு டைத்து எனப்படவில்லை. (மற்று,) அது கார்யங்களிலே உறுப்பு டைத்து; (ஆதலின்,) உறுப்பில்லது மன்று.

தனக்குக் காரணமான உறுப்புக்க ளின்மையால் - உறுப்புக்கள் தம்முள் சேர்ந்து மாயையை உண்டாக்கவில்லை யாதலால், அநாதியாதலால் என்பது பொருள். மாயையின் கார்யமான யானை குதிரை முதலியன அவயவமில்லாதவை யாய் இல்லை என்பார், "கார்யங்களிலே உறுப்புடைத்து" என்றார். (கரு)

கசு.

ஆகவே வேறோர்வகை இல்லையாதலின், யுக்தியில்லாத் தோற்றமே மாயைக்கு லக்ஷணமாம் என அமைந்தது. என்றஇதனை முடிக்கிறார்:

இந்த மாயையாகிய பகட்டுவேச்சை, ஆராயப்பெறாது அமைந்தவளாய் போலியான தன்தளுக்குகளால் புருஷனை ஏமாற்றியேவிடுகிறாள்.

ஆராயப்பெறாது அமைந்தவளாய் - எவ்வளவுகாலம் ஆராய்ச்சி செய்யப்படவில்லையோ அவ்வளவுகாலம் தோன்றுகிறவளாய் என்றபடி. (கசு)

இந்த மாயாவேச்சையைத் தொலைத்திடுதலே மோக்ஷமென்பது.

மாயாவேச்சையின் ஸரஸ விலாஸங்களால் இந்திரியஉல்லாஸம்மேலிடப் பெற்ற எந்த ஜனங்கள் அவளைத் தொலைக்க முயலவில்லையோ, அவர்களை இரங்கிக் கூறுகிறார்:

கஎ.

ந தஸ்யா உபுவிஷ்ஹுஷ்ட கஹிவாஂஹஜி கெஷ்ட ।
தெஷாஂ வக்ஷெ கயஂ ஶொக்ஷஃ உநஸஃ ஸஂஹவிஷ்யுதி ॥

கஅ.

திஷ்ரொவ்யுவஷ்ரா உநஸஃ ஜாஃ ஹ்ரதவஸுஷுவ்யஃ ।
உக்ரவக வரிவதுஜெ ஹெஹ்ராஜ்ஜெ கஹெதவஃ ॥

கஃ.

தாஹிஃ கரொதி கஉணி வுநஜ்ஜெவுயுதெ உநஃ ।
உநஸஃ கெவலஃ ஸாக்ஷீ ஹாநுவக வுரூஷஃ வரஃ ॥

கஎ.

சிலர் அவளுடைய வேரை அறுத்தலை விரும்புகிறார்கள். அவரது கொள்கையிலே, மனம் (விஷயங்களினின்றும்) நீங்குதல் எப்படியாகும்? [ஆகமாட்டாது]

கஅ.

ஆகமாட்டாதாகவே,

மனத்தினுடைய நனவு கனவு உறக்கம் என்னும் மூன்று நிலைமைகளும் வேற்றுமைமயக்கத்திற்குத் தலைக்காரணமாகி, சக்கிரம் போலச் சுற்றிச்சுற்றிச் செல்லுகின்றன.

மனம் இந்திரியங்களோடு வெளியே திரிதல் நனவு என்னும் நிலைமையாம்; அவை ஒடுங்குங்கால், தான்மாத்திரம் உள்ளே திரிதல் கனவு என்னும் நிலைமையாம்; தானும் தன்காரணத்தினுள் ஒடுங்குதல் உறக்கம் என்னும் நிலைமையாம். என இவ்வாறு நிகழும் மனோவியாபாரத்தினாலே வேற்றுமைமயக்க முண்டாகின்றன. (கஅ)

கஃ.

உண்டாகவே, செய்கை செய்யுங்கருவி செய்பவன் பயன் என்பவற்றைச் சார்ந்துநிற்கின்ற

அவைகளால் மனம் கர்மங்களைச் செய்கின்றது; மீண்டும் அவற்றால் கட்டப்படுகின்றது. ஆத்மா மனத்திற்கு அப்பாலுள்ளதாய், சூரியன்போல வெறும்ஸாக்ஷியாய் (நிற்கின்றது).

உ0.

யயா வ்ராணிக்ருதெரகுஃ கூடுலிதெநுவ வய்ருதெ ।
தயா உநஃக்ருதெரா தா ஸாக்ஷிக்வாதெநுவ வய்ருதெ ॥

உக.

சூதா கரொதி கூடுணி வய்ருதெ உ-வ்ருதெ வ தெஃ ।

அவைகளால் - வேற்றுமைமயக்கங்களால். அவற்றால் - கர்மங்களால். அப்பா லுள்ளதாய் - வேறானதாய். வெறும்ஸாக்ஷியாய் - நிர்விகாரமான கண் காணியாய்.

எவ்வாறு சூரியன் ப்ராணிகளின் செய்கைகட்கு ஸாக்ஷிமாத்திரமா யிருக் கின்றானோ, அவ்வாறு ஆத்மா - பல விகாரமுடைய மனத்திற்கு ஸாக்ஷிமாத்திரமா யுளது; விகாரியான அம்மனத்திற்கு வேறாய் நிர்விகாரியா யிருக்கின்றது. (கக)

உ0.

இதனையே விளக்கமாக உணர்த்துகின்றார் :

எப்படி சூரியன் ப்ராணிகளால் செய்யப்பட்ட கர்மங்களால் கட்டப்பெறுவதேஇல்லையோ, அப்படி ஆத்மா மனத்தால் செய்யப் பட்ட (கர்மங்களால்) கட்டப்பெறுவதே இல்லை; ஸாக்ஷியாதலால் என்க.

இந்த ஆத்மா கர்மங்கட்கெல்லாம் ஸாக்ஷியா யிருத்தலாலன்றோ அவற்றால் பிணிப்புண்ணுதல் இல்லை. அவ்வாறே, சுருதியும் அருளிச்செய்கின்றது :

"ஸ-ஏயெபா யயா ஸவபுலொகஸ்ய வக்ஷுஃ
ந லிவ்ருதெ வாக்ஷுஷைஷவபாஹ்யதொஷைஃ ।
வநகஸ்தயா ஸவபுலஏகாகராதா
ந லிவ்ருதெ லொகதுஃவெந வாஹ்யஃ ॥"

"எப்படி சூரியன் ஸகல ப்ராணிகட்கும் கண்ணாகி, கண்ணினுடைய குற்றங்களாலும் வெளியிலுள்ள குற்றங்களாலும் ஒட்டப்படுகிறா னில்லையோ, அப்படியே (மயக்கத்தினின்று) அகன்றுநிற்கும் தனிப் பொருளாய் எல்லாப்பொருள்களினுள்ளும் உள்ள ஆத்மாவானது ப்ராணிகளின் துன்பத்தால் பற்றப்படுகிற தில்லை"—(கட - ரு - கக) (உ0)

உக.

ஆகவே,

"ஆத்மா கர்மங்களைச் செய்கின்றது; அவற்றால் கட்டப்படுகின்

உதாளவபாரிகீ களத்தீ ஹ்ரீரீரைவ கெவலீ ॥

உஉ.

யதாஹ்ரயதமீ நீஹாரைரீ சுஷ்ரஷ்டாऽவி திவாகரீ ।
யயா ஹந்த இவாஹாதி தயைவாதாऽவி மாயயா ॥

உங, உச.

யயா மீலாவஸாரைதஸ்மிந் ஹ்ராரீரணீ கரீரகீ ।
ஹ்ரீரீதத்வஸ்ரீதி ஜமஸ் ஸதவம்ஹ்ரீ நஹீஷ்ஸலீ ॥

றது, விடவும்படுகின்றது" என்பது உபசாரவழக்கினாலான கொள்கை; (அது) வெறும் மயக்கமாத்திரமாகவே உள்ளது.

ஆத்மா கர்த்தாவாதல் முதலியன, மனம்முதலிய உபாதிகளா லாகின்றன; வாஸ்தவத்திலே இல்லை என்பது கருத்து. (உக)

உஉ.

ஆத்மா - மனம்முதலிய உபாதிகளின் ஸம்பந்தத்தினால் உள்ளபடி விளங்குவதில்லையாயின், அங்ஙனம் அது[ஆத்மா] அஸங்கமான நிர்விகாரப்பொருளா யிருத்தல் எப்படி? என்னும் சங்கையைத் திருஷ்டாந்தத்தால் போக்குகிறார்:

எப்படி சூரியனானவன் புகை மேகம் தூசி பனி என்றவற்றால் தொடப்பெறாதவனாயினும், (அவற்றால்) மறைக்கப்பட்டவன்போல் தோற்றுகின்றானோ; அப்படியே, ஆத்மாவும் மாயையினால் (தொடப்பெறாததாயினும், அதனால் மறைக்கப்பட்டதுபோல் தோற்றுகின்றது).

(அவற்றால்) - புகை மேகம் முதலியவற்றால். மாயையினால் - மாயையினாலும், அதனது கார்யங்களாலும் என்றபடி. (உஉ)

உங, உச.

மறைப்பென்பது ஆத்மாவிற்கு வாஸ்தவத்திலே இல்லையாயினும், அது[ஆத்மா] மறைக்கப்பட்டதாகத் தோற்றுதல் திருஷ்டாந்தத்தினால் நிரூபிக்கப்பட்டது. இனி அப்படியே, விக்ஷேபத்தோற்றமும் ஆத்மாவிற்கு வாஸ்தவத்திலே இல்லை என்பதை திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்கிறார்:

எப்படி விளையாட்டிற்காகச் சிலரால் சுற்றப்படுகின்ற சிறுவன் - அந்த ஜகத்துச் சுற்றுவதாகவும், ஆகாசத்திலே நூறு சந்திரன் உள்ளனவாகவும் காண்கின்றானோ;

தயைவ ஶாயயா ஜீவஃ ஶ்ரீஶிதொ வாஸநாவஶாசு ।
நாநாகாரஶிஷம் விஶ்வ ஶ்ரஶோணம் ச வஶ்யதி ॥

உரு.

ஸம்ஸ்ரஜ்ய உநஸா ஜெவஃ ஸம்ஸாரநிவ யக்ஷ்யதெ ।
யஶாऽகெஶா ஜயஸம்ஸமூசு சயநாநெவ யக்ஷ்யதெ ॥

உசு.

யொமாஹ்யாஸவஶாஜ்ஜ்ஞ ஶெநொ நிவிஷயம் கூதழ் ।
நிவ்ருத்தஃ ஸ வ-ஶாங் ஸஶ்ஃ ஜீவந்-ஜெதொ ஹவிஷ்யதி ॥

அப்படியே, வாஸனையின் வலிமையினால் மாயையினாலே மயக்கப்பட்ட ஜீவன் இந்த ஜகத்தைப் பலவடிவிற்றாய்ச் சுழல்வதாகக் காண்கின்றான்.

அந்த - முன் சுற்றுததாகக் கண்டுவைக்கப்பட்ட. வாஸனையின் - முந்தினமுந்தின மயக்கத்தினாலாகும் ஸம்ஸ்காரத்தின். பலவடிவிற்றாய் - தேவர் மனிதர் விலங்கு முதலிய அனேக வடிவங்களை யுடையதாய். (உரு, உச)

உரு.

மாயையினால் மயக்கப்பட்டவனாயினும் ஜீவனுக்கு வாஸ்தவத்திலே மயக்கமில்லை :

ஆத்மா மனத்தொடு சேர, பிறந்திறந்துஉழல்கிறவன்போல் காணப்படுகின்றான் ; எப்படி சூரியன் ஜலத்தொடு சேர, பலவாக அசைகிறவன்போல் காணப்படுகின்றானோ (அதுபோல).

உசு.

அறிவான ஆத்மாவாகிய ஜீவனுக்கு இவ்வாறு மாயையின்வழியாக பந்தத்தை வர்ணித்து, இனி மெய்யணர்வின்வழியாக ஸாதநத்தோடு மோக்ஷத்தை அருளிச்செய்கிறார் :

எவனால் (தன்)மனமானது யோகப்பயிற்சியின் தேர்ச்சியினாலே விஷயம்அகன்றதாய்ச் செய்யப்பட்டதோ, அந்தப் புருஷன் (ஸம்ஸாரத்தினின்றும்) நீங்கியவனாய் உடனே ஜீவந்முக்தனாவான்.

யோகப்பயிற்சியின் - நிதித்யாஸநத்தின் ; கரு - ஆம் பக்கத்தைப் பார்க்க. விஷயம்அகன்றதாய்ச் செய்யப்பட்டதோ - பிடிப்புஒன்றுஇல்லாததாகச் செய்யப்

உஎ.

ஆ ஸுவ்ணுள ச ஸய்ஜள ஸுஹவ்நாயயா ஶிவஃ ।
ஸுஜாஶெகாம் ஜ்ஷெநெகஃ நாநெவாஸ்தி ஶ்ரு்திஃ ॥

உஅ.

இதி ஸ்ரீதக்ஷிணாமூர்திஸ்தோத்ரவ்யாக்யாநே ஸுதிவாதகெ ।
ஸுவெஸ்ய சாநஸொல்லாஸெ ஸுஷ்டொல்லாஸஸம்ஜ்ஞஃ ॥

பட்டதோ, விஷயமல்லாத ப்ரஹ்மத்தின் வடிவமாகச் செய்யப்பட்டதோ என்பது பொருள். உடனே - ப்ரஹ்மாத்மஅறிவு உண்டானவளவிலேயே. (உசு)

உஎ.

இனி, ஜீவனுக்கும் ஈச்வரனுக்கு முள்ள பேதம் மாயையினு லானதாம் என்பதிலே, இரண்டு ரிக்குக்களை எடுத்தாளுகின்றார் :

"மாயையினுலே சிவன், சேர்ந்துநிற்கின்ற இரண்டு பக்ஷிகளா னுன்" (ச்வே - ச - சு; மு - ங - க - க), "ஒரேபொருள் பிறவாத ஒன்றைச் சார்ந்து அனேகம்போ லாயிற்று" (ச்வே - ச - ரு; மகா நா - உப - கூ - உ) எனச் சுருதி (கூறுகின்றது).

பிறவாத ஒன்றை - மூலப்ரகிருதியை. (உஎ)

உஅ.

எட்டாவது மூலச்லோகத்தின் உரையை இதனுடு முடிக்கின்றார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் எட்டாம் உல்லாஸப்பொழிப் புரை முற்றும்.

எட்டாம் உல்லாஸம்.

பதவுரை.

க.

கஃ கூவி	ஒரு
வஹாயுஃ	பொருளும்
ப்ரகாஶவ்ருதிரேகேண	ப்ரகாசத்திற்கு வேறாய்
ந கூஹ்யி வெகு	இல்லையாயின்
பரமாயெபூவஹெஶாஹஃ	பரம்பொருளை உபதேசித்தல்வரை யிலுள்ள
வ்யவஹாரஃ	வியவஹாரம்
கயம்	எப்படி
ஹவெகு	நிகழும் ?

உ, ங.

பந்தஃ ச	பந்தமும்
மோக்ஷஃ ச	மோக்ஷமும்
கஸ்ய	யாருக்கு
(ஹவதஃ)	(இருக்கின்றன ?)
(ஸஃ)	(அவன்)
கெந	எந்த
ஹெதுநா	காரணத்தினால்
பத்யதெ	கட்டப்படுகிறான் ?
மாயாயாஃ	மாயையினுடைய
லக்ஷணம்	லக்ஷணம்
கிம்	யாது
ஸ்யாகு	ஆகும் ?
இதி	என்று

ஏவம்	இவ்வாறு
பரிவ்ருஹிதம்	வினவுகின்ற
(ஶிஷ்யஸ்ய)	(மாணுக்கனுடைய)
ப்ரஶ்னஸ்ய	வினவிற்கு
உத்தரம்	விடையை
வக்தும் ஸுகி	சொல்லவும்
ஸுவெந	எளிதாய்
ப்ரதிபத்தும் ச	உணரவும்வேண்டி
(வக்ஷ்யாமி)	(முன்)
ஸப்தபிஃ	ஏழு
ஶ்லோகைஃ	சுலோகங்களால்
உக்தஃ	சொல்லப்பட்ட
அர்தஃ	பொருள்
புநஃ	மீண்டும்
ஸம்க்ஷிப்ய	சுருக்கி
அர்யதெ	சொல்லப்படுகின்றது.

ச.

ஶப்தேந	சொல்லினால்
வா	அல்லது
அர்தேந	அர்த்தத்தினால்
வளநாரூக்யம்	மீளக் கூறுதல்
அத	இங்கே
தோஷஃ	குற்றம்
ந ஹ்யேஷ	ஆகாது.
அஹ்யாஸேந	அடுத்தடுத்துக் கூறுவதனால்
அர்தஸ்ய	விஷயத்தின்
மஹிமா	பெருமை
ப்ரதிபாத்யதெ	உணர்த்தப்படுகின்றது.

அ.

யः	எந்த
வஷः வுருஷः	இப் புருஷன்
மாயாவிமோஹிதः	மாயையினால் முற்றும் மயக்கப்பட்டவனாய்
காயகாரணதயா	கார்யமாக காரணமாக
ஸ்வாமிஸம்பந்தः	உடைமைக்கும் உடையவனுக்கு முள்ள ஸம்பந்தத்தோடு
ஶிஷ்யாசார்யதயா	சிஷ்யனாக குருவாக
தயா வத	அப்படியே
பிதாபுத்ராதிநா	தகப்பன் மகன் முதலான ரூபத்தினால்
விஶ்வம்	ஜகத்தை
ஸ்வப்ந	கனவிலே
வா	அல்லது
ஜாக்ரதி	நனவிலே
஭ேதः	வேற்றுமையாக
பஶ்யதி	காண்கின்றானோ
தஸ்மை	அந்த
ஶ்ரீமதுராசார்யஸ்வரூபாய	ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான
ஶ்ரீதக்ஷிணாமூர்தயே	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
ஏஷः	இந்த
நமः	நமஸ்காரம்.

அஸ்ய	இதற்கு
அயம்	இது
அபிஸந்திः	கருத்து
(ஸ்யாத்)	(ஆகும்.)

ரு, சு.

ஸ்வயம்வ்யக்தாய	தானே விளங்குவதாய்
ஸத்ய-தத்வே	உண்மைவடிவிற்றாய்
பரமேஶ்வரே	பரமேச்வரன் என்னும்
ஏகஸ்மிந் ஸுவி	ஒரேபொருளினிடத்தும்
கார்யகாரணஸம்பந்த-ஸுநிகவியகல்பநா	கார்யகாரணஸம்பந்தம் முதலான பலவகைக் கற்பனையானது
ராஹோஃ	'ராகுவின்
ஶிரஃ	தலை,'
வ்யோ	'ஆகாசத்தின்
ஸ-வஃ	வெளி,'
மம	'என்னுடைய
ஆத்மா	ஆத்மா,'
வ்ரதிபிம்பவ-ஃ	'விக்கிரகத்தின் உடம்பு'
இத்யாதிகல்பநாத-ல்யா	என்பனமுதலிய கற்பனைகட்குச் சமமாய்
(ஸ்யாத்)	(இருக்கின்றது;)
வ்யாவ்ருத்த-பொருளா	வேறோர் பொருளைக் குறிப்பதாய்
ந (ஸ்யாத்)	இல்லை.

எ.

ஈஶ்வரஃ	ஈச்வரன்
உபாஸ்யோபாஸகாத்மா	தொழப்படுவோனாகவும் தொழுவோனாகவும்
ஆசார்ய-ஶிஷ்யரூபேண	குரு சிஷ்யன் என்ற முறையாகவும்
ஸ்வாமிஸ்வ்யாத்மிரூபேண ச	உடையவன் ஊழியன் முதலிய ரூபமாகவும்
ஸ்வேச்சயா	தனது இச்சைப்படி
க்ரீடதி	விளையாடுகிறான்.

அ.

யஃ	எவன்
விதாரம் வுதி	தகப்பனை நோக்கி
வுத்ரஃ	மகனாய்
(ஹவதி)	(இருக்கின்றானோ)
ஸஃ	அவன்
வுத்ரம் வுதி	மகனை நோக்கி
விதா வஸவ	தகப்பனே
(ஹவதி)	(ஆகிறான்.)
வஸகஃ வஸவ ஹி	ஒன்றேயன்றோ
நாநா இவ	வேறுபட்டதுபோல்
ஶப்தமாத்ரகஃ	சொல்மாத்திரையால்
கல்பிதெ	கொள்ளப்படுகின்றது.

கூ.

தஸ்மாத்	ஆகவே
வாஸ்தவாயுநிரூபணெ	வாஸ்தவத்தை ஆராயும்பொழுது
வுகாரஃ வஸவ	விளக்கம்மாத்திரம்
கல்பி	இருக்கின்றது.
ஹெஉவுதீதிஃ	வேற்றுமையுணர்ச்சி
மிதுயா வஸவ	பொய்ம்மையாகவே
(ஹவதி)	(உளது;)
மாயயா	மாயையினால்
ஆத்மநி	ஆத்மாவினிடத்து
கல்பிதா	கற்பிக்கப்பட்டது.

கூஉ.

மிதுயாத்வம் நாம	பொய்ம்மை என்பது
ஸத்ஜ்ஞாநொதயெ	நல்லறிவு உதித்தல்

ஸதி	ஆகும்போது
வாயுக்வம்	கெடுதற்கு உரியதா யிருத்தல்
(இதி)	(என்று)
(உச்யதெ)	(சொல்லப்படுகின்றது.)

கo.

ஶிஷ்யாசார்யோபதேஶாதி	சிஷ்யன், குரு, உபதேசம் என்பன முதலியன
ஸ்வப்நவத்	கனவுபோல
ப்ரதிபாஸதெ	விளங்குகின்றன.

கக.

வெதாந்தாः	வேதாந்தம்
மித்யாஸ்வரூபாः கவி	பொய்ம்மையாயினும்
தெவதாப்ரதிபாவத்	கடவுள்விக்கிரகம்போலும்
சித்ரவத்	சித்திரம்போலும்
ப்ரதிபிம்பவத் ச	பிரதிபிம்பம்போலும்
ஸத்யம்	ஸத்யமான
கயம்	பொருளை
ப்ரபொதயெத்	அறிவிக்கும்.

கஉ.

கயம்	இந்த
ஸவபாः	எல்லா
வ்யவஹாராः கவி	வியவகாரமும்
மாயாயாः	மாயையினுடைய
விலாஸாத்	விலாஸமாக
(ஸவதி)	(இருக்கின்றது.)

ஸுஷுஷுஹிஸஹ்ரஸீ	உறக்கத்திற்கு ஸமாநமான
மாயா	மாயை
ஸ்வஸ்ரவொயெந	தன் அறிவினால்
வாயுதெ	தொலைக்கப்படுகின்றது.

கங.

யுக்திஹீநஸ்ரகாஶஸ்ய	யுக்தியில்லாதவிளக்கத்திற்கு
மாயா	மாயை
இதி	என்னும்
ஸம்ஜ்ஞா	பெயர்
கத்யதெ	சொல்லப்படுகின்றது.
ஸா	அது
ஹ்ரஸ்யமாநா	காணப்படுகின்றதாய்
(வதுதெ)	(இருக்கின்றது;)
(கதம்)	(ஆதலால்)
கஸதீ	இல்லாததாக
ந (ஹவதி)	இல்லை;
வா	அல்லது
வாயுமாநா	அழிக்கப்படுகின்றதாய்
(வதுதெ)	(இருக்கின்றது;)
(கதம்)	(ஆதலால்)
ஸதீ	உள்ளதாக
ந (ஹவதி)	(இல்லை.)

கச.

ஸகுஸ்ய	சூரியனுடைய
தாமஸீ	இருண்ட
ஹாயா இவ	நிழல்போல
இயம்	இது

வ்ரகாஶாசு	ப்ரகாசத்தினும்
ஹிநா	வேறானது
ந (ஹவதி)	அன்று;
ஜடக்வேந	ஜடமாதலால்
சுஹிநா ச	வேறாகாததும்
ந (ஹவதி)	அன்று;
விரோயாசு	விரோதத்தினால்
உஹயாதிகா	இருதன்மைகளையும்உடையது
ந (ஹவதி)	அன்று.

கரு.

இயம்	இது
ஸுஹெகுவயவாஹாவாசு	தனக்குக் காரணமான உறுப்புக்களின்மையால்
ஸாவயவா	உறுப்புக்களோடு கூடியதாக
ந உச்யதெ	கூறப்படுகின்றதில்லை.
ஸா	அது
சுவயவஹீநா ச	உறுப்புக்களில்லாததாயும்
ந (சுஹ்ஸி)	இல்லை;
(கிம் து)	(மற்று)
காயெஷு	கார்யங்களிலே
சுவயவாந்விதா	உறுப்புக்களோடு கூடியதாய்
(ஹவதி)	(இருக்கின்றது.)

கசு.

விலாஸிநீ	விலாஸத்தையுடைய
இயம்	இந்த
மாயாவெஶ்யா	மாயையாகிய வேச்யை

சுவிசாரிதஸிஹா	விசாரிக்கப்பெறாது அமைந்தவளாய்
மிதுயாஹுதைதைஃ	பொய்யான
ஸுவிஹ்ரைஃ	தன் தளுக்குகளால்
வாரஷம்	புருஷனை .
வஞ்சயதி வன	ஏமாற்றியேவிடுகிறாள்.

கஎ.

கெசந	சிலர்
தஸ்யாஃ	அவளுடைய
உமுவிஹ்ஹம்	வேரை அறுத்தலை
ந சுஹிவாஂஹஞ்ஜி	வேண்டுகிறாரில்லை.
தெஷாம்	அவர்களுடைய
வகெஷ	கொள்கையிலே
உநஸஃ	மனம்
(விஷயெஹ்யஃ)	(விஷயங்களினின்றும்)
சொக்ஷஃ	நீங்குதல்
கயம்	எப்படி
ஸம்ஹவிஷ்யதி	ஆகும்?

கஅ.

உநஸஃ	மனத்தினுடைய
ஜாக்ரதுவஸ்வப்னஸுஷுப்தயஃ	நனவு கனவு உறக்கம் என்ற
திஸ்ரஃ	மூன்று
சுவஸ்தாஃ சுவி	நிலைமைகளும்
ஹெஹ்ரான்தெ சுஹெதவஃ	வேற்றுமைமயக்கத்திற்கு முக்கிய காரணமாய்
வக்ரவசு	சக்கிரம்போல
வரிவதுதெ	சுற்றிச்சுற்றிச் செல்லுகின்றன.

கக.

உநः	மனம்
தாஹிः	அவைகளால்
கஉூணி	கர்மங்களை
கரொதி	செய்கின்றது ;
வ¬நः	மறித்து
தெகः	அவற்றால்
வய்யுதெ	கட்டப்படுகின்றது.
வ¬ரா¬ஷः	ஆத்மா
வாரः	அப்பா லுள்ளதாய்
ஹாந¬வசு	சூரியன்போல
உநஸः	மனத்திற்கு
கெவலः	வெறும்
ஸாக்ஷீ	ஸாக்ஷியாய்
(திஷ்டதி)	(நிற்கின்றது.)

உ0.

யயா	எப்படி
சுகூः	சூரியன்
ஹ்ராணிகூ்ரெதெः	ப்ராணிகளால் செய்யப்பட்ட
கஉூஹிः	கர்மங்களால்
ந வய்யுதெ வவ	கட்டுண்கிறானேஇல்லையோ
தயா	அப்படி
சூதா	ஆத்மா
ஸாக்ஷிக்வாசு	ஸாக்ஷியாதலால்
உநः கூ்ரெதெः	மனத்தினால் செய்யப்பட்ட
(கஉூஹிः)	(கர்மங்களால்)
ந வய்யுதெ வவ	கட்டுண்கிறதேஇல்லை.

உக.

சூதா	"ஆத்மா
கர்மாணி	கர்மங்களை
கரோதி	செய்கின்றது;
தைஃ	அவற்றால்
பத்யதே	கட்டப்படுகின்றது,
முச்யதே ச	விடவும்படுகின்றது"
இதி	என்பது
வ்யவஹாரிகீ	உபசாரவழக்கினாலான
க்ருஹீதிஃ	கொள்கை
(ஸ்யாத்)	(ஆகும்.)
(ஸா)	(அது)
கேவலம்	முற்றும்
ஹ்ரஸோதா வத	மயக்கமாத்திரமாகவே
(ஸ்வதி)	(உள்ளது.)

உஉ.

யதா	எப்படி
திவாகரஃ	சூரியன்
யதாஹ்ரயதாமீ நீஹாரைஃ	புகை, மேகம், தூசி, பனி என்ற வற்றால்
ஸ்ப்ருஷ்டஃ ஸவி	தொடப்பெறாதவனாயினும்
(தைஃ)	(அவற்றால்)
மந்தஃ இவ	மறைக்கப்பட்டவன்போல்
ஸுஹாதி	தோற்றுகின்றானோ
ததா வத	அப்படியே
சூதா ஸவி	ஆத்மாவும்
மாயயா	மாயையினால்
(ஸ்ப்ருஷ்டஃ ஸவி)	(தொடப்படாததாயினும்)

(தயா)	(அதனால்)
(ஹந்த இவ)	(மறைக்கப்பட்டதுபோல்)
(ஸ்ஹாதி)	(தோற்றுகின்றது.)

உங, உச.

யயா	எப்படி
லீலாவஸாத	விளையாட்டிற்காக
கெஶ்சித	சிலரால்
ஸ்ராயமாணஃ	சுற்றப்படுகின்ற
கூடாரகஃ	சிறுவன்
தத	அந்த
ஜகத	ஜகத்தை
ஸ்ரயத	சுற்றுவதாக
வஸ்யதி	காண்கின்றானோ;
நபஃஸ்தலம்	வானத்தை
ஶதஶாம்ஶும்	நூறு சந்திரனுடையதாக
(வஸ்யதி)	(காண்கின்றானோ;)

தயா ஏவ	அப்படியே
வாஸநாவஸாத	வாஸனையின் வலிமையினால்
மாயயா	மாயையினாலே
ஸ்ராவிதஃ	மயக்கப்பட்ட
ஜீவஃ	ஜீவன்
இதம்	இந்த
விஶ்வம்	ஜகத்தை
நாநாகாரம்	பலவடிவிற்றாகவும்
ஸ்ரமாணம் ச	சுற்றுகிறதாகவும்
வஸ்யதி	பார்க்கிறான்.

உ௫.

யதா	எப்படி
சுகூ:ஃ	சூரியன்
ஜலஸம்ஸர்கா	ஜலத்தொடு சேர்வதனால்
ஜலஸ்ய இவ	அசைகிறதுபோல
நாநா (இவ)	வேறுபட்டது(போல)
த்ருஷ்யதே	காணப்படுகின்றதோ
(ததா)	(அப்படி)
தேஜ:ஃ	விளங்குகின்ற(ஆத்மா)
சித்தா	மனத்தொடு
ஸம்ஸர்கா	சேர்ந்து
ஸம்ஸரந் இவ	பிறந்துஇறந்துஉழல்கிறவன்போல்
த்ருஷ்யதே	காணப்படுகிறான்.

உ௪.

யேந	எவனால்
சித்த:ஃ	மனம்
யோகாப்யாஸவஶாத்	யோகப்பயிற்சியின் வன்மையி னாலே
நிவிஷயம்	விஷயம்நீங்கியதாய்
க்ருதம்	செய்யப்பட்டதோ
ஸ:	அந்த
வ-ஶாந்	புருஷன்
(ஸம்ஸாராத்)	(ஸம்ஸாரத்தினின்றும்)
நிவ்ருத்த:ஃ	நீங்கியவனாய்
ஸத்ய:ஃ	உடனே
ஜீவந்-முக்த:ஃ	ஜீவன்முக்தனாக
ஆவிஷ்ருதி	ஆவான்.

உஎ.

மாயயா	மாயையினால்
ஶிவஃ	சிவன்
ஸயுஜௌ	சேர்ந்துநிற்கின்ற
உபௌ	இரண்டு
ஸுவர்ணபுளௌ	அழகியஇறகுள்ள (பக்ஷிகளாக)
ஹம்ஸ இவ	ஆனான் ;
ஏகஃ	ஒரே (பொருள்)
அஜாம்	பிறவாத
அநேகாம்	ஒன்றை
ஜுஷந்	சார்ந்துநிற்கிறதாய்
நாநா இவ	அனேகம்போல்
ஆஸீத்	ஆயிற்று ;
இதி	என்று
ஶ்ருதிஃ	சுருதி
(ப்ரூதே)	(கூறுகின்றது.)

உஅ.

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி-ஸ்தோத்ர-ஸாரப்ரகிவாஹகே	ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய ஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற
மாநஸோல்லாஸே	மாநஸோல்லாஸம் என்னும்
ப்ரவேஶே	நூலினுள்
அஷ்டமோல்லாஸ-ஸம்ஹ்ரஹஃ	எட்டாம் உல்லாஸத்தின் பொழிப்புரை
இதி	முற்றும்.

ஈ ய

நவசோலூாஸஃ ॥

க.

கயசெவ்வியா சாயா நிவதெதுதெதி வ்ரஹதஃ ।
ஸாஸ்வரூபாவாஸநாரூபஃ தஹவாயஃ வ்ரகீதுதெ ॥

உ.

ஷடிஃ ஸுத்தரூபாஸ வாரசெஷாரசெதிஷ ।
வ்ரதுக்ஷணாவயுஹெ ஸவெபுரவுஷசெதுயஃ ॥

ஒன்பதாம் உல்லாஸம்.

ஆத்மாவான ப்ரஹ்மத்தை ஆராய்தலானது ஞானத்திற்கு ஸாதநமாம் என்று சென்ற எட்டுச்லோகங்களால் உத்தமாதிகாரிக்கு உபதேசம் செய்யப்பட்டது. இனி, அந்த ஆத்மாவான ப்ரஹ்மத்தை ஆராயத் திறமையில்லா மந்தாதிகாரிக்கோ ஈச்வரனைத் தொழுதலே ஞானஸாதநமாம் என்று அவனுக்கு அதனை உபதேசிக்க எழுகின்றது இந்த ஒன்பதாம் ச்லோகம் :

உல்லாஸ இயைபு.

க.

இனி, ஆத்மாவான ப்ரஹ்மஸ்வரூபத்தை ஆராய்தலிலே வல்லமையில்லாதவர்க்கு

இத்தகைய மாயை எவ்வாறு நீங்கக்கூடும் ? — என்று வினவுகின்றானுக்கு, ஈச்வரனைத் தொழுதலானது அதற்கு ஸாதநமாக உணர்த்தப்படுகின்றது.

அஷ்டமூர்த்தி வடிவினனான ஈச்வரனைத் தொழுதல்.

உ.

முப்பத்தாறு தத்துவங்களான பரமேச்வரனது வடிவங்களுள், எட்டு வடிவங்கள் யாவராலும் ப்ரத்யக்ஷமாய் அறியப்படுகின்றன.

ங.

கயோஸ ஃநஃ க்ஷிவ்ரு சுரொஸ்ஂ நாஹ்ரூதீதுதஃ ।
ஃஎதுதுஷ்கயீம் ஸ்ரஎதெ ஸ்ஸஃ ஸவ்ரூதுஸாவநாடு ॥

கூ. ஸஎஸ்ஹாஂஸ்ரு நரொZ நிரொZஂவஸஃஹ-
நஃரொ ஹிஃஂஸஃ வஃஹாநு
ஊதுரூஹாதி வஸாவஸாதுகுஷிஃ
யஸ்ரெவ ஃஎதுதுஷ்கு ।
நாநுதிஂவந விஃதெ விஃஸதாஂ
யஹாவுஸஹாஷிஹொஃ

பூதங்கள் ஐந்து, ப்ராணன்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, அகக்கரணம் நான்கு, மஹத் காலம் ப்ரதாநம் மாயை வித்யை புருஷன் என்பன ஆறு, பிந்து நாதம் சக்தி சிவன் சாந்தம் அதீதம் என்பன ஆறு; ஆகத் தத்துவங்கள் முப்பத்தாறு. இவை சைவாகமத்தினுள் கூறப்பட்டவை. இவற்றை இந்நூலின் இரண்டாம் உல்லாஸத்தினுள் விரிவாகக் காணலாம்.

எட்டு வடிவங்கள் - இனி ஒன்பதாம் மூலச்லோகத்தினுள் கூறப்படும் நிலம் நீர் நெருப்பு முதலியன. ஆகாசம் மனத்திற்கு விஷயமாகின்றது, அல்லது ஸாக்ஷிக்குமட்டும் விஷயமாகின்றது என்னும் கொள்கையினைக் கொண்டு, "ப்ரத்யக்ஷமாய் அறியப்படுகின்றன" எனப்பட்டது. (உ)

ங.

ஈச்வரனுக்கு முப்பத்தாறு வடிவங்கள் இருக்க, அவற்றுள் இந்த எட்டுவடிவங்களைமாத்திரம் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? மற்றையவற்றைக் கூடாது? எனில்,— கூறுவோம்:

அளவிடவொண்ணாதவற்றிலே மனம் விரைவாக ஏறுதல் ஏலாது என்பதனால், ஆசார்யர் அஷ்டமூர்த்திமயமாகிய ஸர்வாத்மஸ்வரூபபாவனையை அருளிச்செய்கிறார்:

அளவிடவொண்ணாதவற்றிலே - அறிதற்கு அரியவையா யுள்ளவற்றிலே. மூர்த்தி - உருவம். பாவனை - தியானம். (ங)

கூ. நிலம் நீர் நெருப்பு வாயு ஆகாயம் சூரியன் சந்திரன் புருஷன் என ஸ்தாவரஜங்கமமாய் (எது) விளங்குகின்றதோ, (அந்த) இவ்வெட்டு வடிவங்களும் எவனுக்கே உள்ளனவோ; (உண்மையினை) ஆராய்வோர்

தஸ்மை ஸ்ரீமஹாஹுதயே நம ஹ்ரீம்
ஸ்ரீதக்ஷிணாமூர்தயே ॥

ஸைவ்வம் ஸிஜாதம்—

ச.

விராட்ஶரீரே வ்யாப்தாயை வ்ராணிநாமபி விஶ்ரமே ।
ஷட்த்ரிம்ஶத்தத்வஸம்வாதம் ஸவபுஷாவ்ய நமாவதுதே ॥

க்கு எந்த வியாபகமான பரம்பொருளைக்காட்டிலும் வேறொன்று இல்லையோ; அந்த ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

இந்தப் பிரபஞ்சமானது ஈச்வரனுக்கு வேறாயிருத்தலால், எப்படி அவனது உடம்பாகும்? எனச் சங்கித்து, ஆராயுங்கால் இது அவனுக்கு வேறாகச் சுதந்திரமாய் இல்லை என்பார், "ஆராய்வோர்க்கு எந்த வியாபகமான பரம்பொருளைக்காட்டிலும் வேறொன்று இல்லையோ" என்றார். (சூ)

இதனது ஸித்தாந்தம் இப்படியாம்:

நம்மால் காணப்படுகின்ற ஜகத்தெல்லாம் அஷ்டமூர்த்திவடிவிற்றாயுளது. அது முப்பத்தாறு தத்துவவடிவிற்றான ஈச்வரனது உடம்பாம். அது, அதிதைவம் அத்யாத்மம் என இருவகைப்படும். அவற்றுள், முந்தினது பதினாலுலோகங்களாகிய ப்ரஹ்மாண்டமென்பது. பிந்தினதோ ஜீவனுடைய உடம்பாகிய பிண்டமென்பது. அண்டபிண்டமாகிய இவ்விரண்டும் கார்யகாரணமாய்நிற்றலால் இவற்றிற்குப் பேத மில்லை. இனி, உபாஸகனாவான், வ்யஷ்டியாகிய பிண்டத்தின் அவயவங்களை ஸமஷ்டியாகிய அண்டத்தின் அவயவங்களோடும், பிண்டத்தின் அவயவியை அண்டத்தின் அவயவியோடும் ஒன்றாக்கிக்கொண்டு இவ்வாறு ஈச்வரனைத் தன் ஆத்மாவாகத் தியானிப்பவனாய், முந்தின எட்டு மூலச்லோகங்களால் அருளிச்செய்யப்பட்ட ப்ரஹ்மாத்மாவை அந்த ஈச்வரனது அருளினாலே நேரே கண்டுணர்ந்து ஈடேறுகிறான் என்பது இங்குச் சொல்லுவோன் குறிப்பாதலால், இவையனைத்தையும் எடுத்துக்காட்டத் தொடங்குகிறார்:

ச.

ப்ரஹ்மாண்டமாகிய விராட்சரீரத்திலும் ப்ராணிகளுடைய சரீரத்திலும் முப்பத்தாறு தத்துவங்களின் சேர்க்கையானது எங்கும் தொடர்ந்துளது.

ரு.

வ்யாப்திவபுஷிஶரீரேऽஸ்மிந் உபஸோ வ்யஷ்டிரூபிணஃ ।
தஸ்யாஸ்தவபாதகுஶிஷு ஸ்ஶரீரம் விவிதயேசு ॥

சு.

வ்யஷ்டிரூபாஸநயா வாம்ஸஃ ஸமஷ்டிவ்யாப்திமாப்நுயாசு ।
உபஸம்க்ராமதீதைவ்ஷு உஶக்ரக உபாஶிஶசு ॥

எ.

ப்ரஹ்மாண்டஸ்யோபரி யொகாஃ ஸப்த ஸ்தாநாஶ்ரயாஃ ஸ்ரிதாஃ ।
உபயாதிப்ரஹாஸ்ரேஷ்வாயாரேஷு வஸதி தெ ॥

மூப்பத்தாறு தத்துவங்கள், க - உ - ஆம் சுலோகத்து உரையினுள் கூறப்பட்டன. பிண்டமானது ப்ரஹ்மாண்டத்திற்கு வேறாய் இல்லை. அதுவும் அஷ்ட மூர்த்திகட்கு வேறாய் இல்லை என்பது பொருள். (ச)

ரு.

வ்யஷ்டியான உடம்பிலே வ்யஷ்டியான மனம் வியாபித்திருத்தலால், இந்தத் தன்உடம்பை எல்லாவடிவிற்றாகத் தியானிக்கவேண்டும்.

சு.

(உபாஸகன்) ஈச்வரனை வ்யஷ்டியாக உபாஸித்தலால் ஸமஷ்டிவியாப்திபை யடைவான். (சுருதியானது) "அடைகிறான்"என இவ்வாறு பத்துமுறை உபதேசித்துளது.

இங்குக் குறிக்கப்பட்ட சுருதி தை - உப - உ - அ ; ந - கo. (சு)

(க) அண்டத்திலுள்ள நிலம் பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

எ.

ப்ரஹ்மாண்டத்தினுள்ளே பூர்லோகம்முதலான ஏழு உலகங்கள் உள்ளன. அவை (உடம்பினுள்ளே) மூலாதாரம்முதலாக ப்ரஹ்மரந்திரம் ஈறாகவுள்ள ஆதாரங்களிலே வஸிக்கின்றன.

மூலாதாரத்திலே பூர்லோகமும், ஸ்வாதிஷ்டாநத்திலே புவர்லோகமும், மணிபூரகத்திலே ஸ்வர்லோகமும், அநாஹதத்திலே மஹர்லோகமும், விசுத்தத்திலே ஜநர்லோகமும், ஆஜ்ஞையிலே தபர்லோகமும், ஸஹஸ்ராரத்திலே ஸத்ய லோகமும் வஸிக்கின்றன என்பதாம். (எ)

எஉ.

வீணாஉணோ உஹாஶோ ஃ சுஷ்நி கூயவவுதாஃ ।

அ, கூ.

மஜா தூ விஜயா நாயீ யஃ நெயா வுகீதிதா ॥
ஸாஸுஷ்தீ ஸுஷ்ஷோ ஹ்ரூ நாயெ்யாऽநுயாஃ வுணுநிஹ்ரூஃ ।
ஜீவாஃ ஸ்யுயுாதவஃ ஸவ்ஹ ஷ்வெஉவாஷ்ஷாஉயொऽஷ்வயஃ ॥

கo.

உஎயெ திஷ்தி கூயாஹ்ரீஃ சுஷ்ரிஃயெ்ய வாயவஃ ।
வெஉ்ய்தொऽஹ்ரீஃ ஸுஷ்ஹ்ரூயாழ் வாயிதுவொ நாஹிஷ்ணயெ ॥

எஉ.

முதுகெலும்பு மஹாமேருவாம். (அதற்குப் பக்கத்திலுள்ள) எலும்புகள் குலபர்வதங்களாம்.

குலபர்வதங்கள் - பாரியாத்ரம் முதலியன. (எஏ)

(உ) அண்டத்திலுள்ள நீர் பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

அ, கூ.

இனி, பிங்கலை என்னும் நாடி கங்கையாக, இடை யமுனையாக, ஸுஷும்நை ஸரஸ்வதியாகக் கூறப்பட்டுள்ளன. மற்றை நாடிகள் மற்றைப் புண்யநதிகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏழு தாதுக்களும் ஏழு தீவுகளாம். வியர்வை கண்ணீர் முதலியன ஏழு ஸமுத்ரங்களாம்.

ஏழு தாதுக்கள் - த்வக் முதலியன. தீவுகள் - ஜம்பூத்வீபம் முதலியன. ஸமுத்ரங்கள் - தீவுகளைச் சூழ்ந்துநிற்கும் கடல்கள். (அ,கூ)

(ங) அண்டத்திலுள்ள நெருப்பாயினும் ஒளியாயினும் பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

கo.

மூலாதாரத்திலே (ப்ரளய) காலநெருப்பு உள்ளது. எலும்புகளினுள்ளே பாடபநெருப்பும், ஸுஷும்நையிலே மின்னல்நெருப்பும், கொப்பூழ்வட்டத்திலே நிலநெருப்பும் உள்ளன.

கக.

ஹ்ருதி திஷ்ட தி ஸூர்யஸ்ஸோமோ ஹ்ருதி ஸ்திதா ।
நக்ஷத்ராணி வராணி ஹ்ருதி ஸர்வாணி தேவதா: ॥

கஉ.

யாயுதெ வாயுரிதி ஹ்ருதி ஸ்தா ப்ரவஹணாதிபி: ।
ப்ராணாதிபிஸ்ஸமிதி ஸ்தா: யாயுதெ வாயுரிவ ஸ: ॥

கங.

ப்ராவெ ஸ்யாவிஜதெ ப்ராண: ஸ்ரோத்ரஸ்பர்ஶாதிகாதிக: ।
நாஸிகாஹ்ருதி வஹிஸ்ஸுகா லீயதெ விஷயஜ்ஞதெ ॥

கக.

சூரியநெருப்பு ஹிருதயத்திலே உள்ளது. சந்திரமண்டலம் மண்டையிலே உள்ளது. அன்றியும், (யோகிகள்) கண்முதலிய இந்திரியங்களை மற்றைய ஒளிகளாகக் கூறுகிறார்கள்.

மற்றைய ஒளிகளாக - அச்விநீ முதலிய நக்ஷத்திரங்களாகவும், செவ்வாய் புதன் முதலிய கிரகங்களாகவும் உள்ள. (கக)

(ச) அண்டத்திலுள்ள வாயு பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

கஉ.

எப்படி உலகங்கள் ப்ரவஹணன் முதலிய வாயுக்களால் தாங்கப்படுகின்றனவோ, (அப்படி) உடம்பானது ப்ராணன்முதலான பத்துவகை வாயுக்களால் தாங்கப்படுகின்றது.

ப்ரவஹணன் என்பது ஓர்வகை வாயுவின் பெயர். (கஉ)

சுருதியினுள் கூறிய வாயு ஐந்து : யோகநூலினுள் கூறிய வாயு ஐந்து : ஆக வாயுக்கள் பத்து. இவற்றுள், முந்தின ஐந்தையும் அவ்வவற்றினது தொழிலொடு பகுத்து உணர்த்துகிறார் :

கங.

ப்ராணன் மூலாதாரத்தினின்று இடை பிங்கலைகளை அடைந்து, சூரியவடிவத்தால் மூக்குத்துவாரங்களின்வழியாக வெளியே சென்று, ஈராறுஅங்குலத்திலே மறைகின்றது.

சூரியவடிவத்தால் - சூரியன்போல, சூட்டிற்குத் தங்குமிடமாகி. ஈராறு அங்குலத்திலே - பன்னிரண்டு அங்குல தூரத்திலே. (கங)

கச.

கஷ்டாஜ்ஞெந ஸொஶாத்தா நாடீஸ்வாஶஹராவிஶெத் ।
ஶுஶ்ரூஷுரஹ்ரூக்ராணுவாநொ விஸ்ருஜெத்ஸ்வஹிஃ ॥

கரு.

கஷ்டீஷொஶையொ ஹ்ருக்வா ஸுஷும்நாரந்த்ரஶாஶ்ரிதஃ ।
ஸுவ்ரஹ்மரந்த்ரஶுஹ்ரூ உதாநொ வயுதெ ஸ்வயம் ॥

கசு.

வ்யாவயெத்வஷி வ்யாநஃ ஸுக்ராந்நரஸஶுஹ்ரு ।
ஸந்ரக்ஷணம் ஸமாநஸ்து காயாக்நிஃ கரதெ ஸதா ॥

கச.

(அதே ப்ராணனே) சந்திரவடிவிற்றாய் எட்டங்குல தூரத்தினின்று இரண்டு நாடிகளின்வழியாக உள்ளே புகுந்திடும்; அபாநனாகி மலத்தையும் மூத்திரத்தையும் வாயுவையும் ரேதஸையும் வெளியே தள்ளிவிடும்.

இரண்டு நாடிகளின்வழியாக - இடை பிங்கலைகளாகிய மூக்குத்துவாரங்களின்வழியாக. உள்ளே - உடம்பினுள்ளே. (கச)

கரு.

(ப்ராணன்) அக்நிமயமாய் சந்திரமயமாய் ஆகி ஸுஷும்நையின் துவாரத்தைச் சேர்ந்து, ப்ரஹ்மரந்திரம்வரை மேலே செல்கிறதாய்த் தானே உதாநனாக விரிகின்றது.

கசு.

உண்ட உணவின் ஸாரத்தை (எது) தினந்தோறும் உடம்பினுள் எப்புறத்தும் பரவச் செய்கின்றதோ (அது) வ்யாநனும். இனி, (எது) உடம்புநெருப்பை எப்பொழுதும் எரியச் செய்கின்றதோ (அது) ஸமாநனும்.

இவ்வாறு முந்தின ஐந்து வாயுக்களும் காட்டப்பட்டன. இப்பொழுது, பிந்தின ஐந்து வாயுக்களையும் அவ்வவற்றினது தொழிலொடு பிரித்துரைக்கிறார்;

கஎ.

நாகோ ஹிக்காகரஃ கூர்மஃ நிமேஷோந்மேஷகாரகஃ ।
க்ஷுதம் கரோதி க்ருகரஃ தேவதத்தோ விஜ்ரும்ภணே ॥

கஎஉ.

ஸுஜயோ யநம்ஜயஃ கூயமாநஃ ஶ்ரீதம் வாவி ந ஶுஞ்சதி ।

கஅ.

ஆகாஶோ வஹிரவ்யுக்தஃ ஸுவகாஶம் ப்ரயச்஛தி ॥

கக.

வம்ஶாகுள காலநெதாரள ப்ராணாவாநள ஶரீரிணாம் ।

கஎ.

நாகன் விக்கலைச் செய்வது. கூர்மன் கண்மூடுதலையும் திறத்தலையும் செய்வது. கிருகரன் தும்மலைச் செய்கிறது. தேவதத்தன் கொட்டாவிவிடுதலைச் செய்கிறது.

கொட்டாவிவிடுதலை - சோம்புதல்வலிமையினால் வாய் பிளத்தலை. (கஎ)

கஎஉ.

தநஞ்ஜயன் ஊதலைச் செய்யும் ; பிணத்தையும் விடுகிறதில்லை.

ஊதலை - வீங்கலை, பருத்தலை. (கஎஉ)

(ரு) அண்டத்திலுள்ள ஆகாசம் பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

கஅ.

ஆகாசமானது வெளியிலும் உள்ளிலும் இடத்தைத் தருகின்றது. எனவே, ஒரே ஆகாசந்தான் ஸமஷ்டியிலும் வ்யஷ்டியிலும் உள்ளது என்றவாறு. (கஅ)

(சூ, எ) அண்டத்திலுள்ள சூரியனும் (சு) சந்திரனும் (எ) பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

கக.

காலத்தைச் செலுத்துகின்ற சந்திரனும் சூரியனும், தேகிகளுடைய (உடம்பினுள்ளே உள்ள)ப்ராணனும் அபாநனுமாம்.

தேகிகளுடைய - உடம்பை யுடைய ப்ராணிகளுடைய.

(அ) அண்டத்திலுள்ள புருஷன் பிண்டத்திலும் அமைந்திருத்தல்.

ஸாக்ஷீ வாரூஷஃ

ஐதெ்வழ உ-ஏதத்ருஷ்கஶிஃம் வவாஃ ॥

உ0.

ஸஉநஸ்கஶிஃம் யொஃ ஸெவஸாந உவாஸநழ் ।
கஷ்டாஙயொமயாக்தஃ ஸங கஉநஸ்கம் ஸ மஹ்ஹதி ॥

உக.

உநஃவ்ரஸாஃ ஸஹொஷஃ ஸளநரிம்ஹ்ரயநிஹ்ரஹஃ ।
உயா ஹாக்ஷிண்ருஸாஹ்ஹிகழ் க்ரஜுவம் ஸாஉவம் க்ஷமா ॥

(உடம்பினுள்ளே நின்று யாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும்)

ஸாக்ஷி (எதுவோ, அது வெளியிலுள்ள) புருஷனும்.

ஒரேபுருஷனே ஸமஷ்டியிலும் வ்யஷ்டியிலும் இருக்கிறான் என்றபடி.

என இவ்வாறு இச் சரீரம் எட்டு வடிவுடைத்து என்க.

ஸமநஸ்கயோகம் அமநஸ்கத்தை யடையச் செய்கின்றது.

உ0.

கீழ்க்கூறியபடி அஷ்டமூர்த்தி ஸ்வரூபத்தை உடம்பிலேயே வைத்துத்தியானிப்போனுக்கு அதனாலாகும் பயனை அருளிச்செய்கிறார் :

ஸமநஸ்கமான இந்தத் தியாநத்தை அப்யஸிக்கின்ற (எந்த) யோகியானவன் அஷ்டாங்கயோகத்தைக் கூடியவனாய் இருக்கின்றானோ, அவன் அமநஸ்கத்தை யடைகின்றான்.

ஸமநஸ்கமான - மனத்தோடுகூடிய, மனத்தால் வியாபிக்கப்பெற்ற. இந்த-அஷ்டமூர்த்தியாகிய. அஷ்டாங்கயோகத்தை - எட்டு உறுப்புக்களை யுடைய யோகத்தை. அமநஸ்கத்தை - மனம்இல்லாததை; ஈச்வரனை, பரம்பொருளை என்றபடி. (உ0)

யோகத்தினுடைய எட்டு உறுப்புக்கள்.

(க) ய ம ம்.

உக.

இனி, யோகத்தினுடைய எட்டு உறுப்புக்களையும் பகுக்கிறார் :

மனஅமைதி, திருப்தி, மௌநம், இந்திரியஅடக்கம், தயை, தாக்ஷிண்யம், நம்பிக்கை, நேர்மை, மென்மை, பொறுமை,

உஉ.

மாவஶுஶிரஹிம்ஸா ச ப்ரஹ்மசர்யம் ஸ்ரதியுதிः ।
இத்யேவமாதயோऽந்யே ச மநஸ்ஸாத்ய்யா யமாः ஸ்ரதாः ॥

உங, உஙஉ.

ஸ்நாநம் ஶௌசம் க்ரதுः ஸத்ய ஜபொ ஹொமஶ்ச தபுணி ।
தபொ தாநம் திதிக்ஷா ச நமஸ்காரः ப்ரதக்ஷிணி ॥
ப்ரதொவவாஸாத்யாஶ்சாந்யே காயிகா நியமாः ஸ்ரதாः ।

உஉ.

மனச்சுத்தம், அஹிம்ஸை, ப்ரஹ்மசர்யம், நினைப்பு, தைர்யம் என்பன முதலியவையும் மற்றையவையும் மனத்தினால் செய்யப்படும் யமங்களாகக் கருதப்பட்டுள்ளன.

மனஅமைதி - மனம் அலையாது ஒருகுறியிலே நிற்றல். மௌநம் - வீண்வார்த்தை பேசாமை. தாக்ஷிண்யம் - வியவகாரத்திலே தேர்ச்சியுடைமை, பிடிவாதமின்மை என்க. நம்பிக்கை - சாஸ்திரமும் ஆசார்யனும் உரைக்கின்ற விஷயத்திலே விச்வாஸம். நேர்மை - கோணலில்லாமை. மென்மை - கடிநமாயிராமை.

மனச்சுத்தம் - வார்த்தைபேசுதல் முதலியவற்றிலே மனக்கள்ளமில்லாமை. நினைப்பு - பிறப்பு இறப்பு பிணி மூப்பு முதலியவற்றிலே துன்பத்தை மீளமீளச் சிந்தித்தல். தைர்யம் - மனம் ப்ராணன் இந்திரியங்கள் என்ற இவை அயர்ந்திட்டவழியும் உறைத்துநிற்றல். "முதலியவையும்" என்றதனால் - மாநியாகாமை (வே - கீ - கங - எ, அ, கூ, க0, கக) முதலியவற்றையும், "மற்றையவையும்" என்றதனால் - பகைப்போனாகாமை (வே - கீ - கஉ - கங, கச, கரு, கசு, கஎ, கஅ, கக) முதலியவற்றையும் கொள்க. (உஉ)

(உ) நியமங்கள்.

உங, உஙஉ.

இனி, உடம்புவாக்குக்களால் செய்யப்படும் நியமங்களைக் கூறுகிறார் :

ஸ்நாநம், சுத்தம், ஈச்வரபூஜை, ஸத்யம், ஜபம், ஹோமம், தர்ப்பணம், தவம், கொடை, ஸஹித்தல், நமஸ்காரம், ப்ரதக்ஷிணம், வ்ரதம், பட்டினி என்பனமுதலியவையும் மற்றையவையும் உடம்பினால் செய்யப்படும் நியமங்களாகக் கருதப்பட்டுள்ளன.

கீழே (க - உஉ) 'மனச்சுத்தம்' என உள்பரிசுத்தம் உரைக்கப்பட்டமையால், இங்கு 'ஸ்நாநம்' 'சுத்தம்' என்றவற்றால் வெளிஸ்நாநத்தையும் வெளிப்

உச, உரு, உருஉ.

ஸ்வஸ்திகம் மொஶுவம் வஜ்ரம் ஹம்ஸாவ்யம் ப்ராஹ்மாஸநம் ॥
நரஸிம்ஹம் மரகடம் கூர்மம் நாகாவ்யம் வைஷ்ணவாஸநம் ।
வீரம் மயூரம் வஜ்ராவ்யம் ஸித்தாவ்யம் ரௌத்ரஸாஸநம் ॥
யோநாஸநம் விஶேஷம் சாக்தம் சைவம் வஶிஷ்டாநகம் ।

உசு.

நிராலம்பநயோகஸ்ய நிராலம்பநாஸநம் ॥

உசுஉ.

நிராலம்பதயா ஜ்ஞாநம் நிராலம்பஃ ஸதாசிவஃ ।

பரிசுத்தத்தையும் கொள்க. ஸஹித்தல்- குளிர் வெப்பம்முதலிய த்வந்த்வங்களைத் தாங்குதல். மற்றையவையும் - யோகத்திற்கு விரோதமில்லாத ஆஹாரம் முதலியன எவையோ அவையும். 'உடம்பினால்' என்பது, வாக்கிற்கும் உபலக்ஷணம்.

(ங) ஆ ஸ ந ங் க ள்.

உச, உரு, உருஉ.

ஆஸநங்களைக் கூறுகிறார் :

ஸ்வஸ்திகம் கோமுகம் பத்மம் ஹம்ஸம் என்பன ப்ராஹ்மஆஸநங்களாம். நருஸிம்ஹம் கருடம் கூர்மம் நாகம் என்பன வைஷ்ணவஆஸநங்களாம். வீரம் மயூரம் வஜ்ரம் ஸித்தம் என்பன ரௌத்ரஆஸநங்களாம். (யோகிகள்) யோநி என்னும் ஆஸநத்தை சாக்தமாகவும், பச்சிமதாநகம் (என்னும் ஆஸநத்தை) சைவமாகவும் அறிகிறார்கள்.

உசு.

ஒருயோகவிசேஷத்திற்கு ஓர்ஆஸநவிசேஷத்தை அருளிச்செய்கிறார் :

நிராலம்பயோகத்திற்கு நிராலம்பநம் என்னும் ஆஸநமாம்.

நிராலம்பநமாவது - கை கால் முதலியவற்றை இன்ன இன்னவாறு வைக்க வேண்டும் என்னும் நியமப்பற்றில்லாதது. (உசு)

உசுஉ.

நிராலம்ப யோகமென்பது யாது? எனில்,

நிராலம்பனைத் தியானித்தலாம். நிராலம்பன் - ஸதாசிவன்.

உஎ.

ரேசகஃ பூரகஶ்சைவ கும்பகஃ ப்ராணஸம்யமஃ ॥

உஅ.

இந்த்ரியாணாம் ஸர்வாநாம் விஷயேப்யோ நிவாரணம் ।
ப்ரத்யாஹார இதி ப்ரோக்தம் ப்ரத்யாஹாரார்யபூவெஷிபிஃ ॥

உஅஉ.

க்யாரே க்வாபி உநஸஃ ஸ்தாவநம் யாரணோவ்யதே ।

எனவே, நிர்க்குணமான பரமார்த்த உண்மையிலே மனம் ஒருப்பட்டுநிற்றல் எதுவோ, அது நிராலம்பயோகமாம் என்ப தாயிற்று. (உகூ.ற)

(சு) ப்ராணயாமம்.

உஎ.

ப்ராணயாமத்தைக் கூறுகிறார்:

ப்ராணயாமமாவது ரேசகம் பூரகம் கும்பகம் என்பனவாம்.

ரேசகம் பூரகம் கும்பகம் என மூவகைத்தான ப்ராணஅடக்கமே ப்ராணயாமம் என்பது கருத்து. (உஎ)

(ரு) ப்ரத்யாஹாரம்.

உஅ.

ப்ரத்யாஹாரத்தைக் கூறுகிறார்:

எல்லா இந்திரியங்களையும் விஷயங்களினின்றும் விலக்குதல் ப்ரத்யாஹாரமாம் என்று ப்ரத்யாஹாரப்பொருளை அறிந்தவராலே கூறப்பட்டுளது.

(சூ) தாரணை.

உஅஉ.

தாரணையைக் கூறுகிறார்:

ஒரு ஆதாரத்திலே மனத்தை நிறுத்தல் தாரணை எனப்படுகின்றது.

ஒரு ஆதாரத்திலே - தியானிக்கப்படும்பொருளிலே: மணிபூரகம்முதலிய சக்கிரத்திலே; அல்லது, ஹிருதயத்தினுள் தோன்றும் சிவ ராம கிருஷ்ணாதி மூர்த்தியிலே. (உஅ.ற)

உகூ.

ப்ரஹ்மவிஷ்ணுசிவாதீநாம் விஷயாணாம் வ்ருத்தயே ॥

உகூஉ.

யோநாஷ்டாங்கம் வக்ஷ்யே ஸமாயிராஹியீயதே ।

௩0.

கூடாங்கஸமாயிஷ்டா ஸவ்ருத்திஷ்டாவிவர்ஜிதா ॥

(எ) த்யாநம்.

உகூ.

த்யாநத்தைக் கூறுகிறார் :

ப்ரஹ்மா விஷ்ணு சிவன் முதலானோர்களைச் சிந்தித்தல் த்யாந (மாம் என்று யோகிகள்) கூறுகிறார்கள்.

தாரணையென்பது மனத்தையும் ப்ராணனையும் ஓரிடத்து நிலைபெறுத்தல் மாத்திரமாம்; த்யாநமோ விஷ்ணுமுதலான ஓர்விஷயத்தின்மீது மனத்தின் வ்ருத்தி தாரையாக ஓடுதலாம். என்பது வேறுபாடு. (உகூ)

(அ) ஸமாதி.

உகூஉ.

எட்டாவது உறுப்பான ஸமாதியைக் கூறுகிறார் :

த்யாநத்தினின்றும் புத்தி அசையாமையானது ஸமாதியாகச் சொல்லப்படுகின்றது.

யோகத்தினுடைய இந்த எட்டாவது அங்கமானது, அறிவது அறியப்படுவது என்னும் வேற்றுமை எண்ணத்தின் லேசத்தினை யுடையதாய் மனத்தொடு சேர்ந்துநிற்கும் ஸவிகல்பம் என்னும் ஸமாதியாம். (உகூ௨)

௩0.

இந்த அங்கங்களால் சாதிக்கப்படும் அங்கியாகிய யோகத்தை அருளிச்செய்கிறார் :

அமநஸ்கஸமாதியோ எண்ணமெல்லாம்ஒழிந்தது.

அமநஸ்கஸமாதி - நிர்விகல்பம் என்னும் ஸமாதி. எண்ணமெல்லாம் - அறிவது அறியப்படுவது என்னும் வேற்றுமைஎண்ணமனைத்தும். (௩0)

௩௧.

விதெ நிஶ்ஶலதாம் யாதெ ப்ராணொ ஹவதி நிஶ்ஶலஃ ।
விதஸ்ய நிஶ்ஶலத்வாய யொகம் ஸம்யாதஸ்ஹ்யஸெஷ ॥

௩௨.

ஶுகுஞ்சநஸ்வாதஸ்ய ப்ராணஸ்ய ச நிரொதநாத் ।
ஸம்விகொவாரி ஜிஹ்வாயாஃ ஶ்வாஸநம் யொகஸாதநம் ॥

௩௩.

விதெ நிஶ்ஶலதாம் யாதெ ப்ராணெ ஶ்யுவயம் மதெ ।
விஹாரெ ஸ்வதாநி ஜாயந்தெ வஶுஹ்ருதஜயாஸ் ப்ரயாந் ॥

மனமும் ப்ராணனும் அசையாமைக்கு யோகம் ஆவச்யகம்.

௩௧.

மனம் அசையாமையை யடைந்தவழி, ப்ராணன் அசையாததாகி ன்றது. மனம் அசையாமைக்காக யோகத்தைத் தியானத்தோடு அப்யாஸிக்கவேண்டும்.

ப்ராணன் அசையாமைக்கு மனம்அசையாமை காரணம். மனம்அசையாமைக்கோ அஷ்டாங்கயோகமே காரணம். ஆகவே, அதனை ஊக்கத்தொடு பயில வேண்டும் என்பது கருத்து. "தியானத்தோடு"எனத் தியானத்தைமட்டும் எடுத்துக்கூறியது, அதிலே ஆதாமிகுதியை குறிப்பிக்கும்பொருட்டு. (௩௧)

லம்பிகாயோகம்

௩௨.

மீண்டும் யோகத்திற்கு வேறோர் ஸாதநத்தைக் கூறுகிறார்:

அபாநனைச் சுருக்குதலும், ப்ராணனை அடக்குதலும், உள்நாக்கின் மேல் நாக்கைநிறுத்துதலும் யோகத்திற்கு ஸாதநமாம்.

பூதஜயயோகத்தின் லக்ஷணங்கள்.

௩௩.

இனி, அப்யாஸத்தினால் சித்தத்தையும் ப்ராணனையும் வசப்படுத்திக்கொண்ட யோகியின் அடையாளங்களைக் கூறுகிறார்:

சித்தம் அசையாமையை யடைய ப்ராணன் நடுவழியைச் சேர்ந்த வளவிலே, ஐந்து பூதங்களையும் முறையே ஜயிக்க, இந்த அடையாளங்கள் உண்டாகின்றன.

௩௪.

உயஃஔதுகஹாயுக்வழி சூரொஃயும் யவுதா தநொஃ ।
ஸுஃஸுஹுஸுரவணுக்வழி வுரயஃம் யொஃயுக்ஷணழி ॥

௩௫.

கணுகாஸ்ரெஷஸஜுக்வழி ஜயுவஸ்ரெஷஃஜுநழி ।
க்ஷுத்ரயாஹிஸஹிஷ்ணுக்வழி ஃதீயம் யொஃயுக்ஷணழி ॥

௩௬.

வஹுநவாநஹொக்ரக்வழி சூதவாஹிஸஹிஷ்ணுதா ।

உடம்பிலே கால்முதல் முழங்கால்வரை நிலத்தின் இடம்; முழங்கால்முதல் கொப்பூழ்வரை நீரின் இடம்; கொப்பூழ்முதல் தொண்டைவரை தீயின் இடம்; தொண்டைமுதல் புருவநடுவுவரை வாயுவின் இடம்; புருவநடுவுமுதல் உச்சித்து வாரம்வரை ஆகாசத்தின் இடம். இவ்விடங்களிலே தாரணையை அப்யஸிக்க, இவற்றை வெல்லுத லாகின்றது. ஆகவே, அங்ஙனம் இனிக்கூறப்படும் குறிகள் நிகழ்கின்றன என்பது. (௩௩)

௩௪.

நிலம் என்னும் முதல்இடத்தை வெல்லுதல்வரையிலுள்ள யோகத்தின் குறிகளைக் கூறுகின்றார்:

மலம் மூத்திரம் கோழை (இவை) அற்பமாதலும், உடம்பு நோயின்றிநிற்றலும் லகுவாயிருத்தலும், நல்ல நாற்றமும் நல்ல குறலும் நல்ல நிறமும் முதலாவது யோகஅடையாளமாம்.

௩௫.

நீர் என்னும் இரண்டாம் இடத்தை வெல்லுதல்வரையிலுள்ள யோகத்தின் குறிகளைக் கூறுகிறார்:

முள்நுனிகளிலே ஒட்டாமையும், நீரிலும் சேற்றிலும் அமுங்காமையும், பசி தாகம் முதலியவற்றைத் தாங்கும் தன்மையனாதலும்இரண்டாம் யோகஅடையாளமாம்.

முள்நுனிகளிலே ஒட்டாமை - முட்களால் தைக்கப்படாமை. (௩௫)

௩௬.

தீ என்னும் மூன்றும் இடத்தை வெல்லுதல்வரையிலுள்ள யோகத்தின் குறிகளைக் கூறுகிறார்:

அதிகமான உணவையும் பாநத்தையும் உட்கொள்ளுவோனாதலும்,

உஶுநம் ஶ்ரவணம் உ-ஶாஸு தா3தீயம் யொ3ஶுக்ஷணழ ॥

௩௭.

ஶ்ணு-ஶுகூ2வநம் ஶு-ஶுளை ஶுகூ2வநம் ஊ-ஶெ ।
ஶுகாஶுஶுநம் வெதி வ த-ஶுயும் யொ3ஶுக்ஷணழ ॥

௩௮.

ஆநாநம் தி3கா3விஷயழ வெஶ்வயுணிஶாஶிகுழ ।
கூநஶுக்தி3ஶுதம் வ வஶுஶம் யொ3ஶுக்ஷணழ ॥

௩௯.

வ்ராணெ ஸ-ஷ-ஷ்டாம் ஸம்வ்ராவ்வெ நாஶொऽஶுः ஶ்ரு-ஶுயதெऽ
வணாஉ-ஷ-ஹிஶுஷ்ணாஶுவீணாவெணாஶிதா3வஶு ॥ [ஷுயா ।

வெயில் முதலியவற்றைத் தாங்கும் தன்மையனாதலும், தூரத்தினின்று பார்த்தலும் கேட்டலும் மூன்றும் யோகஅடையாளமாம்.

௩௭.

வாயு என்னும் நான்காம் இடத்தை வெல்லுதல்வரையிலுள்ள யோகத்தின் குறிகளைக் கூறுகிறார்:

பூமியிலே தவளைபோலக் குதித்தல், மரத்திலே குரங்குபோலத் தாவுதல், ஆகாசத்திலே செல்லுதல் என்பன நான்காம் யோகஅடையாளமாம்.

௩௮.

ஆகாசம் என்னும் ஐந்தாம் இடத்தை வெல்லுதல்வரையிலுள்ள யோகத்தின் குறிகளைக் கூறுகிறார்:

முக்காலத்தையும் பற்றிய அறிவும், அணிமாமுதலிய ஈச்வரத்தன்மையும், எல்லையில்லா சக்தியுடைமையும் ஐந்தாம் யோகஅடையாளமாம்.

௩௯.

நிலம்முதலிய இடங்களை வெல்ல, அதனாலாகும் அடையாளங்கள் கூறப்பட்டன. இனி, ஸுஷும்நையினுள் ப்ராணனை அடக்கி அங்கு மனத்தை வசப்படுத்தி நிறுத்த, அப்பொழுது உண்டாகும் குறிகளைக் கூறுகிறார்:

ப்ராணன் ஸுஷும்நையைச் சென்றவளவிலே, ஓசையானது உள்ளே எட்டுவிதமாய்க் கேட்கப்படுகின்றது; மணி, முரசு, சங்கு, கடல், வீணை, புல்லாங்குழல், தாளம் முதலியன போல.

௪௦.

தநுநவாதுதிதாரராதாரெஶுதவநொவழி ।
வ்ரஹநாஶீம் மதெ வ்ராணெ விம்வாரூவம் வ்ரகாஶதெ ॥

௪௧.

ஶ்வாஸாஶ்ராஜி யாவகுः உநுஷ்ரஸ்ய தினம் வ்ரதி ।
தாவதி யொஜநாநுகுः ஶ்வாஸெ ஶ்வாஸெ வ்ரயாவதி ।

௪௨.

வாகுவிம்ஶதிஸாஹஸ்ரி ஷட்ஶதம் ஶ்வாஸஸஜ்ஜ்ரயா ।
ஸொऽஹதி த்ருஷ்ரதாதா ஶம்தும் வ்ரதுஹரோயுஷெ ॥

"முதலியன" என்றதனால், மிருதங்கம்முதலியவற்றைக் கொள்க. (௩௧)

யோகத்திலே ஈச்வரன் வெளிப்படுதல்.

௪௦.

அப்பொழுது,

ப்ராணன் ப்ரஹ்மநாடியை[ஸுஷும்நையை] அடைந்தவழி, ஈச்வர வடிவமானது தீபோல மின்னல்போல நக்ஷத்திரம்போல சந்திரன்போல சூரியன்போல (முறையே) விளங்குகின்றது.

யோகத்திலே ப்ரணவம் வெளிப்படுதல்.

௪௧.

இப்பொழுது, அங்கு ப்ரணவம் வெளிப்படும்வகையைக் கூறுகிறார்:

மனிதனுக்கு நாள்தோறும் எத்தனை சுவாசங்கள் செல்லுகின்றனவோ, அத்தனை யோஜநதூரம் ஓரோர் சுவாஸத்திலும் சூரியன் ஓடுகின்றான்.

௪௨.

இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாஸக்கணக்கின்படி ஆத்மாவானது "ஸோஹம் [அவன் நான்]" என்னும் மந்திரத்தை ஆயுள்வளர்தற்காகத் தினந்தோறும் உச்சரிக்கின்றது.

சூரியோதயம்முதல் சூரியோதயம்வரையிலுள்ள இரவுபகலாகிய ஒருநாளைக்கு ஒருமனிதனுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாஸங்கள் செல்லுகின்றன என்பது சொல்லுவோன் குறிப்பு. (௪௨)

சங.

ஸகாரம் ச ஹகாரம் ச யோவயிக்வா வ்யொஜயெத் । [வெத் ॥
ஸந்தி வெ வ-ஓவ-ரூ-ஓவாவ்யூ ததொऽஸள வ்ரணவொ ஓ-

சச.

ஸகாரஸ்ஸாவ்ய-கார:ஸ்ஸ உகாரொ விஷ்ணு-நாஉகள ।
வஹ்நாக்ஷராண்யுச்-ரூ-ரூ-ஹ-ஃ வ்ரணவஸ்ஸாநி வஸ்ணிதாஃ ॥

சரு.

ப்ரஹ்மா விஷ-ஸ்ஸ ரு-ரூ-ஸ்ஸாவீஸ்வரஸ்ஸ ஸதாஶிவஃ ।
தெஷக்ஷரெஷ- திஷ்ஷ ஷட்ரிம்ஶத்தத்வஸம்ய-தாஃ ॥

சங.

"ஸோஹம்" என்பதிலே,

ஸகாரத்தையும் ஹகாரத்தையும் தள்ளி பூர்வரூபம் என்னும் ஸந்தியை வழங்கவேண்டும். பின்பு அது ஓங்கார மாகும்.

ஸோஹம் என்பது, ஸ் ஓ ஹ் அ ம் என்பனவற்றைக் கொண்டது. இவற்றுள், ஸ் ஹ் என்ற இரண்டனையும் நீக்க, ஓ அ ம் என வந்தது. இனி, ஓ அ என்ற இரண்டும் புணருங்கால், வ்யாகரணவிதிப்படி பூர்வரூபமாகிய ஓ என்னும் முந்தினவடிவம் நின்றது. நிற்கவே, அங்ஙனம் ஓ ம் என்ற இரண்டும் சேர, ஓம் என ஆயிற்று என்பதாம். (சங)

சச.

இந்த ஓங்காரத்தின் உறுப்புக்களைப் பகுக்கிறார்:

அ, உ, ம், பிந்து, நாதம் என்றஇவ்வைந்து அக்ஷரங்களும்[ஒலிகளும்] ப்ரணவத்திலுள்ளனவாக ஞானிகள் கூறுகிறார்கள்.

அ உ என்றஇரண்டும் புணருங்கால், ஓ என ஆகும். பிந்துவாவது, மூக்கினால் உச்சரிக்கப்படும் உயிரெழுத்துஒலி. ம் என்பதற்கு உயிரெழுத்து இன்மையால், அதனோடு பிந்துவைப் பின்னாகக் கூட்டுக. நாதம் - ஒலிப்பொது. (சச)

சரு.

இவ்வைந்து அக்ஷரங்கட்கும் தேவதைகளைக் கூறுகின்றார்:

ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன்(இவர்கள்)முப்பத்தாறு தத்துவங்களைப் பொருந்தியவராய் அந்த அக்ஷரங்களில் வஸிக்கிறார்கள்.

சசு.

மாரவுவாஹாஹுஹெ யொமஷ்டாஜுக்ஷணி ।
ஶிவவுவாஹாஹுஹெ யொமவிஜிம் ச ஶாஶ்வதீ ॥

சஎ.

ஸச்சிதாநந்தரூபாய விந்துநாதாங்கராத்மனெ ।
ஆதிகுருவாகுருவாய மாரவுணாம் மாரவெ நமஃ ॥

சஅ.

இதி ஸ்ரீதக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரவ்யாக்யாநே ।
வ்யவஹாரநஸோல்லாஸே நவமோல்லாஸஸம்ப்ரஹஃ ॥

ஈச்வரனுடைய அருளும், ஆசார்யனுடைய அருளும் ஆவச்யகம்.

சசு.

(உபாஸகனுவான்) அஷ்டாங்கமாகிய யோகத்தை ஆசார்யனுடைய அருளினாலே அடைகிறான் ; சாச்வதமான யோகஸித்தியையும் சிவனுடைய அருளினாலே பெறுகிறான்.

எனவே, ஆசார்யனையும் ஈச்வரனையும் தொழுதவிடத்து யாவும் கைகூடும் எனவும், ஆதலால் அவ்விருவரையும் தொழுதல் வேண்டும் எனவும் குறிப்பிக்கப்பட்டன. யோகஸித்தியை - ஆத்மாவின் தத்துவம் வெளிப்படுதலை. (சசு)

சஎ.

ஸச்சிதாநந்தவடிவினராய், பிந்துநாதங்களுடைய உள்ளேயுள்ள ஆத்மாவாய், முதல் நடு முடிவு இல்லாத ஆசார்யருடைய ஆசார்யருக்கு நமஸ்காரம்.

முதல்நடுமுடிவுஇல்லாத ஆசார்யருக்கு எனக் கூட்டுக. பிந்து நாதங்களுடைய - உருவம் பெயர் என்றவற்றினுடைய. ஆசார்யருடைய ஆசார்யருக்கு - ஸநகர்முதலான ஆசார்யருக்கும் ஆசார்யரான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு. (சஎ)

சஅ.

இதனோடு, இவ்வுல்லாஸத்தை முடிக்கிறார் :

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் பொருளை உணர்த்துகின்ற மாநஸோல்லாஸம் என்னும் நூலினுள் ஒன்பதாம் உல்லாஸப்பொழிப்புரை முற்றும்.

ஒன்பதாம் உல்லாஸம்.

பதவுரை.

க.

ஸவம்வியா	இவ்விதமான
ரோயா	மாயை
கயம்	எப்படி
நிவதெயுத	நீங்கக்கூடும்?
இதி	என்று
வ்ரஹதஃ	வினவுகின்றோனுக்கு
ஈஶ்வரொவாஸநாரூபஃ	ஈச்வரனைத் தொழுதலானது
தஹ்வாயஃ	அதற்கு ஸாதநமாக
வ்ரகீதயுதெ	உணர்த்தப்படுகின்றது.

உ.

ஷட்த்ரிம்ஶத்தத்வரூபவாஸ	முப்பத்தாறு தத்துவங்களான
பரமேஶ்வரஸ்ய	பரமேச்வரனது வடிவங்களுள்
கஷ்டஸ்ய	எட்டு வடிவங்கள்
ஸர்வைஃ கவி	எல்லாராலும்
ப்ரத்யக்ஷெண	ப்ரத்யக்ஷமாய்
உபலப்யதெ	அறியப்படுகின்றன.

ங.

கியோஸ	அளவிடவொண்ணாதவற்றிலே
மநஃ	மனம்
கதிவ்ரம்	விரைவாக
ஆரோஹ	ஏற
ந கஹுதி	முடியாது

இதி	என்ற
ஈதஃ	இதனால்
ஆசார்யஃ	ஆசார்யர்
அஷ்டமூர்த்திமயம்	அஷ்டமூர்த்திமயமாகிய
ஸர்வாத்மபாவநாம்	ஸர்வாத்மபாவநையை
ப்ரதே	உரைக்கிறார்.

கூ.

ஜலம்	நிலம்
ஜ்வாலாஃ	ஜலங்கள்
ஜநயுஃ	நெருப்பு
ஜநியுஃ	காற்று
ஜம்வரம்	ஆகாசம்
ஜஹநாயஃ	பகலுக்கு நாதன்
ஹிமாம்சுஃ	குளிர்ந்த கிரணமுடையோன்
வாஹநு	புருஷன்
இதி	என
வராவராத்மகம்	ஸ்தாவரஜங்கமவடிவமாய்
(யத்)	(எது)
ஜாயதி	விளங்குகின்றதோ
(தத்)	(அந்த)
ஈஶம்	இந்த
அஷ்டாத்மகம்	எட்டு வடிவங்களும்
யஸ்ய ஸவ	எவனுக்கே
(ஸவதி)	(உள்ளனவோ);
விபுஶாம்	(உண்மையினை) ஆராய்வோர்க்கு
யஸ்ய	எந்த
விஶோஃ	வியாபகமான
பரஸ்ய	பரம்பொருளைக்காட்டிலும்
அந்ய	வேறு

கிஞ்சந	ஒன்று
ந விஶ்யதெ	இல்லையோ ;
தஸ்மை	அந்த
ஸ்ரீமதாசார்யஸ்வரூபாய	ஸ்ரீமதாசார்யஸ்வரூபமான
ஸ்ரீதக்ஷிணாமூர்தயெ	ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு
இதம்	இந்த
நமஃ	நமஸ்காரம்.

அஸ்ய	இதனுடைய
ஸித்தாந்தஃ	ஸித்தாந்தம்
ஏவம்	இவ்வாறு
(ஸ்யாத்)	(ஆகும்.)

ச.

ப்ரஹ்மாண்டெ	ப்ரஹ்மாண்டமாகிய
விராட்ஶரீரெ	விராட்சரீரத்திலும்
ப்ராணிநாம்	ப்ராணிகளுடைய
ஶரீரெ ஸர்வ	சரீரத்திலும்
ஷட்விம்ஶதத்வஸம்வாதஃ	முப்பத்தாறு தத்துவங்களின் சேர்க்கையானது
ஸர்வத்ர ஸர்வ	எங்கும்
ஸம்பந்ததெ	தொடர்ந்துளது.

ரு.

(யஸ்மாத்)	(எதனால்)
வ்யஷ்டிரூபிணஃ	வ்யஷ்டிவடிவிற்றான
மநஸஃ	மனம்
அஸ்மிந்	இந்த
வ்யஷ்டிஶரீரெ	வ்யஷ்டியான உடம்பிலே

வ்யாப்திஃ	வியாபித்தல்
(ஸ்தி)	(உளதோ)
தஸ்மாத்	அதனால்
(உபாஸகஃ)	(உபாஸகன்)
இதம்	இந்த
ஸ்வஶரீரம்	தன்உடம்பை
ஸவபூதகம்	எல்லாவடிவிற்றாக
விசிந்தயேத்	தியானிக்கவேண்டும்.

சு.

(ஸஃ)	(அவன்)
வ-ஈஶஃ	ஈச்வரனை
வ்யஷ்ட்யுபாஸநயா	வ்யஷ்டியாக உபாஸித்தலால்
ஸமஷ்டிவ்யாப்திம்	ஸமஷ்டிவியாப்தியை
ஆப்நோதி	அடைவான்.
(ஶ்ருதிஃ)	(சுருதியானது)
உபஸம்க்ராமதி	"அடைகிறான்"
இதி	என
ஏவம்	இவ்வாறு
தஶகபக்ஷஃ	பத்துமுறை
உபதிஶத்	உபதேசித்துளது.

எ.

ஆதிமாதயஃ	பூர்முதலான
ஸப்த	ஏழு
லோகாஃ	உலகங்கள்
ப்ரஹ்மாண்டஸ்ய	ப்ரஹ்மாண்டத்தின்
உதரே	உள்ளே
ஸ்திதாஃ	உள்ளன.

தெ	அவை
உபாதிஷ்ட்ஹாரம்யாஷேஷ	மூலாதாரம்முதலாக ப்ரஹ்மரந்திரம் ஈறாகவுள்ள
சக்ரேஷு	ஆதாரங்களில்
வஸதி	வஸிக்கின்றன.

எஉ.

வீணாஉணாஃ	முதுகெலும்பு
உஹாசைலாஃ	மகாமேரு
(ஸ்யாத்)	(ஆகும்.)
சக்ஷீநி	எலும்புகள்
குலபர்வதாஃ	குலபர்வதங்கள்
(ஸ்யுஃ)	(ஆகும்.)

அ, கூ.

தத	இனி
பிங்கலா	பிங்கலைஎன்னும்
நாடீ	நாடி
கங்கா	கங்கையாக
ப்ரகீர்திதா	கூறப்பட்டுளது.
இடா	இடை
யமுனா	யமுனையாக
(ப்ரகீர்திதா)	(கூறப்பட்டுளது.)

ஸுஷும்ணா	ஸுஷும்ணை
ஸரஸ்வதீ	ஸரஸ்வதியாக
உக்தா	கூறப்பட்டுளது.
அந்யாஃ	மற்றைய
நாட்யாஃ	நாடிகள்
(அந்யாஃ)	(மற்றைய)

வ॒ண்ணா॒ நிஷ்ட॒மாः	புண்ணிய நதிகளாக
(உக்தாः)	(கூறப்பட்டுள்ளன.)
ஸப்த	ஏழு
யா॒தவः	தாதுக்கள்
ஔவாः	தீவுகள்
ஸ்ய॒ः	ஆகும்.
ஷ்வேதவாஷாதயः	வியர்வை கண்ணீர் முதலியன
(ஸப்த)	(ஏழு)
ஸமுத்ரயः	கடல்கள்
(ஸ்ய॒ः)	(ஆகும்.)

கo.

கா॒லாக்நிः	காலநெருப்பு
ஶ॒ரீரே	மூலாதாரத்திலே
திஷ்ட²தி	உள்ளது.
வாலவைः ச	பாடபநெருப்பும்
ஸந்தி²ஷு	எலும்புகளினுள்ளே
(திஷ்ட²தி)	(உள்ளது.)
வைத்³யு॒தः	மின்னலுடைய
ஸுக்நிः	நெருப்பு
ஸ॒ஷ॒ம்ந்யாம்	ஸ॒ஷ॒ம்நையிலே
(திஷ்ட²தி)	(உள்ளது.)
வாயவீயுவः	நிலத்தினுடைய
(ஸுக்நிः)	(நெருப்பு)
நாபிஶ்ரயே	கொப்பூழ்வட்டத்திலே
(திஷ்ட²தி)	(உள்ளது).

கக.

ஸூர்யாக்நிः	சூரியநெருப்பு
ஹ்ருதி	ஹிருதயத்திலே

திஷ்டதி	உள்ளது.
ஹம்ஸாஸ்ஸோயம்	சந்திரமண்டலம்
கவாயெ	மண்டையிலே
(திஷ்டதி)	உள்ளது.
கவி	மேலும்
(யொமிநஃ)	(யோகிகள்)
நெத்ராதீநி	கண்முதலிய
இந்த்ரியாணி	இந்திரியங்களை
கவாணி	மற்றைய
நக்ஷத்ராணி	நக்ஷத்திரங்களாக
கூஹந்தி	கூறுகிறார்கள்.

கஉ.

யதா	எப்படி
லொகாஃ	உலகங்கள்
ப்ரவஹணாதிபிஃ	ப்ரவஹணன் முதலான
வாயுபிஃ	வாயுக்களால்
யாயுதெ	தாங்கப்படுகின்றனவோ
(ததா)	(அப்படி)
வபுஃ	உடம்பானது
ப்ராணாதிபிஃ	ப்ராணன் முதலிய
தஶவிதெஃ	பத்துவிதமான
வாயுபிஃ	வாயுக்களால்
யாயுதெ	தாங்கப்படுகின்றது.

கங.

ப்ராணஃ	ப்ராணன்
ஹ்ருதயாத்	மூலாதாரத்தினின்று
ஹ்யாவிஶதெ	இடை பிங்கலைகளை

வ்ராவ்ய	அடைந்து
ஸூர்யஃஸ்வரூபதஃ	சூரியவடிவத்தால்
நாஸிகாஹ்யாம்	இரண்டு மூக்குத்துவாரங்களின் வழியாக
பஹிஃ	வெளியில்
மக்ஷா	சென்று
விஷயஜுஷெ	ஈராறு அங்குலத்திலே
ரீயதெ	கரைந்திடுகின்றது.

கச.

(ஸஃ)	(அது)
ஸொமாத்மா	சந்திரவடிவிற்றாய்
கூஷாஜுஷெந	எட்டு அங்குலத்தால்
நாடீஹ்யாம்	இரண்டு நாடிகளின்வழியாக
கூஹஃ	உள்ளே
க்ரூவிஶெக	புகுந்திடும் ;
கூவாநஃ	அபாநனாகி
மலமூத்ர- ரேதஃஸ்வாணி	மலத்தையும், மூத்திரத்தையும் வாயுவையும், ரேதஸையும்
பஹிஃ	வெளியில்
விஸ்ருஜெக	தள்ளிவிடும்.

கரு.

(ஸஃ)	(அது)
கர்மீஷொமமயஃ	நெருப்புமயமாய் சந்திரமயமாய்
ஸுக்ஷா	ஆகி
ஸுஷும்நாரம்ப்யம்	ஸுஷும்நையின் துவாரத்தை
க்ஷிரிகஃ	அடைந்ததாய்
க்ரஹ்மரந்த்ராரம்ப்யம்	ப்ரஹ்மரந்திரம்வரை
உத்ஹ	மேலே செல்கிறதாய்

ஸ்வயம்	தானே
உதாநஃ	உதாநனாக
வயுதெ	விரிகின்றது.

கசு.

(யஃ)	(எது)
ஊக்தாந்நரஸம்	உண்ட உணவின் ஸாரத்தை
சுவஹம்	தினந்தோறும்
வவுஷி	உடம்பினுள்
வ்யாவயெசு	வியாபிக்கச்செய்யுமோ
(ஸஃ)	(அது)
வ்யாநஃ	வ்யாநன்
(ஸ்யாசு)	(ஆகும்.)
து	இனி
(யஃ)	(எது)
காயாக்நிஃ	உடம்புநெருப்பை
ஸதா	எப்பொழுதும்
ஸம்யக்ஷணம்	எரிதலை
கரோதெ	செய்கின்றதோ
(ஸஃ)	(அது)
ஸமாநஃ	ஸமாநன்
(ஸ்யாசு)	(ஆகும்.)

கஎ.

நாகஃ	நாகன்
ஹிக்காகரஃ	விக்கலைச் செய்வதாய்
(ஹவதி)	(உளது.)
கூர்மஃ	கூர்மன்
நிமெஷோந்மெஷகாரகஃ	கண்மூடுதலையும் திறத்தலையும் செய்வதாய்

(ஹவதி)	(உளது.)
கூ ஜ கரஃ	கிருகரன்
கூ ஷ ஸ்தம்	தும்மலை
கரொதி	செய்கின்றது.
தெவதத்தஃ	தேவதத்தன்
விஜ்ரம்ஹணம்	கொட்டாவி விடுதலை
(கரொதி)	(செய்கிறது.)

கஎ.

ய ந ஜயஃ	தநஞ்ஜயன்
ஸுஷுப்தம்	ஊதலை
கரயதி	செய்யும்;
ஜ்ரதம் ச கவி	பிணத்தையும
ந ஸ்ருஜதி	விடுகிறதில்லை.

கஅ.

ஆகாஶஃ	ஆகாசம்
பஹிஃ	வெளியிலும்
அந்தஃ கவி	உள்ளிலும்
அவகாஶம்	இடத்தை
ஹரயதி	தருகின்றது.

கக.

காலமெதாஸ	காலத்தைச் செலுத்துகின்ற
சம்ரூர்யாவுள	சந்திரனும் சூரியனும்
ஶரீரிணாம்	ப்ராணிகளுடைய
ப்ராணாபாநள	ப்ராணனும் அபாநனுமாக
(ஹவதஃ)	(உள்ளன.)
(யஃ)	(எது)

ஸாக்ஷீ	ஸாக்ஷியாக
(ஹவதி)	(உள்ளதோ)
(ஸஃ)	(அது)
வ-ர-ஷஃ	புருஷன்
(ஸ்யாசு)	(ஆகும்.)
இதி	என
ஏவம்	இவ்வாறு
இதம்	இந்த
வவ-ஃ	உடம்பு
ஸ-ஔதகுருஷகம்	எட்டுவடிவுடைத்தாய்
(ஹவதி)	(உளது.)

உ0.

ஸஃநஸ்கம்	மனத்தோடு கூடிய
இதம்	இந்த
உவாஸநம்	தியானத்தை
ஸெவஃநஃ	அப்யஸிக்கின்ற
(யஃ)	(எந்த)
யொகீ	யோகியானவன்
சுஷ்டாஜ்யொமய-க்தஃ ஸந்	அஷ்டாங்கயோகத்தைக் கூடியவனாய்
(ஹவதி)	(இருக்கின்றானோ)
ஸஃ	அவன்
சுஃநஸ்கம்	அமநஸ்கத்தை
மஹதி	அடைகிறான்.

உக.

ஃநஃவ்ரஸாஃ	மனஅமைதி
ஸஞ்சொஷஃ	திருப்தி

ஔனம்	மௌநம்
இந்த்ரியநிக்ரஹः	இந்திரியஅடக்கம்
தயா	கிருபை
தாக்ஷிண்யம்	தாக்ஷிண்யம்
ஆஸ்திக்யம்	நம்பிக்கை
ஆர்ஜவம்	நேர்மை
மார்தவம்	மென்மை
க்ஷமா	பொறுமை
(இதி)	(என்ற)
(ஏதே)	(இவை)
(யமாः)	(யமங்களாக)
(ஸ்மृதாः)	(கருதப்பட்டுள்ளன.)

உஉ.

மானஸஶுத்திः	மனச்சுத்தம்
அஹிம்ஸா च	அஹிம்ஸை
ப்ரஹ்மசர்யம்	ப்ரஹ்மசர்யம்
ஸ்மृதிः	நினைப்பு
धृतिः	தைர்யம்
இத்யேவமாதயः	என்பன முதலியவையும்
ஜந்ம च	பிறவும்
மநஸ்யாயாः	மனத்தினால் சாதிக்கப்படும்
யமாः	யமங்களாக
ஸ்மृதாः	கருதப்பட்டுள்ளன.

உங, உஙஉ.

ஸ்நாநம்	ஸ்நாநம்
ஶௌசம்	சுத்தம்
ஈஶ்வரபூஜா	ஈச்வரபூஜை

ஸத்யம்	ஸத்யம்
ஜபம்	ஜபம்
ஹோமம் ச	ஹோமம்
தர்பணம்	தர்ப்பணம்
தபஃ	தவம்
தானம்	கொடை
திதிக்ஷா ச	ஸஹித்தல்
நமஸ்காரம்	நமஸ்காரம்
ப்ரதக்ஷிணம்	ப்ரதக்ஷிணம்
வ்ரதோபவாஸாதயஃ	வ்ரதம் உபவாஸம் முதலியனவும்
ஜந்வ ச	பிறவும்
காயிகாஃ	உடம்பினால் செய்யப்படும்
நியமாஃ	நியமங்களாக
ஸ்மரணாஃ	கருதப்பட்டுள்ளன.

உச, உரு, உருஉ.

ஸ்வஸ்திகம்	ஸ்வஸ்திகமும்
கோமுகம்	கோமுகமும்
பத்மம்	பத்மமும்
ஹம்ஸாவ்யம்	ஹம்ஸம்என்னும்பெயருடைய
(ஆஸநம் ச)	(ஆஸநமும்)
ப்ராஹ்மம்	ப்ராஹ்மமான
ஆஸநம்	ஆஸநம்
(ஆகும்.)	(ஆகும்.)
நரஸிம்ஹம்	நருஸிம்ஹமும்
கருடம்	கருடமும்
கூர்மம்	கூர்மமும்
நாகாவ்யம்	நாகம்என்னும்பெயருடைய

(ஆஸநம் ச)	(ஆஸநமும்)
வைஷ்ணவாஸநம்	வைஷ்ணவமான ஆஸநம்
(ஸ்யாத்)	(ஆகும்.)
வீரம்	வீரமும்
மயூரம்	மயூரமும்
வஜ்ராக்யம்	வஜ்ரம்என்னும்பெயருடைய
(ஆஸநம்)	(ஆஸநமும்)
ஸித்தாக்யம்	ஸித்தம்என்னும்பெயருடைய
(ஆஸநம் ச)	(ஆஸநமும்)
ரௌத்ரம்	ரௌத்ரமான
ஆஸநம்	ஆஸநம்
(ஸ்யாத்)	(ஆகும்.)
(யோகிநஃ)	(யோகிகள்)
யோநியாஸநம்	யோநிஎன்னும்ஆஸநத்தை
ஶாக்தம்	சாக்தமான (ஆஸநமாகவும்)
பஶ்சிமதாநகம்	பச்சிமதாநகம் (என்னும் ஆஸநத்தை)
ஶைவம்	சைவமான (ஆஸநமாகவும்)
விதுஃ	அறிகிறார்கள்.

உசு.

நிராலம்பநயோகஸ்ய	நிராலம்பநயோகத்திற்கு
நிராலம்பநம்	நிராலம்பநம்என்னும்
ஆஸநம்	ஆஸநம்
(ஸ்யாத்)	(ஆகும்.)

உசுஉ.

நிராலம்பதயா	நிராலம்பமாக
஧்யாநம்	தியானித்தல்

(ஸ்யாத்)	(ஆகும்.)
நிராலம்பஃ	நிராலம்பன்
ஸதாசிவஃ	ஸதாசிவன்
(ஸ்யாத்)	(ஆவான்.)

உஎ.

ப்ராணாயாமஃ	ப்ராணாயாமம்
ரேசகஃ	ரேசகமாகவும்
பூரகஃ	பூரகமாகவும்
கும்பகஃ ச ஏவ	கும்பகமாகவும்
(ஏவதி)	(இருக்கின்றது.)

உஅ.

ப்ரத்யாஹாரப்பொருளை உணர்ந்தவராலே	ப்ரத்யாஹாரேணைவ
எல்லா	ஸர்வாணாம்
இந்திரியங்களையும்	இந்த்ரியாணாம்
விஷயங்களினின்று	விஷயேப்யஃ
விலக்குதல்	நிவாரணம்
ப்ரத்யாஹாரம்	ப்ரத்யாஹாரஃ
என்று	இதி
சொல்லப்பட்டிருக்கின்றது.	ப்ரோக்தம்

உஅஉ.

ஒரு	ஏகஸ்மின்
ஆதாரத்திலே	ஆயாரே
மநத்தை	மநஸஃ
நிறுத்துதல்	ஸ்தாபநம்
தாரணையாக	தாரணா

(யொமிஹிஃ)	(யோகிகளாலே)
உய்யதெ	சொல்லப்படுகின்றது.

உசூ.

(யொமிநஃ)	(யோகிகள்)
ப்ரஹ்மவிஷ்ணுஶிவாதீநாம்	ப்ரஹ்மா விஷ்ணு சிவன் முதலானோர்களை
சிந்தா	சிந்தித்தல்
ய்யாநம்	தியானம்
(ஸ்யாத்)	(ஆகும்)
(இதி)	(என்று)
வ்யவக்ஷதெ	கூறுகிறார்கள்.

உசூஉ.

ய்யாநாத்	தியானத்தினின்று
வுத்தெஃ	புத்தி
ஸ்வாஸ்த்யம்	அசையாமையானது
ஸமாயிஃ	ஸமாதி
(ஸ்யாத்)	(ஆகும்)
(இதி)	(என்று)
(யொமிஹிஃ)	(யோகிகளால்)
கதியதெ	கூறப்படுகின்றது.

௩௦.

கதநஸ்கஸமாயிஃ தத	அமநஸ்கஸமாதியோ
ஸவபுவிகாவிவஜிதம்	எண்ணமெல்லாம்ஒழிந்ததாய்
(ஸவதி)	(உள்ளது.)

௩௧.

விதெ	மனம்
நிஶ்சலதாம்	அசையாமையை
யாதெ	அடைய
ப்ராணஃ	ப்ராணன்
நிஶ்சலஃ	அசையாததாய்
஭வதி	ஆகின்றது.
(யொகீ)	(யோகியாவான்)
விதஸ்ய	மனம்
நிஶ்சலத்வாய	அசையாமைக்காக
யொகம்	யோகத்தை
ஸ்யாநம்	தியானத்தோடுகூட
